வெளியீடு 14-7-2005 Issued 14-7-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 3 2005—தொகுதி 67—எண் 3**

**Thursday the 3rd February, 2005 —Volume 67—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

[illegible]ive Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

321
2005

3-2-2005

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 169-204 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4) | 204-475 |
| **2. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| சுனாமி பேரலையால் 26-12-2004 அன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 476-481 |
| **3. அறிக்கை அளித்தல்—** | |
| அரசு உறுதிமொழிக் குழு | 481 |
| **4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 482-556 |
| * திருமதி வளர்மதி ஜெபராஜ் | 482-490, 495-501 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 491, 492, 493-494, 495, 502, 503, 507-508, 516-517, 523, 524, 525-526, 536-537 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 505-507 |
| திரு. எச். ராஜா | 526-533, 534, 537-538, 539, 540 |

பக்கங்கள்

4. **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

முனைவர் செ.கு. தமிழரசன் 538,539, 540-550

திரு. லா. சந்தானம் 550-556

5. **அரசினர் தீர்மானம்**—

விதி 32—ஐத் தளர்த்துதல் 557

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 558

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 21, தாரண - திருவள்ளுவர் ஆண்டு 2036**

**2005 பிப்ரவரி 3, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு"

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்து, தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயலுகிற ஒருவர், துன்பத்தைத் தாங்கிக்கொள்ளவே பிறந்தவராகப் போற்றப்படுவார்.

இன்று பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவு நாள். அண்ணா அவர்களுடைய புகழ் வாழ்க எனக் கூறி அவை நிகழ்ச்சிகளைத் தொடங்குகிறேன்.

### 1. வினாக்கள் – விடைகள்

#### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**21—**

**சாலை விபத்துகள்**

***28538—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துகளைத் தடுப்பதற்கும், ஓட்டுநர்களின் வாகன வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

[2005 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்களின் அதிக வேகத்தினால் விபத்துகள் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அத்துறையின் ஓட்டுநர்களின் வேகத்தைக் குறைக்க போக்குவரத்துத் துறையின்மூலம் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் காவலர், வேகக் கட்டுப்பாட்டை மீறிவரும் வாகனங்களைத் தடுத்து அபராதம் வசூலிக்கின்றனர். தொடர்ந்து தவறிழைக்கும் ஓட்டுநர்கள்மீதும் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தங்களுடைய ஓட்டுநர்களுக்குத் தொடர்ச்சியாக விபத்துத் தடுப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. மேலும், சாலைப் போக்குவரத்து நிறுவனமும் அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு ஒவ்வொரு வாரமும் விபத்துத் தடுப்புப் பயிற்சி அளித்து வருகிறது. விபத்து செய்யும் ஓட்டுநர்களுக்கு மோட்டார் வாகனச் சட்டத்தின்படி தனி முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு யோகா மற்றும் மன வள பயிற்சி வகுப்புகள்மூலம் தனிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விபத்தில்லா ஓட்டுநர்களுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்பட்டு விபத்தில்லாமல் பணிபுரிய ஊக்குவிக்கப்படுகிறார்கள். பொதுமக்கள் மத்தியில் சாலைப் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த சாலைப் பாதுகாப்புக் கண்காட்சி வாகனம் உருவாக்கப்பட்டு, அக்கண்காட்சி முக்கிய இடங்களில் பொதுமக்களின் பார்வைக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகிறது. 40 வயது மற்றும் அதற்குமேலுள்ள ஓட்டுநர்களுக்குக் கண் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. வாகனங்கள் வழித்தடங்களில் செல்லும்போது அவற்றினுடைய வேகம், ராடார் கருவிமூலம் கண்காணிக்கப்பட்டு அதி வேகம் செல்லும் வாகன ஓட்டுநர்கள்மீது ஓட்டுநர் உரிமம் இரத்து போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஓட்டுநர் உரிமம் வழங்குவது மற்றும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவது, வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குவது போன்ற நடவடிக்கைகளில் விதிமுறைகளைக் கடுமையாக அமல்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது என்ற இந்தத் தகவல்களை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளைத் தடுப்பதற்கு வாகனங்களை ஓட்டும்

22427
சென்னை - 600 009



2005 பிப்ரவரி 3]

ஓட்டுநரும் முன்னால் அவர் அருகில் உட்கார்ந்திருப்பவரும் seat belt, அதாவது பாதுகாப்பு belt போட்டுக்கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம், M.C. Mehtha - Vs - Union of India என்ற வழக்கில், 6-12-2001 அன்று வழங்கிய தீர்ப்பில் அனைத்து மாநில அரசுகளுக்கும் அனுப்பப்பட்ட நிலையில், அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் seat belt அணிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, டெல்லி மாநகரில் மட்டுமே அமல்படுத்தப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களில், மற்ற நகரங்களில், பெரு நகரங்களில் இன்னும் அமல்படுத்தப்படவில்லை. சென்னை மாநகரிலும் அதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று, உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகளைத் தடுப்பதற்கு மது அருந்திவிட்டு ஓட்டுபவர்களுக்குக் கடும் அபராதம் விதிக்கவும், கடுமையான தண்டனை தருவதற்கும் மோட்டார் வாகனச் சட்டத்தில், மோட்டார் வாகனச் சட்டம், மத்திய சட்டம் 1988-இன் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மோட்டார் வாகனங்கள், ஓட்டுநர்கள் மற்றும் மோட்டார் வாகனம் சம்பந்தப்பட்டோர் யார் குற்றம் செய்தாலும் அந்தக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன விபத்தால் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு பேர் இறக்கிறார்கள்?

[2005 பிப்ரவரி 3

எவ்வளவு பேர் கை, கால்களைப் பறிகொடுக்கிறார்கள்? சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பால் சுமார் 8 ஆயிரம் பேருக்கு மேல் இறந்ததற்குத் தமிழகத்திலே மட்டுமல்ல; அகில உலகத்திலேயும் மாபெரும் இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாலையிலே ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 5 ஆயிரம் பேருக்கு மேல் இறந்து கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான பேர் கை, கால்களைப் பறிகொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சாலையிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சுனாமியைத் தடுக்க நல்ல திறமை வாய்ந்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், அதற்கு சுனாமி என்று பெயர் கிடையாது.

**திரு. ஐ. கணேசன்:** வல்லுநர் குழுவை நியமித்து உடனடியாக இந்த விபத்துகளைத் தடுக்க அரசு முன்வருமா? அதற்கு உண்டான ஆயத்த பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த படத்திற்கு நீங்கள்தான் ஷர்ோா.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகளில் ஆண்டுக்கு எவ்வளவு பேருக்கு உயிர் இழப்பு ஏற்படுகிறது என்ற விவரத்தினை நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டு மொத்தம் ஏற்பட்ட விபத்துகள் 12,923; உயிர் இழப்பு விபத்துகள் 9,300. 2001 ஆம் ஆண்டு மொத்தம் ஏற்பட்ட விபத்துகள் 51,978; உயிர் இழப்புகள் 9,571. 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட மொத்த விபத்துகள் 53,503; உயிர் இழப்பு விபத்துகள் 9,939. 2003 ஆம் ஆண்டு மொத்தம் ஏற்பட்ட விபத்துகள் 51,025; சற்றுக் குறைந்திருக்கிறது-உயிர் இழப்பு விபத்துகள்-உயிர் இழந்தவர்கள் 9,275; சற்றுக் குறைந்திருக்கிறது. 2004 ஆம் ஆண்டு, சென்ற ஆண்டு, மொத்த விபத்துகள் 42,318; சற்றுக் குறைந்து இருக்கிறது. உயிர் இழப்பு விபத்துகள் 8,763; உயிர் இழப்பும் சற்றுக் குறைந்து இருக்கிறது. இந்தத் தகவலிலிருந்து ஆண்டுக்கு ஆண்டு இந்த விபத்துகளைத் தடுப்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அறிவுரையைப் பெற்று, நமது மாநில அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக இன்றைக்குப் படிப்படியாக அந்த விபத்துகள்—உயிர் இழப்பு விபத்துகளும், மற்ற விபத்துகளும்—சற்று குறைந்து இருக்கின்றன என்பதைத்



2005 பிப்ரவரி 3]

தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலுங்கூட இந்த விபத்துகள் குறைந்திருப்பதிலேயே அரசு முழுமையாகத் திருப்தி அடையவில்லை. இன்னும் விபத்துகளே இல்லாத மாநிலமாக, இங்கு அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்காக சில அறிவுரைகளையும், வழிமுறைகளையும் கொடுத்திருக்கிறார்கள் அவற்றினுடைய அடிப்படையில், மாநில அரசு தொடர்ந்து பலவேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதன் விளைவாகத்தான், இப்போது படிப்படியாக இந்த விபத்துகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றன என்பதை மட்டும் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறைந்தது 9 ஆயிரம் பேருக்குமேல் மாண்டிருக்கிறார்கள் என்றும். பல்லாயிரக்கணக்கான பேர் கை, கால்களை இழந்து இருக்கிறார்கள் என்றும் குறிப்புகளைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த விபத்துகளைத் தடுக்க, மக்களிடத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக—தினசரி டி.வி.-யிலே பார்க்கும்போது 10 பேர், 15 பேர், 20 பேர் இறப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்; ஆகையினால், மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த—தொலைக்காட்சிகளில் நாம் விளம்பரம் செய்ய வேண்டும். அதேபோல், தினசரி தாளிலே விளம்பரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பொதுமக்கள் மத்தியிலே விபத்துகளைத் தடுப்பதற்காக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஆண்டுக்கு ஒருமுறை சாலைப் பாதுகாப்பு வாரம் என்று கடைப்பிடிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் பொதுமக்கள் மத்தியிலே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல பொதுமக்கள் மத்தியிலே சாலைப் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த சாலைப் பாதுகாப்புக் கண்காட்சி போன்றவற்றை எல்லாம் நடத்தி, மக்கள் மத்தியிலே விழிப்புணர்வை மாநில அரசு ஏற்படுத்தி வருகிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள் மற்றொரு நல்ல ஆலோசனையையும் அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள். இது மட்டும் போதாது. இன்னும் தொலைக்காட்சிகள் மூலமாகவும்,

பத்திரிக்கைகள் மூலமாகவும் இதை விளம்பரப்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய யோசனையைப் பற்றி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை விபத்து என்பதே பெரும்பாலும் வாகன ஓட்டுநர்கள் வேகமாக ஓட்டுவதுதான் அதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கிறது. 'திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை எப்படி ஒழிக்க முடியும்?' என்ற ஒரு தத்துவம் இருக்கிறது. அப்படி இந்த ஓட்டுநர்களே பார்த்துத் திருந்தினால்தான், இதை ஒழிக்க முடியும். அவர்கள் இப்படித் திருந்த வேண்டும் என்று சொன்னால், தன்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கிறது என்ற உணர்வும் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நான்கு வழிச் சாலை திண்டிவனம் வரை போட்டிருக்கிறார்கள். அந்தச் சாலையினுடைய condition-ஐப் பார்த்துவிட்டு, 140 கிலோ மீட்டர், 120 கிலோ மீட்டர் வேகத்தில் டிரைவர்கள் ஓட்டுகிறார்கள். ஆகவே, தன்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கின்றது என்று அவர்களே திருந்த வேண்டும். அதற்கு அவர்கள் வீட்டிலேயிருக்கின்ற அவர்களுடைய பெண்கள், அவர்களுடைய குழந்தைகள், இவர்களுடைய படங்களையெல்லாம் முன்னாலே வைக்கின்ற திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கிறதா? ஏனென்றால் அப்பொழுதுதான் திருந்த முடியும். நம்மை நம்பி இவ்வளவு பேர் இருக்கிறார்களே என்று முன்னாலே இருக்கிற படங்களை அடிக்கடி பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்பப் படத்தைப் பார்க்கும்போது, ஓ! நம்மை நம்பி இவ்வளவு பேர் இருக்கிறார்களே; மெதுவாக ஓட்டுவோமே என்கின்ற எண்ணம் அவர்களுக்கு உருவாகும். எனவே, அப்படி ஒரு திட்டத்தை இந்த அரசாங்கம் வைத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகள் பெரும்பகுதி ஓட்டுநர்களுடைய தவறுகளினால்தான் ஏற்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுபோல ஏற்படுவது உண்மைதான். நடந்திருக்கின்ற விபத்துகளில், ஏறத்தாழ 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட





விபத்துகள் அந்த ஓட்டுநர்களுடைய தவறுகளினால்தான் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நமது புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதனுடைய அடிப்படையிலேதான், அதற்காகத்தான் அதைத் தடுத்து நிறுத்துவதற்காக, அந்த ஓட்டுநர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியும், புத்தாக்கப் பயிற்சியும் அளிப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவர்களுக்கு மனப் பயிற்சி, அதேபோல மன வளம் பற்றிய பயிற்சி, யோகா பயிற்சி போன்றவற்றையெல்லாம் இப்போது அந்த ஓட்டுநர்களுக்கு வழங்கி வருகிறோம். அதன் மூலமாக சற்று விபத்துகள் குறைந்திருக்கின்றன. அதோடு மட்டுமல்ல; மற்றொரு யோசனையை மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு தெரிவித்திருக்கிறார்கள் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய படத்தை முன்னால் வைத்தால் அதைப் பார்த்து அவர்களுக்கு ஒரு குடும்பப் பற்றின் காரணமாக இன்னும் கவனமாக ஓட்டுவதற்கு வசதியாக அமையும் விபத்துகளை தடுப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்று யோசனையை தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு ஒருவேளை அந்த குடும்பப் பற்றின் காரணமாக அந்தப் படத்தையே பார்த்துக்கொண்டு ஓட்டிவிட்டால் இன்னும் விபத்துகள் கூடுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைப் பற்றியும் நமது அரசு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நேராகவே பார்க்கிறார்களே! அதனாலே படத்தைப் பார்க்க மாட்டார்கள்! (சிரிப்பு) திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் நாளேடுகளிலேயும், தொலைக்காட்சிகளிலேயும் பார்க்கின்ற நேரத்திலே உயிர் இழப்புகள் குறித்து அதிகமாக வருகின்றன. ஒவ்வொரு மனித உயிரும் விலை மதிக்க முடியாத உயிர். ஆகவே அந்த விபத்துகளைத் தடுக்கக்கூடிய வகையிலே—இப்பொழுது அரசால் சாலைப் பாதுகாப்பு வாரம் எல்லாம் கடைபிடிக்கப்படுகிறது—பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தாலும்கூட, இந்தச் சாலைப் பாதுகாப்பு வார விழாவிலே ஆண்டு ஒன்றுக்கு ஒரு நாள் ஓட்டுநர்கள் எல்லாம், 'நான் விபத்து இல்லாமல் ஓட்டுவேன்' என்று உறுதி எடுத்துக்கொள்ளக்கூடிய வகையிலே, உறுதிமொழி தினம் ஒன்றை அனுசரிக்க, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்திலே வண்டியிலே முன்பக்கம் பிரதான விளக்கு, பெரிய விளக்கு இருக்கிறது. விடியற்காலை நேரத்திலே எதிர் திசையிலே வரக்கூடிய வாகனங்களுடைய பிரதான விளக்கொளி, கடுமையாக இருக்கின்ற

[2005 பிப்ரவரி 3

காரணத்தினாலே கண் சற்று அயர்ந்து, விபத்து ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. இதற்கு முன்னாலேகூட, கடந்த காலங்களிலே, இந்தப் பிரதான விளக்கினுடைய பாதி அளவு கருப்பு வண்ணம் பூசப்பட்டிருந்தது. இப்பொழுது அதெல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அதிகாரிகள் சொல்லுகிறார்கள்; வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். மீண்டும் கருப்பு வண்ணம் அடித்தால் அது சரியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படி பாதி விளக்குக்குக் கருப்பு வண்ணம் அடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதுபோல இப்பொழுது முன்னால் இருக்கின்ற அந்த head light விளக்கொளியினால் அதை எதிர்த்து வருகின்ற வாகனங்களும் இரவு நேரங்களில் விபத்துகளுக்கு உள்ளாகின்றன. அதற்காக, மோட்டார் வாகனச் சட்டத்தின் அடிப்படையில், அதையும் தீவிரமாகக் கண்காணித்து, நமது மோட்டார் வாகன அரசுத் துறை அலுவலர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆங்காங்கு, பல சோதனைகளையும் ஏற்படுத்தி வருகிறார்கள். சட்டப்படி, head lights சரியாகப் பராமரிக்கப்படாமல் இருந்தால், அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, விபத்து இல்லாமல் ஓட்டுகின்ற ஓட்டுநர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அதற்கு, ஏற்கெனவே ஆண்டு முழுவதும் விபத்து இல்லாமல் ஓட்டி முடித்திருக்கிற அந்த ஓட்டுநர்களுக்கு, விழாக்கள் மூலமாக அவர்களுக்கு மரியாதை செய்து, அவர்களைக் கௌரவப்படுத்தி, அவர்களுக்குப் பரிசுகளும் வழங்கி ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை விபத்துகளைத் தடுப்பதற்கு, சாலையோரக் காவல் துறையினர் கட்டுப்படுத்தாமல் போனாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, கனரக வாகன பெரிய லாரிகளிலே, லைட்டுகள் பொருத்தப்பட்டு, அவற்றினால் எதிரே வருகிற வாகனங்களை ஓட்டுகிற ஓட்டுநர்களுக்குக் கண்ணே தெரியாத அளவுக்குத்



2005 பிப்ரவரி 3]

தடுமாறி விபத்துகளும் அதிகமாக நடந்து வருவதாக, குறிப்பாக, ஆய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் கூறுகின்றன. அதேபோன்று, சாலை விபத்துகளை—வேகத்தை— தடுப்பதற்குக் காவல் துறை மூலமாகக் கட்டுப்படுத்தப்படுவதைவிட, ஒலி நாடா மூலமாக, 60 கிலோ மீட்டர், 70 கிலோ மீட்டர் என்று தேசிய நெடுஞ்சாலைகளிலே பொருத்தப்பட்டு, அது மூலமாக அப்படி வேகத்தை அதிகப்படுத்துகின்ற லாரி எது, வாகனம் எது என அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? அதன்மூலமாக, இதுபோன்ற விபத்துகளைத் தடுக்க முடியும். நேற்றையதினம்கூட, கிருஷ்ணகிரியிலே ஒரு வண்டியின்பின் ஒன்றாக, பத்து வண்டிகள் மோதி பல பேர் காயமடைந்து, உயிரிழப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆக, இப்படிப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளுக்கு அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் மட்டுமல்ல, மாநில நெடுஞ்சாலைகள், மற்ற இதர மாவட்ட சாலைகளிலேயும்கூட, அனைத்துச் சாலைகளிலேயும், குறிப்பிட்ட வேகத்திற்குமேல் ஓட்டுகின்ற வாகன ஓட்டுநர்களுக்குப் பல்வேறு சோதனைகளின் மூலமாகக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது அதற்குரிய நவீனக் கருவி வசதிகளுடன், அப்படிப்பட்ட சோதனைகளைப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே அனைத்துச் சாலைகளிலும், இப்படி அளவுக்குமீறி வேகமாக வருகிற வாகனங்களை நவீன முறையிலே கண்டறிந்து, அவர்களுக்கு உடனுக்குடன் உரிய தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு — fitness certificate — தகுதிச் சான்றிதழ் வழங்குகிறபோதுகூட, ஆயில் எரிபொருள் செல்கின்ற அந்த பம்பிற்கு—அதிலிருந்து கட்டுப்படுத்தி, 75 கிலோ மீட்டருக்குமேல் அந்த வாகனங்கள் செல்லக் கூடாது என்ற சூழ்நிலையைக் கட்டாயப்படுத்தி, அந்தச் சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. ஆனாலுங்கூட, அவ்வாறு அந்த பம்புகளை நாங்கள் கட்டுப்படுத்தி, 75 கிலோ மீட்டருக்குமேல் செல்லக் கூடாது என்று அந்தக் கட்டுப்பாடு விதித்தாலும், அதற்குப் பின்பு தகுதிச் சான்றிதழ் பெற்றுவிட்டு வெளியில் சென்றவுடன் அதை மாற்றிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட வாகனங்களையும் கண்டறிந்து, அவற்றின்மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் பேருந்துகளை வேகமாக ஓட்டுகின்ற நேரத்திலே, அதன் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றவகையிலே ஸ்பீடா மீட்டர்கள் பொருத்தப்பட்டிருந்தன. தற்போது, அவை இல்லை. மீண்டும், அந்த ஸ்பீடா மீட்டர்களைப் பொருத்துகின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தேவை எழாமல், அரசு வாகனங்களைப் பொறுத்தவரையிலே, அந்த வாகனங்களிலேயே, 75 கிலோ மீட்டருக்கு மேல் அதிகமாக செல்ல முடியாத அளவுக்கு பம்பிலேயே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1988-லே இருபது இலட்சமாக இருந்த வாகனங்கள், இன்றைக்கு 68 இலட்சமாக உயர்ந்திருக்கின்றன. 2004 ஜனவரியிலிருந்து நவம்பர் வரை 48 ஆயிரத்து 318 சாலை விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. அதிலே, 8,763 பேர் இறந்திருக்கிறார்கள். அதிலே அரசு பஸ்களில் இறந்தவர்கள் 1,126 பேர். சென்னையில் மட்டும் 4,456 பேர் இறந்துள்ளார்கள். ஆக, இப்படி ஒரு சுனாமியைப் போல 7 ஆயிரம், 8 ஆயிரம் பேர் இப்போது சாலை விபத்துகளால் இறந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த வண்டிகளிலே பின்னால் இருக்கின்ற சிவப்பு விளக்குகள் சரிவர எரிவதில்லை. மாட்டு வண்டிகளிலே reflector, சைக்கிள்களிலே reflector, வருகின்ற வண்டிகளில் எல்லாம் சிவப்பு reflector-களை அதிக அளவிலே பொருத்தினால், சாலை விபத்துகள் குறைய வாய்ப்பாக இருக்கும். அதை, இந்தத் துறை பொருத்த நடவடிக்கை எடுக்குமா? போக்குவரத்துத் துறை, R.T.O., Brake Inspector, போக்குவரத்துக் காவலர்கள், இவர்களையெல்லாம் அதிக அளவில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 பிப்ரவரி 3]

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலிலே குறிப்பிட்டதுபோல விபத்துகள் நடக்கின்ற நேரம் அதிகாலை ஒரு மணி முதல் காலை ஆறு மணி வரை. அது போல, மாலை மூன்று மணி முதல் இரவு எட்டு மணி வரை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதைக் கண்டறிந்து அப்படிப்பட்ட நேரங்களிலே விபத்துகளைத் தடுப்பதற்கு சிறப்பு ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக, இந்த விபத்துகள் ஏற்படுவதற்கு மற்றொரு காரணம் நாளுக்கு நாள் பெருகி வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கையும் ஒரு காரணம். இருந்தாலுங்கூட, இப்போது தமிழகத்திலே மொத்த வாகனங்கள் 70,62,310 இருக்கின்றன. இப்போது இந்தியாவிலே மிக அதிகமான வாகனங்கள் இருக்கின்ற மாநிலங்களில் நமது தமிழ்நாடும் ஒன்று. இவ்வளவு வாகனங்கள் பெருகி வந்திருந்தாலுங்கூட விகிதாச்சாரத்தின் அடிப்படையிலே கணக்கிட்டுப் பார்த்தால், வாகனங்கள் பெருகப் பெருக அதற்கேற்றாற்போல் விபத்துகள் பெருகாமல் விபத்துகளுடைய எண்ணிக்கை சற்று குறைந்து வருகிறது. இன்னும் அந்த விகிதாச்சாரத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் கிலோ மீட்டருக்கு 0.51 என்ற விகிதாச்சாரத்தில் நடந்த விபத்துகள் இப்பொழுது மாநில அரசு எடுத்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு - சென்ற ஆட்சிக் காலத்திலே இருந்த விபத்துகளுடைய எண்ணிக்கை, அளவு 0.51 சதவீதம் ஒரு இலட்சம் கிலோ மீட்டருக்கு ஏற்பட்ட வாகன விபத்து - இப்பொழுது அம்மாவினுடைய ஆட்சியிலே எடுத்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 0.31 சதவீதம் என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த reflector-கள் பொருத்துவது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த reflector-களை முன்னாலும், பின்னாலும் அந்தச் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று மோட்டார் வாகனச் சட்டத்திலேயே இருக்கிறது. அந்த விதிமுறைகளைக் கடுமையாக அமல்படுத்த வேண்டும், அதைக் கடைப்பிடிக்காத வாகன உரிமையாளர்கள்மீது, ஓட்டுநர்கள்மீது

[2005 பிப்ரவரி 3

கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நமது போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதை நமது துறை அதிகாரிகள் மிகக் கடுமையாகக் கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துகள் பல காரணங்களினால் ஏற்படுகின்றன. அருமையான விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். மலைப் பிரதேசங்களில் வாகன ஓட்டுநர்கள் அந்தச் சிறப்புப் பயிற்சி இல்லாததனால் ஊட்டி-மைசூர் சாலையில் கல்லட்டி காட் என்ற ரோட்டிலே வாரத்திற்கு குறைந்தது ஒரு விபத்து ஏற்படுகிறது. உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. கடந்த வாரம் நாங்கள் சட்டசபைக்கு வருவதற்கு முன்பாக மத்தியப் பிரதேசத்திலேயிருந்து வந்தவர்கள் மூன்று பேர் அங்கே இறந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த மலைப் பிரதேசங்களில் ஓட்டும்போது வாகன ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதுடன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சில ஓட்டுநர்கள் எல்லாம் மலைப் பிரதேசத்திற்கு வந்துகொண்டிருப்பதாகத் தகவல் வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தமாதிரி சமயங்களிலே—உயிர்ச்சேதம் மற்றும் விபத்துகள் வருடத்திற்கு 8 ஆயிரம் என்ற அளவிலே சராசரியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்—இவற்றைத் தடுப்பதற்கு இந்தமாதிரி உத்திகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பிரதேசங்களில் இயக்கப்படுகின்ற வாகனங்களை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்துத்தான் அங்கே ஓட்டுநர்களாக பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று மீண்டும் அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளைக் கொடுப்பதற்கு அரசு சிந்திக்கும், பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2005 பிப்ரவரி 3]

**22—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***31622—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இப்பொருள்மீது தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலினையில் இல்லை. (ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10-25

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தங்கத் தாரகை தமிழக முதலமைச்சர், சுனாமியை சூறாவளியாக வென்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். பவானி நகரம் இப்போது இந்தியாவிலேயே ஜமக்காளம் நகரம் என்று பெயர் பெற்றது. இப்பொழுது பவானி நகரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் கோபிச்செட்டிப்பாளையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் உள்ளது. பவானியைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் நல்லமுறையிலே சிறந்து விளங்குகின்றது. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களும், வியாபாரப் பெருங்குடி மக்களும், இரண்டு சக்கரம், நான்கு சக்கரம் வாகனங்களை அதிகமாக உபயோகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அடுத்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கு ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தளவிலே ஏற்கெனவே ஈரோடில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், பவானியில் இருந்து

30 கிலோ மீட்டர் தொலைவில் கோபிச்செட்டிப்பாளையத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில், பெருந்துறைப் பகுதியில் ஒரு பகுதி அலுவலகமும் இயங்கி வருகின்றன. ஆக, அந்தப் பகுதியிலே இருக்கிற வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இன்னும் சொல்லப்போனால் அதற்குக் கூடுதலாகவே அங்கே போக்குவரத்து அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஆக, கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அங்கே அமைப்பதற்குரிய வாகனங்களின் எண்ணிக்கை, போதுமான அளவில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, நேரடியாக ஒரு புதிய மாவட்டம் ஏற்படுத்துகின்றபோதுதான் அங்கே புதியதாக - அந்தப் புதிய மாவட்டத்திற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட்டு வருகிறது. மற்றப் பகுதிகளில் பகுதி அலுவலகம்தான் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டிலாவது இதுபற்றி அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு இருக்கிறார். இது பற்றி அரசு சிந்திக்கும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பெருந்துறையில் உள்ளதுபோல ஒரு பகுதி நேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாவது அமைத்துக் கொடுக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வட்டாரப் பகுதி நேர அலுவலகம் ஏற்படுத்துவதற்குரிய அளவிற்கு அங்கு வாகனங்களின் எண்ணிக்கை இருக்குமானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.





**23—**

## மாணவர் விடுதி

***37780—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பேரூர் பகுதிக்குட்பட்ட பகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில், பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்குப் புதியதாக விடுதிகள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் மொத்தம் 19,000 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அவர்களில் 11,000 ஆண்களும் 8,000 பெண்களும் படித்து வருகின்றார்கள். நாட்ராம்பள்ளி பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதி. இந்தப் பகுதியில் வசித்து வரும் மாணவிகளுக்கும் தனியாக ஒரு விடுதி அமைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய நாட்ராம்பள்ளியில், ஏற்கெனவே அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இருக்கின்றது. ஒப்பளிக்கப்பட்ட 50 மாணவர்கள் சேர்க்கைக்கு, 45 மாணவர்கள் மட்டும்தான் இப்போது விடுதியில் சேர்ந்து இருக்கிறார்கள். எனவே, புதிய விடுதி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்

[2005 பிப்ரவரி 3

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்றாம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியும் புதுப்பேட்டையில் தனியார் கட்டடத்தில் எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாமல் இயங்கி வருகிற காரணத்தால், மாணவர்கள் சேருவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். அதேசமயத்தில், கடந்த 3 ஆண்டுகளாக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில், நிதி ஒதுக்கீடு செய்தும் இந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படவில்லை. இந்த நிதி ஆண்டிலாவது கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்கிறபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவ மாணவியருக்கான மொத்த விடுதிகள் 972-ல் 202 விடுதிகள் மட்டுமே அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வந்தன. 770 விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்ததை மனதில் வைத்துக் கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கிவந்த விடுதிகளில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லை என்பதை அறிந்து கொண்டு, நிதிநிலைமை சிறப்பாக இல்லாவிட்டாலும்கூட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய மாணவச் செல்வங்களுடைய வாழ்வு நலம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் 770 தனியார் விடுதிகளில் இன்றுவரை 314 விடுதிகளுக்கு அரசு கட்டடங்கள் கட்ட உத்தரவு வழங்கி, சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருகின்ற ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியில் அந்தத் தனியார் கட்டடத்தில் இயங்கும் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.



2005 பிப்ரவரி 3]

**24—**

**மாசுக் கட்டுப்பாடு**

***44708—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரிலுள்ள ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) கோவில்பட்டி நகரில் இரண்டு பெரிய நூற்பாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து தினமும் வெளியேற்றப்படும் 114 கிலோ லிட்டர் கழிவுநீர் அங்கே அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, தொழிற்சாலை வளாகத்திலுள்ள மரம், செடிகள் வளர்க்க உபயோகிக்கப்படுகிறது. கழிவுநீர், தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே வெளியேற்றப்படுவதில்லை. இதுதவிர, கோவில்பட்டி நகரிலுள்ள 'சி' வகை தீப்பெட்டித் தொழிற்சாலைகள், சூரியபடுகை அமைப்புகளை நிறுவி, கழிவுநீரை ஆவியாக்கிவிடுகின்றன. 'டி' வகை தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மட்டும் சூரியபடுகை அமைப்புகளை நிறுவ வேண்டியுள்ளது. விரைவில் சூரியபடுகையை நிறுவி, கழிவுநீரைச் சுத்தப்படுத்த, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது; தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கூறியிருக்கிறார்கள். கோவில்பட்டி நகரில் இயங்கி வருகின்ற இரண்டு நூற்பாலைகளில் லாயல் மில் நூற்பாலையில் இரண்டு சாயப்பட்டறை யூனிட்டுகள் செயல்பட்டு வந்தன. அவற்றில் இன்று ஒன்று செயல்படாமல் மற்றொரு சாயப்பட்டறை யூனிட் மட்டும் செயல்பட்டு வருகிறது. அதிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் அருகிலுள்ள கோவில்பட்டி நகரில் வட பகுதியின் எல்லையாக அமைந்துள்ள மூப்பம்பட்டி கண்மாய் என்ற அந்தக் குளத்தில் அதிகமாகக்

[2005 பிப்ரவரி 3

கலக்கிறது. அந்தக் கண்மாயிலிருந்து, அந்தக் கிராமத்தின் விவசாயத்திற்காக, வயல்வெளிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. அந்தப் பகுதிகளில் குறிப்பாக மூப்பம்பட்டி கிராமம், அதேபோன்று சங்கரலிங்கபுரம் பகுதிகளில் நிலத்தடி நீர் வெகுவாக பாதிக்கப்பட்டு, அந்த நீரினுடைய தன்மை மாறக்கூடிய அளவில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறினாலுங்கூட, அந்த லாயல் மில் நிறுவனத்தில் ஒரு சாயப்பட்டறை யூனிட் என்பது இன்றும் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்துவதற்குப் போதிய நடவடிக்கையை எடுப்பார்களா? மேலும் அந்தப் பகுதியிலே அதிகமாக தீப்பெட்டி ஆலைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தக் குளத்தின் அருகிலே, ஏற்படுகின்ற கழிவுகளை எரிக்கக்கூடிய தன்மை இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் சுற்றுச்சூழல் கெடாத வண்ணம் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு, இதுபோன்ற பாதிப்பு இருக்கிறது என்று அந்தப் பகுதியிலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கு மாசுபடுகிறது என்று தெரிவித்திருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தக்க நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதி மாசுபடுவதைத் தடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே உறுதி அளித்ததன்பேரில், அதற்கான நடவடிக்கையை எடுத்து, அந்தப் பகுதியிலே சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



2005 பிப்ரவரி 3]

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**25—**

**வகுப்பறைக் கட்டடங்கள்**

***53430—திரு. பி.ஆர். சுந்தரம்:**

*மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ராசிபுரம், திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்படுமா?*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்க அயராது பாடுபட்டுவரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-ல் மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, கல்வித் துறையின்மீது மிகுந்த அக்கறை கொண்டு, என்னுடைய ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் புதிதாக எம்.எஸ்சி., பி.காம்., மற்றும் பி.ஏ., (தமிழ்) ஆகிய புதிய வகுப்புகள் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள். இக்கல்லூரியில் சுமார் 1,400 மாணவ மாணவிகள் பயின்றுகொண்டிருக்கின்றார்கள். இக்கல்லூரியில் போதிய வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால் shift முறையில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. Shift முறையில் வகுப்புகள் நடைபெற்றாலும், போதிய கட்டட வசதி இல்லாத காரணத்தினால் மாணவ மாணவியர் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இதைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், ராசிபுரம் அரசுக் கலைக் கல்லூரிக்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, புதிய வகுப்பறைகள் கட்டுவதற்குப் போதிய நிதியுதவி அளிக்க முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரியில், மொத்தம்

1,400 மாணவர்கள் பயில்கின்றனர். இதன் அடிப்படையில் 41 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. தற்சமயம் 26 வகுப்பறைகள் உள்ளதால், இடப் பற்றாக்குறையின் காரணத்தால் முறை மாற்று முறையில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 ஆம் நிதியாண்டில் அரசுக் கல்லூரிக் கட்டடங்களில், சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசு ஒதுக்கீட்டிலிருந்து. ராசிபுரம் திருவள்ளுவர் அரசுக் கலைக் கல்லூரியில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள, ரூபாய் 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி நடைபெற்றது. 2004-2005 ஆம் நிதியாண்டில் அரசு உறுப்புக் கல்லூரிகளில், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஏதும் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து, வருகின்ற நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அத்தியாவசியத்தை முன்னிட்டு இந்த நிதியை ஒதுக்கீடு செய்து கொடுத்தால், கல்வித் துறை அதை ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003 ஆம் ஆண்டிலே ராசிபுரம் அரசினர் கலைக் கல்லூரிக்கு, ரூபாய் 6 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிதி ஒதுக்கீடு செய்த, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், 2004-2005 ஆம் நிதியாண்டில் கட்டடங்கள் கட்டுவதற்கான செயல் திட்டம் ஏதும் இல்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபடி, 2004 ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கியிருக்கின்றேன். மேலும், அந்த நிதி, பற்றாத காரணத்தினால் வருகின்ற 2005 ஆம் ஆண்டு, அந்த வகுப்பறைகள் கட்டுவதற்கு அதிக நிதியை ஒதுக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, வருகின்ற ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**26—**

**விற்பனை வரியை ரத்து செய்தல்**

***59910—திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட தேன் உற்பத்தியாளர்களிடமிருந்து தேன் கொள்முதல் செய்யும் சிறு வியாபாரிகள் அரசுக்கு விற்பனை வரி செலுத்துவதை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் விற்பனைத் தொகை வரி விதிப்பிற்கு குறைவாக உள்ளபடியால், வரி ஏதும் செலுத்தவுமில்லை; வரி வசூலிக்கப்படவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(துணை வினா இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**27—**

**சுற்றுலாத் தலம்**

***39572—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன்மலை மற்றும் பெரியாறு நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்வராயன்மலை மற்றும் பெரியாறு நீர்வீழ்ச்சியைச் சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன்மலையில் பெரியாறு நீர்வீழ்ச்சி உள்ளது. அங்கு தினந்தோறும் பயணிகள் நிறைய பேர் வந்து செல்கிறார்கள். அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தந்தால் மேலும் பயணிகள் எண்ணிக்கை அதிகமாகும்; அரசுக்கும் வருமானம் அதிகம் கிடைக்கும். சுற்றுலாத் தலம் அமைப்பதற்கு என்ன தகுதி வேண்டும், மத்திய அரசின் பங்கு என்ன என்பதையும் தெரிவிக்க வேண்டும். எனவே, அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க, அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில்கொண்டு, கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. கல்வராயன்மலையில் பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன. அவற்றில் மேகம், பெரியாறு நீர்வீழ்ச்சிகள் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இந்நீர்வீழ்ச்சி கரியாரிலூரிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலும், வெள்ளிமலையிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலும், கரியாரிலூரிலிருந்து குறத்திக்குன்றம் வழியாக சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இந்நீர்வீழ்ச்சியில் சுமார் 70 அடி உயரத்திலிருந்து தண்ணீர் கொட்டுகிறது. இதுவே இதன் சிறப்பாகும். கச்சிராப்பாளையத்திலிருந்து, கரியாலூர் வரும் வழியில் பிரதான சாலையில் இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. மழைக் காலத்தில் மட்டும் நீர் அருவியாகக் கொட்டும். தற்போது, வனத் துறையினர், சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்காக தடுப்புக் கம்பிகளை அமைத்துள்ளனர். அருவி மிக உயரம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 பிப்ரவரி 3]

*முற்பகல் 10-40*

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கழிப்பிடம் அமைத்துத் தருவதற்கும், உடை மாற்றுவதற்கு இடம் அமைத்துத் தருவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28—**

## புதிய குழாய்கள் அமைத்தல்

***19936—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பர்கிட் மாநகரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து வரும் பழுதடைந்த தண்ணீர்க் குழாய்களை மாற்றி புதிய குழாய்களை அமைக்க அரசு முன்வருமா? .

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தொகுதி, நடுவக்குறிச்சி ஊராட்சி, பர்கிட் மாநகரில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி தற்போது அமைக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சி கிணற்றிலிருந்து உந்தப்படும் குடிநீர், மேற்படி நீர் சேகரிக்கும் தொட்டியில் சேகரிக்கப்பட்டு தனித் தனி மின் இறைப்பான்கள் மூலமாக பர்கிட் மாநகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், பாளையம் செட்டிக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும் நீர்

[2005 பிப்ரவரி 3

ஏற்றம் செய்யப்படுகிறது. இதன் மூலம் நீர் அழுத்தம் அதிகமாவதால் ஏற்படும் உடைப்புகள் தவிர்க்கப்பட்டுவிட்டன. எனவே, புதிதாக பிரதானக் குழாய்கள் மாற்றம் செய்யத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவக்குறிச்சி, பர்கிட் மாநகரத்தில் புதிதாக டேங்க் கட்டப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அது புதிதாகக் கட்டப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டி கிடையாது. கிட்டத்தட்ட 7, 8 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட நீர்த்தேக்கத் தொட்டி. தாமிரபரணி ஆற்றிலிருந்து வருகிற பகிர்மானக் குழாய் மிகவும் குறுகிய அளவு, அதாவது 140 எம்.எம். சுற்றளவு கொண்ட காரணத்தால் அது அடிக்கடி வெடிப்பு ஏற்பட்டு அந்தப் பகுதியில் பல வருடங்களாக அந்தப் பிரச்சினை இருந்து வந்தது. நான் 3 ஆண்டுகளுக்கு முன்னாலே கேட்ட கேள்வி இது. அதற்குப் பின்னால், இங்கே அமைச்சர் சொன்னதுபோல, அந்த வழியாகத் தனியாக ஒரு குழாய் போடப்பட்டாலுங்கூட, மீண்டும் அதிலே உடைப்பு இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் நேற்று வரை விசாரித்ததில் எனக்குத் தெரிய வருகிறது. கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் நீளம் அந்தக் குழாய் பதிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய கொள்ளளவு சிறியதாக இருக்கிற காரணத்தினாலும் அடிக்கடி பழுதுபட்டுவிட்டக் காரணத்தினாலும், அந்தக் குழாய்கள் மிகவும் damage ஆகிவிட்டன. ஆகவே, அங்கு புதியதாகக் குழாய்கள் அமைக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அமைத்துத் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன். அதேநேரத்தில் இந்த தாமிரபரணி ஆற்றிலிருந்து பல இடங்களுக்கு 100 கிலோ மீட்டர் வரை தண்ணீர் சென்றாலுங்கூட, மிக அருகிலே, அதுவும் பாளையங்கோட்டை தொகுதியிலுள்ள செவ்வந்திப்பட்டி, ரெட்டியார்பட்டி, முத்தூர், இட்டேரி, அரியகுளம் போன்ற 5 ஊராட்சிகளுக்கும் இன்னும் ஆற்றுத் தண்ணீர் கிடைக்காமல் ஆழ்குழாய்க் கிணற்றுத் தண்ணீர் மூலமாகத்தான் குடித்துக் கொண்டு வருகிறார்கள். அதையும் இந்த அரசு நிறைவேற்றித் தருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றில் சீவலப்பேரி அருகில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சி கிணற்றிலிருந்து பர்கிட் மாநகர், பாளையம், செட்டிக்குளம், எம்.ஜி.ஆர். நகர், நடுவக்குறிச்சி ஆகிய



2005 பிப்ரவரி 3]

கிராமங்களுக்கு நீரேற்றுக் குழாய் மூலமாக தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நீரேற்றுக் குழாயிலிருந்து ஏற்கெனவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த 7 கிராமங்கள் தனித் திட்டத்தில் பிரித்தெடுக்கப்பட்டு, அத்திட்டத்தின் மூலமாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்படி பர்கிட் மாநகர் செல்லும் பிரதானக் குழாயில் நீர் அழுத்தம் காரணமாக, தற்போது உடைப்பு ஏதும் ஏற்படுவது கிடையாது. எனவே, இக்குழாய்களைத் தற்போது மாற்றத் தேவையில்லை. மேலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்ட அருகிலே இருக்கின்ற கிராமத்திற்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் கிடைக்க மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழாய் மாற்றப்பட வேண்டும் என்று நாங்களும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. ஆனால், அதிலே உள்ளபடியே நீங்களே சொல்கிறபடி அந்தக் குழாய் அடிக்கடி பழுது ஏற்பட்டு அது பழுதடைந்துவிட்ட காரணத்தால் மீண்டும் அந்தக் குழாயிலே தண்ணீர் செல்வது என்பது மீண்டும் பழுது ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுதுகூட வாரத்திற்கு ஒருமுறை, இரண்டு முறை பழுதடைந்து கொண்டுதான் இருக்கிறது என்பது எனக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவல். அதிகாரிகள் சொன்ன தகவல் ஒருபக்கம் இருந்தாலுங்கூட, அமைச்சர், சம்பந்தப்பட்ட துறையை மீண்டும் விசாரித்து அதைத் தேவையானால் மாற்றிக் கொடுப்பதற்கான முயற்சி செய்தால் மக்களுக்கு நல்லது என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நான் கேட்டதுபோல 5 ஊராட்சிகளுக்கும் ஆற்றுத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், திருவேங்கடநாதபுரத்திலுள்ள உறை கிணற்றிலிருந்து திருவேங்கடநாதபுரம் மற்றும் குன்னத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளின் கிட்டத்தட்ட 15 கிராமங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு, இப்போது மக்கள் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் கிணறு, சமீபத்தில் ஒரு சரிவு ஏற்பட்டு மிக ஆபத்தான நிலையிலே உள்ளது. உடனடியாக அது பழுது பார்க்கப்படாவிட்டால் அந்த 15 கிராமங்களில் உள்ள மக்கள் குடி தண்ணீருக்கு மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற தகவலையும் தெரிவித்து, இந்தப் பிரச்சினையையும் அரசு தீர்த்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அங்கே குழாய்கள் பழுதடைந்திருந்தால் அந்தக் குழாய்களை உடனடியாகப் பார்வையிட்டு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

### அணை கட்டுதல்

***38872—திருமதி கு. கலாவதி:**

*மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, பெரப்பன்சோலை ஊராட்சியில் உள்ள பள்ளிப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது ?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) ஆகவே வினா எழவில்லை.

**திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களை பாதுகாத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா தங்கத் தாரகையே, காட்டுக் கொள்ளையன் வீரப்பனை வதம் செய்து வீரப் புரட்சி செய்த வீராங்கனையே, எங்கள் தாயே, உங்களை வணங்கி எனது கேள்வியினைத் தொடங்குகிறேன். சேந்தமங்கலம் தொகுதியைச் சார்ந்த கொல்லிமலைப் பகுதியில் உள்ள, கொல்லிமலையில் பெய்கின்ற மழை நீரும், ஊற்று நீரும் சேர்ந்து பள்ளிப்பாறையில் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெரப்பன்சோலை ஊராட்சியில், சுற்றியுள்ள மலைவாழ் மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். சுமார் ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சுமார் 2000 ஏக்கர் பாசன நிலங்கள் உள்ளன. பள்ளிப்பாறை ஆற்றின்





குறுக்கே, பெரப்பன்சோலை ஊராட்சியில், ஒரு அணை கட்டினால் இப்பகுதி மக்கள், மலைவாழ் மக்கள், விவசாய மக்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து இந்த அணையைக் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, பெரப்பன் ஊராட்சியில் உள்ள பள்ளிப்பாறை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்கு, திட்டத்தளம் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில் தடுப்பணை கோரும் தளத்திற்கு மேல் பகுதியில், இதே ஆற்றில் சுமார் 600 மீட்டர் தூரத்தில் புதூர் பாலப்பட்டி-பெரியாறு என்ற அணைக்கட்டு கட்டப்பட்டு, வாய்க்கால் மூலம் பாசனம் நடைபெற்று வருகிறது. மேலும், திட்டம் கோரும் தளத்திற்குக் கீழ்ப் பகுதியில் சுமார் 500 மீட்டர் தூரத்தில் சாலக்காடு-பெரியாறு என்ற அணைக்கட்டு உள்ளது. அதன் வாய்க்கால் மூலமும் பாசனம் நடைபெற்று வருகிறது. அணை கட்டக் கோரும் இடம் மேற்கூறிய இரு அணைக்கட்டு அமைந்திருக்கும் இடத்திற்கு ஒரு கிலோமீட்டர் இடைவெளிக்கு உள்ளேயே அமைந்துள்ளதால் தொழில்நுட்ப ரீதியாக புதிய அணை கட்டும் சாத்தியக்கூறு ஏதும் தற்போது இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி கு. கலாவதி.

**திருமதி கு. கலாவதி:** அந்த அணை மிகவும் சிறியதாக இருப்பதால், இன்னும் கொஞ்சம் உயரமாக ஒரு திட்டத்தினை, ஒரு பெரிய திட்டத்தினைப் போட்டு கட்டினால், அந்த 2500 ஏக்கரிலுள்ள மலைவாழ் மக்கள், வாழ்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால், இதை மறுபடியும் மறுபரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை எங்களுக்குச் செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு மறுபரிசீலனைக்கு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

[2005 பிப்ரவரி 3

30—

## தடுப்பு அணை

***42412—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி ஒன்றியம், கூடமுடையார் கோவில் அருகில் அர்ஜுனா நதியில், தடுப்பு அணை கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி ஒன்றியம் கூடமுடையார் கோவில் அருகில், அர்ஜுனா நதியில், தடுப்பு அணை கட்டும் திட்டம் அரசின் நிதி நிலைக்கேற்ப செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் சட்டமன்றத் தொகுதி, சிவகாசி யூனியன், எம். புதுப்பட்டி அருகே அர்ஜுனா நதி ஓடுகிறது. அதன் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டினால், அதன் மூலம் காளையார்குறிச்சி, எம். புதுப்பட்டி, நெடுங்குளம் ஆகிய மூன்று பஞ்சாயத்துகளிலும் சுமார் 200 ஏக்கர் தரிசு நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறும். இதைக் கணக்கிலேகொண்டு, இந்த வறட்சியான பகுதியிலே, இந்தத் தடுப்பணையை விரைவில் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஒன்றியம், கூடமுடையார் கோவில் அருகில் அர்ஜுனா நதியின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன் மூலம் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீரை உயர்த்த இயலும். மேலும் தடுப்பணை கட்டுவதன் மூலம் ஒரு மில்லியன் கன அடி நீரைத் தேக்கலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூபாய் 70 இலட்சம் ஆகும். மேலும், இங்கு தடுப்பணை கட்டுவதால் அதன் கீழ்ப் பகுதியில் உள்ள பாசன நிலங்கள் பாதிப்படையாது என்று ஆய்வறிக்கை



2005 பிப்ரவரி 3]

கூறுகிறது. வருங்காலத்தில் அரசின் நிதிநிலைக்கேற்ப இத்திட்டம் முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நான் 2001-லிருந்தே தொடர்ந்து வைத்து வருகிறேன். தயவுகூர்ந்து, அமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்து, இந்த அணையைக் கட்டுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது கட்டப்படும் என்று சொல்கிறார். பிறகு ஏன் அமைச்சரைத் தொந்தரவு செய்கிறீர்கள்?

**திரு. எஸ். தாமோதரன்:** 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

31—

## சார்நிலை துணைக் கருவூலம்

***2592—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில், சார்நிலை துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலைப் பளு, work load, குறைவாக இருக்கிற காரணத்தினாலும், போதிய பணியாளர்கள் அங்கு இல்லாத காரணத்தினாலும், பாப்பிரெட்டிப்பட்டி ஒரு வட்டத் தலைமையகமாக இருந்தபோதிலுங்கூட, அங்கு கருவூலம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 பிப்ரவரி 3

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-1996-ல் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அரூர் வட்டத்திலிருந்து பாப்பிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாக வைத்து புதிய வட்டமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை 10 ஆண்டுகளாக, அந்தப் பகுதிக்கு ஒரு துணைக் கருவூலம் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல் அருகிலே இருக்கக்கூடிய அரூர் துணைக் கருவூலத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அப்பகுதி மக்கள் 30 கிலோமீட்டரிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவு சென்று அங்கே வரவு-செலவுக் கணக்குகளை வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நிதியாண்டில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று, அப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, வட்டத் தலைமையிடமாக பாப்பிரெட்டிப்பட்டி இருப்பதால், அங்கே துணைக் கருவூலம் அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒட்டுமொத்தமாக 203 கருவூலங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றுள் வட்டத் தலைமையகம் இல்லாதபோதிலும், அங்கு கருவூலங்கள் இருக்கின்ற பகுதிகள் 23 பகுதிகள் இருக்கின்றன. வட்டத் தலைமையகம் இருந்தபோதிலும், கருவூலங்கள் இல்லாத பகுதிகள் 20 பகுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரூருக்கும் பாப்பிரெட்டிப்பட்டிக்கும் கிட்டத்தட்ட 40 கிலோமீட்டர் தொலைவு என்று கூறியிருக்கிற காரணத்தினால், அந்த அடிப்படையில் அரசு இதைப் பரிசீலனை செய்யும்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும் என்ற அறிவிப்பைத் தந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.



2005 பிப்ரவரி 3]

**32—**

## மென்பொருள் உற்பத்தி மையம்

***31790—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைத்திட அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிநீருக்காக வல்லநாட்டை மையமாக வைத்து, என்னுடைய விளாத்திக்குளம் தொகுதியில் 171 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 68 கோடி வழங்கிய அம்மா அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக முதலில் வணங்கி என்னுடைய கேள்வியைக் கேட்கிறேன். மனிதனுக்கு இதயம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல் இன்று எல்லா வகையிலும் மிக முக்கியமானது கணினி ஆகும். குறிப்பாக, கணினி மென்பொருட்கள் அனைத்தும் வெளிநாடுகளிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன. கணினி மென்பொருட்கள், தமிழ்நாட்டில் குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டும். அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான பொறியாளர்கள் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொற்கால ஆட்சியில், மறுபரிசீலனை செய்து தூத்துக்குடியில் கணினி மென்பொருள் உற்பத்தி மையம் அமைக்க ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2005 பிப்ரவரி 3

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கணினியினுடைய இன்றியமையாத தன்மை, வாழ்க்கையில் அது எவ்வாறு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். "If you ignore computer, computer will ignore you" என்கின்ற அடிப்படையிலே இனிமேல் வாழ்க்கையோடு ஒன்றிவிட்ட நிலையிலே கணினி இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. இந்த 3-1/2 ஆண்டு காலத்திற்கு முன்பாக இருந்த நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 3-வது நிலையிலே, 3 வது நிலைக்கு முன்பாக அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பாக இருந்தது. அதாவது கர்நாடகம் முதன்மையாக இருந்தது. ஆந்திரம் இரண்டாவதாக இருந்தது. மூன்றாவதாக தமிழ்நாடு இருந்தது. ஆனால் இதை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்கின்ற மனப்பான்மையோடு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக 8,000 கோடி ரூபாய்க்கு மென் பொருள் ஏற்றுமதி செய்து ஒரு பெரிய சரித்திர சாதனையை நம்முடைய தமிழகம் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆந்திரா நமக்குப் பின்னாலே சென்று விட்டது. கர்நாடகத்தை beat செய்வதற்கு இன்னும் ஓராண்டு இருக்கிறது. இந்த ஓராண்டிலே கர்நாடகத்திற்கு முன்பாக இருந்து (குறுக்கீடு) கர்நாடகத்தை overtake செய்து முதல் நிலை என்கின்ற ஒரு பெருமையை, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு, அம்மாவின் வழிகாட்டுதலின்படி அடையும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1999 ஆம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 500 மென்பொருள் நிறுவனங்கள் இருந்தன. ஆனால், இன்றைக்கு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதன்மையை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. நேற்றைக்கே என்னுடைய பதிலில் சொன்னதுபோல, அமெரிக்காவில் Harvard University, இன்றைக்கு இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதன்மை பெறுகின்ற ஒரு நிலைமை என்கின்ற ஒரு observation-ஐத் தந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு முக்கியமான விஷயத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக W.T.O. - World Trade Organisation



2005 பிப்ரவரி 3]

அடி வாங்கிய உடனேயே, நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து, அதுவும் இந்தியா என்று சொல்லும்போது தென்னாட்டிலிருந்துதான் அதிகமான அளவுக்கு, வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்கின்றார்கள். அதிலும், நம்முடைய தமிழ்நாட்டிலேதான் கணினியை அறிந்தவர்கள் முழுமையாக இருக்கின்ற காரணத்தினால், இங்கிருந்து போகின்றவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அங்கே அடி வாங்கிவிட்டதன் காரணமாக வேலைவாய்ப்பு போய் விட்டது. எனவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்ற மனப்பான்மையோடு—Business Process Outsourcing —அதாவது வணிக செயல்பாட்டுச் சேவை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, அதில் சென்னை மட்டுமே மையமாக இருக்கக்கூடாது; தமிழகத்திலே கோயமுத்தூர், திருச்சி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற இரண்டாம் நிலை நகரங்களும், அதோடுமட்டுமல்லாமல், மூன்றாம் நிலை நகரங்களான திருப்பூர், ஓசூர், சிவகாசி போன்ற மூன்றாம் நிலை நகரங்களும் அதிலே சேர்க்கப்பட வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே ஆய்வு நடத்திக்கொண்டு வருகின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தூத்துக்குடியிலே அவர்கள், தனியார் அந்த கணினி மென்பொருள் உற்பத்தி மையம் ஆரம்பிக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக அதற்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெருமாள்

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**33—**

## உரத் தொழிற்சாலை

**•26469-திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

*(அ) கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் ஒரு பெரிய உரத் தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழக விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்களும் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகின்றன. உரத் தொழிற்சாலை அமைப்பதற்குப் பல கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படுவதாலும், தற்போது கூட்டுறவு நிறுவனங்களின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாததாலும், கூட்டுறவுத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் மிகப் பெரிய ஒரு உரத் தொழிற்சாலை தொடங்கப்பட சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய ஆதாரத் தொழிலாக இருப்பது வேளாண்மைத் தொழில். ஆகவே, உழவர்கள் சேற்றிலே கை வைத்தால்தான் நாம் எல்லோரும் சோற்றிலே கை வைக்க முடியும் என்கின்ற அந்த நிலை இருக்கின்ற காரணத்தினாலே — இன்று உழவர்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேற்றிலே கால் வைத்தால்தான்! (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை. சேற்றிலே கால் வைத்தாலும், நடவு நடுவது கையால்தான் நடமுடியும். சேற்றிலே கால் வைத்து நடவு நடலாம் என்றால் முடியாது. நெல் விளையாது. (சிரிப்பு) சேற்றிலேயும் கை வைக்கவேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேற்றிலேயும் கை வைக்கவேண்டும்; சோற்றிலேயும் கைதான் வைக்கவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகள் இன்று பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்க்கை முன்னேறாமல் நம்முடைய மாநிலம் முன்னேறியதாகக் கருத முடியாது. இப்போது அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். யூரியா தட்டுப்பாடு மிக நெருக்கடியாக இருக்கிறது. விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அதிலும், குறிப்பாக, அடக்க விலையிலே கிடைக்கவில்லை. தனியார் உற்பத்தி செய்கின்ற காரணத்தினாலே கடுமையான விலை உயர்வு உள்ளது. யூரியா மட்டுமல்ல; உரம், பூச்சி



2005 பிப்ரவரி 3]

மருந்து ஆகிய எல்லாவகைகளும் உயர்ந்த விலையில் இருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கூட்டுறவுதான் இன்று நாட்டுயர்வுக்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. அந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே அமைக்கப்பட்ட காரணத்தினாலே, இந்தக் கூட்டுறவுத் துறை வாயிலாக ஒரு பெரிய அளவிலான தொழிற்சாலையை தமிழகத்திலே உருவாக்கினால், இந்தக் கூட்டுறவுத் துறை வாயிலாக எல்லா விவசாயிகளுக்கும் முறையாக உரம், பூச்சி மருந்து கிடைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலேதான். . .

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதிலுரை முடிகிற வரைக்கும் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** அரசு கனிவோடு மறுபரிசீலனை செய்து, தமிழகத்திலே கூட்டுறவுத் துறை வாயிலாக ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் எங்கேயும் உரத் தட்டுப்பாடு என்கின்ற நிலைமை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, யூரியா போன்ற உரங்கள் கூடுதலான விலைக்கு விற்கப்படுவது கிடையாது.

தமிழ்நாட்டிலே, மத்திய அரசு நிறுவனங்களான Madras Fertilizers Limited, நெய்வேலி நிலக்கரி நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனமான SPIC நிறுவனம், பல்வேறு வகையான உரங்களை உற்பத்தி செய்து வருகின்றன. கூட்டுறவுத் துறையில் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம் என்று சொல்லப்படுகிற IFCO, GRIFCO கூட்டுறவு நிறுவனமும், வட மாநிலங்களில் அமைந்துள்ள உரத் தொழிற்சாலைகளும் பல்வேறு உரங்களை உற்பத்தி செய்கின்றன.

தமிழக விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை, மேற்கண்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் வியாபாரிகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன. தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய கூட்டுறவு நிறுவனங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக அவ்வங்கிகளில் கடன்

பெறும் உறுப்பினர்களுக்கும், இதர விவசாயிகளுக்கும், ரொக்க அடிப்படையிலும் அவர்களுக்குத் தேவையான உரங்களை மேற்கண்ட உர உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து விநியோகம் செய்து வருகின்றன. எனவே, உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் எதுவும் தற்போது கூட்டுறவு நிறுவனங்களிடம் இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4) @

### முதல் பட்டியல்

1—

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 17286—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, பெருமகளூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பெருமகளூர் சார்பதிவாளர் அலுவலகம் அரசாணை (நிலை) எண் 47, வணிக வரித் துறை, நாள் 28-5-2003-ன்படி மூடப்பட்டு 1-6-2003 முதல் பேராவூரணி சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

@ இந்தப் பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2—

### பாசன வசதி

**வினா எண் 18538—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர் வாரி விவசாயத்திற்கு பாசன வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 1) கோவகுளம் ஏரி, 2) வீரராக்கியம் ஏரி, 3) புதுவூர் ஏரி, 4) சிவாயம் ஏரி, 5) பாப்பாக்கப்பட்டி ஏரி, 6) கொசூர் அய்யன்குளம் மற்றும் 7) பஞ்சப்பட்டி நீர்த்தேக்கம் ஆகியன பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. மேற்படி ஏரிகளை தூர்வாரி, தரப்படுத்தி, பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள இதர ஊராட்சி ஒன்றிய ஏரிகள் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம் மூலம் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3—

### செடிகள் ஏலம்

**வினா எண் 23240—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள பொதுப் பணித் துறை கண்மாய் கரையில் தானாக முளைத்துள்ள சீமைக்கருவேல மரங்கள் மற்றும் ஆமணக்குச் செடிகளை அரசே நேரடியாக ஏலம் விடும் எண்ணம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) பொதுப் பணித் துறை கண்மாய்களின் கரைகளில் தானாக முளைத்துள்ள சீமைக்கருவேல மரங்கள் அந்தந்த ஊராட்சியின் மூலமாக ஏலம் விடப்பட்டு வருகிறது. இனிவருங்காலங்களில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களிடம் பராமரிப்புப் பணிகள் ஒப்படைக்கப்பட உள்ளதால், அச்சங்கங்கள் வருவாயை ஊக்குவிக்கும் பொருட்டு, மேற்கண்ட ஏலப் பணிகளையும் அவற்றிடமே ஒப்படைக்கலாமா என்பது பற்றி கொள்கை முடிவெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பொதுப் பணித் துறை கண்மாய்களின் கரைகளில் தானாக வளர்ந்துள்ள ஆமணக்குச் செடிகள் (நெய்வேலி காட்டாமணக்கு) எதற்குமே பயன்படாது என்பதால், இவற்றை ஏலம் எடுக்க யாரும் முன்வர மாட்டார்களாதலால், இவற்றை ஏலம் விட இயலாது. எனவே, இவை அவ்வப்போது செய்யப்படும் கண்மாய்க் கரையின் மராமரத்துப் பணியின்போது அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

4—

## வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

**வினா எண் 24825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தை தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்திய இடத்தில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தியுள்ள இடத்தில் கட்ட போதிய அளவு காலி நிலம் இல்லை.



5—

## சார்பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 29755—திரு. டி. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்படும் பதிவுத் துறை அலுவலகத்தை அரசுக் கட்டடத்தில் மாற்ற அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சிப் பகுதியில் அரசு கட்டடம் ஏதும் காலியில்லாத நிலையில், சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் மட்டும், தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இந்த அலுவலகத்தை மாற்றம் செய்ய நடவடிக்கை ஏதும் எழவில்லை.

6—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 29820—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் தேவை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

7—

## கண்மாய் சீரமைப்பு

**வினா எண் 30666—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தொகுதிக்கு உட்பட்ட மன்னார்கோட்டை பொதுப் பணித் துறை கண்மாய் பல ஆண்டுகளாக பராமரிக்கப்படாமல் உள்ளதை பராமரிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** விருதுநகர் தொகுதியிலுள்ள மன்னார்கோட்டை கண்மாய் கரையின் சில பகுதிகளை பலப்படுத்தும் பணி ரூ.2.43 இலட்சம் செலவில் 6/2003—ல் முடிக்கப்பட்டுள்ளது. இன்னும் கண்மாய் கரையின் சில பகுதிகளில் வெள்ள உடைப்பு அடைப்புப் பணி ரூ.1.54 இலட்சம் செலவில் நிதி நிலைக்கு ஏற்ப தொடங்கப்பட உள்ளது.

8—

## நகல் எழுத்தர் உரிமம்

**வினா எண் 31869—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டத்தில் நகல் எழுத்தர் உரிமம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) புதிதாக நகல் எழுத்தர் உரிமம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) சேலம் கிழக்கு பதிவு மாவட்டத்தில் நகல் எழுத்தர் உரிமம் பெற்றவர்கள் 203 நபர்களும், சேலம் மேற்கு பதிவு மாவட்டத்தில் 136 நபர்களும், ஆக மொத்தம் சேலம் மாவட்டத்தில் 339 நகல் எழுத்தர் உரிமம் பெற்றவர்கள் உள்ளனர்.

(ஆ) பதிவுத் துறை கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில், ஆவணங்கள் கணினி மூலமாக (Online Registration), பதிவு செய்யப்படுவதால், புதிய நகல் எழுத்தர் உரிமம் வழங்கும் நிலை எழவில்லை.

9—

## வாய்க்காலை தூர்வாருதல்

**வினா எண் 32904—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மாந்தாங்குடியில் அக்னி ஆற்றின் கிளை வாய்க்காலை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நிதி நிலைக்கு ஏற்ப தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

10—

## மண் அரிப்பைத் தடுத்தல்

**வினா எண் 32914—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி 1-வது வார்டில் கருங்கல் ஜல்லி போட்டு மண் அரிப்பைத் தடுக்கும் நோக்கம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) திட்டம் ஏதுமில்லை. (ஆ) இக்கேள்வி எழவில்லை.

11—

## நீரை சேமிக்கும் திட்டம்

**வினா எண் 33344—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, இலுப்பையூரணி ஊராட்சியைச் சேர்ந்த (சண்முகா தியேட்டர் எதிரே) கண்மாயை மராமத்து செய்து கரை போட்டு, வரும் நீரைச் சேமிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, இலுப்பையூரணி ஊராட்சி எல்லைக்குட்பட்ட (சண்முகா தியேட்டர் எதிரே உள்ள) கண்மாய் தனி நபர்களுக்கு பாத்தியப்பட்டதால், அரசு செலவில் மராமத்து செய்ய இயலாது.

12—

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 33560—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, மேட்டுத் தெரு, கடற்கரை ஆற்றுப் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதுமில்லை. வெள்ளப் பள்ளம் உப்பனார் என்பது பெரிய வடிகாலாகும். இதன் நீளம் 23.94 கி.மீ. இது தேனூர் கிராமத்தில் தொடங்கி இறுதியில் திருமுல்லைவாசல் கிராமத்தினருகே கடலில் கலக்கிறது. உப்பனாறு கடலில் கலக்கும் இடத்தினருகே மேட்டுத்தெரு அமைந்துள்ளது. மேட்டுத்தெரு கடற்கரை ஆற்றுப்பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

13—

## வீட்டுமனையை இலவசமாக வழங்குதல்

**வினா எண் 33582—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை மற்றும் அன்னவாசல், இலுப்பூர், கீரனூர் பேரூராட்சிகளில் வீடு, மனை இல்லாமல் இருப்பவர்களுக்கு அரசு வீட்டுமனை இலவசமாக வழங்கிட முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகாவில் விராலிமலை. அன்னவாசல் மற்றும் இலுப்பூர் பேரூராட்சிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான அரசு புறம்போக்கு காலிமனையிடம் ஏதுமில்லை. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகாவில் கீரனூர் பேரூராட்சி பகுதியில் வீட்டுமனை கோரி 40 மனுக்கள் வரப்பெற்று அவர்களுக்கு மனைப்பட்டா வழங்க கனமாவூர் கிராமம் புல எண் 682/1,2,3 மற்றும் 592/6,8-ல் நிலமெடுப்புச் செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது. மேலும், கீரனூர் பேரூராட்சி பகுதியில் 2003 ஆம் ஆண்டில் வீட்டுமனைப் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை. வீட்டுமனை கோரி விண்ணப்பம் வரப்பெறின் அவற்றின்பேரில் தனியார் நிலங்களை தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் (Private negotiation) நிலமெடுப்புச் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

## பாசன ஏரியை சீர்செய்தல்

**வினா எண் 34129—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை - நக்கம்பாடி - குழுமூர் - வஞ்சினாபுரம் ஆகிய ஊர்களில் உள்ள பாசன ஏரியை சீர் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 1. செந்துறை பெரிய ஏரி: தூர்வாரி சீரமைக்கும் திட்டத்தின்கீழ் ரூ.23.95 இலட்சத்தில் சீர்செய்யப்பட்டுள்ளது. 2. நக்கம்பாடி ஏரி: பொதுப் பணித் துறை பாசன தொகுப்பிற்குட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகள் தூர்வாரி புனரமைக்கும் திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 3. குழுமூர் ஏரி: வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் மேற்படி ஏரியை ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 4. வஞ்சினாபுரம் பெரிய ஏரி: இந்த ஏரி செந்துரை ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ளது.

15—

## மராமத்துப் பணிகள்

**வினா எண் 35541—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பொதுப் பணித் துறை உபகோட்டம், வெளிவயல் ஏரியை "நபார்டு" திட்டத்தில் சேர்த்து மராமத்துப் பணிகள் செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** இல்லை.

**16—**

**கண்மாய்களை மராமத்து செய்ய நிதி ஒதுக்கீடு**

**வினா எண் 35550—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதியில் பொதுப் பணித் துறையின் கீழ் எத்தனை ஏரிகளில் கடந்த 5 ஆண்டுகளில் மராமத்து வேலைகள் செய்யப்பட்டன? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதியில் 289 கண்மாய்கள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 74 கண்மாய்கள் மராமத்து செய்ய ரூ.252.245 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**17—**

**கண்மாயை தூர் வாருதல்**

**வினா எண் 35560—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில் கோவில் வீரக்குடி கிராமம், கோவில் வீரக்குடி கண்மாயை தூர் வார அரசு ஆவன செய்யுமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, குன்றாண்டார்கோவில் ஒன்றியம், கோயில் வீரக்குடி கண்மாய் பொதுப் பணித் துறையைச் சார்ந்தது. வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் பிசிடி வாய்க்கால்கள் மற்றும் குளங்கள் காவிரி டெல்டா மாவட்டத்தில் தூர் வாரும் திட்டத்தின்கீழ் ரூ.2.21 இலட்சம் மதிப்பீட்டில் இக்கண்மாய் தூர் வாரப்பட்டுள்ளது.

**18—**

**விட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா எண் 37832—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி நகரில் வ.உ.சி. தெரு, அய்யனார் கோயில் வழி அம்மன் கோயில் தெரு ஆகியவற்றில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம் மற்றும் நகரத்தில் வ.உ.சி. தெரு, அய்யனார் கோயில் வழி அம்மன் கோயில் தெரு முறையே வார்டு ஏ. பிளாக் 61, மறு அளவை எண் 5/1-ல், 03800 ச.மீ., மறு அளவை எண் 11-ல் 5150 ச.மீ., மற்றும் மறு அளவை எண் 12-ல் 15000 ச.மீட்டர் ஆகிய நிலங்கள் "பாட்டையாக" கிராம கணக்குகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி பாட்டையின் ஓரங்களில் சுமார் 200 குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள்

[2005 பிப்ரவரி 3

கூரைவீடு கட்டி வசித்து வருகிறார்கள். மனைப் பட்டா வழங்கக் கோரியுள்ள இடம் "பாட்டை புறம்போக்கு" என்ற ஆட்சேபணைக்குரிய நிலமாகும். பண்ருட்டி நகரில் விஸ்தரிப்புக்காக எதிர்காலத்தில் இவ்விடங்கள் தேவைப்படும் என்பதால், இவ்விடங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. பண்ருட்டி நகரில் மனைப் பட்டா வழங்கக்கூடிய வேறு தகுதியான புறம்போக்கு இடம் ஏதும் இல்லையாதலால், மேற்படி பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலையுள்ளது.

**19—**

### தர்காஸ் வாய்க்காலை தூர் எடுத்தல்

**வினா எண் 39040—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி தர்காஸ் வாய்க்காலை தூர் எடுத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி தர்காஸ் வாய்க்கால் புதுமண்ணியாற்றில் தேவையான நீர் வரத்து இருக்கும்போது பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்காலை தற்போது தூர் வார வேண்டியதில்லை.

**20—**

### தோப்பு வாய்க்காலை தூர் எடுத்தல்

**வினா எண் 39041—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி தர்காஸ் கொசவன் தோப்பு வாய்க்காலை தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி. தர்காஸ் கொசவன் தோப்பு வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர் வரத்து இருக்கும்போது இவ்வாய்க்கால் மூலம் பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்காலை தற்போது தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

**21—**

### புளிச்சங்காட்டு வாய்க்காலை தூர் வாருதல்

**வினா எண் 39048—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் உள்ள புளிச்சங்காட்டு வாய்க்காலை தூர் வாரி சீர்செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் உள்ள புளிச்சங்காட்டு வாய்க்கால் தூர்வாரும் பணிகள் 2002-03 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, தற்போது இவ்வாய்க்காலை தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

[2005 பிப்ரவரி 3

22—

## புதுவாய்க்காலை தூர் வாருதல்

**வினா எண் 39050—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகரவட்டார ஊராட்சி, புது வாய்க்காலை தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகரவட்டார ஊராட்சி, புதுவாய்க்கால் தூர் எடுக்கும் பணி 2003-04 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

23—

## பாசன வாய்க்காலை தூர் வாருதல்

**வினா எண் 39054—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியில் திருத்தோனிபுரம் பாசன வாய்க்காலை தூர் வாரிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியில் திருத்தோனிபுரம் பாசன வாய்க்கால் சென்ற ஆண்டு 2003-2004-ல் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் தூர் வார எடுத்துக்கொள்ளப்படவில்லை. நிதி நிலைமை சீரடைந்த பின்னர் இப்பணி மேற்கொள்ளப்படும்.

24—

## பாசன வாய்க்காலை தூர் எடுத்து சீரமைத்தல்

**வினா எண் 39055—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, மாதானம் தில்லைவிடங்கன் பாசன வாய்க்காலை தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் தில்லைவிடங்கன் பாசன வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் 2003-04 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

25—

## வாய்க்கால் தூர் எடுக்கும் பணி

**வினா எண் 39059—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சி, வினாயக்குடி வாய்க்காலை தூர் வாரித்தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி ஊராட்சி, வினாயக்குடி வாய்க்கால் தூர் எடுக்கும் பணி 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**26—**

### மதகை மீண்டும் கட்டுதல்

**வினா எண் 39651—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழசட்டனாதபுரம் ஊராட்சியிலுள்ள நிம்மெலி பாசன வாய்க்காலில் மடிச்சிக்கட்டி மதகை மீண்டும் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) இதற்கான கருத்துரு திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.





**27—**

### நிரந்தரப் பயிர்களுக்கு உதவித் தொகை

**வினா எண் 41134—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறுவை மற்றும் சம்பா பருவங்களில் சாகுபடி செய்து 50 சதவீதம் மற்றும் அதற்குமேல் பாதிப்பு ஏற்பட்ட நிரந்தர பயிர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு உதவித் தொகை வழங்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, சாகுபடி செய்து 50 சதவீதம் மற்றும் அதற்குமேல் பாதிப்பு ஏற்பட்ட வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் ஓராண்டு மலைத் தோட்டப் பயிர்களுக்கு, மானாவாரி பரப்பு ஒரு ஹெக்டேருக்கு ரூ.1,000/-, பாசன வசதி உள்ள ஒரு ஹெக்டேருக்கு ரூ.2,500/- நிரந்தர பயிர்கள் 1 ஹெக்டேருக்கு ரூ.4,000/- மற்றும் மல்பெரி செடிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.1,500/- என்ற வீதத்தில் பேரிடர் நிவாரண நிதி/தேசிய பேரிடர் அவசர கால நிதிகளிலிருந்து வழங்கப்படுகிறது.

**28—**

### பயணியர் தங்கும் விடுதி

**வினா எண் 41220—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அட்டகட்டியில் நெடுஞ்சாலைத் துறை பயணியர் தங்கும் விடுதி ஒன்று கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அட்டகட்டியில் நெடுஞ்சாலைத் துறை பயணியர் தங்கும் விடுதி கட்டும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**29—**

## ஆவண எழுத்தர் உரிமம்

**வினா எண் 41239—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் எவ்வளவு ஆவண எழுத்தர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்?

(ஆ) இவர்கள் அனைவரும் ஆவணங்கள் எழுத உரிமம் பெற்றவர்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாவட்டத்திலுள்ள சார்பதிவகங்களில் பணிபுரிந்துவரும் மொத்த ஆவண எழுத்தர்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பதிவு மாவட்டம் | ஆவண எழுத்தர்கள் விவரம் | A மாநில உரிமம் | B மாவட்ட உரிமம் | C உ.பபதிவு மாவட்ட உரிமம் |
|---|---|---|---|---|---|
| 1 | சேலம் (கிழக்கு) | 222 | 86 | 134 | 2 |
| 2 | சேலம் (மேற்கு) | 179 | 59 | 113 | 7 |
| | மொத்தம் | 401 | 145 | 247 | 9 |



(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள அனைவரும் ஆவண எழுத்தர் உரிமம் பெற்றவர் ஆவர்.

**30—**

## முத்திரைத்தாள் விற்பனை செய்ய உரிமம்

**வினா எண் 41240—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் புதிதாக எவ்வளவு பேருக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்ய அரசு உரிமம் வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): 2002-2003 ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் புதிதாக 78 பேருக்கு முத்திரைத்தாள் விற்பனை செய்ய உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**31—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 42129—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, சோமலாபுரம், கொல்லக்கொட்டாய், மேக்ரிதுரை நகர், அய்யாசாமி வட்டம் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோமலாபுரம், கொல்லக்கொட்டாய், மேக்ரிதுரை நகர், அய்யாசாமி வட்டம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பாதை புறம்போக்கில் வீடுகள் கட்டி ஆக்ரமணம் செய்து வருகின்றனர். இது ஆட்சேபகரமானது. வருங்கால பாதை விஸ்தரிப்பின்போது இந்த இடம் அரசுக்குத் தேவைப்படும் என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியம் இல்லை.*

32—

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 42149—திரு. டி.கே. இராஜா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த ஜோலார்பேட்டையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

33—

## சார்பதிவாளர் அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 42174—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சேலம் மாவட்டம், தாதகாப்பட்டி கேட் மண்டல அலுவலகம் அருகே தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாதகாப்பட்டி கேட் மண்டல அலுவலகம் அருகே தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

34—

## வீடுகள் சேதமடைதல்

**வினா எண் 43445—திரு. டி. மணி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 11-5-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் பகுதியில் வீசிய சூறாவளிக் காற்று மற்றும் இடி, மின்னல் தாக்கியதினால் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) 11-5-2003 அன்று தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரம் மற்றும் இளம்புவனம் ஆகிய கிராமப் பகுதிகளில் வீசிய சூறாவளிக் காற்று மற்றும் இடி, மின்னலுடன் பெய்த மழையின் காரணமாக மேற்படி கிராமங்களில் உள்ள வீடுகள், வீடுகளின் மேற்கூரை, ஓடுகள் ஆகியவை சேதமடைந்துள்ளன. மின் கம்பிகள் அறுந்து விழுந்ததால் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. வேறு பெருத்த சேதம்*

ஏதுமில்லை. உயிர்ச்சேதம் ஏதுமில்லை. இதில் 57 வாழை மரங்கள் மட்டுமே சேதமடைந்துள்ளன.

(ஆ) மேற்குறிப்பிட்ட இனத்தில் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் மேற்கூரை ஓடுகள் ஆகியவற்றுக்காக மொத்தம் 79 நபர்களுக்கு மாவட்டாட்சியரின் விருப்ப நிதியிலிருந்து ரூ.11,370/- நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**35—**

## சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 43472—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**36—**

## பத்திரப்பதிவு எழுத்தர்களுக்கு தனிக் கட்டடம்

**வினா எண் 43545—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் பத்திரப்பதிவு எழுத்தர்களுக்கென தனி கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** அரசு கட்டடங்களில் பத்திரப்பதிவு எழுத்தர்களை அலுவலக வளாகத்திற்குள் அனுமதித்தல் கூடாதென்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், பத்திரப்பதிவு எழுத்தர்களுக்கென அரசுக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**37—**

## நான்கு சக்கர வாகனம்

**வினா எண் 43682—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி வட்ட அலுவலகத்திற்கு நான்கு சக்கர வாகனம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்ட அலுவலகத்திற்கு 16-3-1997 அன்று ஈப்பு எண் த.நா.51ஜி 0134 வட்ட அலுவலக உபயோகத்திற்கு வழங்கப்பட்டு, அது தற்போது வட்ட அலுவலக உபயோகத்தில் இருந்து வருகின்றது.

**38—**

## வாய்க்காலின் பாசனப் பரப்பு

**வினா எண் 43757—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கரூர் மாவட்டத்திலுள்ள புகளூர் வாய்க்காலின் பாசன பரப்பு மொத்தம் எத்தனை ஏக்கர்?*

*(ஆ) அதில் அரசின் நிலையான அனுமதி (Standing Permit) பெற்று எத்தனை ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், காவிரியில் இருந்து நேரடியாக பிரியும் புகளூர் வாய்க்காலின் பதிவு பெற்ற ஆயக்கட்டு 3445 ஏக்கர் ஆகும். இந்த வாய்க்காலின் பதிவு பெற்ற 3445 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வருகின்றன.*

**39—**

## கடல்நீர் ஏறுவதைத் தடுக்க தடுப்பணை

**வினா எண் 43779 திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் அருகே சித்தன்னப்பெருமாள் வடிகாலில் கடல்நீர் மேலே ஏறுவதைத் தடுக்க தடுப்பணை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) இதற்கான திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. ஏனெனில் சித்தன்னபெருமாள் வடிகால் முடவனாற்றில் கலக்கும் இடத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் முடவனாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்பட்டு அதன்மூலம் கடல்நீர் உட்புகுவது தடுக்கப்படுகிறது. எனவே, சித்தன்னபெருமாள் வடிகால் முடவனாற்றில் கலக்கும் இடத்தில் தடுப்பணைக் கட்டத் தேவையில்லை.*





**40—**

## தடுப்புச்சுவர் கட்டுதல்

**வினா எண் 45564 திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தடுப்புச் சுவர் கட்டித்தர ரூ.6,80,000/-த்தில் மதிப்பீடு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதிநிலையைப் பொறுத்து நிறைவேற்றப்படும். நிதிநிலை சம்பந்தப்பட்ட நேர்வுகளை எப்போது நிறைவேற்ற இயலும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.*

**41—**

## புயல் பாதுகாப்பு புகலிடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 46162—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில், புயல் பாதுகாப்பு புகலிடம் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்து உள்ளதைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம், ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த புதுப்பட்டினம் கிராமத்தில், புல எண் 242/2 இல் கட்டப்பட்ட புயல் பாதுகாப்பு இல்லத்தில் அக்டோபர் 2003 மாதத்தில் ரூ.40,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மேற்படி புயல் பாதுகாப்பு இல்லம் தற்போது உபயோகிக்கக்கூடிய நிலையில் உள்ளது.

42—

## சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 46222—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி தாலுகா அலுவலக வளாகத்தில் இயங்கி வருகின்ற சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி தாலுகா அலுவலக வளாகத்தில் இயங்கி வருகின்ற சார்பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

43—

## வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 46513—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில் இன்னமும் எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட 14 வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டுமே கட்டப்பட வேண்டும். இவை 12-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்தோ அல்லது பகுதி 2 திட்டத்தின்கீழோ நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை சம்பந்தப்பட்ட நேர்வுகளில் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்ற இயலும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

44—

## வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 48688—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு தொகுதி, வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில் இன்னமும் வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட 14 வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டுமே கட்டப்பட வேண்டும். இவை 12-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்தோ அல்லது பகுதி 2 திட்டத்தின் கீழோ நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை சம்பந்தப்பட்ட நேர்வுகளில் எவ்வளவு காலத்திற்குள் நிறைவேற்ற இயலும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

45—

## கணினி பயிற்சி

**வினா எண் 48905—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பத்திரப் பதிவுத் துறை அலுவலர்களில் எத்தனை பேருக்கு கணினி பயிற்சி அளிக்கப்பட்டன?

(ஆ) அதன் தொடர்பாக அரசுக்கு ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2002—2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்திரப் பதிவுத் துறை அலுவலர்களில் மொத்தம் 66 பேருக்கு ரூ.31,678/- செலவில் கணினி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

46—

## பயிற்சியாளர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 50748—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு அச்சகத்தில் தொழிற் பழகுநர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** அரசு கிளை அச்சகம், சேலத்தில் காலியாக இருந்த புத்தகம் கட்டும் தொழில் பழகுநர் பயிற்சி இடங்களுக்கு ஏற்கெனவே மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் தொழிற் பழகுநர்களின் பட்டியல் பெற்று அதன்படி



பயிற்சியாளர்களை நிலைக் குழுவினர்களால் நேர்காணல் செய்து தற்போது சேலம் அரசு கிளை அச்சகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

47—

## கடன் தொகை

**வினா எண் 51211—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2002-2003 ஆம் ஆண்டில் அரசு கட்டடங்களைப் புதுப்பிக்க ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு கட்டடங்களுக்குப் பராமரிப்புச் செலவினத்திற்காக மேற்காணும் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடன் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) கடன் எதுவும் பெறப்படவில்லை. (ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

48—

## பத்திரப்பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 51788—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தற்போது புதிய கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## லாட்டரி சீட்டு விற்பனை

**வினா எண் 44873—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரத்தில் மறைமுகமாக லாட்டரி சீட்டு விற்பனை செய்து வருவதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** 1998 ஆம் ஆண்டு லாட்டரி ஒழுங்குமுறைச் சட்டம் பிரிவு 7 (3) ன்கீழ், சேலம் மாவட்டத்தில் சட்ட விரோதமான பரிசுச்சீட்டு விற்பனை செய்பவர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தீவிர தடுப்பு நடவடிக்கைகளின் விளைவாக, மே, 2004 வரையிலான காலத்தில் சேலம் மாநகரில் மட்டும் 113 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் மொத்தம் 125 நபர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். நீதிமன்றத் தீர்ப்பின்படி, அவர்களிடமிருந்து அபராதத் தொகையாக மொத்தம் ரூ.1,17,600/- வசூலிக்கப்பட்டுள்ளது.

2. மேலும், சேலம் மாநகரப் பகுதி நீங்கலாக உள்ள சேலம் மாவட்டத்தின் இதர பகுதிகளில், மே, 2004 வரையிலான காலத்தில் சட்ட விரோதமான பரிசுச்சீட்டு விற்பனை மீதான தடுப்பு நடவடிக்கையின்கீழ் மொத்தம் 122 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில், 139 நபர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். நீதிமன்றத் தீர்ப்பின்படி, அவர்களிடமிருந்து அபராதத் தொகையாக ரூ.66,850/- வசூலிக்கப்பட்டுள்ளது.





**50—**

## பொது விநியோகக் கடை கட்டடம்

**வினா எண் 15512—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, புன்னை ஊராட்சி, பொது விநியோகக் கடைக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமத்திற்கு பொது விநியோகக் கடைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, புன்னை ஊராட்சியில், ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் புன்னை கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடை, 456 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**51—**

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 26119—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, ஜக்கம்பட்டி கிராமத்தில் செயல்படும் நியாய விலைக் கடை நாகனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 378 குடும்ப அட்டைகளுடன் இயங்கும் முழுநேரக் கடையாகும். இக்கடை தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. கூட்டுறவுத் துறையின்கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து தொகை பெற வழிவகை இல்லாததால், அரசின் சமூக நலத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி பெற்று புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**52—**

## நியாய விலைக் கடைக் கட்டடம்

**வினா எண் 30287—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓலையாம்புத்தூர் ஊராட்சியில் சொந்தக் கட்டடத்தில் நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஓலையாம்புத்தூர் ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



**53—**

## முழுநேர நியாய விலைக் கடை

**வினா எண் 32661—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்திலுள்ள ஊரெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள ஊரெட்டிப்பட்டியில் உள்ள பகுதிநேர நியாயவிலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்திலுள்ள ஊரெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள ஊரெட்டிப்பட்டியில் பகுதிநேரக் கடை ஏதுமில்லை. ஊரெட்டிப்பட்டியிலுள்ள 160 குடும்ப அட்டைதாரர்கள் ஊத்தங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். மேலும், ஊரெட்டிப்பட்டி, ஊத்தங்கரை தாய் கடையிலிருந்து 1 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, ஊரெட்டிப்பட்டியில் பகுதிநேரக் கடை இல்லாத காரணத்தால், அதனை முழுநேரக் கடையாக மாற்றம் செய்ய சூழ்நிலை எழவில்லை.

**54—**

## நியாய விலைக் கடை திறத்தல்

**வினா எண் 40890—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள பகுதியில் முழுநேர நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** ஆரணி தொகுதியில் உள்ள 110 நியாய விலைக் கடைகளில் 50 கடைகளில் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ளன. இவற்றில் 48 கடைகள் முழுநேரக் கடைகளாகச் செயல்படுகின்றன. சம்பவராயநல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பாளையம் மற்றும் நடுக்குளம் ஆகிய இரண்டு நியாய விலைக் கடைகள் பகுதிநேரக் கடைகளாக செயல்படுகின்றன. இந்த இரண்டு பகுதிநேரக் கடைகளை முழுநேரக் கூட்டுறவுக் கடைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

55—

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 44608—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

56—

## கடன் வழங்குதல்

**வினா எண் 51291—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஏற்காடு தொகுதியில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2001-2004 ஆம் ஆண்டுகளில் என்னென்ன தொழில்களுக்கு எவ்வளவு தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) ஏற்காடு தொகுதியில், ஆத்தூர் காடையாம்பட்டி, மேட்டூர், ஓமலூர், சேலம், சங்ககிரி மூலம் ஏற்காடு தொகுதி பயனாளிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஏற்காடு தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்கள் விவரம் வருமாறு:-

| வ. எண் | காரியங்கள் | 2000-01 | | 2001-02 | | 2002-03 | | 2003-04 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை | எண் | தொகை | எண் | தொகை | எண் | தொகை | எண் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | சிறுபால் பண்ணை | 77 | 15,35,100 | 84 | 31,29,500 | 59 | 36,44,000 | 22 | 13,43,150 |
| 2 | காப்பி அபிவிருத்தித் திட்டம் | 15 | 4,82,400 | 17 | 9,86,700 | 20 | 13,30,200 | 7 | 8,08,100 |
| 3 | இருசக்கர வாகனங்கள் | - | - | 3 | 75,300 | 4 | 1,31,800 | 1 | 11,900 |
| 4 | பண்ணைச் சாராக் கடன் மற்றும் எஸ்ஜீர்டிஓ | 1 | 17,900 | 1 | 6,67,800 | 1 | 1,47,900 | 2 | 4,85,000 |
| 5 | டிராக்டர் திட்டம் | 4 | 10,55,800 | 4 | 11,55,900 | 1 | 3,88,000 | - | - |
| 6 | வீட்டுக்கடன் | 2 | 18,000 | 1 | 13,900 | 8 | 4,78,900 | 4 | 3,37,800 |
| | கூடுதல் | 99 | 31,09,200 | 110 | 60,29,100 | 93 | 61,20,800 | 36 | 29,85,950 |

57—

## விற்பனை நிலையங்கள்

**வினா எண் 52904—திரு. ஐ.கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003-2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை வழங்கும் நிலையங்கள் (கெரசின் பங்க்) கூட்டுறவுத் துறையின் மூலம் திறக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில் கடந்த 2003-2004 ஆம் ஆண்டில், கூட்டுறவுத் துறை மூலம் புதியதாக 12 மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

58—

## நியாய விலைக் கடை

**வினா எண் 53546—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, கே.என். குப்பம் கிராமத்திற்கு நியாய விலைக் கடை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், ஆண்டிமடம் தொகுதியில் டி.ஓய்ஸ்பெஷல்



69 கூவத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் கூவத்தூர் 1 நியாய விலைக் கடையின் பகுதிநேரக் கடையாக கே.என். குப்பம் நியாய விலைக்கடை 270 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் 1997-98 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு (E.A.S.) திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் தற்போது கே.என்.குப்பம் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருவதால் புதியக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

59—

## நியாய விலைக் கடை தொடங்குதல்

**வினா எண் 56634—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் உள்ள ஆசாமுடி பகுதியில் நியாய விலைக் கடை ஒன்றைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டத்தில், ஆசாமுடி என்ற இடம் ஏதுமில்லை. ஆணைமுடி என்ற இடத்தில் தாமரை மகளிர் சுய உதவிக் குழு 675 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை செவ்வனே வழங்கி வருகின்றனர். மேலும் ஆணைமுடிக்கு அருகில் நல்லமுடி என்ற இடத்தில் தாமரை மகளிர் சுய உதவிக் குழுவினர் பகுதிநேர நியாய விலைக் கடையினையும் நடத்தி வருகின்றனர்.

60—

## கோயில் நிலம் குத்தகை

**வினா எண் 12445—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வேம்பனேரி ஐயனாரப்பன் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு? யார் யார் வசம் கோயில் நிலம் உள்ளது?

(ஆ) அதிலிருந்து பெறப்படும் குத்தகைத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வேம்பனேரி அருள்மிகு ஐயனாரப்பன் திருக்கோயிலுக்குச் சொந்தமான சர்வே எண் 49—ல் பட்டா எண் 494-ல் மொத்தம் 10.00 ஏக்கர் புஞ்சை நிலங்கள், கீழ்க்கண்ட பூசாரிகள் வசம் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சேப்பெருமாள், த/பெ.சேவி | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 2 | திரு. கோபால் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 3 | திரு.கணக்கு (எ) சேவி, த/பெ.கொளந்தப்ப கவுண்டர் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 4 | திரு.சண்முகம் பூசாரி, த/பெ.சேவி | | |
| 5 | திரு.அய்யம்பெருமாள், த/பெ.ஆணைக்கவுண்டர் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 6 | திரு.அண்ணாமலை, த/பெ.ஆணைக்கவுண்டர் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 7 | திரு.துங்கவேல், த/பெ.சேவிக்கவுண்டர் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 8 | திரு. பொன்னையன் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |



| | | | |
|---|---|---|---|
| 9 | திரு. கோளிப்பட்டி (எ) அய்யாங்குட்டி | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 10 | திரு. வையாபுரி, த/பெ.சேவி | | |
| 11 | திரு.சின்னபையன், த/பெ. வீரப்பன் | | |
| 12 | திரு. அய்யாவு, த/பெ. கரும்பூசாரி | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| 13 | திரு. ராமசாமி, த/பெ. கரித்தாம்பூசாரி | | |
| 14 | திரு. ஏழுமலை, த/பெ. சேவி | | |
| 15 | திரு. அய்யனார், த/பெ. சேவி | | |
| 16 | திரு. பெரியதம்பி, த/பெ. ஆணைக்கவுண்டர் | சர்வே எண் 49-ல் | 1.00 ஏக்கர் புன்செய் |
| | | மொத்தம் | 10.00 ஏக்கர் புன்செய் |

(ஆ) மேற்கூறிய 10 ஏக்கர் நிலங்களையும் பூசாரிகளே அனுபவித்துக் கொண்டு பூஜை காரியங்களை செய்து வருவதாலும், வருடம் பூராவும் முறை வைத்துக்கொண்டு பூஜை செய்து வருவதாலும், இப்பூஜைகள் செய்வதற்கு சம்பளம் எதுவும் வழங்கப்படுவதில்லை. இந்நிலங்கள் அனைத்தையும் திருக்கோயில் சுவாதீனத்தில் கொண்டுவந்து பொது ஏலத்தில் குத்தகைக்குவிட நடவடிக்கை எடுக்குமாறு பரம்பரை அறங்காவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

61—

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 19365—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) தமிழ்நாட்டில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) முதியோர் உதவித் தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(இ) எப்போது உதவித் தொகை வழங்கப்படும்? இதனால் அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாட்டில் 12,08,504 நபர்கள் முதியோர் உதவித் தொகை தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

(ஆ) இதுவரை விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 41,992.

(இ) விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒரு மாதத்திற்குள் பரிசீலித்து தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ரூ. 33,624.65 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**62—**

## முதியோர் இல்லம்

**வினா எண் 27095—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் நகரில் முதியோர் இல்லம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) முதியோர் இல்லங்கள் அரசால் நடத்தப்படுவதில்லை. முதியோர் இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்க அரசால் மானியம் வழங்கப்படுகிறது. சங்கராபுரம் நகரில் தொண்டு நிறுவனங்கள் ஏதேனும் ஆதரவற்ற முதியோர் இல்லம் ஆரம்பிக்க முன்வருமாயின் விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) சங்கராபுரம் நகரில் முதியோர் இல்லம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**63—**

## தையற் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 33962—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் மகளிருக்காக தையற் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் தற்போது 3 தையற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அத்தையல் பயிற்சி நிலையங்களில் தையற் பயிற்சி பெறும் பயனாளிகள் அரசு நிர்ணயித்த குறியீட்டின்படி பயிற்சி பெறுகின்றனர். தற்போது செயல்பட்டு வரும் தையற் பயிற்சி நிலையங்கள் மூன்றாண்டிற்கு ஒரு முறை இடம் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. பேரணாம்பட்டு தொகுதியில் தேவைப்படும்போது இத்தையற் பயிற்சி நிலையம் செயல்படும்.

64—

## இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்

**வினா எண் 37444—திரு கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவச பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) ஆம். (ஆ) ஏற்காடு தொகுதியில் ஏழை விதவை குழந்தைகளுக்கு இலவச பாடப்புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 47 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

65—

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 38723—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன்மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு முதியோர் உதவித் தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை உடனடியாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) கல்வராயன்மலையில் உள்ள மலைவாழ் மக்களில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் 239 முதியோர்களுக்கும், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 14 உடல் ஊனமுற்ற நபர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. (ஆ) முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களும் ஒரு மாதத்திற்குள் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

66—

## இலவச தையற் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 40485—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, காரப்பட்டு ஊராட்சியில் படித்த பெண்களுக்கு இலவச தையற் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட காரப்பட்டு ஊராட்சியில் படித்த பெண்களுக்கு இலவச தையற் பயிற்சி அளிக்கும் பொருட்டு தையற் பயிற்சி நிலையம் 14-1-2004 முதல் செயல்பட்டு வருகிறது.

67—

## தையற் பயிற்சி மையம்

**வினா எண் 45720—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) சீர்காழி தொகுதியில் சமூக நலத் துறையின் மூலமாக பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதியில் சமூக நலத் துறை மூலமாக பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி மையம் தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசிடமில்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**68—**

**பயிற்சிக் கருவிகள்**

**வினா எண் 47823—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோர்களுக்கு பயிற்சிக் கருவிகள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** 2002-2003ஆம் ஆண்டில் உடல் ஊனமுற்றோருக்கு பயிற்சிக் கருவிகள் ஏதும் வழங்கப்படவில்லை.



2005 பிப்ரவரி 3]

**69—**

**நலிந்தோர் நல உதவித் திட்டம்**

**வினா எண் 57271—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000, 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் நலிந்தோர் நல உதவித் திட்டம் மூலம் உதவி கேட்டு விண்ணப்பித்துள்ளோருக்கு உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** ஆம். 2000, 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் நலிந்தோர் நல உதவித் திட்டம் மூலம் உதவி கேட்டு விண்ணப்பித்துள்ளோர்களுக்கு அவர்களது விண்ணப்பங்களின் முதுநிலைப்படி நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவை பின்வருமாறு:

| ஆண்டு | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | பயனடைந்தோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000 | 29,161 | 22,575 |
| 2001 | 50,956 | 18,632 |
| 2002 | 43,216 | 14,783 |
| 2003 | 17,437 | — |

2004-2005 ஆம் ஆண்டில் ரூ. 4.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்காணும் நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு நிலுவையிலுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்கும் உதவித் தொகை, மாவட்ட ஆட்சியர்களால் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2005 பிப்ரவரி 3

70—

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 38982—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சிங்கவனம், பொன்பேத்தி, நாகுடி ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும் (Upgrade) திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதியில் உள்ள சிங்கவனம் மற்றும் பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சார்ந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதி உள்ளது. எனவே, சிங்கவனம் மற்றும் பொன்பேத்தி ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. நாகுடி ஆரம்ப சுகாதார நிலையம், ஏற்கெனவே மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருவதால், அதனை மீண்டும் தரம் உயர்த்த வேண்டிய அவசியமில்லை.

71—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 41041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டத்தில், 12 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ளன. தாரமங்கலம், பனமரத்துப்பட்டி மற்றும் வடுகப்பட்டி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. காடையாம்பட்டி மற்றும் சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை அரங்குகளின் மராமத்துப் பணிகள் முடிவுற்று, செயல்படும் நிலையில் உள்ளன. தலைவாசல், மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், வாழவந்தி, கன்னங்குறிச்சி, நங்கவள்ளி மற்றும் பேளூர் ஆகிய ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்களின் அறுவை அரங்கு கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுதுகள் சரிசெய்ய, மகப்பேறு குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் மைய அரசின் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. நிதியுதவி கிடைத்தவுடன் அறுவை சிகிச்சை அரங்குகளின் பழுதுகள் சரிபார்க்கப்பட்டு அவை செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

## இரத்தப் பரிசோதனை நிலையம் மற்றும் எக்ஸ்—ரே கருவி

**வினா எண் 41800—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசு மருத்துவமனையில் இரத்தப் பரிசோதனை நிலையம், எக்ஸ்-ரே கருவி போன்றவை இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** வால்பாறை அரசு மருத்துவமனையில் இரத்தப் பரிசோதனை நிலையம் (ஆய்வகம்) போதிய உபகரணங்களுடன் இயங்கி வருகிறது. நுண் கதிர் இயந்திரமும், மாற்றுப் பணியில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

**73—**

**எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர்**

**வினா. எண் 59314—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகர் அரசினர் மருத்துவமனையில் முடநீக்கியல் பிரிவு தொடங்கி எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகர் அரசினர் மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**74—**

**மருத்துவ வசதி**

**வினா எண் 59959—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்திய சிறப்பு மருத்துவ முகாம்களில் எவ்வளவு நோயாளிகளுக்கு நீரிழிவு நோய் உள்ளதாக மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்?

(ஆ) இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பாக மருத்துவ வசதி செய்துதர அரசிடம் திட்டம் உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) 2003-2004 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டவர்கள் மொத்தம் 8,13,259 நபர்கள். அதில் சர்க்கரை நோய் உள்ளவர்களாகக் கண்டறியப்பட்டவர்கள் 36,832 நபர்களாவர். (ஆ) சிறப்பு மருத்துவ முகாம்களில் கண்டறியப்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கு தொடர் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனை, அரசு பொது மருத்துவமனை ஆகிய இடங்களில் தொடர் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**75—**

**தேனீப் பண்ணைகள்**

**வினா எண் 21594—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தேனீக்கள் அதிகம் வளர்க்கப்படும் இடங்கள் எத்தனை?

(ஆ) தேனீக்கள் நோயினால் பாதிக்கப்பட்டு தேன் வளம் குன்றியது பற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, திண்டுக்கல், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 10 இடங்களில் தேனீக்கள் வளர்க்கப்படுகின்றன. மார்த்தாண்டம், குளச்சல், திருவட்டார், தக்கலை, புதுக்கடை, நித்திரவிளை, திங்கள்சந்தை ஆகிய இடங்களில் தேனீப் பண்ணைகள் அமைத்து, செயல்பட்டு வருகின்றன. (ஆ) ஆம். 1992 ஆம் வருடத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில்

தேனீக் குடும்பங்கள் வைரஸ் நோயினால் பெருமளவில் அழிந்து போயின. அதனால், தேன் வளம் குன்றியது. தற்போது நோய் அறவே தடுக்கப்பட்டு, தேன் உற்பத்தி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.

**76—**

## விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 20454—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருத்தாசலம் வட்டம், மங்கலம்பேட்டையில் ஆதிதிராவிடர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், மேற்கண்ட பணி எப்போது தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *(அ)* விருத்தாசலம் வட்டம், மங்கலம்பேட்டையில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு அரசு கட்டடம் கட்ட அரசாணை (நிலை) எண் 121, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 24-9-2004-ல் ஆணையிடப்பட்டுள்ளது. *(ஆ)* ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, விடுதி கட்டப்படும்.

**77—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 31967—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2001-2002 ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், காக்காயனூரில் அரசால் எத்தனை தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர் நலத் துறையால் கட்டி முடிக்கப்பட்டன?

*(ஆ)* தொகுப்பு வீடுகளின் மொத்த மதிப்பு எவ்வளவு?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *(அ)* 2001-2002 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் பவானி வட்டம், அந்தியூர் ஒன்றியம், சங்கரபாளையம் கிராமம், காக்காயனூரில் குடியிருக்கும் பழங்குடியினர்களுக்கு 30 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. *(ஆ)* தொகுப்பு வீடுகளின் மொத்த மதிப்பு ரூ.13.5 இலட்சம் ஆகும்.

**78—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 56586—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாநகரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மாணவர் தங்கும் விடுதியில் நான்கு நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் வருவது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், சீராக தண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* கோவை மாநகரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் கல்லூரி மாணவர் விடுதியில், ஆழ்குழாய்க் கிணறு மூலமாகவும், நகராட்சி மூலமும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டு வந்தது. 2003 ஆம் ஆண்டு கோவை மாவட்டத்தில் மழைநீர் பொய்த்துவிட்டதால், ஆழ்குழாய்க் கிணறு மூலம் தண்ணீர் போதுமான அளவு கிடைக்காமையால், மாநகராட்சி மூலம் தண்ணீர் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது நல்ல மழை பெய்து நிலத்தடி நீர் உள்ளதால், அந்நீரை குடிநீர் தவிர்த்து பிற தேவைகளுக்கும், மாநகராட்சி மூலம் இரு நாட்களுக்கு ஒரு முறை வழங்கும் நீரை குடிநீருக்கும் பயன்படுத்துவதால், தற்போது தண்ணீர் பிரச்சனை எதுவும் இல்லை.

**79—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 23049—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, திருவெண்ணைநல்லூர் ஒன்றியம், சித்தலிங்கமடம் கிராமத்தில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் நிதியாண்டில், விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் தொகுதி, சித்தலிங்கமடம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு ரூ.31.50 இலட்சம் செலவில் அரசு கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. கட்டடப் பணி பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**80—**

**கட்டாய நன்கொடை**

**வினா எண் 10600—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடம் கட்டாய நன்கொடை வசூலிப்பதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடம் கட்டாய நன்கொடை ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. எனவே, இப்பள்ளியில் கட்டாய நன்கொடை வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை ஏதும் எடுக்க அவசியமில்லை. மேலும், இப்பள்ளியில் கட்டாய நன்கொடை வசூலிக்கப்படுவதான புகார் உண்மையில்லை எனவும் பள்ளிக் கல்வி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**81—**

**பதிவுச் சான்று**

**வினா எண் 29695—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பதிவுச்சான்று எண்கள் பெற்றுள்ள வியாபாரிகள் எத்தனை பேர்?

(ஆ) வரி செலுத்தாத வணிகர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

| | | |
|---|---|---|
| (அ) தமிழ்நாட்டில் பதிவுச் சான்று எண்கள் பெற்றுள்ள வணிகர்கள் எண்ணிக்கை (2003-2004 வரை) | ... | 4,18,256 |
| (ஆ) வரி செலுத்தாத வணிகர்கள் எண்ணிக்கை (2003-2004 வரை) | ... | 2,47,204 |

[2005 பிப்ரவரி 3

**82—**

## தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள்

**வினா எண் 34679—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் எந்தெந்த வகையான தொழிலாளர்கள், தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்?

(ஆ) அவற்றின் விவரங்கள் என்ன?

(இ) வாரியத்தின் பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 31-08-2004 வரை 56 வகையான தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஆ) அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் (1) | தொழிலின் தன்மை (2) | பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1 | கைத்தறி மற்றும் பட்டு நெய்யும் தொழில் | 2437 |
| 2 | மரம் ஏறும் தொழில் | 144 |
| 3 | தெருச்சுமை | 1732 |
| 4 | தையல் | 4187 |
| 5 | ஆட்டோ, டாக்சி ஓட்டுநர் | 1698 |
| 6 | வீட்டு வேலைகள் | 1490 |
| 7 | முடி வெட்டுதல் | 1800 |
| 8 | சமையல் வேலைகள் | 318 |
| 9 | கடைகள், நிறுவனங்களில் சுமை ஏற்றுதல் | 2943 |



2005 பிப்ரவரி 3]

| | | |
|---|---|---|
| 10 | காலணி வேலைகள் | 101 |
| 11 | மாட்டு வண்டி | 497 |
| 12 | பந்தல் கொட்டகை | 144 |
| 13 | பிளாஸ்டிக் வயர் பின்னுதல் | 12 |
| 14 | அகர்பத்தி | 17 |
| 15 | தேங்காய் உரித்தல் | 4 |
| 16 | சைக்கிள் ரிப்பேர் | 136 |
| 17 | பொறியியல் தொழில் | 249 |
| 18 | உணவு நிறுவனங்கள் | 307 |
| 19 | கடைகள் மற்றும் நிறுவனங்கள் | 1379 |
| 20 | தனியார் பாதுகாவல் | 30 |
| 21 | மரம் அறுவை | 45 |
| 22 | ஆட்டோமொபைல் ஒர்க் ஷாப் | 100 |
| 23 | அப்பளம் தயாரித்தல் | 322 |
| 24 | சலவை துணி துவைத்தல் | 1019 |
| 25 | மர வேலைகள் | 448 |
| 26 | மண்பாண்டம் | 322 |
| 27 | அச்சு மற்றும் பிரிண்டிங் | 67 |
| 28 | உணவு சேமிப்பு கிடங்கில் தானியங்களை கையாளுதல், வகை பிரித்தல் | 3 |
| 29 | உப்பளங்களில் வேலை செய்தல் | 249 |
| 30 | மீன்பிடிக்கும் தொழில் | 651 |
| 31 | கயிறு தயாரித்தல் | 18 |

[2005 பிப்ரவரி 3

| | | |
|---|---|---|
| 32 | தோல் பதனிடுதல் | 64 |
| 33 | சாயப்பட்டறைத் தொழில் | 135 |
| 34 | செங்கல் மற்றும் ஓடு தயாரித்தல் | 190 |
| 35 | வனபொருள் சேகரித்தல் | 2 |
| 36 | சமையல் வாயு சிலிண்டர்கள் விநியோகித்தல் | 15 |
| 37 | சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொழில் | 131 |
| 38 | பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழில் | 2 |
| 39 | துணி மடித்தல் | 1 |
| 40 | சாக்கு தைத்தல் | 74 |
| 41 | தங்க, வெள்ளி ஆபரணம் தயாரித்தல் | 186 |
| 42 | பதனீர் தயாரித்தல் | 15 |
| 43 | மாவு மில், ஆயில் மில், அரிசி மில்களில் பணிபுரிதல் | 686 |
| 44 | விசைத்தறி தொழில் | 10 |
| 45 | குப்பைகள் கழிவு பொருள் சேகரித்தல் | 3 |
| 46 | ஜவ்வரிசி தயாரித்தல் | 2 |
| 47 | சிந்தெடிக் ஜெம் கட்டிங் தொழில் | 13 |
| 48 | பட்டுப்புழு தயாரித்தல் | 2 |
| 49 | தகர அமைப்பான்கள் தயாரித்தல் | 11 |
| 50 | பாத்திரங்கள் தயாரித்தல் | 22 |
| 51 | சிற்ப வேலை செய்தல் | 324 |
| 52 | கைவினைத் தொழில் | 240 |
| 53 | ஓவியம் வரைதல் | 65 |
| 54 | வீடியோ மற்றும் புகைப்பட ஒளிப்பதிவு | 3 |
| 55 | எலக்ட்ரானிக் பழுது பார்த்தல் | 9 |
| 56 | நாட்டுப்புறக் கலைத் தொழில் | 1 |
| | மொத்தம் | 25,038 |



2005 பிப்ரவரி 3]

(இ) மேற்கண்ட தொழிலாளர்களில் வாரியத்தின் மூலமாக 31-08-2004 வரை நல உதவி பெற்ற பயனாளிகள் 236 பேர் ஆவர்.

**83—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 10277—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், கோணையாம்பட்டினத்தில் குடிநீர் வசதி பெற ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், கோணையாம்பட்டினம் குடியிருப்பு, சீர்காழி மற்றும் செம்பனார்கோவில் ஒன்றியங்களிலுள்ள 133 கடலோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயனுக்கு வரும்பொழுது 133 குடியிருப்புகளும் போதிய குடிநீர் வசதி பெறும்.

**84—**

## பள்ளிக்குச் சுற்றுச்சுவர்

**வினா எண் 17487—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியிலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வள்ளுவக்குடி ஊராட்சியில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைப்பதற்கு தற்போது ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் இப்பணியைச் செய்திட இயலாது.

**85—**

## பள்ளிக் கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 25133—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் கட்டடம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கட்டடம் பழுது பார்க்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் நடப்பாண்டில் பழுது பார்க்கப்பட்டுள்ளது.

**86—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 34965—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, பெருமங்கலம் ஊராட்சி, பெருமுண்டீஸ்வரன் கோயில் தெரு பிரதான சாலையில் குடிநீர்த் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம் ஊராட்சியில் உள்ள பெருமுண்டீஸ்வரன் கோவில் தெரு, மேட்டுத்தெரு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். மேட்டுத்தெரு குடியிருப்பிற்கு பெருமங்கலம் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் அத்தியாவசியத் தேவைக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**87—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 35571—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீரநல்லூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருக்காவூர் ஊராட்சியைச் சேர்ந்த கீரநல்லூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக 8 பொதுக் குழாய் மேடைகள் அமைத்து

மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி தேவை இல்லை.

**88—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 35574—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, தில்லைவிடங்கன் ஊராட்சி, திருத்தோணிபுரம் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியைச் சேர்ந்த திருத்தோணிபுரம் குடியிருப்பில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**89—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 35575—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திட்டை கீழத்தெருவிலுள்ள கன்னிக்கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திட்டை ஊராட்சியைச் சார்ந்த கீழத்தெரு குடியிருப்பிற்கு திட்டை குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் மூலமாக போதுமான அளவு குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தனியே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

**90—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 35582—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, அகனி ஊராட்சி, சாந்தி நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், அகனி ஊராட்சியைச் சார்ந்த சாந்தி நகர் என்ற குடியிருப்பிற்கு 2003-2004 ஆம் ஆண்டில், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

91—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 35585—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், காட்டூர் கிராம ஆதி திராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், காட்டூர் ஊராட்சியைச் சார்ந்த காட்டூர் ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கு, 108 கடலோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டியிலிருந்து 6 பொதுக் குழாய்கள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அவசியம் இல்லை.

92—

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 39559—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, கோவில்பட்டி தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, கோவில்பட்டி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளிக்குப் போதுமான மாணவர்கள் வருகை இல்லாததால் கூடுதல் கட்டடம் கட்ட இயலாது.

93—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 47399—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், மாவட்டம், வால்பாறை தொகுதி, கவர்க்கல், பச்சமலை, நடுமலை, காஞ்மலை, தருமலை, அக்காமலை, கெஜமுடி, தாய்முடி, தோணிமுடி ஆகிய எஸ்டேட் பகுதிகளிலும், ஹை பாரஸ்ட் மற்றும் வாட்டர் பால்ஸ் ஆகிய இடங்களில் போதுமான தெருவிளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கவர்க்கல்லுக்கு 4 அடி குழல்விளக்கு-15ம், 1 சோடியம் ஆவிவிளக்கும், பச்சமலைக்கு 4 அடி குழல்விளக்கு-23ம், 1 சோடியம் ஆவிவிளக்கும், நடுமலைக்கு 4 அடி குழல் விளக்கு-28ம், காஞ்மலைக்கு 4 அடி குழல் விளக்கு-23ம், அக்காமலைக்கு 4 அடி குழல் விளக்கு-32ம், கெஜமுடிக்கு 4 அடி குழல் விளக்கு-17ம், தாய்முடிக்கு 4 அடி குழல் விளக்கு-37ம், தோணிமுடி, ஹை பாரஸ்ட் மற்றும் வாட்டர் பால்ஸ்க்கு 4 அடி குழல் விளக்கு-24ம் போதுமானதாக உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

[2005 பிப்ரவரி 3

94—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 47595—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, குரங்குமுடி எஸ்டேட் பகுதியில் தெருவிளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, குரங்குமுடி எஸ்டேட் பகுதி 100 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டமாக உள்ளது. இப்பகுதியில் 1 கி.மீ. தூரத்தில் 5 மற்றும் 10 குடியிருப்புகளும் சுமார் 3 மற்றும் 4 கி.மீ. தூரத்தில் சில குடியிருப்புகளை உள்ளடக்கி பரவலாக குடியிருப்புகள் கட்டப்பட்டு உள்ளன. இப்பகுதியில் பேரூராட்சி பொது நிதியிலிருந்து 18 எண்ணிக்கை 4 அடி குழல்விளக்குகளும், 1 சோடியம் ஆவிவிளக்கும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாக உள்ளது. (ஆ) வினா எழவில்லை.

95—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 47596—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, இஞ்சிப்பாறை லோயர் டிவிசன் பகுதியில் குடியிருப்பு பகுதிக்கு தெரு விளக்கு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?



2005 பிப்ரவரி 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, இஞ்சிப்பாறை லோயர் டிவிசன் பகுதியில் குடியிருப்பு பகுதியில் 10 எண்ணிக்கை 4 அடி குழல் விளக்குகள் பேரூராட்சி பொது நிதியிலிருந்து அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. (ஆ) வினா எழவில்லை.

96—

## தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 47885—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி 5-வது வார்டு வாய்க்காலில், 6-வது வார்டு தாமரைக்குளம் மற்றும் 11-வது வார்டு குளத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி 5-வது வார்டு வாய்க்காலில், 6-வது வார்டு தாமரைக்குளம் மற்றும் 11-வது வார்டு குளத்தில் தடுப்புச்சுவர் கட்டித்தர பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை. (ஆ) வினா எழவில்லை.

97—

## பேருந்து நிலையம்

**வினா எண் 48024—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியை பிரதானமாகக் கொண்டு பேருந்துகள் எதுவும் இயக்கப்படுவதில்லை. அதேபோல் கோட்டூர் வரை வந்து பேருந்துகள் திரும்பிச் செல்வதில்லை. கோட்டூர் வழியாக ஆழியார் மற்றும் மற்ற பகுதிகளுக்குப் பேருந்துகள் செல்லுகின்றன. எனவே, கோட்டூரில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டிய அவசியமில்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

98—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 49447—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, எடக்குடி வடபாதி ஊராட்சி, ஜீவா நகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியைச் சார்ந்த ஜீவா நகர் குடியிருப்பிற்கு, எடக்குடி வடபாதி குடியிருப்பில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் விஸ்தரிப்பு மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்கான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

99—

## கடைகளை அப்புறப்படுத்துதல்

**வினா எண் 50863—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எதிரில் உள்ள கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** ஆம். நெடுஞ்சாலைத் துறையுடன் தொடர்பு கொண்டு செங்கற்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் உதவியுடன் மேற்படி ஆக்கிரமிப்பு கடைகளை அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2005 பிப்ரவரி 3

100—

### கூடுதல் வகுப்பறை கட்டுதல்

**வினா எண் 57530—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம், ஆளப்பிறந்தான், நாகுடி, நெய்வத்தளி, வேம்பங்குடி மற்றும் பாண்டிக்குடி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** அறந்தாங்கி ஒன்றியம், ஆளப்பிறந்தான் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 2 தார்சு கட்டடங்கள் 152 குழந்தைகளுக்குப் போதுமானதாக உள்ளன. நாகுடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு 4 தார்சு கட்டடங்கள் 266 குழந்தைகளுக்குப் போதுமானதாக உள்ளன. நெய்வத்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு தார்சு கட்டடம் மற்றும் ஓட்டுக் கட்டடம் ஒன்று உள்ளது. இது 140 குழந்தைகளுக்குப் போதுமானதாக உள்ளது. வேம்பங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு தார்சு மற்றும் ஓடு என இவ்விரு கட்டடங்கள் 47 குழந்தைகளுக்குப் போதுமானதாக உள்ளன. பாண்டிக்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு ஓட்டுக் கட்டடம் ஒன்று உளளது. எனவே, மேற்கண்ட பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம் கட்டுவது 2004-2005 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## இரண்டாவது பட்டியல்

1—

### நீர்வள ஆதாரத் துறை

**வினா எண் 23795—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) நாட்ராம்பள்ளி வெலக்கல் நத்தம் செட்டேரி அணைக்கட்டில் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள தென்னை, மா போன்ற மரங்கள் வெட்டப்பட்டும் பராமரிப்பு இல்லாமலும் இருந்து வருவதற்கு பொதுப் பணித் துறை நீர் வள ஆதாரத் (Water Resources Organisation) துறை ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த மாதிரியான நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) : நாட்ராம்பள்ளி வெலக்கல் நத்தம் செட்டேரி அணைக்கட்டின் நீர்ப்பிடிப்பு பகுதியிலுள்ள தென்னை, மா போன்ற மரங்கள் பொதுப் பணித் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி அணையில் உள்ள தென்னை, மா போன்ற மரங்களின் மகசூல் ஆண்டுதோறும் ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அணைக்கட்டில், காய்ந்த மரங்கள் மட்டும் கழிவு அறிக்கை (சர்வே ரிப்போர்ட்) தயாரித்து முறைப்படி பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

2—

### விடுகட்ட கடன் வழங்குதல்

**வினா எண் 24689—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப் பணியாளர்கள் வீடு கட்டிக்கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** கிராமப் பணியாளர்கள் 1-6-1995 முதல் அனைத்து அரசு ஊழியர்களைப்போல் முழு நேர அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருப்பதால், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீடு கட்டும் கடன் இவர்களுக்கும் வழங்கலாம் என்பதாலும், தற்போது அனைத்து வங்கிகளிலும் வீடு கட்டுவதற்கு கடன்கள் வழங்குவதாலும், கிராமப் பணியாளர்களுக்கு என்று தனியாக வீடு கட்டிக்கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்க அவசியமில்லை.

**3—**

### வாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28183—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பண்ணங்குடி ஊராட்சி, பெரிய கொப்பியம் செட்டி வாய்க்காலைத் தூர்வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 34, பொதுப் பணித் துறை, நாள் 3-2-2003-ன்படி பிசிடி வாய்க்கால்களை தூர் வாருதல் பணியில் பெரிய கொப்பியம் செட்டி வாய்க்கால் 800 மீட்டர் நீளத்திற்கு தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.



2005 பிப்ரவரி 3]

**4—**

### வாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28184—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பண்ணங்குடி ஊராட்சி, கார்பள்ளம் சாட்ரூட்டி வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பண்ணங்குடி ஊராட்சி, கார்பள்ளம் சாட்ரூட்டி வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**5—**

### வாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28423—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பச்சைபெருமாள் நல்லூர் ஊராட்சி, தில்லை வாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) திட்டம் ஏதுமில்லை. (ஆ) இக்கேள்வி எழவில்லை.

6—

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 29799—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பெருவளை பங்குனி வாய்க்கால் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பெருவளை பங்குனி வாய்க்கால்களின் மொத்த நீளம் 44.8 கி.மீ. ஆகும். இதில் பெருவளை வாய்க்காலில் 3,400 மீட்டர் முதல் 15,000 மீட்டர் வரை சம்பூர்ணா ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளை தூர் வாரும் பணிகள் அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

7—

## பயனாளிகளின் விவரம்

**வினா எண் 29835—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் புதிதாக வழங்கப்பட்ட பட்டாக்களின் பயனாளிகள் விவரம் என்ன?

(ஆ) 2002-2003-ல் பட்டா கேட்டு காத்திருப்போரின் விவரம் என்ன?

(இ) மேற்கண்டவர்களுக்கு பட்டா வழங்க அரசின் திட்டம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் 2001—2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் பயனாளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

| | | பயனாளிகள் |
|---|---|---|
| (அ) ஆதிதிராவிடர் | .. | 171 |
| (ஆ) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | .. | 456 |
| (இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | .. | 376 |
| மொத்தம் | ... | 1,003 |

(ஆ) மற்றும் (இ) 2002-2003 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை நகர் பகுதியில் வீட்டுமனை ஒப்படை கேட்டு காத்திருப்போர் பட்டியலில் 176 நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு புதுக்கோட்டையில் நத்தம் புறம்போக்கில் வீட்டுமனை ஒப்படை வழங்க காலியிடம் ஏதும் இல்லாததால் மேற்கண்ட 176 நபர்களுக்கும் புதுக்கோட்டை வட்டம் புதுக்கோட்டை வடக்கு வட்டம் புல எண்.12-2, கல்லாங்குத்து புறம்போக்கினை நத்தமாக வகைமாற்றம் செய்து மனை ஒப்படை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

8—

## பாலம் கட்டி படித்துறை அமைத்தல்

**வினா எண் 31016—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், ச. கண்ணனூர் பேரூராட்சி, சமயபுரம் இந்திரா காலனி 3-வது வார்டு பகுதியில் பெருவளை வாய்க்கால் குறுக்கே பாலம் கட்டி படித்துறை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரசின் நிதி நிலைக்கு ஏற்ப செய்யப்படும்.

**9—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31908—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட புதூர் புங்களை ஊராட்சி, புதூர் கிராமத்தில் வசிக்கும் மக்கள் பலருக்கு குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா இல்லாமல் உள்ளது. அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை வட்டம், புதூர் புங்களை கிராம ச.எண் 28/1, விஸ்தீரணம் 1.56.0 ஹெக்டேர் புஞ்சை தரிசு நிலத்தில் 94 நபர்கள் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக வீடுகட்டி குடியிருந்து வந்துள்ளனர். இவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க புஞ்சை தரிசு புறம்போக்கு நிலத்தை கிராம



நத்தமாக வகைமாற்றம் செய்து வீடுகட்டி குடியிருந்து வந்த 94 நபர்களில் தகுதி வாய்ந்த 81 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா 1410 பசலியில் வழங்கப்பட்டது. எச்.எஸ்.டி.எண் 110 முதல் 178 முடிய 69 நபர்களுக்கும், எச்.எஸ்.டி.எண் 406 முதல் 417 முடிய 12 நபர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மீதமுள்ள 13 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. இவர்களில் 9 நபர்களுக்கு ஆண்டு வருமானம் அதிகம் உள்ளதாலும், 4 நபர்களின் நிலம் அரசு நிர்ணயித்துள்ள 120 சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பு அனுபவத்தில் உள்ளதாலும் மேற்படி 13 நபர்களுக்கும் நிலமதிப்பு செலுத்திய பின்பு வீட்டுமனைப் பட்டா வழங்க நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பணம் செலுத்த மறுத்துள்ளனர். மேலும் மனுவோ அல்லது வாக்குமூலமோ கொடுக்க மறுத்துள்ளனர்.

**10—**

## கண்மாயைத் தூர் வார நிதி ஒதுக்கீடு

**வினா எண் 33339—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, செமப்புத்தூர் கிராமத்திலுள்ள பாசனக் கண்மாய் கால்வாயிலுள்ள “ஷட்டர்ஸ்” மற்றும் கண்மாயில் உள்ள மடைகளை மராமத்து செய்து கண்மாயைத் தூர் வார நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, செமப்புத்தூர் பாசனக் கண்மாய் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது. மேலும், இப்பாசனக் குளத்திற்குச் செல்லும் கால்வாய், ஷட்டர்கள் பழுதுபார்த்தல் மற்றும் கால்வாய் தூர் வாரும் பணிகள் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2005 பிப்ரவரி 3

11—

## ஏரிகள் தூர் வாரும் பணி

**வினா எண் 33826—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் வட்டம், பெரியகோட்டையில் உள்ள ஏரிகள் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் வாய்க்கால்கள் மற்றும் குளங்கள், ஏரிகள் வறட்சி நிவாரணத் திட்டத்தில் பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் வட்டம், பெரியகோட்டை பெரிய ஏரி எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.2.23 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவுற்றன.

12—

## ஓடைகளை ஒப்படைத்தல்

**வினா எண் 33869—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரத்தில் தங்கம்மாள் ஓடை கலுத்தறுத்தான் பள்ளம் ஆகிய ஓடைகளை நகராட்சியில் ஒப்படைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) உடுமலை நகரத்தில் தங்கம்மாள் ஓடை கலுத்தறுத்தான் பள்ளம் ஆகிய ஓடைகளை நகராட்சியின் வசம் ஒப்படைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

13—

## வாய்க்காலைச் செப்பனிடுதல்

**வினா எண் 34126—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, நல்லநாயகபுரம் பெரிய ஏரிக்கு நீர்வரத்து வரும் வாய்க்கால் செப்பனிடும் பணியை முழுமையடையச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், செந்துரை வட்டம், ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியில் வஞ்சினாபுரம் கிராமத்தில் உள்ள நல்லநாயகபுரம் பெரிய ஏரி ரூ.5.11 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது. மேலும், நல்லநாயகபுரம் பெரிய ஏரிக்கு நீர் வரும் வாய்க்கால் ஏதுமில்லை. பெருமாண்டி ஏரியின் வடிகால் மூலமாக நல்லநாயகபுரம் பெரிய ஏரிக்கு நீர்வரத்து வருகிறது.

14—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 34815—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை பேரூராட்சி, வார்டு 8,9 மற்றும் 11-ல் புறம்போக்கு நிலத்தில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை வட்டம் மற்றும் டவுன் வார்டு எண் 8,9 மற்றும் 11-ல் உள்ள புறம்போக்கு நிலங்கள் தடையாணை புத்தகத்தில் பதியப்பட்டு உள்ளதாலும், மேற்படி இடங்கள் ஏரி, ஓடை மற்றும் குட்டை புறம்போக்குகளாக கிராமக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், நீர்நிலைப் புறம்போக்குகளில் ஒப்படை வழங்க அரசு தடை விதித்துள்ளதாலும் இந்நேர்வில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இயலாது.

**15—**

## மராமத்துப் பணிகள் செய்யும் திட்டம்

**வினா எண் 35542—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பொதுப் பணித் துறை உபகோட்டம், கரூர் ஏரியை நபார்டு திட்டத்தில் சேர்த்து மராமத்துப் பணிகள் செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகள் தூர் வாரி புதுப்பிக்கும் பணிகள் திட்டத்தின்கீழ் ரூ.10.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி ஏரியின் கண்மாய் கரை 2250 மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கப்பட்டுள்ளது. மற்றும் இக்கண்மாய்க்கு உதயன சமுத்திரம் ஏரியிலிருந்து வரும் வழங்கு





வாய்க்கால் 1500 மீட்டர் நீளத்திற்கும், இக்கண்மாயின் மதகுகள் மூலம் பாசனம் பெறும் (Field Channel) வாய்க்கால் தூர் வாரி புனரமைக்கப்பட்டுள்ளது.

**16—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 36430—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் இடங்கன பேரூராட்சிப் பகுதியில் இலவச மனைப் பட்டா கோரியவர்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கனசாலை பிட் 1 கிராமம் ச.எண் 392/1 பேரூராட்சிக்கு உட்பட்ட நிலம், இலவச வீட்டுமனைப் பட்டா கோரும் நபர்கள் ஒவ்வொருவரும் 0.01.0 ஏர்ஸ்-க்கு மேல் வில்லை மற்றும் தார்சு வீடு கட்டி அனுபவித்து வருகின்றனர். வில்லை வீட்டிற்கு ஒரு மடங்கும், தார்சு வீட்டிற்கு இரு மடங்கும் நிலக்கிரயம் செலுத்தினால் மட்டுமே பட்டா வழங்க இயலும். ஆனால் மனுதாரர்கள் மேற்படி வீட்டுமனைப் பட்டாவிற்கு நிலக்கிரயம் செலுத்த இயலாதென தெரிவிப்பதால் அவர்களுக்கு தற்போது இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**17—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 38743—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) செங்கற்பட்டு நகரத்தில் 8வது வார்டில் உள்ள தூக்குமரக்குட்டை தெருவில் குடியிருக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம் மற்றும் நகரம், 8வது வார்டு, "தூக்குமரக்குட்டை" தெருவில் மக்கள் குடியிருக்கும் பிரஸ்தாப நிலம் நகர நில அளவை சர்வே கணக்குகளின்படி அருள்மிகு மண்ணாத சாமி கோயில் பெயரில் ரயத்துவாரி மனை என பட்டாவாக தாக்கலாகியுள்ளது. மேற்படி கோயில் பெயரில் உள்ள இனங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசின் தடை உத்தரவு உள்ளது. எனவே, மேற்படி புலனில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**18—**

## மதகுகள் அமைத்துத் தரும் திட்டம்

**வினா எண் 38988—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, தண்டலை, மணலூர், கீரனூர் ஆகிய அணைக்கட்டுகளில் பாசன வசதி பெறும் ஏரிகளுக்கு பாசன வாய்க்காலை ஆழப்படுத்தி, ஒவ்வொரு ஏரிக்கும் தனித்தனி மதகுகள் அமைத்துத்தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** பாசன வாய்க்காலில் ஒவ்வொரு ஏரிக்கும் தனித்தனியாக பாசன மதகுகள் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை. தண்டலை, மணலூர், கீரனூர் ஆகிய



2005 பிப்ரவரி 3]

அணைக்கட்டுகள் மூலம் பாசனம் பெறும் ஏரிகளின் பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணி நிதி நிலைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

**19—**

## வாய்க்கால் தூர் எடுக்கும் பணி

**வினா எண் 39039—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, புதுப்பட்டினம் எல்லை சந்து தெற்கு வெளி வாய்க்கால் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, எல்லை சந்து தெற்குவெளி வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

**20—**

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39043—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, டீஸல் பங்கு வாய்க்காலை தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, டீசல் பங்கு வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்கால் தற்போது தூர் வார வேண்டியது இல்லை.

**21—**

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39044—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, கீழ்வெளி வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, கீழ்வெளி வாய்க்கால் பி.சி.டி. பிரிவு வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளது. எனவே, தற்போது தூர் வார வேண்டிய அவசியமில்லை.



**22—**

## புதுவாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39045—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் புங்கமரத்து சுடுகாடு சாலை வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் புங்கமரத்து சுடுகாடு சாலை வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது அவ்வாய்க்கால் மூலம் பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்கால் தற்போது தூர் வார வேண்டியது இல்லை.

**23—**

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39046—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் தச்சம் கன்னி வாய்க்கால் சாலை தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது தர்காஸ் தச்சம் கன்னி வாய்க்கால் சாலை மூலம் பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்கால் தற்போது தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

**24—**

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39049—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் சூனியம்பள்ளம் வாய்க்கால் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, தர்காஸ் சூனியம்பள்ளம் வாய்க்கால் பி.சி.டி. பிரிவு வாய்க்கால் தூர் வாரும் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளது. தற்போது இவ்வாய்க்கால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.



**25—**

## பாசன வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39051—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, செருகுடி பாசன வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, செருகுடி பாசன வாய்க்கால் பி.சி.டி. பிரிவு வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தின் கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளது. இவ்வாய்க்கால் தற்போது தூர் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**26—**

## பாசன வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39053—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, மாதானம் பாசன வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, மாதானம் பாசன வாய்க்காலைத் தூர் வாரும் பணி 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

**27—**

## விவசாயத் தொழிலாளர்கள்

**வினா எண் 39413—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல வாரியத்தில் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகி பணம் கட்டியுள்ளனரா?

(ஆ) எவ்வளவு பேர்? எவ்வளவு தொகை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) தொழிலாளர்கள் நல வாரியத்தில் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக முடியாது. ஏனென்றால் 1972 ஆம் ஆண்டைய தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொருந்தாது. ஆனால், தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைகள்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/1982) இல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி விவசாயத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து பணம் செலுத்தியுள்ளனர். (ஆ) இவ்வாரியத்தில் உறுப்பினர் கட்டணமாக ரூ.100 ஒரே தடவையில் வசூலிக்கப்படுகிறது. மேற்படி நல வாரியத்தில் 7,32,130 நபர்கள் இதுவரை உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். மொத்தம் ரூ.7,32,13,000 பணம் செலுத்தியுள்ளனர்.





**28—**

## பாசன நீரை ஏரியில் சேர வைத்தல்

**வினா எண் 39440—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, திருத்தலையூர் ஏரியிலிருந்து தண்டலை வரை பாசன நீர் வரும் வாய்க்காலை தண்டலையிலிருந்து மேலும் நீட்டித்து பாசன வாய்க்காலை திருத்தியமைத்து நீர் ஏரியில் வந்து சேர நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** இல்லை.

**29—**

## வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா எண் 39800—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சியிலிருந்து கடற்கரை வரை முடவனாறு வடிகாலை தூர் வாரி, ஆழப்படுத்தி இருகரைகளையும் பலப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சியிலிருந்து கடற்கரை வரை முடவனாறு வடிகாலை தூர்வாரி, ஆழப்படுத்தி இருகரைகளையும் பலப்படுத்த நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் இவ்வேலை முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்கப்படும்.

**30—**

## ஆழியார் அணை தங்கும் விடுதி

**வினா எண் 41785—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் டேம் தங்கும் விடுதியில் மேலும் இரண்டு அறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆழியாறு டேம் தங்கும் விடுதியில் தற்போது இருக்கிற 3 அறைகளே போதுமானதாக இருக்கின்றன. ஆழியாற்றுக்கு பக்கத்திலுள்ள பொள்ளாச்சியிலும் விருந்தினர் மாளிகையில் 5 அறைகள் இருப்பதால் ஆழியாறு அணை விருந்தினர் மாளிகையில் தற்பொழுது உள்ள அறைகளே போதுமானது.



2005 பிப்ரவரி 3]

**31—**

## ஏரிகளைப் பழுது பார்த்தல்

**வினா எண் 42167—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி கரூர் ஊராட்சிக்குட்பட்ட இளம்பாவயல், பாப்பாகுடி, நிரமங்கலம், விளாங்காட்டூர், குமுளூர், வரிக்குடி ஆகிய கிராமங்களிலுள்ள ஏரிகளைப் பழுது பார்த்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** நிதி நிலைமைக்கு ஏற்ப செய்யப்படும்.

**32—**

## காவலர்களை நியமித்தல்

**வினா எண் 43275—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள பரம்பிக்குளம் அணை அருகில் உள்ள தங்கும் விடுதியை அழகுபடுத்த பூங்கா அமைத்து காவலர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் அணை அருகில் உள்ள தங்கும் விடுதி கேரளா மாநிலம் கொல்லங்கோடு தொகுதியில் அமைந்துள்ளது. பரம்பிக்குளம் அருகில் உள்ள தங்கும் விடுதிக்கு அருகில் பூங்கா அமைத்து அழகுபடுத்தி

பராமரிப்பு செய்வது மிகவும் கடினம். காரணம் பரம்பிக்குளம் பகுதி இந்திராகாந்தி வனவிலங்குகள் சரணாலயம் பகுதியாக அறிவிப்பு செய்யப்பட்ட வனநிலப் பகுதி. இங்கு வனவிலங்குகள் அதிகம் உள்ளதால் பூங்காக்களை மிருகங்கள் எளிதில் அழித்துவிட வாய்ப்புள்ளது. எனவே, இப்பணியை பரம்பிக்குளம் வனப் பகுதியில் மேற்கொள்ள இயலாது.

**33—**

**வடிகாலைத் தூர் வாரிச் செப்பனிடுதல்**

**வினா எண் 43768—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குறவலூர் வடிகால் கி.மீ. 2 முதல் கி.மீ. 4 வரை தூர் வாரிச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, குறவலூர் வடிகால் 2 கி.மீ. முதல் 4 கி.மீ. வரை தூர் வாரிச் செப்பனிடும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

**34—**

**நீர்வரத்து வழியை மராமத்து செய்தல்**

**வினா எண் 44169—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பொன்பேத்தி, சிறுவிளத்தூர் கண்மாய், விளத்தூர் ஏந்தல் கண்மாய் ஆகியவற்றின் நீர்வரத்து வழியை மராமத்து செய்து தரும் எண்ணம் அரசிடம் உள்ளதா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** நிதி நிலைக்கு ஏற்ப மராமத்து செய்யப்படும்.

**35—**

**வாய்க்கால் பழுதுபார்த்தல்**

**வினா எண் 46211—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணலூர் அணைக் கட்டிலிருந்து ஏரிகளுக்கு பாசன வசதி அளிக்கும் வாய்க்காலைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** நிதி நிலைக்கு ஏற்ப பழுதுபார்க்கப்படும்.

**36—**

**விளம்பரப் பலகைகள்**

**வினா எண் 50306—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை திருமூர்த்தி அணையில் குளிக்கச் செல்லும் மக்களுக்கு அபாயம் உள்ள இடத்தை விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணையில் குளிக்கக் கூடாது என அறிவிப்புப் பலகை ஏற்கெனவே வைத்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை

செய்யப்பட்டுள்ளது. அதனையும் மீறி அணையில் குளித்தால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசு பொறுப்பு ஏற்காது. மேலும், அபாய அறிவிப்பிற்குரிய கூடுதல் விளம்பரப் பலகைகளை முக்கியமான இடங்களில் அமைக்க ஆவன செய்யப்படும்.

**37—**

## தொழிலாளர்களுக்குச் சீருடை வழங்குதல்

**வினா எண் 50747—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு கிளை அச்சகத்தில் வேலை செய்யும் ஆண்/பெண் தொழிலாளர்களுக்கு சீருடைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

**38—**

## கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 53399—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒட்டப்பிடாரம் தொகுதியின் பல கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* ஒட்டப்பிடாரம் தொகுதியில் கோவில்பட்டி, எட்டையபுரம் மற்றும் ஒட்டப்பிடாரம் ஆகிய வட்டங்கள் உள்ளன. இவற்றிலுள்ள 53 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களில், 48 பணியிடங்களில் கிராம நிர்வாக அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். கோவில்பட்டி வட்டத்தில் 2, எட்டையபுரம் வட்டத்தில் 2 மற்றும் ஒட்டப்பிடாரம் வட்டத்தில் 1 ஆக 5 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலிப் பணியிடங்களை நிரப்ப அரசின் தடையாணை உள்ளதால், அத் தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டபின் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

## ஒயர்லெஸ் அமைப்புகள்

**வினா எண் 50032—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊரகப் பகுதிகளில் தகவல் தொழில்நுட்ப வசதிக்காக தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் திட்ட ஒயர்லெஸ் (எஸ்.எஸ்.ஏ.ஆர்.ஐ.) அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப வசதிக்காக ஊரகப் பகுதிகளில் மதுரை, கடலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், தேனி, திருநெல்வேலி, சேலம், நாகப்பட்டினம், ஈரோடு மற்றும் திருவள்ளூர் ஆகிய பத்து மாவட்டங்களில் இணையம் ஊரகச் சேவை அமைக்கப்பட்டுள்ளது.

[2005 பிப்ரவரி 3

40—

## நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா எண்—17380—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி, தென்னாம்பட்டினத்தில் நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னாம்பட்டினம் கிராமத்தில் நியாய விலைக் கடை கட்டும் திட்டம் ஏதும் நிலுவையில் இல்லை. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1 | சீர்காழி வட்டத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் | 120 |
| 2 | முழுநேர நியாய விலைக் கடைகள் | 112 |
| 3 | பகுதிநேர நியாய விலைக் கடைகள் | 8 |
| 4 | அரசு கட்டடங்களில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் | 78 |
| 5 | தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் | 42 |
| 6 | மகளிர் சுய உதவிக் குழு மூலம் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் | 2 |



2005 பிப்ரவரி 3]

41—

## நியாய விலைக் கடை

**வினா எண் 31359—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து திருவாலி ஊராட்சி கீழச்சாலையில் ஒரு நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், திருவாலி பகுதியில் உள்ள தாய் நியாய விலைக் கடையில் 668 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்த நியாய விலைக் கடையில் கீழச்சாலையை சேர்ந்த 191 குடும்ப அட்டைகள் உள்ளன. கீழச்சாலையை சேர்ந்த சன்னதி தெரு, கீழத் தெரு, மேலத் தெரு ஆகிய தெருக்களுக்கும் தாய்க் கடைக்கும் உள்ள தொலைவு 2 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளது. எனவே, பகுதி நேரக் கடை அமைக்க இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் இரண்டு கடைகளுக்குமிடையே இருக்க வேண்டிய தொலைவு குறித்த நிபந்தனைகள் நிறைவு பெறாததால் கீழச்சாலையில் பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

42—

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 32617—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம் அம்பலத்தாடி கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், அம்பலத்தாடி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடை அரியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் நியாய விலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**43—**

## முழுநேர அங்காடியாக மாற்றுதல்

**வினா எண் 39708—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமயிலாடி ஊராட்சியில் உள்ள பகுதி நேர அங்காடியை, முழுநேர அங்காடியாக மாற்றி மகளிரே நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமயிலாடி ஊராட்சியில் உள்ள பகுதி நேரக் கடை 218 குடும்ப அட்டைகளுடன் 14-6-2003 முதல் மயிலாடுதுறை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. முழுநேர நியாய விலைக் கடைக்குக் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற விதி உள்ளதால், 218 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்படும் திருமயிலாடி பகுதி நேரக் கடையை முழுநேரக் கடையாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. போதிய நிதி வசதி உள்ள மகளிர் குழு இக்கடையை ஏற்று நடத்த விருப்பம் தெரிவித்தால் இக்கடையை மகளிர் குழுவிடம் ஒப்படைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.



2005 பிப்ரவரி 3]

**44—**

## பண்டகசாலைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 48094—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு சிந்தாமணி கூட்டுறவு பண்டகசாலைக்குப் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) புதிய கட்டடம் கட்டுவதற்கு போதிய சொந்த நிதி வசதியோ (Own Funds) மற்றும் தேவையான காலி மனையோ இல்லாத நிலையில் பண்டகசாலைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**45—**

## கூட்டுறவுச் சங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம்

**வினா எண் 51295—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) இல்லை. சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் 22 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 19 வங்கிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. பாதுகாப்பு அறை மற்றும் இருப்புப் பெட்டகம் போன்ற அத்தியாவசியத் தேவைகளையும் கொண்டு செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய வங்கிகளில் நிதி நிலைமை சரியாக இல்லாத குறிச்சி, ஏகாப்பூர் மற்றும் எ. குமாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மட்டும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. நிதி நிலைமை சீரமைந்தவுடன் இவ்வங்கிகளுக்கும் வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**46—**

## கிராம அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 57191—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மிமீசல் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட ஆர். புதுப்பட்டினம், ஆலத்தூர், வெளிவயல், கோபாலப்பட்டினம், வேள்வரை மற்றும் அரசநகரிப்பட்டினம் கிராம அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மிமீசல் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட ஆர். புதுப்பட்டினம், ஆலத்தூர், வெளிவயல் கோபாலப்பட்டினம், வேள்வரை ஆகிய கூட்டுறவு நியாய விலைக் கடைகள் முழுநேரக் கடைகளாகவும், அரசநகரிப்பட்டினம் பகுதி நேரக் கடையாகவும் செயல்படுகின்றன. இந் நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. பகுதி நேரக் கடைக்கு ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், அரசநகரிப்பட்டினம் பகுதி நேரக் கடைக்கு அரசு செலவில் கட்டடம் கட்ட இயலாது. இதர ஐந்து முழுநேர நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**47—**

## நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 57508—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, டி. புதுப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வடக்கு நல்லியம்பட்டி மற்றும் மண்பறை ஊராட்சி, மண்பறையிலுள்ள பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, டி. புதுப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வடக்கு நல்லியம்பட்டி கிராமத்தில், பகுதி நேரக் கடை 250 குடும்ப அட்டைகளுடன் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதி

நேரக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடைமுறையிலுள்ள விதிகளில் வழிவகை செய்யப்படவில்லை.

மண்பறை ஊராட்சி, மண்பறை நியாய விலைக் கடை, மண்பறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 696 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு திட்டங்களின்கீழ் தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

**48—**

## கோவில் திருப்பணிக்கு நிதியுதவி

**வினா எண் 56655—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சிவனார்விளாகம் கிராமம் மற்றும் வடக்கு தென்னங்குடியிலுள்ள கன்னியம்மன் கோயில்களை கட்டிக் கொடுக்க ரூ.25,000/- நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, சிவனார்விளாகம் கிராமம் மற்றும் வடக்கு தென்னங்குடியிலுள்ள அருள்மிகு கன்னியம்மன் திருக்கோயில்களுக்கு 6,000 திருக்கோயில்களின் திருப்பணி திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**49—**

## கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 57609—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சீர்காழி தொகுதியில் தென்னை மரங்கள் அதிகம் உள்ளதால் தென்னை மரம் சார்ந்த பொருட்கள் தயாரிக்க கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, சீர்காழி தாலுக்காவில் புளியந்துறையில் ஏற்கெனவே தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டி புளியந்துறை ஆதிதிராவிடர் கயிறு மற்றும் கயிறு பொருட்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (எண் 1612) என்ற ஒரு சங்கம் தொடங்கப்பட்டுள்ளது. இச்சங்கம் 11-3-1983 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் 193 பேர் ஆவர். செலுத்தப்பட்ட மொத்த பங்கு மூலதனம் ரூ.2,13,170/- இதில் உறுப்பினர்களின் பங்கு ரூ.1,86,170/-ம் அரசு பங்கு மூலதனம் ரூ.27,000/-ம் ஆகும். சங்கத்திற்கென நிலமும் கட்டடமும் உள்ளது. சிறிது காலம் நலிவடைந்த நிலையிலிருந்த இச்சங்கம் 1-5-2003 முதல் மீண்டும் தனது உற்பத்தியினை துவக்கியுள்ளது. தற்சமயம் இச்சங்கம் ஆறு உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி குறைந்தபட்சம் ஆர்வமுள்ள 25 பேர்கள் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க விரும்பினால் அவர்கள் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், நாகப்பட்டினம் அவர்களை அணுகும்பட்சத்தில் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொடுக்கப்படும்.

**50—**

## கிளை நூலகம் அமைத்தல்

**வினா எண் 16505—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் கிராமத்தில் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக சட்டம் 1948-ன்படி, மக்கள் தொகை 5,000 மற்றும் அதற்கு மேலுள்ள ஊர்களில் மட்டுமே கிளை / ஊர்ப்புற நூலகம் அமைக்க வழிவகையுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தொடுவாய் கிராமத்தின் மக்கள் தொகை 2,500 ஆகும். எனவே, குறைந்த மக்கள் தொகை அடிப்படையில் தொடுவாய் கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை. மேலும், புதிதாக கிளை நூலகம் அமைக்க ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். மேலும், நூலகரின் ஊதியம், நூல்கள், பருவ இதழ், நாளிதழ்கள் மற்றும் தளவாடங்கள் போன்ற தொடரும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், அரசாணை (நிலை) எண்.212, நாள் 29-11-2002-ல் புதிய நியமனம் செய்ய தடையாணை உள்ளது. எனவே, தொடுவாய் கிராமத்தில் கிளை நூலகம் அமைப்பது சாத்தியமன்று. எனினும், தொடுவாய் கிராமத்தில் நூலகப் பணி கிடைக்கப்பெற அங்கு பகுதி நேர நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மேற்படி கிராமத்தில் பகுதி நேர நூலகம் திறக்க இயலும்.

**51—**

## கல்வி நிறுவனங்களில் சலுகைகள்

**வினா எண் 20316—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாலை நேர பகுதி நேர ஆசிரியர்களுக்கு பிற கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா?





(ஆ) ஆம் எனில், என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாலை நேர/பகுதி நேர ஆசிரியர்களுக்கு முழுநேர இசைக் கல்லூரியில் வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் வழங்கப்படுவதில்லை. முழுநேர இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாலை நேர / பகுதிநேர இசைக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விவரம் கீழே ஒப்பிடப்பட்டு அளிக்கப்படுகிறது:—

| வ. எண். | வழங்கப்படுகின்ற சலுகைகள். | முழுநேர இசைக் கல்லூரி ஆசிரியர்கள். | மாலை நேர/பகுதிநேர இசைக் கல்லூரி ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| 1 | தற்செயல் விடுப்பு | 12 நாட்கள் | 8 நாட்கள் |
| 2 | ஈட்டிய விடுப்பு | வழங்கப்படுகிறது | இல்லை |
| 3 | மருத்துவச் சான்றுடன் ஈட்டப்படா விடுப்பு | வழங்கப்படுகிறது | இல்லை |
| 4 | சொந்த விருப்பத்தின் பேரில் அரைச்சம்பள விடுப்பு | வழங்கப்படுகிறது | இல்லை |
| 5 | விழா முன்பணம் | வழங்கப்படுகிறது | இல்லை |
| 6 | காலாண்டு, அரையாண்டு மற்றும் கோடை விடுமுறைகள் | வழங்கப்படுகின்றன | தொடர்ந்து ஆறு மாதங்கள் பணிமுறிவின்றி பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த விடுமுறைச் சலுகைகள் வழங்கப் படுகின்றன |
| 7 | ஓய்வூதியப் பயன்கள் | வழங்கப்படுகின்றன | இல்லை |

52—

### ஊர்ப்புற நூலகம் திறத்தல்

**வினா எண் 21693—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், வெள்ளரிவெள்ளியில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகள் ஊராட்சித் தலைவர் மூலமாக அவ்வூர் பொதுமக்களால் பூர்த்தி செய்யப்பட்டு, 20-1-2004 முதல் ஊர்ப்புற நூலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

53—

### மூடப்பட்ட நூலகத்தைச் செயல்படுத்துதல்

**வினா எண் 31099—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி நூலகத்தில் நூலகர் நியமனம் செய்து, மூடப்பட்ட நூலகம் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** ஆம். செஞ்சி தொகுதி, திண்டிவனம் திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் அரசு ஆசிரியர் தேர்வு வாரியம் வழியாக நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் ஆசிரியர்களில் ஒருவருக்கு நூலகர் கூடுதல் பொறுப்பு வழங்கி நூலகத்தை செயல்படுத்துமாறு அக்கல்லூரி முதல்வர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.



54—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 36681—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருத்தாசலம், கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு கிராமத்தில் நூலகம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், அங்கு நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு கிராமத்தில் 17-11-2003 முதல் ஊர்ப்புற நூலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

55—

### நூல்நிலையம் இயக்க கட்டட வசதி

**வினா எண் 36733—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கற்பட்டு தொகுதியில், வழுவதூர் கிராமத்தில் நூல் நிலையம் இயக்க கட்டடம் அமைத்துத்தர அரசு ஒப்பளிப்பு செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) செங்கற்பட்டு தொகுதி, வழுவதூர் கிராமத்தில் நூல்நிலையம் ஏதும் செயல்படாத காரணத்தினால் கட்டடம் கட்டவேண்டிய வாய்ப்பு எழவில்லை. மேலும், அவ்வூரில் நூலகம் திறக்க அவ்வூர் மக்கள் விண்ணப்பிக்கவில்லை. இனி விண்ணப்பித்தால் ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் பூர்த்தி செய்ய வேண்டும்:—

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**56—**

## கிளை நூலகம்

**வினா எண் 40548—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, சேஷசமுத்திரம், நெடுமானூர் ஊராட்சிகளில் கிளை நூலகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதி, சேஷசமுத்திரம், நெடுமானூர் ஊராட்சிகளில் கிளை நூலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. ஒரு கிளை நூலகம் திறக்க புதிதாக ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். புதிதாக பணியிடம் தோற்றுவிப்பதில் தடையாணை உள்ளது. எனினும், அவ்வூர் மக்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்தால், பகுதி நேர நூலகம் திறக்கலாம். ஆனால், அவ்வூர் மக்கள் இந்நிபந்தனைகளை இதுவரை நிறைவு செய்யவில்லை.

1. வாடகையற்ற இலவசக் கட்டடம்.

2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை நூலக ஆணைக்குழுவின் பெயருக்கு பத்திரப்பதிவு செய்துதர வேண்டும்.

3. ரூ. 2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

**57—**

## தினக்கூலி பணியாளர் நியமனம்

**வினா எண் 41571—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மைய நூலகத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட தினக்கூலி பணியினர் மீண்டும் எப்போது பணியில் சேர்க்கப்படுவார்கள்?

(ஆ) தினக்கூலி பணியாளர் நியமனம் செய்யப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முதல் சேலம் மாவட்ட பொது நூலகங்களுக்கு விநியோகம் செய்ய புதிய நூல்கள் பதிப்பாளர்களால் மாவட்ட மைய நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சுமார் 3,000 தலைப்புகளில் தலைப்பு ஒவ்வொன்றிலும் 20 படிகள் வீதம் மாவட்ட மைய நூலகத்தில் பெறப்படுகின்றன. இந்நூல்களை முறையான எண்ணிட்டு, பதிப்பாளர்களின் விலைப்பட்டியலை நூலுடன் சரிபார்த்து தேர்ச்சி செய்தல், புதிய நூல்களை கிளை நூலகங்களுக்கு பிரித்து அனுப்புதல் போன்ற பணிகளை செய்வதற்காக அதிகபட்சம் 89 நாட்கள் நூலக ஆணைக்குழு சில்லறைச் செலவினத்தில் மாவட்ட மைய நூலகங்களில் தினக்கூலி அடிப்படையில் நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டு அப்பணிகள் நிறைவு செய்யப்படும். மேலும், அப்பணியினை முடிக்க கூடுதல் நாட்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் தேவைப்படின், தேவையின் அடிப்படையில் மேலும் 89 நாட்களுக்கு தினக்கூலி பணியாளர்கள் அமர்த்தப்படுவர். பணி நிறைவுற்றதும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிபவர்கள் நிறுத்தப்படுவர். இவர்களுக்கான தினக்கூலி நூலக ஆணைக்குழு சில்லறைச் செலவினத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் புதிய நூல்கள் சேலம் மாவட்ட நூலகங்களுக்கு வாங்கி விநியோகம் செய்யும்போது டிசம்பர் 2004 மாதத்தில் தினக்கூலி பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவர்.

**58—**

## கிளை மையம்

**வினா எண் 44460—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் சார்பில் கிளை மையம் ஒன்று செயல்படுத்தப்படுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி, எட்டயபுரத் தொகுதியில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் சார்பில் கிளை மையம் ஒன்று செயல்படுத்துவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**59—**

## நூலகங்களை இணைக்கும் திட்டம்

**வினா எண் 47372—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள சியாமளா பெண்கள் மேல்நிலைப் பள்ளியுடன் நூலகங்களை இணைக்கும் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகில் உள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றினை தத்து எடுக்க வேண்டும் என்று அரசாணை (2டி) எண் 38, பள்ளிக் கல்வி, நாள் 11-6-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் அடிப்படையில் சீர்காழியிலுள்ள சியாமளா பெண்கள் மேல்நிலைப் பள்ளி சீர்காழி கிளை நூலகத்துடன் 28-7-2004 முதல் இணைக்கப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

60—

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 47380—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினத்தில் இயங்கும் நூல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினத்தில் இயங்கும் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட காலிமனை பெறப்படாததால் அந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை.

61—

## தலைமை ஆசிரியர் மூலம் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்

**வினா எண் 49324—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ப்ளஸ் 2 தேர்வுகளில் தோல்வியடைந்த மாணவ, மாணவியர்கள் துவண்டுவிடாமல் இருக்கவும், தற்கொலை உணர்வுக்குட்படாமல் இருக்கவும் அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ப்ளஸ் 2 தேர்வுகளில் தோல்வியடைந்த மாணவ / மாணவிகள் துவண்டுவிடாமல் இருக்கவும், தற்கொலை முயற்சியில் ஈடுபடாமல் இருக்கவும், அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

1. தோல்வி அடைந்த மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஊட்டும் வகையில் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மூலம் ஆலோசனைகள் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2. தமிழக அரசின் புதிய திட்டத்தின்படி மேல்நிலை / எஸ்.எஸ்.எல்.சி. / மெட்ரிகுலேஷன் / ஆங்கிலோ-இந்தியன் ஆகிய பொதுத் தேர்வுகளில் மூன்று பாடங்களில் மட்டும் தோல்வியுற்ற / வருகை புரியாத மாணவர்களுக்கு அதே வருடத்தில் உடனடியாக சிறப்புத் துணை பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு அம்முடிவுகள் மிக விரைவாக வெளியிடப்பட்டு அவர்களின் உயர் கல்வி தடையின்றி அதே வருடம் கற்பதற்கு வசதியாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

3. தேர்வுகளில் தோல்வியுற்ற மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும் பொருட்டு சென்னையில் நாட்டு நலப் பணித் திட்டம் மூலமாக மாணாக்கர்களுக்கு ஒரு கலந்தாய்வு கூட்டம் உளவியல் வல்லுநர்களால் நடத்தப்பட்டு மாணாக்கர்களுக்கு நம்பிக்கை ஒளி ஏற்படுத்தப்பட்டது. அதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும், கலந்தாய்வுக் கூட்டம் வருகின்ற கல்வியாண்டில் மாணாக்கர்களுக்கு நடத்தப்பட உள்ளது.

4. மாணாக்கர்கள் மத்தியில் தோல்வி மனப்பான்மை ஏற்படாவண்ணம் இருக்க பல்வேறு விதமான உளவியல் ரீதியான ஊக்கப்படுத்துதல் திட்டம் அவ்வப்போது பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகிறது.

## இசைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 50107—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

## குழுவின் பரிசீலனை

**வினா எண் 50498—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெறுவதற்குரிய தமிழ் நூல் ஏதேனும் அந்தக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** குழு பற்றிய விவரம் தமிழ்நாடு அரசுக்கு தெரியப்படுத்தப்படுவதோ, குழுவின் பரிசீலனைக்கு அரசு நிலையில் நூல் அனுப்பப்படுவதோ நடைமுறையில் இல்லை.



## கிளை நூலகம்

**வினா எண் 59399—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ரொட்டிக்கடையில் கிளை நூலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக விதிகள் 1950-ன்படி மக்கள் தொகை 5,000 மற்றும் அதற்கு மேலுள்ள ஊர்களில் கிளை நூலகம் / ஊர்ப்புற நூலகம் அமைக்க வழிவகையுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஊராட்சிக்குட்பட்ட ரொட்டிக்கடை கிராமத்தின் மக்கள் தொகை 1,870 ஆகும். எனவே குறைந்த மக்கள் தொகையின் அடிப்படையில் ரொட்டிக்கடை கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை. மேலும், புதிதாக கிளை நூலகம் அமைக்க ஒரு மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். அரசாணை (நிலை) எண் 212, நாள் 29-11-2001-ல் புதிய நியமனம் செய்ய தடையாணை உள்ளது. எனவே, ரொட்டிக்கடை கிராமத்தில் கிளை நூலகம் அமைப்பது சாத்தியமன்று. எனினும், இக்கிராம மக்கள் நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்யும் பட்சத்தில் பகுதி நேர நூலகம் திறக்க இயலும்:—

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. வருங்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாக 5 செண்ட் முதல் 10 செண்ட் வரையிலான இலவச காலிமனை மாவட்ட நூலக ஆணைக்குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தர வேண்டும்.

62—

## இசைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 50107—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் இசைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்ட கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

63—

## குழுவின் பரிசீலனை

**வினா எண் 50498—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெறுவதற்குரிய தமிழ் நூல் ஏதேனும் அந்தக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** குழு பற்றிய விவரம் தமிழ்நாடு அரசுக்கு தெரியப்படுத்தப்படுவதோ, குழுவின் பரிசீலனைக்கு அரசு நிலையில் நூல் அனுப்பப்படுவதோ நடைமுறையில் இல்லை.



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கான இலவச வீடுகளைப் புதுப்பித்துத் தரும் திட்டம் எதுவும் அரசால் செயல்படுத்தப்படவில்லை.

69—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10238—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த கோளப்பன்சேரி ஊராட்சியில் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது அவசியம் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் – கோளப்பன்சேரி ஊராட்சி, கோளப்பன்சேரி காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் முடிக்கப்பட்டு 12/2002 முதல் பொதுமக்கள் பயனில் உள்ளது.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

65—

## அரசுக் கல்லூரியாக மாற்றுதல்

**வினா எண் 62249—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் கல்வி முகமையாகச் செயல்பட்டு வந்த சிக்கய்ய நாயக்கர் கல்லூரி நிர்வாகக் குழு செயல் இழந்து, அதனால் கல்லூரி நிர்வாகத்தில் பல தவறுகள் / முறைகேடுகள் ஏற்பட்ட காரணத்தால், அக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் மற்றும் பணியாளர்களின் நலன் கருதி, 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டத்தின்கீழ் கல்லூரி நிர்வாகத்தை 20-12-2000 முதல் அரசே ஏற்றுள்ளது. கோவை மண்டல கல்லூரிக் கல்வி இயக்குநர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டு கல்லூரி நிர்வாகத்தை நடத்தி வருகிறார். அரசுக் கல்லூரியாக மாற்றும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



66—

## குடிநீர் வசதி

**வினா எண் 44733—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்திலுள்ள மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்குக் குடிநீர் வசதி செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ராதாபுரம் ஊராட்சியில் வீடுகளுக்கோ அல்லது அரசு அலுவலகங்களுக்கோ விதிமுறைப்படி குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் நாளது தேதி வரை நடைமுறைப்படுத்தப்படாததால் குடிநீர் இணைப்புப் பெற இயலவில்லை. இருப்பினும், ராதாபுரம் ஊராட்சியின் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் தண்ணீர் பெற்று, தற்போதைய குடிநீர்ப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது.

67—

## மீன் வளர்ப்புப் பணி

**வினா எண் 54681—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் அணையில் மீன்கள் குறைந்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைப் பெருக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** (அ) ஆம். (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் அணையின் மீன்பிடி உரிமம், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு 01.07.1977 முதல் நீண்ட கால குத்தகை அடிப்படையில் ( 30 ஆண்டு காலம் ) மாற்றம் செய்யப்பட்டது.

ஆழியார் அணையில் மீன்குஞ்சு வளர்ப்பு, மீன்குஞ்சுகள் நீர்த்தேக்க இருப்பு செய்தல், மீன்வளர்ப்பு ஆகியவை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, செயல்படுத்தப்படுகின்றன. சாதா கெண்டை தவிர பிற நுண்மீன்குஞ்சுகள் (உற்பத்தி பணி இல்லாததால்) கழகத்தின் பிற அலகுகளிலும் மற்றும் மீன்துறை சார்ந்த மையங்களிலும் பெற்று, வளர்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன. கடந்த காலங்களில் நீர்த்தேக்கங்களில் முழு கொள்ளளவு எய்தாத நிலையிலும் கழகத்திற்கு இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் தீவிர கவனம் செலுத்தி மீன் குஞ்சுகள் வளர்ப்புப் பணிகள் / நீர்த்தேக்க இருப்பு செய்யும் பணிகள் செம்மையாக மேற்கொள்ளப்பட்டு உற்பத்தியினைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**68—**

## தொகுப்பு விடுகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 63661—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கூழையார், திருமுல்லைவாசல் ஊராட்சி, தொடுவாய் கிராமம் மற்றும் தாண்டவகுளம் ஊராட்சி, சின்னகொட்டாய்மேடு மற்றும் மடவாமேடு, பெருந்தோட்டம் ஊராட்சி, நாயக்கர்குப்பம் ஆகிய இடங்களிலுள்ள மீனவர்களுக்கான தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கான இலவச வீடுகளைப் புதுப்பித்துத் தரும் திட்டம் எதுவும் அரசால் செயல்படுத்தப்படவில்லை.

**69—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10238—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த கோளப்பன்சேரி ஊராட்சியில் மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது அவசியம் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் – கோளப்பன்சேரி ஊராட்சி, கோளப்பன்சேரி காலனிக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் முடிக்கப்பட்டு 12/2002 முதல் பொதுமக்கள் பயனில் உள்ளது.

70—

## கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 10824—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாக்கனூர் பள்ளி கட்டட பழுதுகளை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாக்கனூர் பள்ளிக் கட்டடங்கள் கடந்த 2003–2004 ஆம் ஆண்டில் பழுது பார்க்கப்பட்டுள்ளன.

71—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 10856—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 15வது வார்டு பகுதிக்குட்பட்ட செல்வமருதூர் முஸ்லீம் பள்ளிவாசல் தெரு மற்றும் அம்பேத்கர் காலனியில் குடிநீர்ப் பிரச்சனை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி 15வது வார்டு பகுதிக்குட்பட்ட செல்வமருதூர் முஸ்லீம் பள்ளிவாசல் தெரு மற்றும் அம்பேத்கர் தெரு ஆகிய பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 13 பொது நல்லிகள் மூலம் 2 நாளைக்கு ஒரு முறை ஒன்றரை மணி நேரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதி பள்ளிவாசல் தெருவில் 1.5 குதிரைத் திறன் விசைப் பம்பு மூலமும் வடகர் பள்ளிவாசல் தெருவில் 5 குதிரைத் திறன் விசைப் பம்பு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அம்பேத்கர் தெருவில் திறந்த வெளிக் கிணற்றில் உள்ள 5 குதிரை வேக மின்விசை மோட்டார் மூலம் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏதும் இல்லை.

72—

## மயானக் கூரை அமைக்கும் பணி

**வினா எண் 11420—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி கொளக்காட்டுபுதூர் கிராமத்தில் மயானத்தில் கூரை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** நாமக்கல் மாவட்டம், வெங்கரை பேரூராட்சிக்கு 2000–2001ஆம் ஆண்டு சுடுகாடு மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூ.82,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீடு தொகையில் கபிலர்மலைத் தொகுதி, கொளக்காட்டுப்புதூர் கிராம மயான கூரை அமைக்கும் பணி ரூ.85,000 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு 16-2-2001 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

73—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 15928—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கொடியாலம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொடியாலம் குடியிருப்பிற்குத் தற்சமயம் 1992 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு கையிறைப்பான் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் இறைப்பான் திட்டம் ஆகியவற்றின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கொடியாலம் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

74—

### வடிகால் பணிகள்

**வினா எண் 19165—திருமதி டி. யசோதா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேரூராட்சிகளில் வடிகால் பணிகளை குடிசை மாற்று வாரியம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?



(ஆ) ஆம் எனில், எத்தனை நகரப் பேரூராட்சிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) நகரப் பேரூராட்சிகளில் வடிகால் பணிகளை குடிசை மாற்று வாரியம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. (ஆ) 20 பேரூராட்சிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

75—

### ஆழ்குழாய் அடிபம்பு அமைத்தல்

**வினா எண் 20568—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூர் பேரூராட்சியில் கழிவுநீர் கால்வாய்கள் கட்டி புதிய அடிகுழாய்கள் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூர் பேரூராட்சிப் பகுதியில் மொத்தம் 76 ஆழ்குழாய் அடிபம்புகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக குடிநீர் தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சியில் 2600 மீ. கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட்டு பேரூராட்சி பொதுச் சுகாதார பணியாளர்கள் மூலம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிப் பகுதியில் புதியதாக 30 எண்ணிக்கை ஆழ்குழாய் அடிபம்பு அமைக்கவும், 500 மீ. புதியதாக கழிவுநீர்க் கால்வாய்

அமைக்கவும் வேண்டியுள்ளது. பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, மேற்படி பணி தற்போது செய்ய இயலவில்லை.

**76—**

### குடிநீர் விநியோகம்

**வினா எண் 23023—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையார் டேம், சேடல் டேம் முதல் ஜெ.ஜெ. நகர் வரையுள்ள பொது மக்கள் குடிதண்ணீர் வசதியில்லாமல் கஷ்டப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட சக்கரமலை குடிநீர்த் திட்டம் 1985 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் குடிநீர்த் திட்ட பிரதானக் குழாய் 8.5 கிலோ மீட்டர் மூலம் வால்பாறை நகர்ப்பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற பகுதிகளுக்கு அந்தந்த பகுதியில் 5 நீர் ஊற்றுக் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் 27 அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நாளது தேதியில் எந்தப் பகுதியிலும் குடிநீர்ப் பற்றாக்குறை அல்லது குடிநீர் விநியோகம் இல்லாத குடியிருப்புகள் ஏதும் இல்லை.

**77—**

### வடிகால் கட்ட நிதி வசதி

**வினா எண் 25943—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சி, சத்திரம் தெரு முதல் ஏரி முடிகிற வரை வடிகால் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சத்திரம் தெரு முதல் ஏரி குடியிருப்பு வரை உள்ள பகுதியில் வடிகால் வசதி செய்ய சுமார் ரூ.4.00 இலட்சம் செலவாகும். தற்போது இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள இயலாது.

**78—**

### கடன் வழங்குதல்

**வினா எண் 31030—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழு நிறுவனங்களுக்கு டோக்ரா கூடை ஓலை பின்ன கடன் வழங்கும் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) டோக்ரா திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. ஆனால் டோக்ரா திட்டம் தற்பொழுது பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. கூடை ஓலை பின்னுவது உட்பட அனைத்துத் தொழில்களுக்கும் வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட சுய உதவிக் குழுக்கள் வட்டார வளர்ச்சி அலுவலகம் மூலமாக நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்கள், சுய வேலை வாய்ப்பளிக்கும் தொழில்களைச் செய்ய, மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும். இதன் கீழ் செய்யப்படும் தொழில்கள் குறித்து எந்த வரையறையும் இல்லை.

**79—**

## சுழல் நிதி

**வினா எண் 31282—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்திற்கு கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கு எத்தனைக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியுள்ளது?

*(ஆ)* அவற்றின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் நிதியாண்டில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 295 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.29.50 இலட்சம் சுழல் நிதியாக விடுவிக்கப்பட்டுள்ளது.

**80—**

## கடனுதவி

**வினா எண் 33467—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





தமிழகத்தில் அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொழில் முனைவோர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் எத்தனை குழுக்களுக்கு அரசு கடன் வழங்கி உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் நிதியாண்டில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3,112 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ3144.246 இலட்சம் பொருளாதார உதவியாகவும், அக்குழுக்களின் உறுப்பினர்கள் 49,881 பேருக்கு ரூ.3,844.131 இலட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**81—**

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 35331—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தந்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிட போதுமான நிதி இல்லை. எனவே, ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.98,000/- மதிப்பீட்டில் முட்கம்பி அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

**82—**

## புதுக்காலனியில் சாலை அமைத்தல்

**வினா எண் 38489—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அங்களக்குறிச்சி புதுக்காலனியில் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சிக்கு உட்பட்ட அங்களக்குறிச்சி புதுக்காலனியில் 65 வீடுகள் உள்ளன. 275 பேர் வசித்து வருகின்றனர். மேற்படி சாலை 1 கி.மீ. நீளம் கொண்டது. இச்சாலையை தார்ச் சாலையாக அபிவிருத்தி செய்ய ரூ.5.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**83—**

## தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 39558—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, ஆத்தங்கரைப்பட்டி தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சி, ஆத்தங்கரைப்பட்டி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளிக்கு போதுமான மாணவர்கள் வருகை இல்லாததால் கூடுதல் கட்டடம் கட்ட 2003-2004 ஆம் நிதியாண்டில் இயலாது.

**84—**

## திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 41110—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் திருமண மண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறையில் திருமண மண்டபம் கட்டுவதற்கு போதிய இடவசதி உள்ளது. ஆனால் பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை. (ஆ) வினா எழவில்லை.

**85—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 41369—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை பேரூராட்சி, பாரதிபுரத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைக் களைய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சிக்குட்பட்ட பாரதிபுரம் பகுதிக்கு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 5 ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமும் அப்பகுதி மக்கள் தண்ணீர் எடுத்து பயன்படுத்துகின்றனர். பொன்விழா திட்டம் மூலம் பாரதிபுரத்திற்கு அருகில் எம்.ஜி.ஆர். நகரில் அமைக்கப்பட்டுள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் தற்போது பாரதிபுரத்திற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதிக்கு புதியதாக குடிநீர்த் திட்டம் அமைக்க திட்டம் எதுவும் இல்லை.

**86—**

## தொடக்கப் பள்ளியைச் செப்பனிடல்

**வினா எண் 43380—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், சாந்தம்பட்டி ஊராட்சி, கொல்லம்பட்டியிலுள்ள தொடக்கப் பள்ளியை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கொல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் ஏ.சி.சி. ஷீட் மேற்கூரையின் இரண்டு இடங்கள் உடைந்துள்ளன. சிறு பழுதுகளுடன் காணப்பட்டது. ரூ.1,500 மதிப்பீட்டிலுள்ள இப்பழுதுகளை ஊராட்சி நிதியில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**87—**

## மழைநீர் புகுவதைத் தடுக்க தடுப்புச் சுவர்

**வினா எண் 46019—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சேத்துமடை வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, மூவேந்தர் காலனியில் சில இடங்களில் மழை பெய்வதால் தாழ்வான பகுதிக்குள் மழைநீர் புகுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை மூவேந்தர் காலனி குட்டை பகுதி பொதுமக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட பகுதியாகும். குட்டை பகுதியில் தொழில்நுட்ப ரீதியாக தடுப்புச் சுவர் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

88—

## பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

**வினா எண் 48025—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, முடீஸ் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை முடீஸ் பேருந்து நிலையம் தனியார் தோட்ட நிறுவனமான 'தி பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் முடீஸ்' நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் மேற்படி நிறுவனத்தின் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடமில்லையாதலால் பேரூராட்சி மூலம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வழிவகை ஏதுமில்லை.

89—

## பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 48030—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேரூராட்சி மூலம் வேவர்லியில் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட வேவர்லி எஸ்டேட் பகுதியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஒன்று உள்ளது. இங்கு 50 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இவர்களுக்கு பழைய பள்ளிக்கூட கட்டடம் ஒன்று உள்ளது. கூடுதலாக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பில் இரண்டு அறைகள் கொண்ட பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது 15-6-2004 ஆம் தேதி முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது இப்பள்ளி மாணவர்களுக்கு போதுமானது.

90—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 48038—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அண்ணா நகர் சிலோன் காலனியில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை அண்ணா நகர், சிலோன் காலனியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக செல்லும் நடைபாதை ஓரங்களில் போதுமான அளவிற்கு தடுப்புச் சுவர்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. (ஆ) வினா எழவில்லை.

[2005 பிப்ரவரி 3

**91—**

### தடுப்புச் சுவர்

**வினா எண் 48039—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை காமராஜர் நகர் குடியிருப்பு பகுதிகளில் சரிவுகளை தடுக்க தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்கு உட்பட்ட இடங்கள் சரிவான இடங்களாகும். இப்பகுதி மலைப்பிரதேசமாக உள்ளதால் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் மேற்படி வீடுகள் ஒன்றன்பின் ஒன்றாக உள்ளன. எனவே, தனிநபர் வீடுகளுக்கு பேரூராட்சி நிதியிலிருந்து தடுப்புச் சுவர் கட்ட விதிமுறைகளின்படி வழிவகை இல்லை. (ஆ) வினா எழவில்லை.

**92—**

### மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

**வினா எண் 48304—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலாலசுந்தரம் ஊராட்சி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?



2005 பிப்ரவரி 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆலாலசுந்தரம் மேலக்காலனி ஆதிதிராவிடர் தெருவில் 2003-2004 ஆம் ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**93—**

### கழிவுநீர்க் குழாய் வசதி

**வினா எண் 48498—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பாண்டமங்கலம் பேரூராட்சி, 8-வது வார்டு வாங்கிலிகவுண்டர் வீடு முதல் தமிழ்மணி வீடு வரை கழிவுநீர்க் குழாய் வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கபிலர்மலை தொகுதி, பாண்டமங்கலம் பேரூராட்சி, 8-வது வார்டு வாங்கிலிகவுண்டர் வீடு முதல் தமிழ்மணி வீடுவரை கழிவுநீர்க் குழாய் வசதி செய்து கொடுக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. (ஆ) வினா எழவில்லை.

[2005 பிப்ரவரி 3

94—

## சாலை சீரமைத்தல்

**வினா எண் 49650—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாவட்டம், செங்குத்தாக உள்ள வால்பாறை ஈட்டியார் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட ஈட்டியார் சாலை தனியார் தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமானது. எனவே, பேரூராட்சி மூலம் இச்சாலையை சீரமைக்க இயலாது. (ஆ) வினா எழவில்லை.

95—

## சோடியம் ஆவி விளக்கு

**வினா எண் 49725—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை முடீஸ் உயர்நிலைப் பள்ளிக்கு முன்புறம் சோடியம் ஆவி விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வால்பாறை முடீஸ் உயர்நிலைப் பள்ளி என ஏதும் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

96—

## தெருவிளக்குகள் அமைத்தல்

**வினா எண் 49813—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை கவர்க்கல் எஸ்டேட் பகுதிகளுக்கு வில்லோனி டாப் டிவிஷன், லோயர் டிவிஷன் மற்றும் டாப்லைன் அருகே தெருவிளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை கவர்க்கல் எஸ்டேட் பகுதியில் 16 தெருவிளக்குகளும், வில்லோனி டாப் டிவிஷன் பகுதியில் 8 தெருவிளக்குகளும், லோயர் டிவிஷன் மற்றும் டாப்லைன் அருகே 7 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (ஆ) வினா எழவில்லை.

97—

## தெருவிளக்கு வசதி

**வினா எண் 50652—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை வெள்ளமலை எஸ்டேட்டில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தும் இதுவரையிலும் தெருவிளக்கு அமைக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) வால்பாறை பேரூராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2001-2002 ஆம் ஆண்டிற்கு 115 தெருவிளக்குகளுக்கு ரூ.6.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வெள்ளிமலை எஸ்டேட் பகுதிக்கு 5 தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

(ஆ) வினா எழவில்லை.

98—

## சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 51972—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சியில் ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியிலுள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை.

99—

## தொகுப்பு விடுகள் கட்டித் தருதல்

**வினா எண் 55330—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதி, முதுகுளத்தூர் ஒன்றியம், ஆதனக்குறிச்சி பஞ்சாயத்து, கிழவனேரி பகுதி பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆதனக்குறிச்சி ஊராட்சிக்கு 2003-2004 ஆம் ஆண்டு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர்களுக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் ஊராட்சிவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. எனவே, 2004-2005 ஆம் ஆண்டில் முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஆதனக்குறிச்சி ஊராட்சி, கிழவனேரி பகுதியில் பிற்படுத்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்ய இயலவில்லை.

100—

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 57544—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், கல்லக்காத்தான் தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கல்லக்காத்தான் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 56 மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். இப்பள்ளிக்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைக்கப்பட்டு பள்ளி இயங்கி வருகிறது. 56 மாணவ, மாணவிகளுக்கு இக்கட்டடம் போதுமானதாக உள்ளதால் கூடுதல் கட்டடம் ஏதும் கட்டித்தர அவசியம் ஏற்படவில்லை.

# மூன்றாவது பட்டியல்

1—

## பொறியாளர் பணியிடங்கள்

**வினா எண் 4825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையில் 2000-2001 ஆம் ஆண்டு வரை காலியாக உள்ள பொறியாளர்கள் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவற்றை நிரப்ப அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையில் 2000-2001 ஆம் ஆண்டு வரை காலியாக இருந்த பொறியாளர்கள் பணியிடங்கள் கீழ்வருமாறு:

| | | காலியிடங்கள் |
|---|---|---|
| கண்காணிப்புப் பொறியாளர்கள் | - | 2 எண்கள் |
| கோட்டப் பொறியாளர்கள் | - | 9 எண்கள் |
| உதவிக் கோட்டப் பொறியாளர்கள் | - | 48 எண்கள் |
| பொறியாளர் | - | 67 எண்கள் |

இது தொடர்பாக செயற்குறிப்பு அவ்வப்போது பெறப்பட்டு, பின்னர் அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

2—

## பாசன வசதி

**வினா எண் 13873—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜன அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த அஜ்ஜன அள்ளி கோடுபாய் பள்ளம் ஜமீன் ஏரியை மேம்படுத்தி பாசன வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அஜ்ஜன அள்ளி கிராமத்தில் கோடுபாய் பள்ளம் ஏரியை மேம்படுத்த ரூ.6.30 இலட்சத்திற்கு

அரசாணை (நிலை) எண் 191, பொதுப் பணித் துறை, நாள் 22-5-2003-ல் ஒப்புதல் வழங்கப்பெற்று பணி செயலாக்கப்பட்டு வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

**3—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 25282—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகமலை ஊராட்சியிலுள்ள வன்னியர் நகர் கிராமத்தில் நீண்ட காலமாக வீடு கட்டி வாழ்ந்து வரும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், நாகமலை ஊராட்சிக்குட்பட்ட வன்னியர் நகர் கிராம மக்களுக்கு, நாகமலை சர்வே எண் 1264/4-ல் 2.14.0 ஹெக்டேரில் வீடு கட்டி வசித்து வந்த 58 நபர்களுக்கு, கிராம நத்தமாக நில மாறுதல் செய்து, வீட்டுமனைப் பட்டா பதிவேடு எண் 1609 முதல் 1665/1410-ன்படி ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**4—**

## வாய்க்காலைத் தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 28415—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சியில் வேடன் வாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கதிராமங்கலம் ஊராட்சியில் வேடன் வாய்க்கால் கடந்த ஆண்டு ஆகஸ்டு 2002-ல் மாண்புமிகு முதலமைச்சரின் விவசாய தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் தூர் வாரி ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

**5—**

## வாய்க்காலைத் தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம்

**வினா எண் 28421—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சி நாய்க்கர் குப்பம் சிங்காரவேல் வாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

*(ஆ)* ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஊராட்சி நாய்க்கர் குப்பம் சிங்காரவேல் வாய்க்கால் மற்றும் வடிகால் கடந்த 2003-2004 ஆம் ஆண்டில் பராமரிப்பு நிதியின்கீழ் தூர் வாரப்பட்டுள்ளது.

6—

## குளங்களைத் தூர் வாரும் திட்டம்

**வினா எண் 31443—திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள குளங்களை தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* ஓசூர் வட்டத்தில் மட்டும் நான்கு ஏரிகளைத் தூர் வாரி நவீனப்படுத்த அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் அரசு ஆணை எண் 191, பொதுப்பணி, நீர்வள ஆதாரம் (2) துறை, நாள் 22-5-2003-ன்படி ஓசூர் வட்டத்திலுள்ள சந்திராம்பிகை ஏரி ரூ.7.50 இலட்ச மதிப்பிலும், குப்பம்மாள் ஏரி ரூ.9.70 இலட்ச மதிப்பிலும், ஒன்னம்மாள் ஏரி ரூ.9.70 இலட்ச மதிப்பிலும், சித்தையா கவுண்டர் ஏரி ரூ.6.30 இலட்ச மதிப்பிலும் தூர் வாரி புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள ஏரிகளை தூர் வாரி புதுப்பிக்கும் திட்டம் வரும் ஆண்டுகளில் ஆய்வு செய்து நிதி ஒதுக்கீடு பெற்று பின்னர் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

## பாசனத்திற்கு ஏரி நீர் விடுதல்

**வினா எண் 31897—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த பெரிய ஏரியிலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த பெரிய ஏரியிலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்துவிடும் பணி அந்த ஏரியின் பாசனதாரர்கள் அடங்கிய நீர் உபயோகிப்பாளர் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தீர்த்தகிரி வலசை பெரிய ஏரிக்கு நீர் உபயோகிப்பாளர் சங்கம் பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்த ஏரியில் நீர் நிரம்பியவுடன் பாசனத்திற்குத் தேவையான நீரை நீர் உபயோகிப்பாளர் சங்க நிர்வாகிகள் மூலம் திறந்துவிட்டு பயன்படுத்திக் கொள்வார்கள். எனவே, இத்திட்டம் குறித்து அரசு மட்டத்தில் முடிவு எடுக்கும் நிலை எழாது.

8—

## வடிகால் வாய்க்காலை வெட்டும் பணி

**வினா எண் 32894—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி பரவக்கரை வடிகால் வாய்க்காலை வெட்டி சீர் செய்திட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் சீர்காழி

தொகுதி கொள்ளிடம் ஒன்றியம் வேட்டங்குடி ஊராட்சி பரவக்கரை வடிகால் வாய்க்காலை வெட்டும் பணி ஏப்ரல் 2003-ல் முடிவு பெற்றுள்ளது.

**9—**

### விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 34824—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த பள்ளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பள்ளத்தூர் கிராம புல எண் 1-ல் உள்ள 29.90.5 ஹெக்டேர் நிலம் கிராம கணக்குகளில் கல்லாங்குத்துயென வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இப்புலத்தில் 16 நபர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். இப்புலத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் வனத் துறையினரால் செடிகள் நட்டப்பட்டு, அவர்களது பராமரிப்பில் உள்ளன. வனத் துறையினருக்கு இப்புலம் ஒதுக்கப்பட்டு விட்டதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**10—**

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 39042—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, சல்லாகுளம் (சினிமா கொட்டகை) வாய்க்காலில் தூர் எடுத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, சல்லாகுளம் (சினிமா கொட்டகை) வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்கால் தற்போது தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

**11—**

### வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா எண் 39047—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, மனுசன்மேடு வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, மனுசன்மேடு வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது அவ்வாய்க்கால் மூலம்

பாசனம் தடையின்றி வருகிறது. எனவே, இவ்வாய்க்கால் தற்போது தூர் வார வேண்டியது இல்லை.

12—

### பாசன வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39052—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, மாதானம் கண்ணபிராண்டி பாசன வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சி, கண்ணபிராண்டி பாசனம் வாய்க்கால் தூர் எடுக்கும் பணி 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

13—

### வாய்க்காலைத் தூர் வாரி சீர்செய்தல்

**வினா எண் 39057—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் உள்ள சேந்தங்குடி அருகில் உள்ள ஆண்டி வாய்க்காலைத் தூர் வாரி சீர்செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் உள்ள சேந்தங்குடி அருகிலுள்ள ஆண்டி வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, தற்போது இவ்வாய்க்கால் தூர் வார வேண்டியதில்லை.

14—

### ரெகுலேட்டர் கட்டிக் கொடுத்தல்

**வினா எண் 39640—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருநகரி அருகே வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் Regulator கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது.

15—

### வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 39656—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், 23 ஆலங்காடு ஊராட்சி மகாராஜபுரம் 'ஊ' பிரிவு பாப்பான் வாய்க்கால் 2 கி.மீட்டர் தூரம் ஆழப்படுத்தி தூர் எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், 23 ஆலங்காடு ஊராட்சி மகாராஜபுரம் 'ஏ' பிரிவு பாப்பான் வாய்க்கால் 2 கி.மீட்டர் தூரம் ஆழப்படுத்தி தூர் எடுக்கும் பணி 2002-2003-ல் செய்யப்பட்டுள்ளது. தற்போது தூர் வாரத் தேவையில்லை.

**16—**

### தில்லன் வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா எண் 39657—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, 23 ஆலங்காடு ஊராட்சி, இளந்தோப்பு 'பி' பிரிவு 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள தில்லன் வாய்க்காலைத் தூர் எடுத்து ஆழப்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, 23 ஆலங்காடு ஊராட்சி இளந்தோப்பு 'பி' பிரிவு 3 கி.மீட்டர் தூரம் உள்ள தில்லன் வாய்க்காலைத் தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணிக்கு ரூ.50,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி 2004-2005 ஆம் ஆண்டில் பராமரிப்புத் தலைப்பின் நிதி ஆதாரங்களின் நிலை பொறுத்து செய்யப்படலாம்.



**17—**

### சுற்றுலா மாளிகை கட்டித்தரும் திட்டம்

**வினா எண் 39658—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் சுற்றுலா மாளிகை கட்டித்தரும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி நகரத்தில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**18—**

### சட்ரஸ் கட்டும் திட்டம்

**வினா எண் 39659—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குமாரக்குடி புதுமண்ணியாற்றிலிருந்து பிரியும் பொறை வாய்க்காலின் தலைப்பில் சட்ரஸ் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பொறை வாய்க்காலில் தற்போது போதுமான அளவு தண்ணீர் பாசனத்திற்கு வழங்கப்பட்டு வருவதால், பொறை வாய்க்கால் தலைப்பு புதுமண்ணியாற்றின் குறுக்கே சட்ரஸ் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

**19—**

## வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா எண் 39802—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, உத்திராபதி கோயில் ஒட்டங்காடு வெட்டி வாய்க்கால் தூர் எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, உத்திராபதி கோயில் ஒட்டங்காடு வெட்டி வாய்க்கால் புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது, பாசனம் தடையின்றி நடைபெற்று வருவதால் தற்போது இவ்வாய்க்கால் தூர் வார வேண்டியது இல்லை.

**20—**

## வாய்க்காலைத் தூர் எடுத்தல்

**வினா எண் 39804—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, அகரவட்டாரம் ஊராட்சி, அகரவட்டாரம் இண்டிப்பள்ளம் வாய்க்காலைத் தூர் எடுத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அகரவட்டாரம் இண்டிப்பள்ளம் வாய்க்கால், பிசிடி பிரிவு வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளன.

**21—**

## வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 39809—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, உமையாள்பதி ஊராட்சி, காப்பியக்குடி தலைப்பிலிருந்து உமையாள்பதி வரை சுமார் 7 கி.மீட்டர் வரையில் உள்ள வாய்க்காலைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, உமையாள்பதி ஊராட்சி, காப்பியக்குடி தலைப்பிலிருந்து உமையாள்பதி வரை பச்சைபெருமாள் நல்லூர் வாய்க்கால் தூர் எடுக்கும் பணி 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.

22—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 43558—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பயன்பாட்டிற்கு இல்லாத நத்தம் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு மற்றும் சுடுகாட்டுப் புறம்போக்குப் பகுதிகளில் நீண்ட காலமாகக் குடியிருக்கும் ஏழை மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் பயன்பாடற்ற, சுடுகாடு புறம்போக்கு மற்றும் ஓடைப் புறம்போக்கு ஏதும் இல்லை. ஓடை மற்றும் சுடுகாடு புறம்போக்கு ஆக்ரமணங்கள் ஆட்சேபனையானது என்பதால், இப்பகுதியில் வாழும் ஆக்ரமணதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியமில்லை. நத்தம் புறம்போக்குகளில் ஆக்ரமணம் செய்துள்ள அனுபவதாரர்கள், பட்டா கோரி விண்ணப்பிக்கும் நேர்வுகளில் உரிய விதிமுறைகளை அனுசரித்து அவ்வப்போது வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

23—

## வாய்க்கால் தூர் வாருதல்

**வினா எண் 43760—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பெருமாள் கோயில் தெரு, முனிகண்டான், நாய்க்கர் குளம், சொந்தசத்தி, சாலோடை, பல்லாக்கு மானியம், கொடக்கார மூலபள்ளம், தர்காஸ்சந்தத் துறை ஆகிய வாய்க்கால்களைத் தூர் எடுத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுமண்ணியாற்றில் முழு கொள்ளளவு நீர்வரத்து இருக்கும்போது முனிகண்டான் நாய்க்கர் குளம், சொந்தசத்தி, சாலோடை, பல்லாக்குமானியம், கொடக்காரமூலப்பள்ளம், தர்காஸ்சந்தத் துறை ஆகிய வாய்க்கால்கள் மூலம் பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்கால்களைத் தற்போது தூர் வார வேண்டியதில்லை.

24—

## வாய்க்காலைத் தூர் வாரிச் செப்பனிடுதல்

**வினா எண் 43772—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி வாய்க்காலில் கி.மீட்டர் 0 முதல் கி.மீட்டர் 14 வரை தூர் வாரிச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி வாய்க்காலில் 0 கி.மீட்டர் முதல் 14 கி.மீட்டர் வரை தூர் வாரிச் செப்பனிடும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

[2005 பிப்ரவரி 3

25—

## அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

**வினா எண் 45643—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் இயங்கிவரும் பொதுப் பணித் துறை கட்டடப் பராமரிப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் தாலுகா அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் பொதுப் பணித் துறை கட்டடப் பராமரிப்பு அலுவலகம் நல்ல நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

## வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 46158—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவிலில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவிலில் வருவாய் ஆய்வாளருக்குப் புதிய அலுவலகக் கட்டடம், வருங்காலத்தில் நிதிநிலை சீரடைந்தவுடன் கட்டப்படும். நிதிநிலை சம்பந்தப்பட்ட நேர்வுகளில் எவ்வளவு காலத்திற்குள் கட்டப்படும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

27—

## வாய்க்கால் கரைகளைப் பலப்படுத்தும் திட்டம்

**வினா எண் 52260—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, நஞ்சுண்டாபுரம் முதல் வெள்ளலூர் வரையிலான ராஜ வாய்க்காலைத் தூரெடுத்து ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பொதுப் பணித் துறையில் நொய்யல் பராமரிப்பில் உள்ள கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டத்தில் உள்ள சிங்காநல்லூர் அணைக்கட்டு ராஜவாய்க்காலைத் தூரெடுத்து ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடு (ரூ.20.00 லட்சம்) கிடைக்கப்பெற்றபின் பணி தொடங்கி முடிக்கப்படும்.

53-287—13

28—

## ஆய்வு மாளிகை கட்டும் திட்டம்

**வினா எண் 53531—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சியில் ஆய்வு மாளிகை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி அருகே உள்ள திருமுல்லைவாசல் ஊராட்சியில் ஆய்வு மாளிகை கட்ட திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. (ஆ) வினா எழாது.

29—

## நடைபாதை அமைத்தல்

**வினா எண் 59364—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசினர் பள்ளி மாணவியர் விடுதி பின்புறம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசினர் பள்ளி மாணவியர் விடுதி பின்புறம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடைபாதை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.





30—

## நியாய விலைக் கடைகளுக்குப் பண்டங்கள் வழங்குதல்

**வினா எண் 20195—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி முழுமைக்கான நியாய விலைக் கடைகளுக்கான பண்டங்களை கொங்கணாபுரத்திலிருந்து டி.சி.எம்.எஸ். மூலம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், சேலம் மாவட்டத்திலுள்ள தனது கொங்கணாபுரம் கிளையின் (டி.சி.எம்.எஸ்.) மூலம் சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வந்தது. சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் விற்பனையை உயர்த்தி லாபம் ஈட்டும் பொருட்டு, சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டங்களில் செயல்படும் 185 நியாய விலைக் கடைகளுக்கான முதன்மைச் சங்கப் பணியினை திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திடமிருந்து சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு 1-2-2004 முதல் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டது. இதன்படி, சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டங்களில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் மூலமே அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு செய்து வழங்கப்பட்டு வருகின்றன.

**31—**

## மண்ணெண்ணெய் வழங்கு நிலையம்

**வினா எண் 26881—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் புதிதாக மண்ணெண்ணெய் விநியோகிக்கும் கடை (பங்க்) தமிழகத்தில் எத்தனை புதிதாகத் திறக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பாக எட்டு மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், கூட்டுறவுச் சங்கங்கள் சார்பாக பத்து மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும், ஆக மொத்தம் 18 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தமிழ்நாட்டில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

**32—**

## கூட்டுறவு வேளாண்மை வங்கிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 38762—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து குப்பணாம்பட்டி கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, அரசு சொந்தக் கட்டடம் கட்டித்தர முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** இல்லை. குப்பணாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 23-4-1969-ல் தொடங்கப்பட்டதாகும். இதற்கென சொந்த காலிமனை ஏதும் இல்லை. உறுப்பினர் அளவில் கடன் வசூல் இல்லாத நிலையில், வங்கி செயலிழந்துள்ளது. மேலும், கடந்த ஆறு ஆண்டுகளாக தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி, 2003-2004 ஆம் ஆண்டு முடிவில் தொகுப்பு நஷ்டம் உத்தேசமாக ரூ.89.74 இலட்சமாக உள்ளது.



மேலும், இவ்வங்கியில் ரூ.24.26 இலட்சம் அளவிற்கு நிதி சமமின்மையும், ரூ.26.03 இலட்சம் அளவிற்கு ஆதாரக் குறைவும் உள்ளது. இந்நிலையில் மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து தொடர்ந்து கடன் பெறவும் வாய்ப்புகள் இல்லை. எனவே, வங்கியின் நிதிநிலை வலுவாக இல்லாத நிலையில் புதிதாக காலிமனை வாங்கி, புதிய கட்டடம் கட்டுவதற்கு வழிவகையில்லை. மேலும், அரசு அளவில் வங்கிக்கு புதிய காலிமனை மற்றும் புதிய கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதுமில்லை.

**33—**

## குறுகிய காலக் கடன் வழங்குதல்

**வினா எண் 51284—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு குறுகிய காலக் கடன் மற்றும் நடுத்தரக் காலக் கடன் வழங்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆம். ஏற்காடு தொகுதியில் 3 லேம்ப் வங்கிகள் உள்ளிட்ட 25 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பின்வருமாறு குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வழங்கியுள்ளன :

[2005 பிப்ரவரி 3

| ஆண்டு | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | குறுகிய காலக் கடன்கள் பயனாளிகள் தொகை | | நடுத்தரக் காலக் கடன்கள் பயனாளிகள் தொகை | |
| 2000-2001 | 1862 | 226.01 | 89 | 12.26 |
| 2001-2002 | 1891 | 289.87 | 60 | 8.22 |
| 2002-2003 | 2048 | 221.51 | 52 | 8.99 |
| 2003-2004 | 1127 | 113.70 | 296 | 39.17 |

34—

## சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

**வினா எண் 51923—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய மாநில அரசுகள் கொள்முதல் செய்ய உணவு தானியங்களுக்கு சேமிப்புக் கிடங்கு கட்டடங்களை சீர்காழி தொகுதியில் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) சீர்காழிக்கு அருகில் (2.5 கிலோ மீட்டர் தொலைவில்) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மாயவரம் சேமிப்புக் கிடங்கு உள்ளது. அதன் கொள்ளளவு 17,400 மெட்ரிக் டன். சீர்காழி நகருக்கு அருகில் உள்ள எருக்கூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்த சேமிப்புக் கிடங்கு கட்டடங்கள் 14,100 மெட்ரிக் டன் கொள்ளளவில் உள்ளன. எனவே, சீர்காழி தொகுதியில் புதிதாக சேமிப்புக் கிடங்கு கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை. (ஆ) வினா எழவில்லை.



2005 பிப்ரவரி 3]

35—

## கூட்டுறவு வங்கிக்கு புதிதாகக் கட்டடம்

**வினா எண் 53547—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியிலுள்ள ஆதனக்குறிச்சி கூட்டுறவு வங்கிக்கு புதிதாக கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆம். ஆதனக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மாதம் ரூ.450/-க்கு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி வங்கிக்கு உரிய மனை, பாதுகாப்பு இல்லாத இடத்தில் உள்ளது. எனவே, தற்சமயம் ஆண்டிமடம் தொகுதியிலுள்ள ஆதனக்குறிச்சி கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

36—

## இடைத்தரகர்கள்

**வினா எண் 54035—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் பொருட்களை வியாபாரிகளுக்கு விற்கும்போது இடைத்தரகர்கள் இல்லாமல் விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பொருட்களை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும்பொழுது இடைத்தரகர்கள் இல்லாமலேயே விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், அதன் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்த வேளாண்மை விளைபொருட்களை நுகர்வோர்களுக்கும், முகவர்களுக்கும் (ஏஜெண்ட்டுகள்) விற்பனை செய்கிறது. அவ்வாறு வியாபாரிகளுக்கும், முகவர்களுக்கும் விற்பனை செய்யும்பொழுது இடைத்தரகர்கள் இன்றியே இவ்வித விற்பனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வேளாண் பெருமக்களின் உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை மூலமாக உறுப்பினர்கள் பயன் பெறத்தக்க வகையில் ஏல விற்பனை மூலம் வியாபாரிகளுக்கும் / முகவர்களுக்கும் விற்பனை செய்து சேவைக் கட்டணம் பெறுகிறது. இவ்வித விற்பனையிலும் இடைத்தரகர்களின்றியே விற்பனை செய்யப்படுகின்றது.

**37—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 54304—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், 248 ஒழலூர் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டாரத்தில் உள்ள ஒழலூர் கிராமத்தில், ஒழலூர் கூட்டுறவு நியாய விலைக் கடை 682 குடும்ப அட்டைதாரர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு அரசின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான (எஸ்.ஜி.ஆர்.ஒய்.) வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைக்கென கட்டடம் அனுமதிக்கப்பட்டு, கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**38—**

## குளங்கள் தூர் வாருதல்

**வினா எண் 47855—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அருள்மிகு திருத்தாலமுடையார் கோயில், அருள்மிகு சட்டநாதசுவாமி கோயில் ஆகிய குளங்களைத் தூர்வாரி நீர் நிரப்பித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அருள்மிகு திருத்தாலமுடையார் திருக்கோயிலுக்கு எதிரே 300 x 200 அடி அளவிலான திருக்குளம் உள்ளது. இத்திருக்குளத்தைத் தூர் வாரி செப்பனிட திருக்கோயிலில் போதிய நிதிவசதியில்லாததால் பரம்பரை அறங்காவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, உபயதாரர் மூலம் திருக்குளம் தூர்வாரி செப்பனிடப்பட்டுள்ளது.

[2005 பிப்ரவரி 3

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள அருள்மிகு சட்டநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் சுமார் ஒரு ஏக்கர் பரப்பில் திருக்கோயிலின் உள்ளே அமைந்துள்ளது. இதன் நாற்புறமும் சுற்றுச்சுவர்கள் மற்றும் படிக்கட்டுகள் கட்டப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளது. இத்திருக்குளம் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு, நீர் நிரப்பப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால், இதனைத் தற்போது தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

39—

## சத்துணவு அமைப்பாளர் பணியிடம்

**வினா எண் 20924—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் பஞ்சாயத்தில் வி. கோவில்பட்டி, மம்பட்டிபட்டி, கண்ணனூர் பஞ்சாயத்தில் கலுங்குப்பட்டி, வேப்பனூத்து பஞ்சாயத்தில் ஓணாப்பட்டி ஆகிய பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர் பணியிடம் காலியாகவுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பணியிடம் நிரப்பப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட வி. கோவில்பட்டி, மம்பட்டிபட்டி, கலுங்குப்பட்டி, ஓணாப்பட்டி ஆகிய பள்ளிகளில் காலியாகவுள்ள சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3-ல் உள்ள உபரிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுவிட்டன.



2005 பிப்ரவரி 3]

40—

## முதியோர் ஓய்வூதியம்

**வினா எண் 43732—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியம் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) 21513 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.
(ஆ) ரூ.4,69,07,572/- வழங்கப்பட்டுள்ளது.

41—

## சத்துணவுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 53373—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர் 12-வது பகுதி பிள்ளையார் நகரிலுள்ள இரண்டு சத்துணவுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** சேலம் மாநகர் 12-வது பகுதி பிள்ளையார் நகரில் உள்ள இரண்டு சத்துணவுக் கூடங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாநகராட்சி மற்றும் அரசு நிலங்கள் எதுவும் இல்லை.

42—

## சத்துணவுக் கூடத்திற்குப் பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 58235—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள பன்னிமேடு 2 டிவிசன் சத்துணவுக் கூடத்தில் சமையலர் (cook) இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சமையலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) தெரியும். (ஆ) மேற்படி பள்ளியில் உள்ள அமைப்பாளர், சமையலர், உதவியாளர் ஆகியோர் மையத்தில் 6-2-2004 அன்று உணவில் நச்சுத்தன்மை ஏற்பட்டதன் காரணமாக தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். புதிய பணியாளர்கள் நியமனம் செய்ய தடை ஆணை உள்ளதால், அருகிலுள்ள சத்துணவு மைய பணியாளர்களுக்குக் கூடுதல் பொறுப்பு வழங்கி, எவ்விதத் தடையுமின்றி மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

43—

## தொழில்களின் விவரம்

**வினா எண் 27847—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் வழங்கப்பட்ட மானியத் தொகை மற்றும் தொடங்கப்பட்ட தொழில்களின் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** 2001-2002 ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மூலதன மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.316.63 இலட்சம். இதன் மூலம் தொடங்கப்பட்டு பயனடைந்த சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 101 ஆகும்.

மேலும், 2001-2002 ஆம் ஆண்டில் மூலதன மானியமாக வழங்கப்பட்டது தவிர மற்ற மானியங்கள் மூலம் வழங்கப்பட்ட தொகை, பயனடைந்த நிறுவனங்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:

| விவரம். | வழங்கப்பட்ட தொகை ரூபாய் இலட்சத்தில். | பயனடைந்த நிறுவனங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. மின் மானியம் | 301.32 | 1681 |
| 2. மின்னாக்கி மானியம் | 21.16 | 41 |

44—

## சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா எண் 40199—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் பிரதமரின் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இவ்வாண்டு எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டது என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதியில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் பயன் பெற்றவர்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ.எண் | நிதியாண்டு | பயன் பெற்றவர்கள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2000-2001 | 90 | 38.90 |
| 2 | 2001-2002 | 106 | 46.10 |
| 3 | 2002-2003 | 110 | 43.40 |
| 4 | 2003-2004 (31-3-2004 வரை) | 55 | 17.60 |

**45—**

## பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா எண் 40231—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) 2002-2003-ல் எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2000-2001 மற்றும் 2002-2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில்



பயனடைந்தோர் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட நிதியுதவி விவரம் பின்வருமாறு:—

| நிதியாண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட நிதியுதவி (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|
| 2000-2001 | 685 | 291.40 |
| 2001-2002 | 762 | 289.70 |

இதனைத் தொடர்ந்து 2002-2003 மற்றும் 2003-2004-ல் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் மற்றும் வழங்கப்பட்ட நிதி விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 2002-2003 | 740 | 250.90 |
| 2003-2004 (31-10-2004 வரை) | 777 | 246.30 |

(ஆ) 2002-2003-க்கான ஒதுக்கீடு: எண்ணிக்கை 840 ஆகும்.

**46—**

## சிறுதொழிலில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 60440—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊதுபத்தியை உற்பத்தி செய்யும் சிறு தொழிலில் பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மகளிருக்கு வேலைவாய்ப்பை அளிப்பதற்கும் சுய தொழில் தொடங்கவும், தமிழ்நாடு அரசு, 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோர்

பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 25,000 மகளிருக்கு பயிற்சியளிக்க தொழில் வணிகத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது. ஊதுபத்தி உற்பத்தி செய்யும் சிறு தொழிலில் பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆர்வமுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வங்கிகளுக்கு வங்கிக் கடனுதவி செய்ய பரிந்துரைக்கப்படுகிறார்கள். கடனுதவி ஒப்பளிப்பு ஆணை பெறப்பட்டவுடன் அந்த மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு வங்கிகளால் கடன் பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே, ஊதுபத்தி செய்யும் தொழிலில் ஆர்வமுள்ள மகளிர் இத்திட்டங்களின் மூலம் பயன் பெறலாம்.

**47—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 49517—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி மற்றும் தர்ணஸ் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி கிராமத்தில் வசித்து வரும் 79 ஆதிதிராவிடர் உபரிக் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கிட தகுதியான அரசு புறம்போக்கு அல்லது தனியார் புஞ்சை நிலம் ஏதும் இல்லை என்பதால், நஞ்சை நிலம் கையகம் செய்ய கருதப்பட்டுள்ளது. சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம் தர்ணஸ் கிராமத்தில் வசித்து வரும் ஆதிதிராவிடர் உபரி குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட 33 புதுப்பட்டினம் கிராமத்தில் புல எண் 218/3ஏ1 (மற்றும்) 218/3சி ஆகியவற்றில் 0.39.0 ஏர்ஸ் புஞ்சை நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.





**48—**

## கறவை மாடு வழங்குதல்

**வினா எண் 59721—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர்களுக்கு கறவை மாடு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து கறவை மாடுகள் வாங்க கடனுதவி கோரி விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. 2004-2005 ஆம் ஆண்டில் முறையான விண்ணப்பங்கள் உரிய சான்றிதழ்களுடன் பெறப்பட்டவுடன் தகுதியான விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு கடனுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**49—**

## மாணவர் விடுதிக்குப் புதிய விடுதிக் கட்டடம்

**வினா எண் 32613—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரம் ஊராட்சி, கோமாபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குப் புதிய விடுதிக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரம் ஊராட்சி, கோமாபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி எதுவும் இயங்கவில்லை. எனவே, கட்டடம் கட்டும் வினா எழவில்லை. எனினும் கோமாபுரத்தில் இயங்கும் சீர்மரபினர் மாணவர் விடுதிக்கு 2004-2005 ஆம் ஆண்டில் கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**50—**

## நடமாடும் சலவை நிலையம்

**வினா எண் 41543—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முடி திருத்தகம், சலவை நிலையம், நடமாடும் சலவை நிலையம் அமைக்க அரசு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் பயனடைந்தோர் எவ்வளவு? அவர்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் மிகப் பிற்படுத்தப்பட்டோரிடமிருந்து முடி திருத்தகம், சலவை நிலையம், நடமாடும் சலவை நிலையம் போன்ற சுய தொழில் புரிய கடனுதவி கோரி 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே, அவ்வாண்டுகளில் பயனாளிகள் எவருமில்லை.





**51—**

## ஊர்ப்புற நூலகம்

**வினா எண் 16625—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்திலுள்ள பகுதிநேர நூலகங்களை கிளை நூலகங்கள் அல்லது ஊர்ப்புற நூலகங்களாக உருவாக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகத்தில் கீழ்க்காணும் இரு மாவட்டங்களைச் சேர்ந்த 4 பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன:

| வ. எண் | மாவட்டம். | தரம் உயர்த்தப்பட்ட நாள். | ஊர்ப்புற நூலகத்தின் பெயர். |
|---|---|---|---|
| 1 | மதுரை | 12-6-2001 | திருவள்ளுவர் நகர் |
| 2 | தேனி | 24-5-2001 | வருசநாடு |
| 3 | தேனி | 24-5-2001 | கெ. கெல்லுப்பட்டி |
| 4 | தேனி | 24-5-2001 | வடபுதுப்பட்டி |

மேற்படி இரு மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் 2001-2002-ம் ஆண்டில் பகுதிநேர நூலகங்கள் ஏதும் ஊர்ப்புற நூலகமாக மாற்றம் செய்யப்படவில்லை. மேலும், அவ்வாண்டில் கிளை நூலகங்கள் ஏதும் திறக்கப்படவில்லை. 2003-2004-ம் ஆண்டில் 867 ஊர்களிலும்

ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டு நூலகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**52—**

## கணினிப் பயிற்சி

**வினா எண் 22197—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தொடக்கப் பள்ளி முதல் கணினிப் பயிற்சி கொண்டுவர அரசு பரிசீலிக்குமா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தொடக்கப்பள்ளி முதல் கணினி பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை. எனினும் அனைவருக்கும் கல்வி (எஸ்எஸ்ஏ) திட்டத்தின்கீழ் அரசு மற்றும் ஊராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8-ம் வகுப்பு மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்கள் மூலம் கணினி பயிற்சி அளிக்கப்படுகிறது.

**53—**

## ஊர்ப்புற நூலகம் அமைத்தல்

**வினா எண் 36692—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்மாபுரம் ஒன்றியம், முதனை பஞ்சாயத்துக்கு நூலக வசதி இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நூலகம் அமைக்க எப்போது பணி தொடங்கப்படும் ?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியம், முதனை பஞ்சாயத்தில் 5-11-2003 முதல் ஊர்ப்புற நூலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.*

**54—**

## ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

**வினா எண் 39316—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட அளவில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் இரண்டாம் இடங்கள் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** இல்லை.

**55—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 41437—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், 10 கிள்ளியூர் கிராமத்தில் இந்நிதியாண்டில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா ?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *குத்தாலம் தொகுதி, [illegible] வாசல் ஒன்றியம், 10 கிள்ளியூர் கிராமத்தின் மக்கள் தொகை 861. தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948—ன்படி 5000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் / கிளை நூலகமும் அமைக்க வழிவகை உள்ளது. 861 மக்கள் தொகை கொண்ட 10 கிள்ளியூர் கிராமத்தில் அவ்வூர் பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்து தரும் பட்சத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க இயலும் :*

*1. வாடகையற்ற இலவசக் கட்டடம்.*

*2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.*

*3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.*

*4. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.*

*5. ரூ. 2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.*

**56—**

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 42259—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கற்பட்டு தொகுதி, வாயலூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, வாயலூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 135, பள்ளிக் கல்வி, நாள்: 18-10-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

**57—**

### தொடக்கப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 42307—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பட்ரவாக்கம் கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியினை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* ஆம். *(ஆ)* செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பட்ரவாக்கம் கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளி அரசாணை (நிலை) எண் 119, பள்ளிக் கல்வி, நாள் 1-10-2003-ன்படி நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**58—**

## மழைநீர் சேமிப்பு

**வினா எண் 43742—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியருக்கு மழைநீர் சேமிப்பு அவசியம் குறித்து விளக்கி பாடம் நடததும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* 2003-2004 ஆம் கல்வி ஆண்டு முதல் மழைநீர் சேகரிப்புக் குறித்து பாடம் 9 ஆம் வகுப்பில் ஏற்படுத்தப்பட்டு போதிக்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளி மாணவர்களைக் கொண்டு பொது மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**59—**

## நூலகங்களில் கணினி வசதி

**வினா எண் 46115—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்திலுள்ள அனைத்து நூலகத்திற்கும் கணினி அமைக்கும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* கன்னிமாரா பொது நூலகம் மற்றும் 17 மாவட்ட மைய நூலகங்களில் கணிப்பொறி அமைக்கப்பட்டு நூலகப் பணிகள் கணினி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மீதமுள்ள 12 மாவட்ட மைய நூலகங்களிலும் கணிப்பொறி அமைத்து கணினி மூலம் நூலகப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர கிளை நூலகங்கள், பகுதி நேர நூலகங்கள் மற்றும் ஊர்ப்புற நூலகங்களில் கணினி வசதி அமைப்பது நடைமுறையில் சாத்தியமற்றது என்பதால் இதற்காக செயல் திட்டம் ஏதும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை

**60—**

## தொடக்கப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 46674—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, உமையாள்பதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ)* சீர்காழி தொகுதி, உமையாள்பதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 73 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 2 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியிடத்தின் பரப்பு 1160 சதுர அடி. 100 மாணவர்களுக்குப் போதுமான இடவசதி உள்ளது. எனவே, தற்சமயம் கூடுதல் கட்டட வசதி தேவையில்லை என கருதப்படுகிறது.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

61—

## கல்லூரிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 47506—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை அரசு கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** உடுமலைப்பேட்டை அரசு கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

62—

## தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 51046—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, நல்லமுடி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, நல்லமுடி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி



அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு தொடங்கிட கோயம்புத்தூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு தக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

63—

## விரிவுரையாளர் பணியிடம்

**வினா எண் 51055—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரியில் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடத்தை பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தற்போது சார்ந்த பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றப்பட்டுள்ளதால், விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்புவது குறித்து அந்தந்த பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுக்கும். இருப்பினும், மாணவர்கள் நலன் கருதி காலிப் பணியிடங்களை தாமதமின்றி நிரப்பும் நோக்குடன் அது குறித்த நிலவரத்தை அரசு ஆய்வு செய்து 2004-2005 ஆம் கல்வியாண்டில் 1250 கௌரவ விரிவுரையாளர்களை பணியமர்த்திக் கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் மொத்தம் 54 கௌரவ விரிவுரையாளர்களை மாணவர்களின் நலன் கருதி பணியமர்த்திக்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

[2005 பிப்ரவரி 3

| வ. எண் | கோவை மாவட்டத்தில் உள்ள அரசு கல்லூரியின் பெயர். | கௌரவ விரிவுரையாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | அரசு கலைக் கல்லூரி, கோவை | 6 |
| 2 | கல்வியியல் கல்லூரி, கோவை | 4 |
| 3 | எல்.ஆர்.ஜி. அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் | 11 |
| 4 | சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் | 15 |
| 5 | அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை | 15 |
| | மொத்தம் | 51 |

ஆனால், தகுதிவாய்ந்த நபர்கள் கிடைக்காததால், மொத்தம் உள்ள 54 கௌரவ விரிவுரையாளர் பணியிடங்களில், 47 கௌரவ விரிவுரையாளர்கள் மட்டும் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

64—

## புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்குதல்

**வினா எண் 52660—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் புதிய ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2005 பிப்ரவரி 3]

65—

## கல்லூரிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 53132—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, நாகம்பட்டி மனோ கல்லூரிக்கு, புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 20.00 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

66—

## நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 55187—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி, ஆலஞ்சேரியில் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மருதங்குடி ஊராட்சி ஆலஞ்சேரியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த போதிய மாணவர்கள் இல்லை. ஊட்டுப் பள்ளிகளிலும் போதிய மாணவர்கள் இல்லை. எனவே, விதிகளின்படி இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலாது. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**67—**

## இட ஒதுக்கீடு

**வினா எண் 59368—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாநகரில் உள்ள நிகர்நிலை பல்கலைக்கழகம் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கு ஒதுக்க வேண்டிய இட ஒதுக்கீடுகளை கடந்த 5 ஆண்டுகளாக ஒதுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அவ்வொதுக்கீடுகளை ஒதுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) நிகர்நிலை பல்கலைக்கழகமான அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கு அரசு விதிகளின்படி ஒவ்வொரு ஆண்டும் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. போதிய அளவில் மேற்படி மாணவிகள் சேராதபொழுது ஏற்படும் காலியிடங்கள், பல்கலைக்கழக மானியக்*



*குழுவின் விதிமுறைகள் பின்பற்றப்பட்டு பிற்படுத்தப்பட்டவருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கும் அளிக்கப்படுகின்றன.*

**68—**

## மீனவர்களுக்கு இலவச விடுகள்

**வினா எண் 61575—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, சிங்கவனம், நீர்விளங்குளம், நிலையூர் மற்றும் கொடிவயல் கிராமங்களில் வசிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதி, சிங்கவனம், நீர்விளங்குளம், நிலையூர் மற்றும் கொடிவயல் கிராமங்களில் வசிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு என தனியாக இலவச வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

## மீனவர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 61584—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, ஆர். புதுப்பட்டினம், முத்துக்குடா, ஜெகதாப்பட்டினம் மற்றும் கோபாலப்பட்டினம் முதலிய இடங்களிலுள்ள மீனவர் குடியிருப்புகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி தொகுதி, ஆர். புதுப்பட்டினம், முத்துக்குடா, ஜெகதாப்பட்டினம் மற்றும் கோபாலப்பட்டினம் முதலிய இடங்களிலுள்ள

[2005 பிப்ரவரி 3

மீனவர் குடியிருப்புகளை பழுதுபார்த்து தரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், அரசு இலவசமாக கட்டிக் கொடுக்கும் வீடுகளில் ஏற்படும் பழுதுகளை வீட்டின் பயனாளிகளே தமது சொந்தச் செலவில் சரி செய்துகொள்ள வேண்டும்.

**70—**

## சமுதாயக் கூடத்தைப் பழுதுப்பார்த்து சீரமைத்தல்

**வினா எண் 62408—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மடவாமேடு மீனவர் கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடத்தை பழுது பார்க்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:** சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மடவாமேடு மீனவர் கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடத்தை பழுது பார்க்கும் திட்டம் மீன் துறையிடம் தற்போது ஏதும் இல்லை. சமூக நலக் கூடங்களில் ஏற்படும் பழுதுகளை சம்பந்தப்பட்ட மீனவ கூட்டுறவுச் சங்கம் தனது சொந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு சரி செய்துகொள்ள வேண்டும்.

**71—**

## சுற்றுலாத் தங்கும் விடுதி கட்டுதல்

**வினா எண் 39711—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சி, திருவாலி பெரிய ஏரியின் உட்புறமாக சுற்றுலாத் தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சி, திருவாலி பெரிய ஏரியின் உட்புறமாக சுற்றுலாத் தங்கும் விடுதி கட்டுவது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**72—**

## குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா எண் 11826—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேரன்மகாதேவி பேரூராட்சி ஆதித்தனார் நகரில் பொது குடிநீர் குழாய் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** ஆதித்தனார் நகரில் 23 வீடுகள் உள்ளன. 96 நபர்கள் வசித்து வருகிறார்கள். பேரூராட்சி தென்பகுதி தொட்டியில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு தனி பைப்லைன் பதிக்கப்பட்டு 2002-2003 ஆம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் இருந்து ரூ. 50,000/- மதிப்பீட்டில் 3 அடி பைப்லைன் நீட்டிப்பு செய்து 2 பொது நல்லிகள் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

**73—**

## சோடியம் மின்விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 16396—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட 14-வது வார்டு கீழ்நந்தன்குளம் கிராமத்தில் குடிநீர்ப் பிரச்சனையை தீர்த்திடவும், சோடியம் மின்விளக்குகள் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திசையன்விளை பேரூராட்சி 14-வது வார்டு கீழ்நந்தன்குளம் கிராமத்தில் 51 குடியிருப்பு வீடுகள் உள்ளன. மக்கள் தொகை 210 ஆகும். தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் நடுநந்தன்குளம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பொது நல்லிகள் 4 எண்ணம் அமைக்கப்பட்டு இதன் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நபர் ஒருவருக்கு 50 லிட்டர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கீழ்நந்தன்குளம் கிராமத்தில் 4 அடி குழல் விளக்குகள் 10 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 2003-2004 ஆம் ஆண்டு 11-வது நிதிக்குழு மானியத் திட்டம் மூலம் 2 தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளன. எனவே, சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தி பராமரிக்கும் அளவுக்கு பேரூராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லை. எனவே, சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட வேண்டியது இல்லை.

**74—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 27040—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் பேரூராட்சியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கோபாலசமுத்திரம் பேரூராட்சி பகுதியில் 35 பொது குடிநீர் இணைப்புகளும், 638 வீட்டு குடிநீர் இணைப்புகளும் உள்ளன. மேற்குறிப்பிட்ட ஆற்று குடிநீர் தவிர கிணற்று குடிநீர் 6 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 80,000 லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒரு நாளைக்கு 3,55,000 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 35 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நடப்பாண்டில் ரூ. 60.00 இலட்சம் மதிப்பீட்டில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க பணி நடைபெற்று வருகிறது. இப்பணி இன்னும் 8 மாத காலத்திற்குள் நிறைவு பெற்றுவிடும். இப்பணி முடிவு பெற்றவுடன் தினமும் 4 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படும். பணிகள் முடிவு பெற்றதும் ஒரு தனி நபருக்கு ஒரு நாளைக்கு 70 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

**75—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 27274—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, ஆலாக்காடு பகுதி, தெக்கிதத்தியால் காட்டில் வசிக்கும் குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லையென்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அவர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஆலங்காடு குடியிருப்புக்கு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு 3/2003 முதல் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**76—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 29324—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், விளாங்காடு ஊராட்சி, விளாங்காடு ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் வசிக்கும் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், விளாங்காடு ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதிக்கு தற்போது குழாய் நீட்டிப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இப்பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக பொதுமக்கள் பங்களிப்புடன் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சிறுமின்விசை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**77—**

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 29342—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அச்சிறுப்பாக்கம் தொகுதி, சிறுநாவலூர் காலனி தெருவிற்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி அந்த மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ)* காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், சிறுநாவலூர் ஊராட்சி, சிறுநாவலூர் காலனி குடியிருப்பிற்கு தற்போது ஒரு கையிறைப்பான் மற்றும் குழாய் நீட்டிப்பின் மூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பிற்கு கூடுதல் குடிநீர் வழங்க பொதுமக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

**78—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 34903—திரு. டி. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நீலகிரி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறதா?

*(ஆ)* இவற்றில் வனப் பகுதிகளும் இடம் பெற்றுள்ளதா?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனினும் கூடலூர் ஒன்றியத்தைச் சார்ந்த (1) நந்தட்டி, (2) நாடுகாணி, (3) பாட்டவயல், (4) பந்தலூர்ஹட்டி, (5) கையுன்னி, (6) எருமாடு, (7) அய்யன்கொல்லி, (8) மாங்கோடு, (9) அம்பலமூலா, (10) நிலாக்கோட்டை, (11) தேவர்சோலா, (12) மார்த்தோமா நகர், (13) மசினகுடி ஆகிய குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஆ) வனப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில்லை. மேலும், இப்பகுதிகளுக்கு வனத் துறையின் மூலமும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

**79—**

## கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல்

**வினா எண் 36142—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட வரதராஜன் பேட்டை தென்னூர் வரை கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) திருச்சி மண்டலம், பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் தென்னூர், வரதராஜன் பேட்டை*



2005 பிப்ரவரி 3]

*ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களுக்கு பல்வேறு திட்டப் பணிகளின்கீழ் கழிவுநீர்க் கால்வாய் கட்டப்பட்டுள்ளது.*

**80—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 36459—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி 18-வது வார்டு பகுதிக்குட்பட்ட நெசவாளர் காலனி கட்டளை குடியிருப்பு, கோரியூர் கலந்தபினை மேல்பகுதி ஆகிய இடங்களில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) பணகுடி பேரூராட்சி 18-வது வார்டு நெசவாளர் காலனி, கட்டளை குடியிருப்பு பகுதி கோரியூர், கலந்தபினை பகுதியில் சுமார் 300 வீடுகள் உள்ளன. சுமார் 1,200 மக்கள் தொகை கொண்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டு பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மூலம் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பொது நல்லிகள் மூலம் தினசரி ஒரு நபருக்கு 30 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.*

*மேலும், 2001-2002 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 6 மினி பவர் பம்புகள் அமைக்கப்பட்டு அதன் மூலம் தினசரி ஒரு நபருக்கு 20 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 6 ஆழ்துளைக் கிணறு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**81—**

## குடிநீர் வசதி

**வினா எண் 36478—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி வணிக வைசிய தெருவிற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி 13-வது வார்டு, வணிக வைசிய தெருவிற்கு 12-வது வார்டு மாணிக்க வாத்தியார் தெருவில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 2 பொது நல்லிகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வடிகால் வாரியம் மூலம் ஒரு பொது நல்லி அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**82—**

## ஆழ்குழாய்க் கிணறுகள்

**வினா எண் 6642—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் பேரூராட்சிகளில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் போதவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?



*(ஆ) மேலும், ஆழ்குழாய் அமைக்க அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் தற்போது 21 திறந்தவெளிக் கிணறுகளும், 16 ஆழ்துளைக் கிணறுகளும், 21 பவர் பம்புகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வறட்சி நிவாரணத் திட்டத்தில் தற்போது 3 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் நபர் ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 50 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கோட்டூர் பேரூராட்சியில் தற்போது 8 திறந்தவெளிக் கிணறுகளும், 8 ஆழ்துளைக் கிணறுகளும் 20 பவர் பம்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வறட்சி நிவாரணத் திட்டத்தில் 3 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. நபர் ஒருவருக்கு நாள்தோறும் 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு போதுமான குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் பேரூராட்சிக்குப் போதுமான ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு இப்பேரூராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை.

**83—**

## திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 39174—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரம் பேரூராட்சி 2-வது வார்டு விளாத்திக்குளம் சாலையில் திண்காரை (சிமெண்ட்) சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

**(ஆ)** ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரம் பேரூராட்சி 2-வது வார்டு விளாத்திக்குளம் சாலையில் சிமெண்ட் சாலை அமைக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**84—**

## பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 40711—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்திட எந்தத் திட்டத்திலும் ஒதுக்கீடு இல்லை என்பதால் சுற்றுச் சுவர் அமைத்துத் தர இயலாது.

**85—**

## குடிநீர் வசதி

**வினா எண் 41365—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை பேரூராட்சியிலுள்ள 7-வது வார்டுக்கு குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை பேரூராட்சி 7வது வார்டு பகுதிக்கு அங்குள்ள 8 ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி மூலமாகவும் தனியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (ஆ) எனவே, இப்பகுதி மக்களுக்குப் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இப்பகுதிக்கென கூடுதலாக குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டிய தேவை எதுவும் எழவில்லை. கூடுதலாக குடிநீர் வழங்க எவ்விதத் திட்டமும் பரிசீலனையில் இல்லை.

**86—**

## புளோரைடு திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகள்

**வினா எண் 43342—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் தமிழக அரசின் புளோரைடு திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைகள் எத்தனை?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் தமிழக அரசின் புளோரைடு திட்டத்தில் கீழ்க்கண்ட ஒன்றியங்களில் குடிநீர்

வழங்கப்படுகிறது. எடப்பாடி ஒன்றியத்தில் 27 குடியிருப்புகளுக்கும், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 48 குடியிருப்புகளுக்கும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 16 குடியிருப்புகளுக்கும், சேலம் மாவட்ட நிர்வாகப் பொறியாளர் அவர்களால் திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. கொங்கணாபுரம் ஒன்றியத்தில் 11 குடியிருப்புகளுக்கும், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 23 குடியிருப்புகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரால் பராமரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

**87—**

## தார்ச் சாலை அமைக்க நிதி வசதி

**வினா எண் 44357—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 350 மீட்டர் தூர மேலசெட்டி தெருவிலும், 200 மீட்டர் தூர வடக்கு ஏரி மெஷின் தெருவிற்கும் தார்ச் சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 350 மீட்டர் தூர மேலசெட்டி தெருவிலும், 200 மீட்டர் தூர வடக்கு ஏரி மெஷின் தெருவிற்கும் தார்ச் சாலை அமைக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை.

**88—**

## தார்ச் சாலைகளை அமைத்தல்

**வினா எண் 44442—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சிக்குட்பட்ட நடுவிற்பட்டி கான்சாபுரம் மற்றும் 2-வது வார்டு பகுதியில் உள்ள தெருக்களில் தார்ச் சாலைகள் அமைக்கவும் மயான சாலைகளைச் செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சியில் மயான சாலை தற்போது அமைக்கப்பட்டுள்ளது. நடுவிற்பட்டி கான்சாபுரம் மற்றும் 2-வது வார்டு பகுதியில் தார்ச் சாலை அமைக்க பேரூராட்சியில் போதிய நிதி வசதியில்லை. (ஆ) வினா எழவில்லை.*

**89—**

## பாலாற்று குடிநீர் வழங்குதல்

**வினா எண் 44842—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டராம்பள்ளி தொகுதி, நாட்டராம்பள்ளி பேரூராட்சி பகுதிகளிலுள்ள ஏரிக்கோடி அருகிலும், தோலகவுண்டர் வட்டம், தாயப்ப கவுண்டர் தெரு, பங்களா மேடு ஆகிய கிராமங்களில் பாலாற்று குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) நாட்டராம்பள்ளி பேரூராட்சிப் பகுதிகளான ஏரிக்கோடி அருகில், தோலக்கவுண்டர் வட்டம்,*

சாயப்பட்டறைப்பட்டி தெரு, பங்களா தெரு ஆகிய கிராமங்களுக்கும் சேர்த்து குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு, தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. அதன்படி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது நிலவிவரும் வறட்சியின் காரணமாக ஆம்பலூர் ஆற்றில் இருந்து நாட்றாம்பள்ளி பேரூராட்சி போன்ற இதர பல கிராமங்களுக்கும் குடிநீர் கிடைப்பதில் தட்டுப்பாடு ஆகிவிட்டது. இருப்பினும் கிடைக்கின்ற குடிநீரை வைத்து மேற்படி பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது. பாலாற்று குடிநீர் மற்றும் உள்ளூரிலேயே கிடைக்கின்ற குடிநீரையும் சேர்த்து தற்போது குடிநீர் பகிர்ந்து வழங்கப்படுகிறது.

**90—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 46031—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை அண்ணா நகர் பகுதியில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட சேத்துமடை, அண்ணா நகர் பேரூராட்சியின் 14-வது வார்டு ஆகும். இப்பகுதியில் சுமார் 1500 பேர் வசித்து வருகிறார்கள். ஆனைமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 2-வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவற்றில் தனித்தனியாக 2 மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் 25 பொதுக் குழாய்கள் மூலம் தேவையான அளவில் சீராக வழங்கப்பட்டு வருகிறது.





**91—**

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 46032—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சோமந்துறை ஊராட்சியில் ஏற்கெனவே ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கோட்டூர்-ஆழியார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**92—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 47358—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சி, சேத்துமடை பழைய சர்க்கார் பகுதிக்கு சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை பழைய சர்க்கார் பகுதிக்கு செல்லும் பாதையானது ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சாலையிலிருந்து சுமார் 2.00 கி.மீ. நீளம் கொண்ட வண்டிப் பாதை ஆகும். இப்பாதை தற்போது பேரூராட்சி பராமரிப்பில் இல்லை. இச்சாலையை பேரூராட்சி பராமரிப்பில் ஏற்றுக்கொண்டு சீரமைக்கும்பட்சத்தில் ரூ.16.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. (ஆ) வினா எழவில்லை.

**93—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 47608—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 6-வது வார்டு காளீஸ்வரி மற்றும் 7-வது வார்டு தெற்கு மேட்டுத் தெரு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, 6-வது வார்டு காளீஸ்வரி மற்றும் 7-வது வார்டு தெற்கு மேட்டுத் தெரு சாலைகள் 1.00 கி.மீ. நீளமுள்ள மண் சாலைகளாகும். இவற்றை தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.8.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. (ஆ) வினா எழவில்லை.



**94—**

### திண்காரை சாலை அமைத்தல்

**வினா எண் 48514—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 3-வது வார்டு முத்து வீடு முதல் பிள்ளையார் கோவில் வரை திண்காரை சாலை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கபிலர்மலை தொகுதி, வேலூர் பேரூராட்சி, 3-வது வார்டு முத்து வீடு முதல் பிள்ளையார் கோவில் வரை 2003-2004 ஆம் ஆண்டு கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து ரூ.2.05 இலட்சம் ஒதுக்கீட்டில் சாலைப் பணி முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. (ஆ) வினா எழவில்லை.

**95—**

### குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி

**வினா எண் 51067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் பேரூராட்சி, 4-வது வார்டு திருவள்ளுவர் காலனி, தேங்காய்பாறை ரோடு, கோட்டூர் மலையாண்டிபட்டினம் பகுதிகளுக்கு குடிநீர், தெரு விளக்கு வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் காலனியில் 6 பொது குடிநீர் குழாய்களும், 1 சோடியம் ஆவி விளக்கும் மற்றும் 19 குழல் விளக்குகளும் உள்ளன. தேங்காய்பாறை ரோடு பகுதியில் 8 பொது குடிநீர் குழாய்களும், 1 சோடியம் ஆவி விளக்கும் மற்றும் 29 குழல் விளக்குகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மலையாண்டிபட்டினம் பகுதியில் 47 பொது குடிநீர் குழாய்களும், 200 சோடியம் ஆவி விளக்குகளும் மற்றும் 351 குழல் விளக்குகளும் பேரூராட்சியிலிருந்து அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (ஆ) கேள்வி எழவில்லை.

**96—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 51566—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் ஊராட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவண செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் ஊராட்சியில் 2003-2004 ஆம் நிதியாண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 14 தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.



**97—**

## தொகுப்பு விடுகளைச் சீரமைத்தல்

**வினா எண் 53938—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கதிராமங்கலம் ஊராட்சியில் மேலக்கொண்டத்தூர் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் தொகுப்பு வீடுகளை சீரமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய / மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**98—**

## உடற்பயிற்சி சாதனங்களை வழங்குதல்

**வினா எண் 41467—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை, நாட்றாம்பள்ளி, பச்சூர் கிராமங்களுக்கு உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** (அ) நாட்றாம்பள்ளி தொகுதி, புதுப்பேட்டை, நாட்றாம்பள்ளி, பச்சூர் கிராமங்களுக்கு உடற்பயிற்சி சாதனங்கள் தற்போது வழங்கிட வழிவகையில்லை. (ஆ) நிகழ்வு எழவில்லை.

**99—**

## சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைத்தல்

**வினா எண் 55898—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைக்குடி மேலத்தெருவில் உடற்பயிற்சி சாதனங்களுடன் கூடிய சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைக்குடி மேலத்தெருவில் உடற்பயிற்சி சாதனங்களுடன் கூடிய சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) நிலை எழவில்லை.



**100—**

## விளையாட்டு மைதானம் அமைத்தல்

**வினா எண் 59874—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நடுஹட்டி ஊராட்சி, பெத்தலா கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், நடுஹட்டி ஊராட்சி, பெத்தலா கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

# நான்காவது பட்டியல்

**1—**

## மரங்களை ஏலம் விடுதல்

**வினா எண் 137—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை அரசு ஏலம் விட்டதா?

(ஆ) ஆம் எனில், அப்படி ஏலம் விட்ட மரத்தில் இருந்து அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை ஏலம் விட்டதில் கிடைத்த மொத்த வருமானம் ரூ.1,00,71,710.79 ஆகும்.

2—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 13064—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோடி அள்ளி ஊராட்சி, டீ கடை, மந்தமேடு ஆகிய கிராமங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் உடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் வட்டம், கோடிஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட டீ கடை மற்றும் மந்தைமேடு ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் கோடிஅள்ளி கிராம புல எண்கள் 7.16/1,2,3 மற்றும் 4-ல் 4.28.0 ஹெக்டேர் பரப்பு நிலத்தில் வசித்து வருகிறார்கள். இந்நிலம் கிராம கணக்குகளில் மேய்ச்சல் தரை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேய்ச்சல் தரை புறம்போக்கினை நில வகைப்பாடு மாற்றம் செய்யவும், நில ஒப்படை அல்லது வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவும் தடையாணையுள்ளது. எனவே, அம்மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இயலாது.





3—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 13471—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, புதுகரம்பு கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்காத ஏழைகளுக்கு பட்டா வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பிக்கிலி ஊராட்சி, புதுக்கரம்பு கிராமத்தில் வசித்து வரும் ஏழை மக்களுக்கு புல எண்.559/5ஏ முதல் 559/78 வரை உள்ள கிராம நத்தம் புறம்போக்கில் உட்பிரிவு செய்து 33 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

4—

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31577—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை டவுன் தடாகம் ரோடு, முத்தனங்குளம் ஏரி, கண்டபாளையம் சாலையில் சிலர் 50 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இவர்கள் குடியிருக்கின்ற அதே இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ), (ஆ) மற்றும் (இ) கோயம்புத்தூர் குமாரசாமி ஏரி (முத்தனங்குளம்) பகுதி, கோவை மாவட்டம், கோவை வடக்கு வட்டம், தெலுங்குபாளையம் கிராமத்தில் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 69.16 ஏக்கர் ஆகும். இந்த ஏரி புல எண்கள் 86,88,91 மற்றும் 92-ல் அமைந்துள்ளது. இதில் 450 குடும்பங்கள் சுமார் 7.15 ஏக்கர் பரப்பளவில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதேபோல் இதற்கு அருகில் செல்லாம்பதி ஏரி புல எண்.106, 205-ல் சுமார் 68.87 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் 126 குடும்பங்கள் சுமார் 2.52 ஏக்கர் பரப்பளவில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி உள்ளனர். இந்த இருவகை புறம்போக்கு நிலங்களும் நீர்நிலைப் புறம்போக்காகும். அரசு ஆணை 41, வருவாய்த் துறை, நாள் 15-1-1987-ன்படி நீர்நிலைப் புறம்போக்கில் வீட்டுமனை ஒப்படை வழங்க அரசு தடை செய்து ஆணையிட்டுள்ளது. இதேபோல் இந்த ஏரிகள் கோவை மாநகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளன. மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கவும் அரசு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, குமாரசாமி ஏரி (முத்தனங்குளம்) பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**5—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31649—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவப்பூரில் உள்ள மகாராஜபுரம் செட்டி, ஊரணி கரை மேலமேட்டுத் தெரு ஆகிய பகுதிகளில் 30 ஆண்டுகளாக வசித்து வருபவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் நகரம், நகர்ப் புல எண் 7180 திட்ட விஸ்தீரணம் 2.68 ஏக்கர் ஊரணி புறம்போக்கு ஆகும். இதில் 43 நபர்கள் வசித்து வருகிறார்கள். இவர்கள் நீர்நிலைப் புறம்போக்கில் வசித்து வருவதால் இவ்வகை நிலம் தடை செய்யப்பட்ட இனம் ஆகையால், தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி நீர்நிலைப் புறம்போக்கில் வீட்டுமனை ஒப்படை வழங்க இயலாது.

**6—**

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 31813—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் குமாரசாமி ஏரி, தடாகம் ரோடு, கண்டபாளையம் ரோட்டில் 50 ஆண்டுகளாக குடிசை போட்டு குடியிருந்து வரும் ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) குமாரசாமி ஏரி (முத்தனங்குளம்) பகுதி, கோவை மாவட்டம், கோவை வடக்கு வட்டம், தெலுங்குபாளையம் கிராமத்தில் 69.16 ஏக்கர் நிலப்பரப்பில் புல எண்கள் 86,88,89,91 மற்றும் 92 ஆகியவற்றில் அமைந்துள்ளது. இதில் 450 குடும்பங்கள் சுமார் 7.15 ஏக்கர் நிலப்பரப்பில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்கூறிய புறம்போக்கு நிலங்கள் "நீர்நிலைப் புறம்போக்கு" என்பதால் "நீர்நிலைப் புறம்போக்கில்" வீட்டுமனை ஒப்படை வழங்க

தடையாணை உள்ளது. மேலும் இந்த ஏரி கோவை மாநகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளதாலும் மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை உள்ளது என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**7—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 33273—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சியில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சிக்குட்பட்ட பள்ளத்தூர் கிராமப் புல எண்கள் 21, 22 ஆகியவற்றிலுள்ள 0.54.5 எக்டேர் நிலத்தில் 15 நபர்கள் வீடுகள் கட்டி வசித்து வருகின்றனர். கிராம கணக்கில் "பாதைப் புறம்போக்கு" என பதிவாகி உள்ளது. "பாதைப் புறம்போக்கு" ஆட்சேபணை உள்ள புறம்போக்கு என்பதால், இப்புலன்களில் உள்ள வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க அரசு விதிகளில் இடமில்லை என்பதால், அவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

**8—**

## இடுகாடு புறம்போக்கு நிலம்

**வினா எண் 33349—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பச்சூர் ஊராட்சி, [illegible] கிராமத்தில் வண்ணான்துறை இடுகாடு புறம்போக்கு நிலம் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அந்தப் புறம்போக்கு நிலத்தை மீட்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வட்டம், பச்சூர் கிராம சர்வே எண் 620 [illegible] 0.66.5 எக்டேர் வாரி புறம்போக்கில் ஒரு பகுதியை பொதுமக்கள் மயானமாகவும், மயானத்திற்குச் செல்லும் பாதையாகவும் பயன்படுத்தி வரும் இடம் போக மீதி 0.10.0 ஏக்கர் நிலத்தை அந்த கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் குமாரர் ராதா என்பவர் ஆக்கிரமணம் செய்து வந்தது தடுக்கப்பட்டு தற்போது ஆக்கிரமணம் ஏதுமில்லை.

**9—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 33693—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் தடாகம் ரோடு, குமாரசாமி ஏரியில், குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) குமாரசாமி ஏரி (முத்தனங்குளம்) பகுதி, கோவை மாவட்டம், கோவை வடக்கு வட்டம் தெலுங்குபாளையம் கிராமத்தில் புல எண். 86, 88, 91

மற்றும் 92-ல் அமைந்துள்ளது. இதில் 450 குடும்பங்கள் சுமார் 7.15 ஏக்கர் பரப்பளவில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்த வகை புறம்போக்கு "நீர்நிலை" புறம்போக்கு ஆகும். அரசாணை 41, வருவாய் துறை, நாள் 15-1-1887-ன்படி நீர்நிலைப் புறம்போக்கில் வீட்டுமனை ஒப்படை வழங்க அரசு தடை செய்து ஆணையிட்டுள்ளது. இதே போல் இந்த ஏரி கோவை மாநகராட்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. மாநகராட்சியின் எல்லைக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கவும் அரசு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அரசாணைகளின்படி குமாரசாமி ஏரி (முத்தனங்குளம்) பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

10—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 33868—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, சந்திரப்பட்டி ஊராட்சி, வேடப்பட்டியில் பொதுமக்கள் பலருக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம், சந்திரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வேடப்பட்டி கிராமத்தில் புல எண். 25/6-ல் பரப்பு 0.53.0 எக்டேர் நிலத்தில் 23 நபர்களுக்கு ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மேற்படி கிராமத்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க திட்டம் எதுவும் இல்லை.



11—

## சுற்றுலாக் கட்டணம்

**வினா எண் 33895—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டு மேட்டூர் அணையைப் பார்வையிட்ட சுற்றுலாப் பார்வையாளர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மேட்டூர் அணைப் பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள அணை மற்றும் பூங்காவிற்கு 2001-2002 ஆம் ஆண்டில் வருகை புரிந்த 4,19,016 பார்வையாளர்களிடமிருந்து ரூ. 8,95,815/- கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

12—

**வினா எண் 35922—திருமதி வி. அழகம்மாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கடம்பூர் கிராமம், கலிங்கம் ஆற்றின் குறுக்கே அணை கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், கடம்பூர் கிராமம், கலிங்கம் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

[2005 பிப்ரவரி 3

அத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து சிறப்பு நில நிர்வாக ஆணையரிடம் கோரப்பட்ட பரிந்துரை பெறப்பட்ட பின் முடிவெடுக்கப்படும்.

13—

## குறிச்சி குளத்தைத் தூர் எடுத்தல்

**வினா எண் 35926—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, குறிச்சி குளத்தைத் தூர் எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை, குறிச்சி குளம் மற்றும் ஊட்டுக் கால்வாய் தூர்வாரும் பணி அரசாணை (நிலை) எண் 191, பொதுப் பணித் துறை, நாள் 22-5-2003-ன்படி ரூ.17.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

14—

## ஏரியைத் தூர் வாருதல்

**வினா எண் 37385—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, பேரூர் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, பேரூர் கிராமத்தில் உள்ள பேரூர் ஏரி ரூ.14.50 இலட்சம் செலவினத்தில் தூர்வாரும் பணி உட்பட பாசன வாய்க்கால் மேம்படுத்தும் பணி, மதகு மற்றும் கலிங்கு மேம்படுத்தும் பணி, வரத்து வாய்க்கால் மேம்படுத்தும் பணி ஆகியன நிறைவேற்றப்பட்டன.

15—

## கோரை வாய்க்காலைத் தூர் வாருதல்

**வினா எண் 39038—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகரவட்டாரம் ஊராட்சி, அகரவட்டாரம் கோரை வாய்க்காலைத் தூர் எடுத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அகரவட்டாரம் ஊராட்சி, கோரை வாய்க்கால், பி.சி.டி. பிரிவு வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் தூர் வாரப்பட்டுள்ளன. எனவே, தற்போது இவ்வாய்க்காலைத் தூர் வார வேண்டியதில்லை.

16—

## பாசன வாய்க்கால்

**வினா எண் 39649—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் உள்ள திருவாலி ஏரியில் இருந்து நிம்மேலி கிராமத்திற்கு லட்சுமி வாய்க்கால் வழியாகப் புதிதாகப் பாசன வாய்க்கால் வெட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் உள்ள நிம்மேலி கிராமத்திற்கு அ-3 திருநகரி வாய்க்காலின் பிரிவு பி-21 நிம்மேலி வாய்க்காலின் மூலம் 12.5 ஏக்கர் நிலங்கள் நல்ல முறையில் பாசனம் பெறுகின்றன. எனவே, புதிதாகப் பாசன வாய்க்கால் வெட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**17—**

## மரக் கன்றுகள் வளர்த்தல்

**வினா எண் 40641—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி, பெரிய ஏரியைச் சுற்றியுள்ள மரங்கள் அழிந்து வருவதால் அங்கு புதிய மரக் கன்றுகளை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) இல்லை.
(ஆ) எழவில்லை.



**18—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 42189—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை, மேலப்பேட்டப்பாளையம் கிராமத்தில் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், கபிலர் மலை தொகுதிக்குட்பட்ட மேலப்பேட்டப்பாளையத்தில் பொது இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் 4-9-2003 அன்று அகற்றப்பட்டுவிட்டன. தற்சமயம் அகற்றப்பட வேண்டிய ஆக்கிரமிப்பு இனங்கள் ஏதுமில்லை.

**19—**

## வாய்க்காலைச் சீரமைத்தல்

**வினா எண் 46485—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் பகுதியில் உள்ள காரப்பட்டி வாய்க்காலைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* ஆழியார் பழைய ஆயக்கட்டு கால்வாய்களில் உள்ள பராமரிப்பு மற்றும் பழுதுகள் சீரமைக்கும் பணிக்கு போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**20—**

## வாய்க்காலைச் சீர்படுத்துதல்

**வினா எண் 46493—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, ஆழியார் நகரில் உள்ள பள்ளி வழங்கல் வாய்க்கால் சீர்ப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதிக்கு உட்பட்ட பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் ஆளுகையின்கீழ் உள்ள ஆழியாறு பழைய வாய்க்காலான பள்ளி வழங்கல் அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்காலின் ஒரு பகுதியானது வால்பாறை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் வளர்ச்சி நிதியில் இருந்து ரூ.2.50 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும், செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**21—**

## அணையை ஆழப்படுத்துதல்

**வினா எண் 47246—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள சோலையார் அணையை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* இரு மாநிலங்களின் ஒப்பந்தத்திற்குட்பட்ட சோலையார் அணை தொழில் நுட்பரீதியாக நீரியல் கணக்கீட்டின்படி வடிவமைக்கப்பட்டு அதன் கொள்ளளவு நிர்ணயம் செய்யப்பட்டு அணையின் ஆழம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது அணையின் ஆழத்தினை நிர்ணயிக்கப்பட்ட கொள்ளளவுக்கும் கூடுதலாக இருக்க ஏதுவாக அணையின் நீரப்பரப்புப் பகுதியை ஆழப்படுத்த தற்சமயம் தேவையில்லை.

**22—**

## பாலங்களை விரிவுபடுத்த நிதி ஒதுக்கீடு

**வினா எண் 52261—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிங்காநல்லூர் தொகுதி, சின்னவேடம்பட்டி ஏரியில் நீர்வரத்துப் பாதையின் 71/2 கிலோ மீட்டர் நீளத்தில் அமைந்துள்ள பதினைந்து குறுகலான சிறு பாலங்களை விரிவுபடுத்திட உரிய நிதியினை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* ஆம். சின்னவேடம்பட்டி ஊட்டு வாய்க்காலின் குறுக்கே உள்ள 9 சிறு பாலங்கள் மற்றும் 18 விழல்களை அகலப்படுத்தி செப்பனிட

[2005 பிப்ரவரி 3

தேவையான நிதி ஒதுக்கீடு ரூ.25.00 இலட்சம் கிடைக்கப்பெற்றபின் பணி செய்து முடிக்கப்படும்.

**23—**

**கணிப்பொறி பயிற்சி மையம்**

**வினா எண் 16531—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) N.I.I.T, C.S.C., போன்ற பெரிய நிறுவனங்கள் கணிப்பொறி பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பெருநகரங்கள் மற்றும் பேரூராட்சிகளிலும் நிறுவி உள்ளனர். மேலும் தனியார்களும் கணிப்பொறி பயிற்சி மையங்களை அமைத்துள்ளனர். தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 1197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணினிக் கல்வி அளிக்கும் பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் கணினி பயிற்சி பெறுகிறார்கள். இப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகளை, பள்ளி வேலை நேரம் தவிர, மற்ற நேரங்களில், சிறந்த முறையில் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் கட்டணத்துடன் கூடிய கணிப்பொறி பயிற்சி அளிக்க வசதிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அவசியம் இல்லை.



2005 பிப்ரவரி 3]

**24—**

**கணிப்பொறி மையம்**

**வினா எண் 16548—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) N.I.I.T., C.S.C., போன்ற பெரிய நிறுவனங்கள் கணிப்பொறி பயிற்சி மையங்களை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பெருநகரங்கள் மற்றும் பேரூராட்சிகளிலும் நிறுவி உள்ளனர். மேலும் தனியார்களும் கணிப்பொறி பயிற்சி மையங்களை அமைத்துள்ளனர். தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் 1197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு கணினிக் கல்வி அளிக்கும் பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் கணினி பயிற்சி பெறுகிறார்கள். இப்பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள கணிப்பொறிகளை, பள்ளி வேலை நேரம் தவிர, மற்ற நேரங்களில், சிறந்த முறையில் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் கட்டணத்துடன் கூடிய கணிப்பொறி பயிற்சி அளிக்க வசதிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. எனவே, சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் கணிப்பொறி பயிற்சி மையம் தொடங்க அவசியம் இல்லை.

**25—**

**நீதிமன்றத்திற்கு வாகனங்கள் வழங்குதல்**

**வினா எண் 50727—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் சென்னையில் நடமாடும் நீதிமன்றத்திற்கு வாகனங்கள் வழங்கியது தொடர்பாக ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

(ஆ) இவ்வாண்டில் இத்துறையின் தேவைக்காக தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியது தொடர்பாக ஏற்பட்ட செலவினம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** (அ) 2002-2003 ஆம் ஆண்டு சென்னையில் நடமாடும் நீதிமன்றத்திற்கு ஐந்து வாகனங்கள் ரூ.47,11,524 செலவில் வழங்கப்பட்டுள்ளது. (ஆ) இவ்வாண்டில் இத்துறையின் தேவைக்காக தனியார் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படவில்லை.

**26—**

## நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 44611—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி, மேலைச்சாலையில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காரைமேடு ஊராட்சிக்குட்பட்ட மேலைச்சாலையில் நியாய விலைக் கடை ஏதுமில்லை. இக்கிராமத்திலுள்ள 202 குடும்ப அட்டைகளும்



2005 பிப்ரவரி 3]

அண்ணங்கோயில் கிராமக் கூட்டுறவு நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. அண்ணங்கோயில் அங்காடியில் இணைக்கப்பட்டுள்ள மொத்த குடும்ப அட்டைகள் எண்ணிக்கை 392 ஆகும். அண்ணங்கோயில் கூட்டுறவு நியாய விலைக் கடை சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலைச்சாலையில் உள்ள குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள அண்ணங்கோயில் அங்காடிக்கு என சொந்தக் கட்டடம் உள்ளதாலும், மேலச்சாலை கிராமத்திற்கும், அண்ணங்கோயில் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கிலோ மீட்டர் என்பதாலும், மேலச்சாலைக்கு என தனியே கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**27—**

## கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 52831—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அளக்குடி குன்னம், மாதிரவேளூர் மற்றும் ஆச்சாள்புரம் சீர்காழி நகர், ஆரப்பள்ளம் ஊராட்சி, நல்லூர் கிராமம் ஆகிய இடங்களிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், ஆளக்குடி, குன்னம், மாதிரவேளூர் மற்றும் ஆச்சாள்புரம் சீர்காழி நகர், ஆரப்பள்ளம் ஊராட்சி, நல்லூர் கிராமம் ஆகிய இடங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

[2005 பிப்ரவரி 3

28—

## இடைத்தரகர்கள் தலையீடு

**வினா எண் 52958—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்கள் விற்பனையில் இடைத்தரகர்கள் தலையீடு இல்லாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பொருட்களை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும்பொழுது இடைத்தரகர்கள் இல்லாமலேயே விற்பனை செய்யப்படுகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதன் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்த வேளாண் விளைபொருட்களை நுகர்வோர்களுக்கும், இணை உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட வியாபாரிகளுக்கும், முகவர்களுக்கும் (Agents) விற்பனை செய்கிறது. அவ்வாறு வியாபாரிகளுக்கும், முகவர்களுக்கும் விற்பனை செய்யும்பொழுது இடைத்தரகர்கள் இன்றியே இவ்வித விற்பனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், கூட்டுறவு 'விற்பனைச் சங்கங்கள் வேளாண் பெருமக்களின் உற்பத்தி பொருட்களை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாக உறுப்பினர்கள் பயன்பெறத்தக்க வகையில் ஏல விற்பனை மூலம் வியாபாரிகளுக்கும் / முகவர்களுக்கும் விற்பனை செய்து சேவைக் கட்டணம் பெறுகிறது. இவ்வித விற்பனையிலும் இடைத்தரகர்களின்றியே விற்பனை செய்யப்படுகிறது.



2005 பிப்ரவரி 3]

29—

## நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 53545—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஸ்ரீராமன் கிராமத்தில் இயங்கி வரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஆண்டிமடம் தொகுதியில் ஸ்ரீராமன் நியாய விலைக் கடை 375 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக ஓய்.ஏ.89 பெரியத்துக்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படுகிறது. ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 2002-2003 ஆம் ஆண்டில் ஸ்ரீராமன் நியாய விலைக் கடைக்கு துணைக் கிராமமான ரெட்டிப்பாளையம் கிராமத்தில் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் ஸ்ரீராமன் பகுதியைச் சேர்ந்த நியாய விலைக் கடை இயங்குகிறது. தற்போது ஸ்ரீராமன் நியாய விலைக் கடை அந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

30—

## மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்

**வினா எண் 55901—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பிரிவு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட குறைதீர் மன்றம் செயல்பட்டு வருவதாலும், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டத்தின் உள்ளடங்கிய பகுதி என்பதாலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் பிரிவு மயிலாடுதுறையில் தற்சமயம் ஏற்படுத்த இயலாது.

**31—**

## கிராம அங்காடிக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 57205—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, காசாவயல் வேளாண் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட கல்லக்காத்தான், பட்டமுடையான் மற்றும் இளசமங்கலம் கிராம அங்காடிக்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, காசாவயல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் கல்லக்காத்தான் மற்றும் இளசமங்கலம் முழுநேரக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன. அதே வங்கியின்கீழ் செயல்படும் பட்டமுடையான் முழுநேரக் கடை சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. கல்லக்காத்தான் மற்றும் இளசமங்கலம்



முழுநேர நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**32—**

## கோயில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தல்

**வினா எண் 36689—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கோ. ஆதனூர் கிராமத்திலுள்ள கோயில் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீட்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கோ. ஆதனூர் கிராமத்தில் விருத்தாசலம், கோபிராபுரம் அருள்மிகு ஆதிசக்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ச.எண் 22/2-ல் 3.17 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இந்நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. குத்தகைக்கு விடப்பட்டு பசலி 1413-க்கு ரூ.2400/- குத்தகை வசூலிக்கப்பட்டு உள்ளது. மேற்படி நிலம் குத்தகைதாரரிடம் உள்ளது. இந்நிலையில் தற்போது குத்தகைதாரரால் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக வைக்கப்பட்டுள்ளது.

**33—**

## திருக்கோயிலுக்கு நிதியுதவி

**வினா எண் 57044—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) சீர்காழி தொகுதி, ரெட்டிகோடங்குடியிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி ஆலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், ரெட்டிகோடங்குடியில் உள்ள அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராம பொதுமக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**34—**

## மருத்துவர் குடியிருப்பு

**வினா எண் 43491—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிபட்டி கிராமத்தில் மருத்துவர் குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சுகாதார பகுதி மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிபட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. ஜல்லிபட்டி துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. கிராம சுகாதார செவிலியர் அதே கிராமத்தில் தங்கி பணிபுரிகிறார். இதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நபார்டு வங்கி (பேஸ் IV) உதவியுடன் துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**35—**

## செவிலியர்கள் பணியிடங்கள்

**வினா எண் 51750—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசு பெரிய மருத்துவமனையில் காலியாக உள்ள செவிலியர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மொத்தமுள்ள 176 செவிலியர்களில் 5 செவிலியர்கள், செவிலியர் போதகர்

தரம்-2 ஆக பதவி உயர்வு பெற்றதால் ஏற்பட்ட காலியிடத்தை தொகுப்பூதிய செவிலியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுவிட்டது. தற்போது அம்மருத்துவமனையில் செவிலியர்கள் முழு அளவில் பணியாற்றி வருகிறார்கள்.

36—

## பொது மருத்துவ முகாம்

**வினா எண் 54024—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், மேலணிக்குழி ஊராட்சியில் பொது மருத்துவ முகாம் ஒன்றினை நடத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையுள்ள 3 வருடத்தில் ஒவ்வொரு வட்டார அளவிலும் ஒரு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டாரத்திலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டிற்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

37—

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 55140—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) எடப்பாடி தொகுதி, சித்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, சித்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

## சிறப்பு மருத்துவர்கள்

**வினா எண் 57565—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு பல், கண் மற்றும் இதய நோய் சிறப்பு மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனையில் இதய நோய்க்கு சிகிச்சை அளிக்க எம்.டி., தகுதி பெற்ற இரண்டு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, பணிபுரிந்து வருகின்றார்கள். மேலும், அம்மருத்துவமனைக்கு பல், கண் சிறப்பு மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

### தேசிய சித்த மருத்துவ நிறுவனம்

**வினா எண் 59055—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தாம்பரத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு தேசிய சித்த மருத்துவ நிறுவனம் எப்பொழுது முதல் செயல்படத் தொடங்கும்?

(ஆ) இதற்கு மத்திய அரசு எவ்வளவு தொகை வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** (அ) சென்னை தாம்பரத்தில் ஏற்படுத்தியுள்ள தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் 30-9-2004 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. (ஆ) இதற்காக மத்திய அரசு இதுவரையில் 16.33 கோடி வழங்கியுள்ளது.

40—

### சுற்றுப்புறச்சுவர் கட்டுதல்

**வினா எண் 22850—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் நகராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான விடுதி கட்டடத்தைச் சுற்றிலும் சுற்றுப்புறச்சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மேட்டூர் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவர் ரூ.6.00 இலட்சம் செலவில் கட்ட அரசாணை (3ப) எண் 33, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 10-11-2004-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

41—

### கல்விச் சலுகை

**வினா எண் 26762—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அளித்துள்ள கல்விச் சலுகையைப் பயன்படுத்தி ஒவ்வொரு கிராமத்திலும் தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளார்கள் என்பதை ஆய்வு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

42—

### மரச் சாமான்களை வழங்குதல்

**வினா எண் 35133—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

(அ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஆதிதிராவிடர் பள்ளியில் மரச்சாமான்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) மேற்கண்டவற்றை வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, மாதானம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு மரச்சாமான்கள் வாங்க ரூ.2.15 இலட்சம் ஒப்பளித்து அரசாணை (நிலை) எண் 71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-5-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**43—**

## மோட்டார் பழுதுபார்த்தல் தொழிற்பயிற்சி

**வினா எண் 36439—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எவ்வளவு பேருக்கு அரசு மோட்டார் பழுதுபார்த்தல் தொழிற்பயிற்சி திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) பயிற்சியின் போது அரசு பயிற்சியாளருக்கு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 32 ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு அரசு மோட்டார் பழுதுபார்க்கும் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டது.



2005 பிப்ரவரி 3]

(ஆ) பயிற்சியின்போது இவர்களுக்கு உதவித் தொகையாக ரூ.19,320/- வழங்கப்பட்டது.

**44—**

## உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 57675—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஊக்கத்தொகை எவ்வளவு ரூபாய் வழங்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** தமிழகத்தில் தங்களது ஒரே மகன் அல்லது மகளை இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.750/-ம் (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ஒன்றுக்கு மேற்பட்ட மகன் அல்லது மகள்களை அனுப்பிய பெற்றோர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/-மும் (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஊக்கத்தொகையாக அவர்கள் ஆயுட்காலம் முழுவதுக்கும் வழங்கப்படுகிறது.

**45—**

## மழைநீர் சேகரிப்புத் தொட்டி

**வினா எண் 57871—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, செம்மங்குடி, பெருந்தோட்டம் ஊராட்சி மற்றும் பட்டவிளாகத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, செம்மங்குடி, பட்டவிளாகம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளில் 22-8-2003 அன்றும், அகர பெருந்தோட்டம் ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியில் 2-9-2003 அன்றும் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

46—

## மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள்

**வினா எண் 57874—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி 28-8-2003 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

47—

## விற்பனைக் கூடத்திற்கு கிடங்குக் கட்டடம்

**வினா எண் 48311—திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கிடங்கு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தற்போது இயங்கி வரும் உழவர் சந்தை வளாகத்தில் 0.95 ஏக்கர் நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்கு கேட்கப்பட்டு, பின்னர் கிரையத்திற்கு வழங்கும்படி கோரப்பட்டது. சிதம்பரம் நகராட்சி ஆணையர் (பொ) அவர்கள் மேற்படி நிலத்தை நகராட்சியின் பயன்பாட்டிற்கு தேவை என்பதால், அதனைக் கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். ஆனால், மேற்படி நிலம் புறம்போக்கு என்றும், அந்நிலம் சிதம்பரம் நகராட்சி பாராதீனம் செய்யப்பட்டதாகத் தெரிய வந்ததால் அந்நிலத்தை, நிலமாற்றம் செய்து தரும்படி கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உரிய அனுமதி பெற்றவுடன் அந்நிலத்தைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

48—

## உலர்களம் அமைத்தல்

**வினா எண் 52354—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆனைக்காரன் சத்திரம், ஆர்ப்பாக்கம், அகரஎலத்தூர், எருகூர், ஆச்சாள்புரம், புதுப்பட்டினம், புளியந்துறை ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆனைக்காரன் சத்திரம், ஆர்ப்பாக்கம், அகரஎலத்தூர், எருகூர், ஆச்சாள்புரம், புதுப்பட்டினம், புளியந்துறை ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**49—**

## உலர்களம் அமைத்தல்

**வினா எண் 53319—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, திருப்பங்கூர் ஊராட்சி, திட்டை ஊராட்சி, தென்னாம்பட்டினம் ஊராட்சி, தில்லைவிடங்கன் ஊராட்சி, திருவாலி ஊராட்சி, வானகிரி ஊராட்சி மற்றும் அத்தியூர் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மை விற்பனைக் குழு மூலம் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, திருப்பங்கூர் ஊராட்சி, திட்டை ஊராட்சி, தென்னாம்பட்டினம் ஊராட்சி, தில்லைவிடங்கன் ஊராட்சி, திருவாலி ஊராட்சி, வானகிரி ஊராட்சி மற்றும் அத்தியூர் ஆகிய ஊராட்சிகளுக்கு வேளாண்மை விற்பனைக் குழு உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.



**50—**

## கால்நடை ஆய்வாளருக்குப் பயிற்சி

**வினா எண் 62234—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை கிளை நிலையங்களுக்கு நியமிக்கப்படும் கால்நடை ஆய்வாளருக்கு பயிற்சி அளிப்பதை மீண்டும் கொண்டுவர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** அரசின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு காலியாக உள்ள கால்நடை கிளை நிலையங்களுக்குத் தேவையான கால்நடை ஆய்வாளர்களை நியமிக்க, கால்நடை ஆய்வாளர் பயிற்சி தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**51—**

## கால்நடைப் பண்ணைகளை ஊக்குவித்தல்

**வினா எண் 63540—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் கால்நடைப் பண்ணைகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** (அ) தற்சமயம் அத்தகைய திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2005 பிப்ரவரி 3

52—

## மேற்படிப்புக் கல்வி வசதி

**வினா எண் 12215—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக் கல்லூரியில் எம்.பில்.,பி.எச்டி., போன்ற மேல் படிப்புகள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் அரசு கலைக் கல்லூரியில் 2002-2003 ஆம் ஆண்டு முதல் தமிழ் பாடப் பிரிவில் எம்.பில். மற்றும் பி.எச்டி. பட்ட வகுப்புகளும், வேதியியல் பாடப் பிரிவில் எம்.பில். பாட வகுப்பும் தொடங்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் கல்வியாண்டில் பொருளாதாரம் மற்றும் வரலாறு பாடப் பிரிவுகளில் எம்.பில்., மற்றும் பி.எச்டி. வகுப்புகளை அரசுக்குக் கூடுதல் செலவின்றி தொடங்க அக்கல்லூரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2004-2005 ஆம் கல்வியாண்டில் வரலாறு, ஆங்கிலம் மற்றும் புள்ளியியல் பாடப் பிரிவுகளில் எம்.பில். மற்றும் பி.எச்டி. வகுப்புகள் தொடங்குவதற்காக ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

53—

## தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 53052—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், இடைக்கால் பஞ்சாயத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் தகுதி உயர்த்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், கடையநல்லூர் சரகம், இடைக்கால் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் நிலை உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு தொடங்கிட நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு திருநெல்வேலி மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

54—

## விற்பனை வரி மூலம் வருவாய்

**வினா எண் 60928—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விற்பனை வரி மூலம் அரசுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** தமிழ்நாட்டில், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன் மூலம் 2003-2004-ல் ரூ.9790.03 கோடியும், 2004-2005-ல் செப்டம்பர் வரை ரூ.6662.19 கோடியும் வருவாய் கிடைத்துள்ளது. மத்திய

விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் 2003-2004-ல் ரூ.1185.89 கோடியும் மற்றும் 2004-2005-ல் செப்டம்பர் வரை ரூ.673.62 கோடியும் வருவாயாக கிடைத்துள்ளது.

55—

## பதிவு மற்றும் வயது மூப்பு

**வினா எண் 63923—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளங்கலை ஆசிரியர் கல்வி படித்த பட்டதாரிகளை பதிவு மூப்பு மற்றும் வயது மூப்பு அடிப்படையில் ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

56—

## பால்வள கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 41377—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி பால் வள கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட த.பி.டி. 168. நடுப்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு 3 சென்ட் நிலத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.1,95,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, 600 சதுர அடிகள் பரப்பில் சொந்தக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

57—

## பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

**வினா எண் 57793—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலுள்ள அரசு பால் குளிரூட்டும் நிலையத்தை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி மற்றும் மயிலாடுதுறை ஆகிய பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பாலை கொள்முதல் செய்ய ஏதுவாக மயிலாடுதுறையில் தினசரி 10,000 லிட்டர் பால் கொள்ளளவு மற்றும் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் கடந்த 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால், பின்னர் நாளொன்றுக்கு சுமார் 714 லிட்டர் பால் மட்டுமே பெறப்பட்டது. இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.78,000/- செலவு செய்து வந்ததால் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்கும் பொருட்டு மேற்படி பால் குளிரூட்டும் நிலைய செயல்பாடுகள் 28-1-2002 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனவே, மயிலாடுதுறை பால் குளிரூட்டும் நிலையத்தை தற்போது மீண்டும் திறக்க வாய்ப்புகள் இல்லை.

58—

## பாலாடைக்கட்டி உற்பத்திப் பிரிவை மேம்படுத்துதல்

**வினா எண் 59376—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் ஆவின் சார்பில் பாலாடைக்கட்டி உற்பத்திப் பிரிவை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறையில் ஆவின் பாலாடைக்கட்டி உற்பத்திப் பிரிவு எதுவும் செயல்பாட்டில் இல்லை. எனவே, பாலாடைக்கட்டி உற்பத்திப் பிரிவை மேம்படுத்துவது குறித்து வினா எழ வாய்ப்பில்லை. வால்பாறை பகுதியில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் முகவர் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பெண்கள் சுய உதவிக் குழுவினரும் பால் விற்பனையில் ஈடுபட்டு உள்ளனர்.

59—

## மகளிர் சுய உதவிக் குழு

**வினா எண் 59766—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு நடத்தும் ஆவின் பால் மற்றும் உற்பத்தி பொருட்களை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரைப் பொறுத்தவரை ஏற்கெனவே 14 பாலகங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அனுப்பப்பெற்ற ஊனமுற்றோர், விதவைகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்களால் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினை அணுகி உதவி கோரலாம்.

60—

## பால் குளிரூட்டும் கிளை நிலையம்

**வினா எண் 62808—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூரில் பால் குளிரூட்டும் கிளை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் இருந்து 27 கி.மீ. தொலைவில் சண்முகாபுரம் என்ற இடத்தில், நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவுத் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதால், வேட்டைக்காரன்புதூரில் புதிதாகப் பால் குளிரூட்டும் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

## அடிப்படை வசதி

**வினா எண் 1046— திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் ஹோசிமின் நகர், கல்லுக்குழி, தனலட்சுமி நகர் குடிசைப்பகுதி மற்றும் ஆட்டோ காலனி, வாலாங்குளம்-ஹைவேஸ், எல்.ஜி.பி. குடிசைப் பகுதி ஆகிய இடங்களில் வாழும் மக்களுக்கு எப்பொழுது அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** ஹோசிமின் நகர், இரயில்வே துறை மற்றும் குடிமைப் பொருள் துறையைச் சார்ந்தது ஆகும். கல்லுக்குழி தனியார் இடத்தைச் சார்ந்தது ஆகும். தனலட்சுமி நகர் குடிசைப் பகுதி, மாநகராட்சிக்குச் சொந்தமானது. ஆனால், அந்த இடம் சுடுகாடு அமைக்க ஒதுக்கப்பட்டுள்ளது. ஆட்டோ காலனி புறம்போக்கு இடத்தில், குடிசை அமைத்துள்ளனர். வாலாங்குளம் ஹைவேஸ், எல்.ஜி.பி. பகுதிகளில் குளத்துப் புறம்போக்குப் பகுதிகளில் குடிசை அமைத்துள்ளனர். எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால், இவ்விடங்களில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைக் கோவை மாநகராட்சி செய்து தர இயலாத நிலையில் உள்ளது.

62—

## மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதைத் தடுத்தல்

**வினா எண் 5955—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், காவல்கிணறு கிராமத்தில் பெருந்தலைவர் காமராஜர் சிலை முன்பாக, மழைக் காலங்களில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க அரசின் நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், காவல்கிணறு கிராமத்தில் பெருந்தலைவர் காமராஜர் சிலைமுன்பு மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கும் இடத்தில் காவல்கிணறு ஊராட்சியிலிருந்து கிணற்றுச் சரள், சிகப்புச் சரள் சேகரம் செய்து குண்டுகுழிகளைச் சமமாக நிரப்பி மேடாக உயர்த்தப்பட்டது. மேலும், சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் பகுதி-II-ன்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.22,000 மதிப்பீட்டில் வாறுகால் கட்டப்பட்டு, மழைநீர், சிலை முன்பு தேங்காமல் வடிந்து செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

63—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 8878—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், அ.பெ.நாடானூர் ஊராட்சிக்கு உட்பட்ட, செல்லப்பிள்ளையார் குளம் ஆற்றில் இருந்து பம்பு ரூம் வரை உள்ள பைப்பை மாற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியம், அ.பெ. நாடானூர் ஊராட்சிக்குட்பட்ட, செல்லப்பிள்ளையார் குளம் கிராமத்திற்கு, தற்போது ஆற்றில் இருந்து தனியாக 4" பி.வி.சி. பைப் லைன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பதிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராகச் செய்யப்பட்டு வருகிறது.

[2005 பிப்ரவரி 3

64—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 17458—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியிலுள்ள தெற்குக்கரைமேடு ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், எடக்குடி வடபாதி ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 5 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வூராட்சியில் தெற்குக்கரைமேடு ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டிக்கொடுக்கப்படவில்லை.

65—

## அடிப்படை வசதி

**வினா எண் 17507—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியிலுள்ள மயானத்திற்கு மயானக் கொட்டகை அமைத்து, தார்ச் சாலை அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2005 பிப்ரவரி 3]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* மயானக் கொட்டகை அமைக்க அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சியிலுள்ள மயானத்திற்கு, மயானக் கொட்டகை அமைத்துத்தர தற்போது வாய்ப்பு இல்லை. மேலும், மேற்கண்ட மயானத்திற்குத் தார்ச் சாலை அமைக்க, ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை.

66—

## கழிவுநீர் வாய்க்கால் கட்டுதல்

**வினா எண் 19214—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து, பசும்பொன் நகர் பகுதி மக்களுக்கு கழிவுநீர் வாய்க்கால் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து, பசும்பொன் நகர் பகுதி மக்களுக்கு கழிவுநீர் வாய்க்கால் கட்ட ரூ.50,000/- செலவாகும். ஊராட்சியில், போதிய நிதி வசதி இல்லாததாலும், தற்போது இந்த வேலை, வேறு திட்டங்களில் எடுத்துச் செய்ய வாய்ப்பில்லாததாலும் இந்த வேலை செய்ய இயலாது.

67—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 23101—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 பிப்ரவரி 3

வந்தவாசி தொகுதி, அருங்குணம் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், அருங்குணம் ஊராட்சிக்கு இதுவரை 45 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**68—**

## கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம்

**வினா எண் 30799—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.70,000/- மதிப்பீட்டில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**69—**

## நூலக மேல்வரி

**வினா எண் 33778—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பட்டுக்கோட்டை நகராட்சி மூலம் பட்டுக்கோட்டை நூலகத்திற்கு வரவேண்டிய நூலக மேல்வரி செலுத்தப்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு? எப்போது செலுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகராட்சியில் 1998-1999 முதல் 2001-2002 வரை நூலக வரியாக ரூ.20.83 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.8.86 இலட்சம், நூலக ஆணைக் குழு அலுவலர், தஞ்சாவூர், அவர்களுக்கு நகராட்சியால் செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.12.17 இலட்சம், நகராட்சியின் நிதி நிலைமைக்குத் தகுந்தவாறு காலாண்டுத் தவணைகளில் நூலக ஆணைக் குழு அலுவலர் அவர்களுக்குச் செலுத்தப்படும்.

**70—**

## கல்வெர்ட் பாலம்

**வினா எண் 34463—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடம் ஒன்றியம், புக்குழியிலிருந்து பாசிகுளம் இடையில் உள்ள கல்வெர்ட் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில், போதுமான நிதி வசதி இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள வாய்ப்பில்லை.

71—

## மின் இணைப்பு

**வினா எண் 35690—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் வெள்ளாள விடுதிக்கு ஜீவன்தாரா திட்டம் மூலம், கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாள விடுதி கிராமத்தில் அமைக்கப்பட்ட ஜீவன்தாரா கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு மின்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

72—

## மாநில நிதிக் குழு உதவி

**வினா எண் 36707—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகராட்சிக்கு தமிழக அரசு ஒதுக்கித் தரக்கூடிய மாநில நிதிக் குழு தொகையினை, இனி வழங்க வேண்டி நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** அனைத்து நகராட்சிகளுக்கும் ஏப்ரல் 2002 முதல் மாதந்தோறும் மாநில நிதிக் குழு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. விருத்தாசலம் நகராட்சிக்கு இந்த ஆண்டில்



ஏப்ரல் 2004 முதல் அக்டோபர் 2004 வரை விடுவிக்கப்பட்ட தொகை 42,83,364/-. எஞ்சிய மாதங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் விடுவிக்கப்படும்.

73—

## சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் குடிநீர் வசதி

**வினா எண் 37872—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கருமாண்டபதி ஊராட்சியைச் சேர்ந்த பெரியகவுண்டனூருக்கு அடிப்படை வசதியான சாலை வசதி, தெருவிளக்கு, குடிநீர் வசதிகள் செய்து தரும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கருமாண்டபதி ஊராட்சியைச் சேர்ந்த பெரியகவுண்டனூருக்கு 2000-2001 ஆம் ஆண்டு புதிய தார்ச் சாலை அமைக்கப்பட்டது. மேலும், இக்கிராமத்திற்கு 2 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் 3 தெருவிளக்குகள் உள்ளன. இக்கிராமத்தின் மக்கள் தொகை 210. ஆகையால் மேற்படி கிராமத்திற்குப் போதுமான குடிநீர், தெருவிளக்கு, பாதை வசதிகள் உள்ளன.

74—

## கிராம நிர்வாக அலுவலகம்

**வினா எண் 39547—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, காரைமேட்டிற்கு கிராம நிர்வாக அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, காரைமேட்டில் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.70,000/- மதிப்பீட்டில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**75—**

## கழிவுநீர் வாய்க்கால் வசதி

**வினா எண் 40908—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, வீரணம்பாளையம் ஊராட்சி, வீரணம்பாளையத்தில் கழிவுநீர் வாய்க்கால் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், வீரணம்பாளையம் ஊராட்சி, வீரணம்பாளையத்தில் 2003-2004 ஆம் நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் (சிறப்புத் திட்டம்) 1.50 இலட்சம் செலவிலும் மற்றும் சம்பூர்ண கிராம



வேலைவாய்ப்புத் திட்டம் (பகுதி 2)-ன்கீழ் ரூ.0.75 இலட்சம் செலவிலும் கழிவு நீர் வாய்க்கால் கட்டப்பட்டு (நீளம் 300 மீட்டர்) தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது.

**76—**

## நிழற்குடை

**வினா எண் 46430—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள புகைவண்டி நிலையம் அருகில் பேருந்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் புகைவண்டி நிலையம் அருகில் செல்லும் சாலை மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானது. எனவே, அவ்விடத்தில் நகராட்சி நிதியில் நிழற்குடை அமைக்க இயலாது.

**77—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 47101—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கோடங்கிபட்டியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோடங்கிபட்டியில் 1995-1996 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகளும், 1996-1997 ஆம் ஆண்டில் 15 தொகுப்பு வீடுகளும், 1998—1999 ஆம் ஆண்டில் 3 தொகுப்பு வீடுகளும் ஆகமொத்தம் 28 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**78—**

### மயானக் கொட்டகை மற்றும் நிழற்குடை வசதி

**வினா எண் 48079—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி மற்றும் தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் மயானக் கொட்டகையும், அங்கு நிழற்குடை ஒன்றும் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மயானக் கொட்டகையும் அங்கு நிழற்குடையும் அமைப்பதற்கு அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி மற்றும் தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் மயானக் கொட்டகையும் அங்கு நிழற்குடை ஒன்றும் அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.



2005 பிப்ரவரி 3]

**79—**

### கழிவுநீர் வாய்க்கால் கட்டுதல்

**வினா எண் 48139—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை ஊராட்சி ஒன்றியம், பூதகுடி ஊராட்சி, லெட்சுமிபுரம் கிராமத்தில் பிரதான சாலையின் ஓரம் கழிவுநீர் வாய்க்கால் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி, பூதகுடி ஊராட்சி, லெட்சுமிபுரம் கிராமத்தில் கழிவுநீர் வாய்க்கால் கட்ட கேட்கப்படும் இடம் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானதால் மேற்படி இடத்தில் ஊராட்சி ஒன்றியம் மூலம் கழிவுநீர் வாய்க்கால் கட்ட இயலாது.

**80—**

### காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 48317—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, சின்ன கொக்கூர் ஊராட்சியில் காலனி வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய / மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.*

**81—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 48445—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி பகுதி 2-ல் 3-வது வட்டாரத்தில் ஆதிதிராவிடர் காலனிக்கு 20 தொகுப்பு வீடுகள் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்கலக்குறிச்சி ஆதிதிராவிடர் காலனி பகுதி-2-ல் 10 தொகுப்பு வீடுகளும், 3-வது வட்டாரத்தில் 20 தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் 30 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**82—**

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 49227—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஆண்டிமடம் தொகுதி, அகரம் காலனி மற்றும் சன்னாசிநல்லூர் மக்களுக்கு தொகுப்பு வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, அழகாபுரம் ஊராட்சி, அகரம் கிராமத்தில் இதுவரை 41 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சன்னாசிநல்லூர் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டிற்கு முன்பு 45 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேற்படி ஊராட்சியில் 2003-2004 ஆம் நிதியாண்டில் 12 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**83—**

## ஓடையில் பாலம் அமைத்தல்

**வினா எண் 53249—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆண்டிமடம் தொகுதி, இலங்கைச்சேரி கிராமத் தொடக்கப் பள்ளி அருகேயுள்ள ஓடையில் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *(அ)* மற்றும் *(ஆ)* போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

84—

## மயானப் பாதை அமைத்தல்

**வினா எண் 53252—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள ஆதனக்குறிச்சி மற்றும் பெரியாத்துக்குறிச்சி, தாவடநல்லூர் (பழங்குடியினர் பகுதி) ஆத்துக்குறிச்சி ஆகிய கிராமங்களுக்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், பெரியாத்துக்குறிச்சி, தாவடநல்லூர், ஆத்துக்குறிச்சி ஆகிய கிராமங்களுக்கு மயானப் பாதை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

85—

## கிராமத்திற்கு புதிய சாலை அமைத்தல்

**வினா எண் 53260—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள வடுகர்பாளையம் கிராமத்திற்கு புதிய சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

86—

## பாலம் அமைத்தல்

**வினா எண் 53266—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வாய்வாலம் கிராமத்தில் ஏரியின் தென்புறம் பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

87—

## பாதையைச் சீர் செய்தல்

**வினா எண் 53267—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் துளார் கிராமத்தில் தெற்குத் தெருவிலிருந்து ஏரிக்குச் செல்லும் பாதையை சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**88—**

### தார்ச் சாலை

**வினா எண் 53272—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அயன்தத்தனூர் கிராமத்தில் பள்ளிக்கு செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**89—**

### சாலை வசதி

**வினா எண் 53273—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள நெட்டலக்குறிச்சி கிராமத்திலுள்ள சவரியார் கோயில் தெருவிலிருந்தும், தெற்கு தெருவிலிருந்து காலனி வழியாக திருக்களப்பூரை இணைக்கும் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**90—**

### சாலை வசதி

**வினா எண் 53275—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவல் கிராமத்திலுள்ள அரசு மருத்துவமனையின் மேற்கு பகுதியில் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் ஒன்றியம், வாரியங்காவல் கிராமத்திலுள்ள அரசு ஆரம்ப நிலையத்தின் மேற்கு பகுதியில் 100 மீட்டர் நீளத்திற்கு கிரா அமைக்கப்பட்டுள்ளது.

91—

## கழிப்பிடம் கட்டுதல்

**வினா எண் 53498—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி, நகராட்சிப் பூங்காவில் பெண்கள் கழிப்பிடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** எடப்பாடி நகராட்சியில் நிதி நிலைமை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதால் மேற்படி நகராட்சிப் பூங்காவில் பெண்கள் கழிப்பிடம் கட்டித் தரும் திட்டம் எதுவும் இல்லை.

92—

## சாக்கடை வசதி

**வினா எண் 54168—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 25-வது பகுதி, ராவனேஸ்வரா சாலையில் இருந்து சித்தகவுண்டர்காடு பகுதி வரை சாக்கடை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 25-வது பகுதி, ராவனேஸ்வரா சாலையில் இருந்து சித்தகவுண்டர்காடு பகுதி வரை சாக்கடை வசதி செய்வதற்கான பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வரும் நிதியாண்டில் நிதி நிலையினைப் பொறுத்து நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.





93—

## மயானப் பாதை அமைத்தல்

**வினா எண் 55430—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருமங்களம் ஊராட்சியிலுள்ள கம்மாளர் தெரு மயானத்திற்கு மயானப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை மேற்கொள்ள தற்பொழுது வாய்ப்பு இல்லை.

94—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 55439—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சி, பாதரகுடியிலுள்ள எம்.ஜி.ஆர். நகர், ஆதிதிராவிட தெரு மற்றும் செம்மங்குடி ஊராட்சி, திருத்தோணிபுரம் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் தெருவிற்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 பிப்ரவரி 3

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**95—**

**தார்ச் சாலை வசதி**

**வினா எண் 55441—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சியில் உள்ள விளந்திடசமுத்திரம் பிற்படுத்தப்பட்ட தெரு மற்றும் கீழத்தெருவிலுள்ள ஆதிதிராவிட தெருவிற்குச் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**96—**

**தார்ச் சாலை**

**வினா எண் 55451—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 பிப்ரவரி 3]

(அ) சீர்காழி ஒன்றியம், திருப்பன்கூர் ஊராட்சி, காளியம்மன் கோயில் தெரு, மண் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**97—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 55452—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மருதங்குடி ஊராட்சி, குமாரநத்தம் கிராமத்திலிருந்து புங்கனூர் வரை இணைப்புச் சாலை அமைக்கவும் மற்றும் குமாரநத்தத்திலிருந்து மருவத்தூர் வரையுள்ள சாலையை மேம்பாடு செய்து கொடுக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் [மற்றும்] உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமா[ன நிதி] ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்[கொள்ள] வாய்ப்பு இல்லை.

[2005 பிப்ரவரி 3

**98—**

## சாலை வசதி

**வினா எண் 55464—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பெருமங்களம் ஊராட்சி, ஆசாரி தெருவிலுள்ள மயானத்திற்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) போதுமான நிதி ஆதாரம் இல்லை என்பதால் இப்பணியை தற்பொழுது மேற்கொள்ள வாய்ப்பு இல்லை.

**99—**

## பெண்கள் சுகாதார வளாகம்

**வினா எண் 55622—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

(அ) எடப்பாடி நகராட்சி, கவுண்டம்பட்டியில் பெண்கள் சுகாதார வளாகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி, கவுண்டம்பட்டி பகுதியில் 2002-2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சுகாதார



2005 பிப்ரவரி 3]

வளாகம் ஒன்று ரூ.10.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மகளிருக்கான சுகாதார வளாகம் ரூ.2.65 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**100—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 57321—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் நிதியாண்டில் அரசு எடப்பாடி ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்திற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி, நகராட்சிப் பகுதியாகும். 2003-2004 ஆம் ஆண்டிற்கு எடப்பாடி நகராட்சிப் பகுதியில் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.4,60,000/- மதிப்பில் சுற்றுச்சுவர் மற்றும் எடப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.2,50,000/- மதிப்பில் கழிப்பறை வசதி ஆகிய பணிகளுக்கு பொது மக்களிடமிருந்து பங்குத் தொகை பெறப்பட்டு, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு உள்ளது. மேலும், 2003-2004 ஆம் நிதியாண்டில் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பொது மக்களிடமிருந்து பணிகளுக்கு ரூ3,07,500/- பங்குத் தொகையாக பெறப்பட்டு ரூ.12,30,000/- மதிப்பிற்கு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பொது மக்களிடமிருந்து பெறப்படும் பங்குத் தொகைக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சுனாமி பேரலையால் 26-12-2004 அன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-12-2004 அன்று, தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை சுனாமி பேரலைகள் திடீரென பெரும் சீற்றத்துடன் தாக்கியதில், தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களின் கடற்கரைப் பகுதியின் நெடுகிலும் அமைந்துள்ள கிராமங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தங்களது வீடுகளையும், உடைமைகளையும் ஒட்டுமொத்தமாக இழந்ததுடன், பிழைப்புக்குரிய தங்கள் வாழ்வாதாரங்களையும் முற்றிலுமாக இழந்தனர்.

சுனாமியால் வீடுகள் மற்றும் உடைமைகள் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், சமைப்பதற்குத் தேவையான பருப்பு, எண்ணெய் முதலான பொருட்கள் வாங்க 1,000 ரூபாய், பாத்திரங்கள், அடுப்பு முதலியன வாங்குவதற்கு 1,000 ரூபாய் மற்றும் தற்காலிகக் குடிசைகள் அமைப்பதற்காக 2,000 ரூபாய், ஆக மொத்தம் 5,000 ரூபாய் மதிப்பில் உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 28-12-2004 அன்று ஆணையிட்டேன்.

சுனாமியால் வீடுகள் பாதிக்கப்படாவிட்டாலும், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்கள் சிறு வியாபாரிகள் மற்றும் கடல்சார் தொழில்களை நம்பி இருந்த சுமார் ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கும் ஒரு வேட்டி, ஒரு சேலை, இரண்டு போர்வைகள், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், மளிகைச் சாமான்கள், பாத்திரங்கள் முதலியவற்றை வாங்க 2,000 ரூபாய், ஆக 3,000 ரூபாய் மதிப்பிலான உடனடி நிவாரண உதவித் தொகுப்பை வழங்கிட நான் 31-12-2004 அன்று ஆணையிட்டேன். இந்த இரண்டு தொகுப்பு உதவித் திட்டங்களுக்காக 120 கோடி ரூபாய் செலவிட ஆணையிட்டேன்.





சுனாமியால் வாழ்வாதாரங்களை முற்றிலுமாக இழந்த மீனவர்களின் துயர நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் உடனடியாகத் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெற்று, கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக 65 கோடி ரூபாய் மதிப்பிலான தொகுப்பு உதவிகளை வழங்கிட 28-12-2004 அன்றே நான் ஆணையிட்டேன்.

மீனவர்கள், சேதமடைந்த தங்களது கட்டுமரங்களையும், வள்ளங்களையும், விசைப் படகுகளையும் பழுதுபார்க்கவும், புதிய படகுகள் வாங்குவதற்கும் மற்றும் சுனாமியால் வாழ்வாதாரங்களை இழந்த இதர குடும்பங்கள் தங்களது தொழிலை முழுவதுமாகத் தொடங்குவதற்கும் ஏறத்தாழ இன்னும் மூன்று மாதங்கள் ஆகும்.

எனவே, அதுவரை இக்குடும்பங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திட தக்க உதவிகள் வழங்க வேண்டியது அவசியமாகும். ஆகவே, சுனாமியால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் உடனடி நிவாரண உதவித் தொகுப்பினைப் பெற்ற சுமார் மூன்று இலட்சம் குடும்பங்களுக்கும் மேலும் ஒரு நிவாரண உதவித் தொகுப்பை வழங்க நான் முடிவெடுத்துள்ளேன்.

இந்தத் தொகுப்பு உதவித் திட்டத்தின்படி, மேற்குறிப்பிட்ட சுமார் மூன்று இலட்சம் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு 30 கிலோ அரிசி மற்றும் 350 ரூபாய் மதிப்புள்ள 3 லிட்டர் மண்ணெண்ணெய், பாமாயில், துவரம் பருப்பு, மஞ்சள் பொடி, புளி, மிளகாய் வற்றல், சாம்பார் பொடி, அயோடின் கலந்த உப்பு, சர்க்கரை, தேயிலைத் தூள் ஆகிய பொருட்களும், 1,000 ரூபாய் ரொக்க உதவியும், மேலும் மூன்று மாதங்களுக்கு வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1,526 ரூபாய் மதிப்புள்ள இந்தத் தொகுப்பு உதவி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். இந்த உதவித் திட்டம் சுமார் 137 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 11-05

சென்ற மாதம் இந்த அரசு வழங்கிய நிவாரண உதவித் தொகுப்பைப் பெற்ற ஒருசில குடும்பத் தலைவர்கள், அந்த உதவிகளைத் தங்களது

இல்லங்களுக்கு முழுமையாகக் கொண்டுபோய்ச் சேர்க்கவில்லை என்று புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தகைய உதவித் தொகுப்பை அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்களிடம் நேரடியாக வழங்கினால், இதுபோன்ற புகார்கள் அறவே எழாது என்று நான் கருதுகிறேன். எனவே, தற்போது வழங்கப்படும் நிவாரணத் தொகுப்பு உதவிகளை சம்பந்தப்பட்ட குடும்பங்களின் இல்லத் தலைவிகளிடம் நேரடியாக வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, அந்தந்தக் குடும்பத் தலைவரின் மனைவி அல்லது தாய் அல்லது அவரது மூத்த மகளிடம் இந்த உதவிகள் வழங்கப்படும்.

தற்போது வழங்கப்படும் இந்த நிவாரண உதவிகள் அனைத்தும், சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக அந்தந்த கிராமங்களில் அல்லது வார்டுகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட அமைக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரண ஆலோசனைக் குழுக்களின் முன்னிலையில் வழங்கப்படும்.

சுனாமி பேரலைகளால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், பொதுச் சொத்துக்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளைச் சீர்படுத்தவும், 4,800 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கும்படியும், கடலோரப் பகுதிகளில் தடுப்புச் சுவர், தூண்டில் வளைவுகள் ஆகியவை கட்டுவதற்காக மேலும் 5,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு அளிக்கவும் மத்திய அரசை நான் கோரியிருந்தேன். இதில் மீனவர்கள் மறுவாழ்வுக்கும், மீன்பிடித் துறைமுகங்களை மீளக் கட்டுவது போன்ற உள்கட்டமைப்புக்காகவும், மத்திய அரசிடம் கோரப்பட்ட மொத்தத் தொகை 1030.93 கோடி ரூபாய் ஆகும். இத்தொகையில் மீனவர் மறுவாழ்விற்காக மட்டும் கோரப்பட்ட மானியத் தொகை 907.53 கோடி ரூபாய் ஆகும்.

19-1-2005 அன்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபின் மத்திய நிதியமைச்சர் மற்றும் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் அளித்த பத்திரிகைப் பேட்டியில், மத்திய அரசால் மீனவர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பு உதவி பற்றித் தெரிவித்தார்கள். எனினும், மத்திய அரசிடமிருந்து அதுபற்றிய அதிகாரபூர்வமான ஆணைகள், 29-1-2005 அன்றுவரை பெறப்படாத நிலையில், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரத் தொகுப்பு உதவிகள் வழங்குவதில் மேலும் தாமதம் ஏற்படுவது, மிக விரைவாக



நடைபெற்றுவரும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கு ஒரு பின்னடைவாக அமைந்துவிடும் என்பதால், 19-1-2005 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்ட மாநிலங்களுக்கான நிதி உதவி குறித்த தகவலின் அடிப்படையில், மீன்பிடிக் கலன்களைப் புதிதாக வாங்கிக் கொள்வது உள்ளிட்ட மீனவர்களின் வாழ்வாதார நிவாரணங்களுக்காக, 396 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் தொகுப்பு உதவித் திட்டத்தை நான் 29-1-2005 அன்று அறிவித்தேன்.

இந்நிலையில், 29-1-2005 அன்று மத்திய நிதியமைச்சர் அவர்கள், பொதுத் துறை வணிக வங்கிகளுக்கு ஓர் ஆணை பிறப்பித்துள்ளதாக பத்திரிகைச் செய்தி வெளியானது. இதில், மீனவர்களுக்குச் சிறு படகுகள், விசைப் படகுகள் புதிதாக வாங்குவதற்கும், விசைப் படகுகள் பழுதுபார்ப்பதற்கும் மானியத் தொகை மற்றும் கடன், பொதுத் துறை வணிக வங்கிகள் வாயிலாக மட்டுமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இது மாநில அரசைப் புறக்கணித்துவிட்டு செயல்படுத்தும் திட்டமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அதேநேரத்தில் மாநில அரசின் தலைமைச் செயலர், நிவாரண ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், மீனவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று, பொதுத் துறை வணிக் வங்கிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நேரடியான ஆணையும் வெளியிடப்பட்டிருந்தது. மாநில அரசு என்ற ஒன்று இருப்பதாகவே கருதாமல், அது அறவே புறக்கணிக்கப்படும்வகையில் உள்ள இச்செயல், சரியான அணுகுமுறையாக அமையாது என்று 30-1-2005 அன்றே விளக்கமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலமாக எடுத்துரைத்தேன்.

முற்பகல் 11-10

தற்போது, மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்திலிருந்து, சுனாமி நிவாரண உதவிகள் பற்றிய தெளிவான அரசாணை 31-1-2005 ஆம் நாளிட்டு வெளியிடப்பட்டுள்ளது. 29-1-2005 அன்று மத்திய நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையிலிருந்து, 31-1-2005 ஆம் நாளிட்ட ஆணை மாறுபட்டுள்ளது. அதாவது, மத்திய நிதி அமைச்சர் மீனவர்களுக்கு வழங்கக்கூடிய படகுகளுக்கான மானிய உதவி, பொதுத் துறை வங்கிகள் வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அதற்கு நேர்மாறாக, நான் மாண்புமிகு

பாரதப் பிரதமர் அவர்களுக்கு 30-1-2005 அன்று எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி, இந்த மானியத் தொகை மாநில அரசு வாயிலாகத்தான் வழங்கப்படும் என்று 31-1-2005 ஆம் நாளிட்ட ஆணையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு மீனவர் வாழ்வாதாரங்களுக்கு 356.54 கோடி ரூபாய் மானிய உதவியாக வழங்கும் என்றும், இது மாநில அரசுக்கு வழங்கப்படும் என்றும் அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, நான் எடுத்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசிற்குரிய அதிகாரம் மற்றும் பொறுப்புகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் அடிப்படையில், முழுவதுமாக சேதமடைந்த மரக் கட்டுமரங்களுக்குப் பதிலாக புதிய மரக் கட்டுமரங்கள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, மரக் கட்டுமரம் மற்றும் வலையின் விலையான 32,000 ரூபாய் முழுவதும் மானியமாக வழங்கப்படும் திட்டத்தை நான் நேற்று அதாவது 2-2-2005 அன்று துவக்கி வைத்தேன். அடுத்த கட்டமாக, முழுவதுமாகச் சேதமடைந்த விசைப் படகுகளுக்குப் பதிலாக புதிய விசைப் படகுகள் வாங்க விரும்பும் மீனவர்களுக்கு, அதிகபட்ச மானியத் தொகையாக 5 லட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தை நாளை, அதாவது 4-2-2005 அன்று நான் தொடங்க உள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விசைப் படகுகள் பழுது நீக்கம் செய்வதற்கும், கண்ணாடி இழைக் கட்டுமரம், வள்ளம் மற்றும் விசைப் படகுகள் ஆகியவற்றைப் புதிதாக வாங்குவதற்கும் மானியம் போக எஞ்சியுள்ள தொகை, வங்கிகள் மூலம் கடனாகப் பெறப்பட வேண்டும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பு, முழு மானியத் தொகை எதிர்பார்த்த மீனவர்களுக்கு முழு திருப்தி அளிக்கவில்லை. மீனவர்களின் மீன்பிடிக் கலன்களுக்கும், அவர்களது வீடுகளுக்கும் ஏற்பட்டுள்ள பெரும் இழப்பைக் கருத்தில் கொண்டு, எவ்விதக் கடனோடும் இணைக்காமல் முழுத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று நான் மத்திய அரசிடம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறேன். மத்தியக் குழுவிடமும் இதுகுறித்து நான் வலியுறுத்தினேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்த போதும், மத்திய உள் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோதும், தொடர்ந்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சருடன் கலந்து ஆலோசித்தபோதும், மீண்டும் மத்திய



வேளாண்மைத் துறை அமைச்சரோடு நடந்த கூட்டத்தின்போதும், மீனவர்களுக்கு முழு மானியத்துடன் மறுவாழ்வுத் தொகுப்பு உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்தினேன். தற்போது 31-1-2005 ஆம் நாளிட்ட மத்திய அரசின் ஆணையில், மானியம் மற்றும் கடனுடன்தான் மீனவர்களுக்கான மறுவாழ்வு நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மீனவர்கள், தங்களது வாழ்வாதாரங்களை முழுவதுமாக திரும்பப் பெறத் தேவையான மொத்தத் தொகை 923.01 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசு 356.54 கோடி ரூபாய் மானியமாக, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அதாவது - National Calamity Contingency Fund-லிருந்து வழங்கும் என்று தெரிவித்துள்ளது. மாநில அளவிலான பேரிடர் நிவாரண நிதி, அதாவது, Calamity Relief Fund முழுவதும் செலவிடப்பட்டுவிட்ட நிலையில்தான் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்த நிவாரணத் தொகையையும் மானியமாக வழங்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். இதுபோன்ற அசாதாரண பேரிடருக்கு, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்துதான் நிதி உதவி வழங்கப்பட வேண்டும். எனவே, பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு வாழ்வாதாரம் அளிப்பதற்கான முழுச் செலவையும் மானியமாக வழங்க வேண்டும் என்று மத்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிக்கை அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல், திரு. லா. சந்தானம்.

முற்பகல் 11-15

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

# 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

[2005 பிப்ரவரி 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடர்ச்சி. திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமேகலையாய் வந்திருந்து மக்களின் மனமெல்லாம் குடியிருக்கும் மாதரசியே, துன்பச் சிலுவை சுமந்து மக்கள் துயர் துடைக்கத் தூங்காது பணி செய்யும் தூய தேவதையே, எட்டுத் திக்கும் தமிழகத்தின் புகழ் பரப்ப, 'எங்கும் திட்டம், எதிலும் திட்டம்' என கவர்னர் உரை மூலம் தெளிவுபடுத்தியுள்ள கருணைத் தெய்வமே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் பாதம் பணிந்து வணங்கி, கவர்னர் உரையின்மீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பாரதி, ஒளிபடைத்த கண்ணினாய், உறுதிகொண்ட நெஞ்சினாய் வா, வா, வா என்று சொல்லி, தெளிவுபெற்ற மதியினாய், சிறுமைகண்டு பொங்குவாய் வா, வா, வா என்று சொல்கிறான். இதைத்தான் மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டு வலுவான மன உறுதி, அசையாத நம்பிக்கை, எடுத்த கடமையைத் திறம்பட நிறைவேற்றும் குறிக்கோள் கொண்டு செயல்படுகின்ற அரசு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெளிவுபடுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) பலரை கதி கலங்கச் செய்து வந்த கடத்தல் கொள்ளையன் வீரப்பன் ஒழித்துக்கட்டப்பட்டுள்ளான் என்று பாராட்டியுள்ளார்.

நான் எண்ணிப் பார்க்கிறேன். வீழ்த்த முடியுமா வீரப்பனை என்று வீர வசனம் இதே அவையிலே பேசினார்கள். வீழ்த்துவேன் வீரப்பனை என்று இதே அவையிலே எங்கள் அன்புத் தாய் வீர சபதம் கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தநேரத்தில் இதே அவையிலே எக்காளமிட்டுச் சிரித்தார்கள் முடியுமா என்று. நான் எண்ணிப் பார்க்கிறேன். அவர்களுடைய எக்காளச் சிரிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, வீரப்பனை ஒழித்துக்கட்டியதன் மூலமாக, தமிழக மக்களை வெற்றிச் சிரிப்பு சிரிக்க வைத்தவர் எங்களுடைய புரட்சித் தலைவி



அம்மா அவர்கள். வீரப்பனை வதம் செய்து, விந்தியத்தையும் விஞ்சிவிட்ட வீரத்தாய் எங்களுடைய வேலுநாச்சியார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இன்றைக்கு உலகம் ஒத்துக்கொண்டுள்ளது.

வீழ்த்தப்பட்டான் வீரப்பன் என்கின்ற செய்தியைக் கேள்விப்பட்டு தமிழகம் மகிழ்ச்சி அடைந்தது. வீழ்த்தப்பட்டான் வீரப்பன் என்கின்ற செய்தியைக் கேள்விப்பட்டு, இந்தியா பெருமை அடைந்தது. வீழ்த்தப்பட்டான் வீரப்பன் என்கின்ற செய்தியைக் கேள்விப்பட்டு, உலகமே வியந்தது. தமிழகமே பெருமைகொள்கின்றபோது, இந்தியாவே பாராட்டுகின்றபோது, உலகமே வியக்கின்றபோது ஒரே ஒரு பெரியவர் மட்டும் வெளியிலே உட்கார்ந்துகொண்டு இரங்கற்பா வாசித்தாரே, அதற்குத்தான் தமிழக மக்களுக்கு அர்த்தம் தெரியவில்லை. ஒருவேளை நான் எண்ணிப் பார்க்கிறேன். 1996-லே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மறைமுக கொள்கைப் பரப்புச் செயலாளராக அந்தக் கொடியவன் விளங்கினானே அந்தப் பாசமோ என்னமோ, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் 1996-லே இந்த நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடனேயே, காட்டிற்குள்ளே இருந்து வாழ்த்துச் செய்தி அனுப்பினான் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததே, அதனாலோ என்னவோ அந்த வீரப்பன் வீழ்த்தப்பட்டான் என்றவுடனே அவனுக்கு இரங்கற்பா வாசித்துக் கொண்டிருக்கிறார் ஒரு பெரியவர்.

ஆயிரக்கணக்கான யானைகளைத் துடிக்கத்துடிக்கக் கொன்று தந்தங்களை விற்று வாழ்ந்த ஒரு கொடியவன், நூற்றுக்கணக்கான பேர்களை, அப்பாவிகளைக் கொஞ்சம்கூட இரக்கமே இல்லாமல் கொன்று, அதன்மூலமாக மகிழ்ச்சியடைந்த ஒரு பஞ்சமாபாதகன், கோடிக்கணக்கான மதிப்பிலான சந்தன மரங்களைக் கடத்தி விற்று கொடிய வாழ்க்கை வாழ்ந்த ஒரு கொடுமைக்காரன், வீழ்த்தப்பட்டான் என்கின்ற செய்தியைக் கேள்விப்பட்டு, விழா நடத்தாவிட்டாலும் பரவாயில்லை, அந்த வீரச் செயலை நீங்கள் கொச்சைப்படுத்தாதீர்கள் என்றுதான் தமிழக மக்கள் இன்றைக்கு எதிர்க்கட்சியினரை வேண்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது எங்களுடைய ஆட்சியிலே, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே குறை காண முடியாதவர்கள், குற்றங்காண முடியாதவர்கள், இந்த ஆட்சியிலே என்ன குறை என்று சுட்டிக்காட்ட முடியாதவர்கள், பிணத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த டிசம்பர் மாதம், 26 ஆம் தேதி சுனாமி

எமன் வந்து தமிழக மக்களைச் சுருட்டிப்போட்ட அந்த நாளில், இந்தியாவே ஸ்தம்பித்து நின்ற அந்த நாளில், தமிழக மக்களெல்லாம் என்ன செய்வது என்று கதி கலங்கிப் போயிருந்த அந்த நாளில், எண்ணிப் பார்க்கிறேன், நேரடியாக எங்கள் தாய் களத்திற்குச் சென்றார், மக்களைச் சந்தித்தார். கவலைப்படாதீர்கள் என்று சொல்லி, அவர்களுக்குத் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்து, சாப்பிடுவதற்கு சாப்பாடு கொடுத்து, பிணங்களையெல்லாம் புதைப்பதற்கு, எரிப்பதற்கு ஏற்பாடு செய்து, தொற்றுநோய் வாராமல் தடுப்பதற்கு டாக்டர்களை அழைத்துச்சென்று, ஊருக்கெல்லாம் உண்பதற்கு உணவு கொடுத்துவிட்டு, தான் உண்பதற்கு நேரம் இல்லாமல் உழைத்துக் கொண்டிருந்த அந்தத் தாயை (மேஜையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னையை, மக்களுக்காக உழைக்கின்ற அந்த உத்தமத் தாயை, நேற்று அரசியலுக்கு வந்த ஒரு கற்றுக்குட்டி, அறிக்கை வெளியிடுகிறது, குறை சொல்கிறது என்று சொன்னால், அதை எங்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதனால்தான் நாங்கள் சொல்கிறோம், அரசியல் ஆக்காதீர்கள் என்று.

முற்பகல் 11-20

இந்தோனேசியாவிலே பூகம்பம் ஏற்பட்டு, அந்தமானிலே கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, தமிழகம் பாதிக்கப்பட்டது, இலங்கை பாதிக்கப்பட்டது. மற்ற நாடுகளையெல்லாம் நான் பார்க்கிறேன். பிணங்களைப் புதைக்க முடியவில்லை அவர்களால். பிணங்களை எரிக்க முடியவில்லை அவர்களால். எங்கே பார்த்தாலும் பிண நாற்றம். ஒரு வாரம் ஆகியும் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட முடியவில்லை அவர்களாலே என்று செய்திகள் வந்து கொண்டிருக்கிறபொழுது, கதிகலங்கிப் போயிருந்த தமிழக மக்களிடத்திலே கருணை கொண்டு, அந்தச் சுனாமி தாக்கிய மூன்றே நாளில், தமிழக மக்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அல்லவா? (மேஜையைத் தட்டும் ஒலி)

சுனாமியாலே பாதிக்கப்பட்டு, அனாதையாக்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெயராலே 5 இலட்சம் ரூபாய் வைப்பீடு; திருமணம் ஆகாத, பெற்றோர்களை இழந்து, அனாதை ஆக்கப்பட்டுள்ள, நிர்கதியாய் நிற்கின்ற தமிழகத்து இளம் பெண்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வைப்பீடு (குறுக்கீடுகள்) 3 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் வைப்பீடு; அனாதையாக்கப்பட்டுள்ள குழந்தைகளை அரசே தத்தெடுத்து



அவர்களைக் காப்பாற்றுவதிலே நடவடிக்கை; திருமணம் ஆகாத அந்தப் பெண்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அரசு சேவை மையங்களிலே பாதுகாப்பதற்கு ஏற்பாடு; இப்படியெல்லாம் செய்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்பொழுது ஓர் அறிக்கையை வெளியிட்டார்களே, வாசித்தார்களே, என்னென்ன பணிகளை நாங்கள் இப்போது செய்திருக்கிறோம், மீனவர்களுக்காக, வீடிழந்த மக்களுக்காக, வாழ்க்கையிழந்து தவிக்கின்ற சகோதர சகோதரிகளுக்காக தமிழக அரசு கொடுக்கின்ற நிவாரணப் பணம், அந்த மக்களைப்போய்ச் சென்றடைய வேண்டும் என்பதற்காக, நாங்கள் என்னென்ன நிவாரணப் பணிகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்று விரிவாக எங்கள் தாய் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத்திற்கு வராமலேயே, தான் சேப்பாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்று வெளியிலே சொல்லிக்கொண்டு, மாதந்தோறும் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கின்ற அந்தப் பெரியவர், நேற்று அரசு விழாவிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விழா அல்ல, அது அரசு விழா. நான் மாலைப் பத்திரிகையிலே செய்தியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அரசு விழாவிலே எங்கள் தாயை விமர்சனம் செய்திருக்கிறார். இயற்கைச் சீற்றம் ஏற்பட்டவுடனேயே இவர், ஒற்றுமையோடு செயல்படவேண்டும் என்று நினைத்தாராம். ஆனால், இந்த அரசு விமர்சனம் செய்கிறது என்று யார் சொல்கிறார்? ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவதைப்போல, சட்டசபைக்கு வராமல், பதில் பேசாமல், (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறாமல் வெளியிலேயிருந்து, அரசு விழாவிலே ஒருவர் பேசியிருக்கிறார். அந்தப் பெரியவரை, வயதிலே மூத்தவரை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறவரை, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் சட்டமன்றத்திற்கு வராவிட்டாலும் பரவாயில்லை; உடல் நலமின்றி நீங்கள் வெளியிலே இருந்துகொண்டாலும் பரவாயில்லை; மக்கள் கேட்கிறார்கள்; அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 11-25

சுனாமியால் மக்கள் பாதிக்கப்பட்டவுடன் அதை அரசியல் ஆக்கியது யார்? விமர்சனம் செய்தது யார்? மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டுமென்று எங்கள் தாய் எண்ணியபோது,

எங்களுடைய தாயின் பணியைக் கொச்சைப்படுத்தியது யார்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

சுனாமியால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, எங்கள் தாய் ஓடோடிச் சென்றாரே, கவலைப்படாதீர்கள் கண்ணீர் சிந்தாதீர்கள்; உங்களை வாழ வைப்பதற்கு நான் இருக்கிறேன்; உங்கள் சகோதரி நான் இருக்கிறேன்; உங்கள் தாய் நான் இருக்கிறேன்; உங்களுடைய ஆசான் நான் இருக்கிறேன் என்று சொல்லி, அந்தப் பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் நேரிலே சென்று ஆறுதல் அளித்து, அவர்களுடைய கண்ணீரைத் துடைத்த எங்களுடைய தாயினுடைய பணியைக் கொச்சைப்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்களுடைய பேரப் பிள்ளை அல்லவா? மறுக்க முடியுமா?

இதயம் உள்ளவர்கள் எல்லாம் அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு, பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அந்த மக்களுக்கு உதவி செய்தபோது, அது தன்னார்வத் தொண்டு நிறுவனமாக இருந்தாலும் சரி, நல்ல உள்ளங்கொண்ட மனிதாபிமானம் உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அத்தனைப் பேரும் அந்தப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, மக்களுக்குத் தங்களாலே முடிந்த உதவிகளைச் செய்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பெரியவர் கருணாநிதி அவர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள்? உங்களுடைய மத்திய அமைச்சரை மனு கொடுப்பதற்கு கவர்னர் மாளிகைக்கு அனுப்பினீர்கள். எதற்காக? நிவாரணப் பணிகள் ஒன்றுமே நடக்கவில்லையென்று சொல்லி அரசியல் விளம்பரம் தேடுவதற்காக. மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும், (குறுக்கீடுகள்) இணைந்து பணியாற்றுகின்றபொழுது — மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் இணைந்து பணியாற்றிட வேண்டும் என்று எங்களுடைய தாய் எண்ணுகின்றபோது ......

**திரு. துரைமுருகன்:** Speaker Sir, நான் புறக்கணிக்க.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திருமதி வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்) வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள்.



**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** வெளியிலே மேடை கிடைத்து விட்டது என்பதற்காக கூடியிருப்பவர்கள் எல்லாம், அந்த விழாவிலே உட்கார்ந்து இருப்பவர்கள் எல்லாம் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், அவர்கள் கைத்தட்டுகிறார்கள் என்பதற்காக, இந்த அரசு செய்கின்ற பணியைக் கொச்சைப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்றையதினம் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் புகழேந்தி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார். முதலமைச்சர் அம்மா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இரண்டு கட்டப் பணிகளை நாங்கள் முடித்துவிட்டோம் என்று ஆணித்தரமாக, ஆதாரபூர்வமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். உடனே புகழேந்தி அவர்கள், எதை வைத்துச் சொல்கிறீர்கள்; கணக்கெடுப்புப் பணி முடிந்துவிட்டதா; காணாமல் போனவர்களைப் பற்றியெல்லாம் கணக்கு எடுத்துவிட்டீர்களா என்று இங்கே கேட்டார்.

அவருக்கு நான் ஒன்றைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். கணக்கெடுக்கின்ற பணி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள் சென்றடைய வேண்டுமென்கின்ற நல்ல எண்ணம், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதற்கு நான் ஓர் உதாரணத்தைச் சொல்கிறேன். என்னுடைய தொகுதி, கரிமேட்டுப் பகுதியிலே ஒருவர். அவருடைய பெயர் கனி. அந்த கனி, தன்னுடைய நண்பர்களோடு நாகப்பட்டினம் மாவட்டத்திற்குச் சென்றார். சென்ற இடத்திலே அவரைக் காணவில்லை. அவருடைய மனைவி, இளம் பெண், பிறந்து 40 நாட்களேயான பச்சிளங்குழந்தையைத் தூக்கிக்கொண்டு என்னிடத்திலே வந்தார். எனக்கும் இதை யாரிடத்திலே தெரியப்படுத்துவது, சென்னைக்கு வந்து அம்மா அவர்களிடத்திலே தெரியப்படுத்துவதா அல்லது மதுரை Collector அவர்களிடத்திலே தெரியப்படுத்துவதா, நாகை Collector-இடத்திலே தெரியப்படுத்துவதா என்று எண்ணிக்கொண்டிருந்தபோது, சம்பவம் நடந்தது நாகை மாவட்டம். எனவே, நாகை மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்திலேயே தொலைபேசியிலே தொடர்புகொள்வோம் என்று சொல்லி நான் அங்கே தொலைபேசியிலே தொடர்புகொண்டபோது, நாகை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள், எங்கே மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், பரவாயில்லை; அவர்கள் காணாமல் போனது இங்கே; இங்கேதான் உடல் இல்லையென்று நீங்கள் சொல்கிறீர்கள்;

ஒரு மனு மட்டும் கொடுங்கள்; நாகை கடற்கரையிலே அந்த உடலைக் காணவில்லை என்று நீங்கள் ஒரு மனுவை மட்டும் கொடுக்கச் சொல்லுங்கள்; உடனடியாக நான் நடவடிக்கை எடுக்கிறேன்; இந்த மனுவை அம்மா அவர்களுக்கு அனுப்புகிறேன்; அம்மா அவர்கள் கொடுக்கின்ற பணத்தை மதுரை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி அங்கேயே நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய இந்தப் பதிலுக்கு என்ன காரணம்? எங்களுடைய அம்மா அவர்களுடைய உத்தரவு, எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆணை. பாதிக்கப்பட்டவர்கள் எங்கேயிருந்தாலும், அவர்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு அந்த நிவாரணப் பணம் போய்ச் சென்றடையவேண்டுமென்று எங்கள் அம்மா அவர்கள் ஆணையிட்டதன் காரணமாக, (மேசையைத் தட்டும் ஒலி) துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே செத்துப் போன தி.மு.க. உறுப்பினர்களுடைய பட்டியலை எல்லாம் நீங்கள் கொடுத்து, இதுவும் காணாமல் போனவர்கள் பட்டியல், சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் அதை நாங்கள் சேர்க்க முடியாது. (குறுக்கீடுகள்) எனவே, உண்மையிலேயே காணாமல் போனவர்களுடைய பட்டியல் இங்கே சேர்க்கப்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.. (குறுக்கீடுகள்)

*(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது உங்கள் மறுப்பைச் சொல்லுங்கள். அவர்கள் கருத்தைச் சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு இல்லை. (கூச்சல் - குழப்பம்)

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** நிவாரணப் பணிகளைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக, நிவாரணப் பணிகளின் மூலமாக அம்மா அவர்களுக்கு நற்பெயர் கிடைக்கக் கூடாது என்பதற்காக (குறுக்கீடுகள்) ...

*(திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)*



**•மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உதாரணத்திற்குத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறாரே தவிர, வேறு அல்ல. ஒரு உதாரணத்திற்கு, தி.மு.க. தலைவர் வெளியே பேசுகிறபோது எங்கள் அம்மா அவர்களைக் கொச்சைப்படுத்தி .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தவறாகச் சொல்லவில்லை. அவர்கள் உவமையாகச் சொல்கிறார்கள், வளர்மதி ஜெபராஜ் சொல்கிறார்கள், குற்றச்சாட்டு இல்லை, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, திருமதி வளர்மதி சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வளர்மதி ஜெபராஜ் அவர்கள் ஒரு உதாரணத்திற்கு, ஒரு எடுத்துக்காட்டுக்குத்தான் பேசிக்கொண்டிருக்கிறாரே தவிர, இப்படிச் சம்பவம் நடக்கவேண்டும் என்று அவர் சொல்லவில்லை. தி.மு.க. தலைவர் வெளியிலே பேசுகிறபோது, பல்வேறு உதாரணங்களைச் சொல்லித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதேபோல ஒரு எடுத்துக்காட்டுக்குத்தான் அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** நான் எதிர்க்கட்சி நண்பர்களை.. (குறுக்கீடுகள்) மக்கள் வாக்களித்து இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். (கூச்சல் - குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடித்த பிறகு வாய்ப்புக் கொடுக்கிறேன். அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு, விளக்கம் சொல்ல வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பேசி முடித்த பிறகு, விளக்கம் சொல்ல வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வளர்மதி ஜெபராஜ், பேசுங்கள்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன அர்த்தத்திலே சொன்னேன் என்று சொன்னால், பத்திரிகையிலே சில செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இந்த

தி.மு.க., மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலே இருப்பவர்கள் சுனாமியினாலே அல்ல, ஏற்கெனவே இறந்துபோய் இருந்தாலும்கூட அவர்களைப் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், இறந்தவர்களின் பெயர்களைத்தான் இவர்கள் பயன்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டார்களேயொழிய, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் அல்ல. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்களே அதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். திருமதி வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது, இறந்துபோன மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை, அவர்களைத்தான், அவர்கள் பட்டியல் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னாரேயொழிய, யாரையும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் வளர்மதி அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி வளர்மதி அவர்கள் பேசிய பிறகு, வாய்ப்பைத் தாருங்கள். எதிர்க் கட்சிகள் பேசுவதற்கு வாய்ப்பைத் தரலாம். (கூச்சல் - குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடிக்கட்டும். முடிந்தவுடன் விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும். முடிந்தவுடன் விளக்கம் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் வளர்மதி.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வளர்மதி ஜெபராஜ் அவர்கள் தெளிவாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். மீனவர் சங்க உறுப்பினர்களில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். அதிலே தி.மு.க.-வைச் சார்ந்தவர்களும் இருந்திருக்கலாம். அவர்களும் இந்தப் பணத்தைப் பெற்றிருக்கலாம். அந்த உதாரணத்தை வைத்துத்தான் அவர் பேசுகிறாரே தவிர, தி.மு.க. என்று அவர் வலியுறுத்திச் சொல்லவில்லை. அவர் தெளிவாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். மீனவர் சங்க உறுப்பினர்களிலே, தி.மு.க.-வைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களும் பணம் வாங்கியிருக்கிறார்கள். அதைத்தான் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், திரு. பரிதி, இடத்திற்குப்போய் உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் அவர்களை மட்டும் பதிலளிக்க அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-35*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இருக்கிற இன்னொரு கட்சியைப் பற்றி, அதன் தலைவரைப் பற்றி ஓர் உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை சுமத்துகிறார். நாங்கள் மறுத்தும் தி.மு.க.-விலே செத்தவர்களுடைய list-ஐ எல்லாம் கொண்டுவந்து கொடுத்து, அதற்கு நிதி கேட்கிறார்கள் என்று சொல்கிறார். ஆதாரம் இருந்தால் அதை நிரூபிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நாங்கள் யாரும், எங்கள் கட்சிக்காரர்களில் செத்துப்போனவர்களை எல்லாம் கொண்டுபோய் வைத்து நிதி கேட்கவில்லை. இன்னொன்று கேட்கிறேன், அப்படியே கேட்டால் என்ன தப்பு? சுனாமி அடித்தபோது அ.தி.மு.க.-காரர்களை மட்டும் பார்த்து அடித்துக் கொன்றதா? தி.மு.க.-காரனைக் கொல்லவில்லையா, அப்போது. தி.மு.க.-காரன் நிதி கேட்கக் கூடாதா?

அப்போது உங்கள் கட்சிக்கு மட்டுந்தான் கொடுக்கப் போகிறீர்களா? இந்தப் பதிலைக்கூட நாங்கள் சொல்லக்கூடாது என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்போது அவர் சொன்னது சரிதானே?

**திரு. துரைமுருகன்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் கட்சி என்று பார்க்கக்கூடாது. நீங்கள் முதலமைச்சர், நாட்டை ஆள்கிறீர்கள். எல்லோருக்கும், எங்களுக்கும் சேர்த்துத்தான் முதலமைச்சர். நாங்களும்தான் வரி கொடுக்கிறோம், எல்லோரும்தானே கொடுக்கிறோம்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இங்கே கூறிக்கொண்டிருக்கிறார். சுனாமியால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நானும், இந்த அரசும் செயல்பட்டோமே தவிர, பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று நாங்கள் பிரித்துப் பார்க்கவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இந்த சுனாமி நிவாரணப் பணிகளில்கூட அரசியலைப் புகுத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதை அரசியல்படுத்தி, கொச்சைப்படுத்தி தேவையற்ற குற்றச்சாட்டுகளை கூறிக்கொண்டிருப்பது தற்போதும் தி.மு.க.தான் என்பதை அவர்களே உறுதி செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அர்த்தமற்ற குற்றச்சாட்டை துரைமுருகன் சுமத்தவில்லை. அர்த்தமற்ற உறுப்பினர் பேசியதால்தான், நான் இங்கே சொல்ல வேண்டிய கட்டாயம் அர்த்தம் இல்லாமல் எனக்கு ஏற்பட்டது. நான் இப்போதும் சொல்கிறேன், நீங்கள் சுனாமிக்கு, இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருக்க வேண்டுமென்றுதான் என்னுடைய தலைவர் அவர்கள் அறிக்கை விட்டார்கள் -- (குறுக்கீடு) நீங்கள் இல்லை என்று சொல்லலாம்; அறிக்கை விட்டிருக்கிறார்கள் -- அந்த நல்லெண்ணம் வளர வேண்டுமென்பதற்காகத்தான் தங்களிடத்திலேகூட நிதியைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். எங்களுடைய தோழர்கள், அத்தனைபேரையும், சென்று இறங்கி வேலை செய்யச் சொன்னார்கள்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அதன் தலைவருக்கு நல்ல எண்ணம் என்று திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசி நாம் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். எப்படி நம்புவது? சுனாமி நிவாரணப் பணிகளைத் தமிழக அரசு மிகவும் வேகமாகவும், திறமையாகவும் செய்தது. மிகவும் முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டது என்று, மின்னல் வேகத்துடன் செயல்பட்டது என்று இந்தியாவிலே உள்ள அத்தனை பெரிய தலைவர்களும், அயல்நாடுகளும், உலக வங்கி, Asian Development Bank போன்ற நிதி நிறுவனங்களும், அனைவரும் பாராட்டியபோது நிவாரணப் பணிகளே நடைபெறவில்லை என்று குற்றஞ்சாட்டியது தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ஒருவர்தான் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியுள்ளது. அதேநேரத்தில் கவர்னர் உட்பட மத்திய அமைச்சர்கள் அனைவரும், தமிழக அரசு விரைந்து செயல்பட்டவிதத்தைப் பாராட்டிக் கொண்டிருந்தபோது, ஆளுநர் மாளிகைக்குச் சென்று, தமிழக அரசு நிவாரணப் பணிகளையே செய்யவில்லை என்று மனுக் கொடுத்தது இன்னொரு தி.மு.க. அமைச்சர் திரு. ராஜா அவர்கள்.

நிதி கொடுத்ததைப் பற்றி இங்கே சொல்கிறார்கள். ஆரம்பத்தில் தி.மு.க. தலைவர், திருமதி சோனியா காந்தி அவர்களிடமும், பாரதப் பிரதமர் அவர்களிடமும் மட்டும்தான் நிவாரண நிதியைக் கொடுத்தார். இதற்குத் தமிழகமெங்கும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. மக்கள் எல்லோரும் ஏச ஆரம்பித்தார்கள். இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர், தமிழர்களின் தலைவர் என்று சொல்லிக்கொண்டு, இங்கே தமிழக அரசுக்குக் கொடுக்காமல், அங்கே சோனியா காந்தி அவர்களிடமும், பாரதப் பிரதமரிடமும் நிதி வழங்குகிறாரே என்ற குற்றச்சாட்டு எழுந்ததால், அவர்கள் 21 இலட்சம் ரூபாயை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அதன்பின்னர், நேற்று சன் டி.வி. பற்றிய பிரச்சினை இங்கே எழுந்தது. ஏதோ அவர்கள் கொடுக்க வந்த நிதியை நாங்கள் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டதாக இங்கே தெரிவிக்கப்பட்டது. இதே குற்றச்சாட்டை வெளியில் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும் தெரிவித்தார். அதற்கு நேற்றே விளக்கம் அளித்துவிட்டேன். என்ன நடந்தது? அவர்கள் குறிப்பிட்ட தேதியில், என்னால் அவர்களைச் சந்தித்து நிதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. வேண்டுமானால், தலைமைச் செயலாளரிடம் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. ஏன் தலைமைச்

செயலாளரைச் சந்தித்துக் கொடுக்கவில்லை? எத்தனையோ பேர் தலைமைச் செயலாளரிடம் நிதியைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பலபேர், தபால் மூலம் cheque-களை அனுப்பியிருக்கிறார்கள். எத்தனையோ பேர், அயல் நாடுகளில் வாழ்பவர்கள்கூட, தபால் மூலம் அவர்களுடைய நன்கொடையை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, உண்மையாகவே, தமிழக மக்களுக்கு உதவவேண்டுமென்ற எண்ணம் தி.மு.க.விற்கு இருக்குமேயானால், (மேசையைத் தட்டும் ஒலி) சன் டி.வி.க்கு இருக்குமேயானால், (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சந்தித்துத்தான் அந்தக் காசோலையைக் கொடுக்கவேண்டுமென்ற அவசியம் இல்லையே! தபால் மூலம்கூட அனுப்பியிருக்கலாம்; அல்லது, தலைமைச் செயலாளரிடம் கொடுத்திருக்கலாம். ஆகவே, கொடுக்கவேண்டுமென்ற மனம் இருந்தால் அதற்குப் பல மார்க்கங்கள் உண்டு. கொடுக்க வேண்டுமென்ற மனம் உங்களுக்கு இல்லை; அதனால்தான் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது ஒரு குற்றத்தைத் தேடித் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆனால் நேற்றையதினம் ஐந்தரை கோடி ரூபாயைக் கொண்டுபோய் கலாநிதி மாறன் பிரதமரிடத்திலே கொடுக்கிறபோதுகூட — இதிலே நான்கரை கோடி ரூபாய் வசூலானது; சொந்தப் பணம் ஒரு கோடி ரூபாய் — ஐந்தரை கோடி ரூபாயிலே நான்கு கோடி ரூபாயை என் தாய்த் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டாரே, (குறுக்கீடுகள்) அதை நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று சொன்னால் நல்ல உள்ளத்தை .....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தரை கோடி ரூபாயைப் பிரதமரிடம் வழங்குவதற்கு இவ்வளவு செலவு செய்து, விமானம் மூலம் டெல்லிக்குச் சென்று, அங்கே கொடுப்பதைக் காட்டிலும், இங்கே ஒரு பத்து நிமிடங்கள் வண்டியில் ஏறி, காரில் ஏறி, தலைமைச் செயலகத்திற்கு வந்து, தலைமைச் செயலாளரிடம் கொடுத்துவிட்டுப் போயிருக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், கழுத்தைச் சுற்றி எதற்கு மூக்கைத் தொடவேண்டும்? (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் அவர்கள், அவருக்குரிய தேதி சரியில்லாவிட்டால், இன்னொரு நாளைக்கு வா என்று சொல்லியிருக்கவேண்டும். ஆனால், சன். டி.வி.யில் நிதி வாங்கினால், அந்த சன் டி.விக்குப் பெருமை போய்விடுமே என்பதற்காக, அவர்களை அலட்சியப்படுத்த, (குறுக்கீடுகள்) தலைமைச் செயலாளரிடம் கொடுக்கலாமே என்று சொல்கிறாரே தவிர, அதற்கு மதிப்புத் தரவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சன் டி.வி.யின் சார்பில் திரு. கலாநிதி மாறன் அவர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து ஐந்தரை கோடி ரூபாயைக் கொடுத்து, இதில் நான்கரை கோடி ரூபாயைத் தமிழ்நாட்டிற்கு ஒதுக்குங்கள் என்று கூறியதாக, இங்கே திரு. துரைமுருகன் அவர்கள் தெரிவித்திருக்கிறார். அது தமிழ்நாட்டிற்குத்தான் ஒதுக்கப்படும் என்று என்ன உத்தரவாதம்? மத்திய நிதியில் போய்விட்டால், அந்தமானுக்குப் போகும்; நிக்கோபருக்குப் போகும்; கேரளாவிற்குப் போகும்; ஆந்திராவிற்குப் போகும்; கர்நாடகத்திற்கும் போகும்; பாண்டிச்சேரிக்கும் போகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** எந்த ஊருக்குப் போனாலும் கொடுக்கப்படும். இங்கே வரும். நாங்கள் கொடுத்த பணம் எப்படியும் இங்கே திரும்பி வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ் பேசுங்கள்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும், எந்தப் பணியைச் செய்தாலும், அதிலே நடுநிலைமையோடு செயல்படுகின்ற அரசாக நம்முடைய தங்கத் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்ற காரணத்தினாலேதான், இன்றைக்கு அத்தனைபேருமே அம்மா அவர்களுடைய பணியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம்கூட தி.மு.க. உறுப்பினர் மாண்புமிகு புகழேந்தி அவர்கள் பேசுகின்றபோது, கல்விக்குப் பல்வேறு சலுகைகளை நீங்கள் அளித்திருக்கிறீர்களே, ஆனால் மின்சாரக் கட்டணத்தைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்தீர்களா என்று கேட்டபொழுது, உடனடியாக

நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அமைச்சரவையிலே **அங்கம்** வகிக்கக்கூடிய அமைச்சர் எழுந்து, ஏற்கெனவே இதை அறிவித்துவிட்டோம், நீங்கள் பார்க்கவில்லையா என்று சொன்னார். 'கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்'; 'தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்' என்று இயேசுபிரான் சொல்கிறார். ஆனால், போயஸ் தோட்டத்துக் கதவைத் தட்டுவதற்கு முன்பாகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று வாய் திறந்து கேட்பதற்கு முன்பாகவே, அள்ளிக் கொடுக்கக்கூடிய தலைவியாக எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் இங்கே எடுத்துக்கூறியதைப்போல, தமிழக அரசினுடைய சுனாமி நிவாரணப் பணிகளை இந்தியாவினுடைய உள் துறை அமைச்சர் பாராட்டியிருக்கிறார். தமிழகத்தினுடைய மேதகு ஆளுநர் பாராட்டியிருக்கிறார். உலக வங்கி பாராட்டியிருக்கிறது. ஆசிய வளர்ச்சி வங்கி பாராட்டியிருக்கிறது. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுமம் பாராட்டியிருக்கிறது. யாரெல்லாம் பாராட்ட வேண்டுமோ அவர்கள் எல்லாம் பாராட்டியதற்குப் பிறகு, அரசியலை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்களின் பாராட்டு எங்களுக்குத் தேவை கிடையாது.

"நெஞ்சி லுரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ- கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடீ."

என்று பாடினானே பாரதி, (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, வஞ்சனை சொல்வாரின் வாய்ச் சொல்லைப்பற்றிக் கவலைப்படாமல், மக்களின் உள்ளம் அறிந்து, அவர்களின் தேவைகளை அறிந்து பல்வேறு திட்டங்களை கவர்னரின் உரை மூலமாக எங்களுடைய அம்மா அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

உலகத்திலே மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவை என்னவென்று கேட்டால், நீர் என்று எல்லோருக்குமே தெரியும்.



எனவேதான், உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் சொல்கின்றபோது "நீரின்றி அமையாது உலகு" என்று சொல்கிறார். தமிழகத்தினுடைய தலைநகர் சென்னை என்று நாம் பெருமிதமாகச் சொல்கிறோமே. சென்னையிலே குடியிருப்பவர்கள் நாங்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அந்த சென்னை மாநகரத்தினுடைய மக்கள், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் தவித்தபோது, சென்னையைவிட்டே சென்றுவிடலாமா என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, கவலைப்படாதீர்கள், உங்களுடைய பிரச்சினையை நான் தீர்க்கிறேன் என்று சொல்லி, 720 கோடி ரூபாய்க்குப் புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டுவந்து, சென்னை மாநகர மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்கியவர், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்று சிலபேர் எதிர்மறை வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடல் அலையைக் கைத்தடி கொண்டு அடிக்க முயல்பவர்களின் கைதான் வலிக்குமே தவிர, புதிய வீராணம் திட்டத்தின் வெற்றி என்கின்ற அலையை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக, சென்னை மாநகர மக்களின் மத்தியிலே, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நற்பெயர் இருக்கிறதே அதைக் கெடுக்கும் விதமாக, நஷ்டம், அரசினுடைய பணம் வீண், என்றெல்லாம் இப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் அம்மா அவர்களுக்குப் புத்திமதி நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. கடந்த ஆட்சியினுடைய கையாலாகாத்தனத்தின் காரணமாக, சீரழிந்து போயுள்ள தமிழகத்தின் நிதிநிலைமையைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, வளப்படுத்தியிருக்கின்ற எங்கள் அன்னைக்கு எந்தத் திட்டத்திற்கு எவ்வளவு கோடி ரூபாயை, எப்படிச் செலவழிக்க வேண்டுமென்று தெரியும். இந்தப் புதிய வீராணம் திட்டத்தின் மூலமாக பணம் waste, ஊதாரித்தனம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம்கூட எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் இங்கே பேசினார்கள். மத்திய நெடுஞ்சாலைத் துறையினுடைய சார்பாக ஒரு விழா. அந்த விழாவிற்கும் சேப்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ.வுக்கும் என்ன தொடர்பு? திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவா இலட்சக்கணக்கான ரூபாயை நீங்கள் விளம்பரப்படுத்தி செலவழித்திருக்கிறீர்கள்? இந்திய நாட்டிலுள்ள மக்கள் அத்தனை பேரும் வெட்கித் தலை குனியக்கூடிய அளவிற்கு, இந்திய நாட்டினுடைய பிரதமரையே நீங்கள் அவமானப்படுத்தியிருக்கிறீர்களே! பிரதமருடைய புகைப்படத்தையே அந்த விளம்பரத்திலே போடவில்லையே! ஒரு தி.மு.க. கட்சி விழாவைப்போல, இந்திய நாட்டு மக்களுடைய வரிப் பணத்திலே நீங்கள் செலவு செய்திருக்கிறீர்களே! அந்த உரிமையை உங்களுக்குக் கொடுத்தது யார்? இது யாருடைய பணம்? மக்களுடைய வரிப் பணத்திலே நீங்கள் எப்படிச் செலவழிக்கலாம்? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் தன்னுடைய சொந்தப் பணத்திலேயிருந்து அந்த விளம்பரத்தைக் கொடுத்திருக்கிறாரா? (குறுக்கீடு) எனவே மக்களுடைய பணத்தை ஊதாரித்தனமாக விளம்பரத்திற்காக, வயதான காலத்திலும் விளம்பர மோகம் கொண்டு அலைகின்ற உங்களுக்கு எங்கள் தாயினுடைய திட்டங்களைக் குறை சொல்வதற்கு என்ன தகுதி இருக்கிறது என்றுதான் இப்போது தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.

அடுக்களை நாற்றத்தைக் கழுவாமல், அத்தர் வியாபாரம் செய்யப் புறப்பட்டுவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம். "போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுபவர் தூற்றட்டும்", "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கேற்ப எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கவர்னர் உரையின் மூலமாகப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

நாட்டு மக்கள் நலமுற்று வாழ, நானிலத்தார் மேனிலை எய்த கவர்னர் உரை மூலம் வீட்டிலே பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்திற்கு சலுகை வழங்கி, ஆண்டுக்கு 910 கோடி ரூபாய்க்கு அரசு மானியம்; விவசாயிகளின் வாட்டத்தைப் போக்க செயல்திறன் குறைந்த பழைய பம்ப்செட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்ப்செட்டுகளை வாங்குவதற்குத் திட்டம்; 234 கால்நடை சுகாதார துணை மையங்களைக் கால்நடை மருத்துவமனைகளாக மாற்றுவதற்கு, நிலை உயர்த்துவதற்குத் திட்டம்; பால் கொள்முதல் விலையைக் கூட்டிவிட்டு, பால் விலையைக்



கூட்டாமல் புரட்சி; காந்தி கண்ட கிராம சுயராஜ்யம் காண்பதற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டிலே 'நமது கிராமம்' என்கின்ற புதிய திட்டம்; நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காகப் புதிய, துல்லிய பண்ணை முறைகள் அறிமுகம்; தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் திட்டம்; பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை வாங்குதல்; கவர்னர் உரையிலே பக்கத்திற்குப் பக்கம் திட்டங்கள்; வார்த்தைக்கு வார்த்தை சாதனைகள். உற்றுப் பார்த்துப் படிப்பவர்களுக்குச் சாதனை தெரியும். வெற்றுப் பார்வை பார்ப்பவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

*முற்பகல் 11-50*

இப்படிப் பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியினுடைய மிக முக்கியமான இரண்டே இரண்டு பிரச்சினைகளை மட்டும் — ஏற்கெனவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் சொன்ன அந்தப் பிரச்சினைகளை — மீண்டும் நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மதுரைக்கு அடிக்கடி வரக்கூடியவர். அவர்களிடத்திலேகூட பல்வேறு தடவை மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். வைகை ஆற்றின் கரையோரம் சாலை இருக்கின்றது. சாலைக்குப் பக்கத்திலே வீடுகள் இருக்கின்றன. அந்தச் சாலையிலே செல்பவர்கள் வைகை ஆற்றுக்குள்ளே விழ வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அதைத் தடுப்பதற்காக - தேர்தல் நேரத்திலேயே நான் மக்களிடத்திலே சொன்ன வாக்குறுதி - தயவுசெய்து அதிலே தடுப்புச் சுவர் கட்டித் தரவேண்டும். மதுரை மாநகரம் முழுவதும் எடுத்துக்கொண்டால்கூட ஒரு கோடி ரூபாய்தான் செலவாகும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். தயவுசெய்து, இந்த வருடத்திலேயே வைகையாற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டும் என்று பணிவன்போடு நான் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல; கரும்பாலை, இந்திரா நகர், சொக்கிக்குளம், அண்ணா நகர் போன்ற பகுதிகளிலே குடிசைமாற்று வாரியத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தை, பட்டா வாங்குவதற்காக மக்கள் செலுத்தியும்கூட, வருவாய்த் துறையின் சார்பாக இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுவும் உடனடியாகக்

கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலே சித்த மருத்துவமனை இருக்கிறது. தினமும் 300 பேர் அந்த மருத்துவமனையிலே வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். திங்கட்கிழமையும், புதன்கிழமையும், வெள்ளிக்கிழமையும்தான் அந்த மருத்துவமனை நடைபெறுகிறது. மற்ற நாட்களிலே வரக்கூடிய வயது முதிர்ந்த பெரியவர்கள், கிராமத்திலேயிருந்து வரக்கூடியவர்கள் திரும்பிப் போகக்கூடிய சூழ்நிலை. ஏற்கெனவே மாண்புமிகு Health Minister அவர்கள் இங்கே உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள், தினமும் அந்த மருத்துவமனை நடைபெறும் என்று. எனவே அந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாதாளச் சாக்கடை பணியின் காரணமாக, எங்களுடைய மேற்கு தொகுதியிலே பார்த்தால், என்னுடைய தொகுதியை மட்டும் விட்டுவிட்டார்கள். அங்கே மேயர் என்ன சொன்னாரோ தெரியவில்லை, என்னுடைய தொகுதியிலே சாலையே போடவில்லை. என்னுடைய தொகுதியிலே எங்கே பார்த்தாலும் பள்ளமும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. நான் பல தடவை சந்தித்து முறையிட்டுவிட்டேன். என்னுடைய தொகுதியிலே விரைவில் அந்தப் பாதாளச் சாக்கடைப் பணியை முடித்து சாலை வசதியை மேம்படுத்தித் தர வேண்டும் என்று நான் சொல்லிவிட்டேன். ஆனால் அங்கே தி.மு.க.-வினுடைய இராஜ்யத்தைப்போல ஒரு கற்பனை உலகத்திலே அவர்கள் மிதந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, சென்னை மாநகரத்தைத் தூய்மைப்படுத்திய எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மதுரை மாநகரத்தின்மீதும் நீங்கள் ஒரு கண் வைக்க வேண்டுமாய் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா, பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால், பின் இந்த உலகினிலே வாழ்க்கை இல்லை. அம்மா,

"பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லையென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"

என்று பாடினான் பாரதி. எந்தத் திட்டம் தீட்டினாலும், பெண்ணின் வாழ்வில் வசந்தம் ஏற்பட சிந்தித்துச் செயல்படும் எங்கள் தாயே,



இயேசுபிரானின் விரல் பட்டதால், தண்ணீர் திராட்சை ரசம் ஆனது என்று நான் பைபிளிலே படித்திருக்கிறேன், அம்மா. உங்கள் ஆட்சி வந்ததால், எப்படி இயேசுபிரானின் விரல் பட்டதால் தண்ணீர் திராட்சை ரசம் ஆனதோ, அதைப்போல, அம்மா உங்கள் ஆட்சி மலர்ந்ததால் பாலைவனமாய்க் காட்சி அளித்த தமிழகம் சோலைவனமாக மாறியது. (மேசையைத் தட்டும் ஒலி) தனக்காக வாழாமல், தமிழக மக்களுக்காக வாழ்கின்ற எங்கள் கருணை தேவியே, எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி. உங்களுடைய வெற்றியை எந்தக் கைகளும் தடுக்க முடியாது எனக் கூறிக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**•திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம், பேசி முடித்த பிறகு விளக்கங்களைச் சொல்லுங்கள் என்று தாங்கள் சொன்ன காரணத்தினாலே ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ஏதோ இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தி.மு.க. தலைவர் கலைஞர் செயல்படுவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனவரி மாதம் ஏழாம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அதிலே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், என்னையும் துணைப் பொதுச் செயலாளர் தம்பி ஸ்டாலின் அவர்களையும் அனுப்பி, இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரசு செய்கின்ற உதவிகளைக் குறை கூறாதீர்கள். இன்னும் குறிப்பாகச் சொன்னார்கள், இதிலே அரசியலே கிடையாது என்று. 26 ஆம் தேதியிலிருந்து அந்தப் பகுதிகளிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் உதவிகள் செய்கின்றன. ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு மக்கள் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். சுய உதவிக் குழுக்களும் உதவி செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிவிட்டு, இந்த அரசு 4,800 கோடி ரூபாய் நிதி உதவி கேட்டிருக்கிறது. இது போதுமா என்று எங்களுக்குத் தெரியவில்லை. வேண்டுமானால் அங்கேயே சுட்டிக்காட்டுங்கள்; இன்னும் அதிகமாக நிதி கேளுங்கள் என்றுதான் சொல்லி அனுப்பினார்கள். நான் அதை அங்கே குறிப்பிட்டேன். முதலமைச்சரும் அதை அவர்களுடைய

D V21, 3, 05 pas. 65
226627
சென்னை 600 008

குறிப்பிட்டுவிட்டு, நாங்கள் இன்னும் கேட்கிறோம்; நீங்கள் உதவி செய்யுங்கள் என்று சொன்னார்கள். நான் எங்கள் தலைவரிடத்திலே சொன்னேன். எங்கள் தலைவர், டி.ஆர். பாலு அவர்களிடத்திலே சொல்லி தமிழக அரசு கேட்கின்ற நிதியைப் பெற்றுத் தருவதற்கு நீங்கள் எல்லாம் முயற்சி செய்யுங்கள் என்று அறிவுரை வழங்கினார்கள் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சுனாமி நிவாரணப் பணிகளில் அரசியல் புகுத்தக்கூடாது என்று தி.மு.க. தலைவர் தி.மு.க.-வினருக்கு அறிவுரை கூறியதாக மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படியானால் தி.மு.க. தலைவர் கூறிய அறிவுரையை மீறி, அந்த அறிவுரையை மதிக்காமல், திரு. தயாநிதி மாறன் இங்கே நிவாரணப் பணிகளே நடைபெறவில்லை என்று குறை கூறினாரா? (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. தலைவர் கூறியதை மீறி, அவருடைய அறிவுரையை மதிக்காமல், தமிழக அரசு எந்த நிவாரணப் பணியும் ஒழுங்காகச் செய்யவில்லை என்று தி.மு.க. அமைச்சர் திரு. ராஜா அவர்கள் மேதகு ஆளுநரை சந்தித்து மனு கொடுத்தாரா? அப்படியானால் தி.மு.க. தலைவர் கூறிய அறிவுரையை மீறி செயல்பட்ட இந்த இரண்டு அமைச்சர்கள்மீது தி.மு.க. தலைவர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதைக் கூறமுடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கூறியதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, அது இல்லை. அது இல்லை. நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்டார். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தயாநிதி மாறன் அவர்கள் சில பகுதிகளுக்குச் சென்றார்கள். சென்ற இடத்திலே சில குறைகள் சொல்லியிருக்கக்கூடும். அதை வைத்து அந்தப் பணிகளைத் தீவிரமாகச் செய்ய வேண்டும், விரைவாகச் செய்ய வேண்டும், குறைபாடுகளைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னாரே தவிர, இந்த அரசின்மீது குற்றச்சாட்டு சொல்லவில்லை. அதைப்போல திரு. ராஜா அவர்களும் தமிழகத்திலே பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். அவர் பார்த்த இடத்திலே மக்கள் எதைச் சொன்னார்களோ அதைச் சுட்டிக்காட்டிச் சொன்னாரே தவிர, இந்த அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டாக எதையும் சொல்லவில்லை.



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு ...

**திரு. துரைமுருகன்:** Speaker Sir, Speaker Sir,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) ஒரே ஒரு point சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் ஒரு point சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு point.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட அமைச்சர் சொல்லி முடித்துவிடட்டும்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, ஒரே ஒரு விஷயம் (குறுக்கீடு) ஒரே ஒரு விஷயம், ஒரே ஒரு second. Hon'ble Lady Member பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். டி.ஆர். பாலு போட்ட அந்த invitation-லே Prime Minister-உடைய படம் இல்லை என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். நேற்றுகூட ஒருவர் சொன்னார் invitation-களிலே — எனக்கு சொல்லப்பட்ட செய்தி என்னவென்றால் பிரதமர் அவர்கள் இப்படிப்பட்ட துவக்க விழாக்கள் இதுபோன்ற விழாக்களுக்கான invitation-களிலே — எல்லாம் தன்னுடைய படத்தைப் போடக்கூடாது என்று அறிவுறுத்தி இருக்கிறாராம். அது நம்மால் முடியுமா? நம்மாலே முடியாது. ஏனென்றால் இங்கே படம் அடித்தால்தான் நடக்கும் வேலையே. அதுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் அரசு விழாக்களில் தன்னுடைய படத்தைப் போட வேண்டாம் என்று சொன்னதாக திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார். அப்படியானால் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியின் படத்தைப் போட வேண்டும் என்று பிரதமர் சொல்லி இருக்கிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** கலைஞருடைய படத்தைப் போட வேண்டாம் என்று Prime Minister சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிலைப்பாடு, நம்முடைய மீனவர்களுக்கு முழுமையான அளவிற்கு 100 per cent subsidy வேண்டும், Mechanised Boat என்றாலும் சரி, F.R.P.- Fibre Reinforced Plastic Catamaran என்றாலும் சரி. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு 100 சதவிகிதம் அளவிற்கு முழுமையான அளவிற்கு மானியத்தோடு வழங்க வேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய நிலைப்பாடு. எனவே, மத்திய அரசு இந்த subject-ஐ Cabinet-லே கொண்டு வரும்போது அப்போது தி.மு.க.-வினுடைய அமைச்சர்களும், மத்திய அமைச்சர்களும், கூட்டணி அமைச்சர்களும் இருந்து, அவர்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்பது வருத்தப்படக்கூடிய செயலாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. துரைமுருகன்:** Cabinet-லே அந்த ஒரு proposal-ஐ வைக்கும்போது யார் ஆதரித்தார்கள், யார் எதிர்த்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் அநியாயமாக ஒரு குற்றச்சாட்டைச் சாட்டுகிறார். உங்கள் Cabinet நடக்கிறது, நான் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டின் மேலே அக்கறை இருந்திருந்தால் நீங்கள் அங்கேயே சொல்லியிருக்க வேண்டும், 100 சதவிகிதம் subsidy கொடுங்கள் என்று. அதைச் சொல்வதற்கு உங்களுக்கு வக்கில்லை.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வக்கு இருக்கிறது. நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். கொடுத்ததை வகையாகப் பண்ண உங்களுக்குத் தெரியவில்லை. எங்களைக் குறை சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** இத்தனை பேர் இருந்து நீங்கள் சொன்னதை அவர்கள் செய்ய மாட்டார்களா என்ன?



நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே பங்கேற்க அனுமதித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு செய்திகளை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். குறிப்பாக, இந்த ஆளுநர் உரை அளிக்கப்படுகிற நேரத்தில் மிகப்பெரிய பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிற அந்த மாவட்ட பகுதிகளைச் சார்ந்தவன் என்ற முறையில் அதுபற்றிப் பேச விழைகிறேன்.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணப் பணிகள், மறுவாழ்வுப் பணிகள், நிரந்தரமாக அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய உதவிகள், இவற்றைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக யாருமே எதிர்பாராத வகையில் நடந்துவிட்ட அந்தச் சம்பவத்தின்மீது அனைவருக்குமே மிகப்பெரிய அதிர்ச்சி. அதிலே அரசு தலையிட்டு துரிதமான முறையில் மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது; பாராட்டத்தக்கது. இதை எங்களுடைய தலைவர் நல்லகண்ணு அவர்களே, அவருடைய அறிக்கையின் மூலமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக ஒன்றை நான் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். இப்படி மிகப்பெரிய சம்பவங்கள், பாதிப்புகள் வருகிறபோதும் சரி, குறிப்பாக வேறு சில தமிழ்நாட்டிற்குரிய முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றபோதும் சரி, இந்தச் சட்டமன்றம் என்பது விவாத மன்றமாக மாறிவிடுவது என்பது மிகவும் வேதனைக்குரியதாக நான் கருதுகிறேன். விவகாரமாய் இருப்பது என்பது வேறு; விவாதமாக நடைபெறுவது என்பது வருத்தத்திற்குரியதாக அமைகிறது.

குறிப்பாக, சென்ற ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தொடரில், காவிரி நீர் பற்றிய பிரச்சினையைப் பேசுகிற போதும் அப்படித்தான் மாறியது. இன்றுகூட நம்முடைய ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிற செய்திகளில், மிக முக்கிய ஜீவாதார உயிர்நாடிப்

பிரச்சினையாக இருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி ஒரு வார்த்தைகூட இந்த அறிக்கையிலே சொல்லப்படவில்லை என்பது மிக வேதனைக்குரிய ஒன்றாக நான் கருதுகிறேன். அதைப்பற்றி பேசுகிறபோதுகூட, அது விவாதமாக மாறிவிடுகிறது. ஆகவே, ஆயிரக்கணக்கான மக்களுடைய உயிரைக் கொடுத்துவிட்டு இங்கே நாம் விவாதிப்பது என்பது வேதனை அளிக்கக்கூடியதாக இருப்பதாக நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் இருப்பதே விவாதம் செய்வதற்காகத்தான். நாடாளுமன்றத்தில்கூட அங்கே பேசுகின்ற பேச்சுகளுக்கு debate என்றுதான் கூறுவார்கள். Debate என்றால் விவாதம். அதுதான் இந்தச் சட்டமன்றத்தின் நோக்கமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் சொன்ன வார்த்தை விவாதம் என்ற காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் ஓர் ஆரோக்கியமான விவாதம் நடைபெற வேண்டும் ஆக்கபூர்வமான விவாதம் இருக்க வேண்டும் என்பதுதான். என்றுதான் அவர் சொல்கிறார். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியத்திற்கும், பழனிசாமிக்குமே விவாதம்போல் இருக்கிறது. (சிரிப்பு).

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையில் விவாதம் நடைபெறவேண்டும் என்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதிலே எனக்கு மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அதுவே ஒரு தனி நபருடைய தாக்குதலாக மாறிவிடுவது என்பதுதான் நான் கருதுகிறேன். இங்கே இருக்கிற, குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய பிரச்சினையாக

குறிப்பாக, காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி இதிலே ஏன் சொல்லவில்லை என்பது என்னுடைய கேள்வி. இது கிட்டத்தட்ட



காவிரிக் கரையிலே வாழ்கின்ற 10 மாவட்ட மக்களுடைய உயிர்ப் பிரச்சினை. தொடர்ந்து இடைக்காலத் தீர்ப்பு கிடைக்கவில்லை. நிரந்தரத் தீர்ப்பைப் பெறுவதற்கான முயற்சி, என்ன நிலையில் இருக்கிறது என்பதும் கேள்விக்குரியதாக இருக்கிறது. ஆகவே, நிரந்தரமான தீர்வைப் பெறுவதற்கான முயற்சியை, நம்முடைய தமிழ்நாடு அரசு என்ன வகையிலே மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அதை நம்பி வாழ்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், இதரப் பகுதி மக்களுடைய வாழ்வு கேள்விக்குறியதாக மாறிவிடும்.

குறிப்பாக, இந்தச் சுனாமியைப் பொறுத்தவரையில், எல்லா அரசியல் கட்சிகள், சேவை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வக் குழுக்கள் எல்லாமே இதிலே ஈடுபட்டிருக்கின்றன. அந்தத் தன்னார்வக் குழுக்கள் மற்றவர்கள் ஈடுபட்ட விஷயங்களைக்கூட, ஒரு வரியிலே நம்முடைய அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கலாம். பின்னாலே இவர்களைப் பயன்படுத்தி மறுவாழ்வுப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுவார்கள் என்று அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், முன்னால் சொன்ன அந்தக் குறிப்பிலே, அவர்கள் எல்லாம் இதிலே ஈடுபட்டார்கள் என்று சொல்லவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதைச் சொல்லியிருக்கலாம். குறிப்பாக, இதிலே மிகப் பெரிய அளவிலே மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள். கடற்கரையோர கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அதோடு சேர்ந்து விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றிய பேச்சு, அதைப் பற்றிய செய்தி எதுவுமே இல்லையே. விவசாயிகளையே மறந்துவிட்டீர்களா?

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளை என்றைக்குமே இந்த அரசு மறந்தது கிடையாது, மறக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்குத் தகுந்த நஷ்டஈடு விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று பிரதமர் அவர்களுக்குக் கொடுத்த கோரிக்கை மனுவிலேயே, memorandum-லேயே இணைத்து இருக்கிறோம். நேற்றையமுன்தினம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட அரசாணையில்கூட, சுனாமியால்

பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து, தனியாக ஆணைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால், இது ஒரு நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். காரணம், இந்தப் பாதிக்கப்பட்ட நிலங்களை எப்படித் திரும்பப் புனரமைத்து, திரும்பவும் சாகுபடி செய்வது என்பது அங்கே கேள்விக்குரியதாக இருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் ஒரு நீண்ட திட்டத்தின் அடிப்படையிலே செய்தால்தான் திரும்பவும் விவசாயப் பணிகளை அங்கே நடத்த முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியாக பாதிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் எப்படிச் சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றுவது என்ப்து குறித்து, இந்த அரசு விரிவான திட்டத்தைத் தயாரித்து வைத்திருக்கிறது. அந்தத் திட்டத்தை, மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம். அதற்கு நிதி வேண்டுமென்றும் கோரியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஒதுக்கீடு குறித்து, பின்னர் ஆணைகள் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. ஆகவே, இதில் நம்ப முடியவில்லையென்று சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. குறை கூறுவதற்கு ஏதாவது கிடைக்காதா என்று மாண்புமிகு உறுப்பினர் பார்த்தார்; எதுவும் கிடைக்கவில்லை; ஆகவே, சமாளிக்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் ஆளுநர் தந்த உரை, அந்த அறிக்கையை முழுமையாகப் படிக்கவில்லை. குற்றச்சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காகவே ஏதேனும் குற்றச்சாட்டை சொல்வது கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒரு வழக்கமாக வந்துகொண்டிருப்பது வேதனையாக இருக்கிறது. 14-வது பாராவை கவனியுங்கள். "முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, பொதுநலனில் அக்கறை கொண்ட நல்ல எண்ணம் படைத்த மக்கள், முதல்வரின் பொது நிவாரண நிதிக்குத் தாராளமாக நிதியுதவி அளித்துள்ளனர். மேலும், இந்தப் பேரிடரினால் உறைவிடங்களையும் வேலைவாய்ப்புகளையும் இழந்த இலட்சக்கணக்கான



மக்களுக்கு, உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் விதமாக நேரடி நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டனர். நிதியுதவியாகவும், பொருளாகவும் அளிப்பதற்கு முன்வந்து, இந்த மாபெரும் நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணியில் பங்கேற்ற தனிநபர்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் இந்த அரசு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது" என N.G.O.-க்களைப் பாராட்டியிருக்கிறார், படித்துப் பாருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணைக்கிணங்க, சுனாமியாலே பாதிக்கப்பட்ட விளை நிலங்களை மண் பரிசோதனை செய்வதற்காக போர்க்கால அடிப்படையிலே, குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இரண்டு மண் பரிசோதனை ஆய்வு வண்டிகளையும், கடலூர் மாவட்டத்திற்கு மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முறையே ஒரு வண்டியாகவும் அனுப்பி, அங்கே பாதிக்கப்பட்ட விளைநிலங்களையெல்லாம் ஆய்வு செய்து, அந்த மண்ணிலே எந்த அளவிற்கு PH உயர்ந்திருக்கிறது என்பதையும், EC எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் தமிழகத்தினுடைய வேளாண் பல்கலைக்கழகத்தினுடைய வேளாண் பெருமக்கள் ஆய்வு செய்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினிடத்திலே கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளிலே, அனைத்துப் பொதுமக்களும், குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கத்தைச் சார்ந்த வேளாண் பெருமக்களும்கூட அதைப் பார்த்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கனிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, அந்த அடிப்படையிலே, போர்க்கால அடிப்படையிலே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திலே குறிப்பாக, அங்கே நெல், கடலை, சவுக்கு, முந்திரி போன்ற பயிர்கள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே அழிந்து போய்விட்டன. அவற்றிற்கெல்லாம் உரிய முறையிலே நிவாரணம் வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதேபோல, பெரும் அளவிலே கால்நடைகள் இழப்பு ஏற்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேனே !

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியாலே பாதிக்கப்பட்ட பகுதிகளிலே குறிப்பாக, நிலக்கடலை, நெல், தோட்டக்கலை போன்ற பயிர்களுக்கெல்லாம் முதல் கட்டமாக, கருணைத் தொகையாக ஏறக்குறைய *1,80,13,930* ரூபாயை தாயுள்ளம் கொண்ட, தானைத் தலைவியாக வாழ்ந்து வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் முழுமையான அளவிற்கு வழங்குவதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைப்போல இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்ட . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு சிரமப்பட்டு வேளாண்மைத் துறை அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். அவருக்கு நன்றி சொல்லக்கூடாதா ?

**திரு. வை. சிவபுண்ணியம்:** நன்றி, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) இந்தச் சுனாமியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இதிலே காணாமல் போனவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்று இருப்பவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சட்டரீதியாக மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது. இதில் ஒரு காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், 'காணவில்லை' என்று அரசு அல்லது சட்டரீதியாகக் குறிப்பிட்டால், 7 ஆண்டுகள் வரையிலும் காணாமல் போனவர்கள் பட்டியலிலே வைத்து, அதற்குப் பின்னர்தான்



அவர் இறந்து போனார் என்று உறுதி செய்வதற்குரிய வாய்ப்பு இருப்பதாகப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தப் பாதிப்பில் காணாமல் போனவர்கள் என்ற பட்டியல் இட்டவர்களிலே பலபேர்களுக்குக் கிடைக்கவில்லை. இதை அப்படி எடுக்கக்கூடாது. இதை ஒரு மிகப்பெரிய சம்பவம் என்ற முறையில், சுனாமியால் பாதித்து இறந்தவர்களுடைய அந்தப் பட்டியல் கிடைத்திருக்கிறவர்களுக்கு நிவாரணம் வழங்கச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கவேண்டும். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன் விவரங்கள் என் கையிலே இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய மன்னார்குடி நகரத்திலேயே. . . .

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போனவர்கள் -- அந்தக் கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார் Certificate கொடுத்து, போலீஸ் ஸ்டேஷனில் F.I.R. பதிவு பண்ணினால், உடனடியாக *1* இலட்சம் ரூபாய் பணம் - நாங்கள் பார்த்த ஊரிலே காணாமல் போனவர்களுக்குக் கொடுத்துவிட்டு வந்து இருக்கிறோம் என்பதை இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் சொல்லவிடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் (குறுக்கீடு) சொல்லிவிடுங்கள். விளக்கம் சொல்லிவிடுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 ஆண்டு என்ற இந்தச் சட்டத்தைத் தளர்த்தி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுகாதாரத் துறைக்கு உடனடியாக உத்தரவை வழங்கி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு உடனடியாக அந்த ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அப்படி வழங்கி இருந்தால் நன்றி. நான் சொல்வது என்னவென்றால், வழங்கவில்லை என்பதை நான் திரும்பவும் சொல்கிறேன். என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கான ஆதாரங்கள் இவை. காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டு,

எல்லாவிதமான ஆதாரங்களும் இங்கே என் கையிலே இருக்கின்றன. அவர்களுக்குக் கிடைக்கவில்லை. குறிப்பாக, என்னுடைய மன்னார்குடி (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் ஒன்றும் இல்லாததைச் சொல்லவில்லை....

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** முடித்துவிடுகிறேன். நான் சொல்லி முடித்துவிடுகிறேன். இதை நீங்கள் காவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். அங்கே இருக்கக்கூடிய D.D-க்கும் நீங்கள் தயவுசெய்து இந்த மனுவை கொடுக்கவேண்டும். அதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சுனாமியால் பாதிக்கப்பட்ட, உயிரிழந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட மனித உயிர்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கினார்களோ, அதேபோல உயிரிழந்த கால்நடைகளுக்கும் நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய 6 மாவட்டங்களில் உயிரிழந்துள்ள கால்நடைகள் அதாவது, பசுமாடுகள் மற்றும் எருமைமாடுகள் 1,418-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.1,000 வீதமும், கன்றுக்குட்டிகள் 235-க்கு ஒவ்வொன்றுக்கும் வீதமும், ஆடுகள் 12547-க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ.1000 வீதமும், கோழிகள் ரூ.5,000 2,183-க்கு ஒவ்வொரு கோழிக்கும் ரூ.50 வீதமும், ஆக ரூ.2,80,11,150 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே உயிரிழந்தவர்களுக்கான மனு அளித்த அந்த ஆதாரத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயே சமர்ப்பித்துவிடுகிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, கால்நடைகள், கோழிகள் இறந்ததற்கெல்லாம் நிதி கொடுத்ததற்கு நன்றி. கோழிகளுக்குக்கூட கொடுத்தவர்கள், இப்படி இறந்துபோய் பட்டியலில் இருக்கிறவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தக் கோரிக்கை இணைத்துக் வைக்கிறேன். (குறுக்கீடு)



பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை நன்றி சொல்கிறார். ஒருவேளை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அங்கே இருந்த அதிகாரிகளிடம் கொடுக்காமல் "சட்டப் பேரவையில் கொடுக்கலாம் என்ற எண்ணத்தோடு விளம்பரத்திற்காக சிவபுண்ணியம் இங்கு கொண்டு வந்து கொடுக்கிறாரோ என்னவோ ! எங்கெங்கே யார், யார் காணாமல் போய்விட்டார்களோ, குறிப்பிட்ட காலக்கெடுவில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று, அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. தகவலை நீங்கள் ஒருவேளை அங்கே கொடுக்காமல் இருந்திருக்கலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எப்போதுமே குற்றம் சுமத்துவது என்றே பேசினால் என்ன செய்வது? நான் சொல்வது, எல்லாம் கொடுத்திருக்கிறோம், திரும்ப பரிசீலியுங்கள். இது ஒன்றும் குற்றச்சாட்டிற்காக இல்லை. கிடைக்கவில்லை, கிடைக்க வேண்டும் என்பதற்குரிய கோரிக்கையாகத்தான் இதிலே வைக்கிறேன். ஆகவே, இது குற்றச்சாட்டு அல்ல. இதுமாதிரி ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கலாம். காணாமல் போனவர்கள் யார் என்றே தெரியாது அல்லவா? அது நம்முடைய குற்றமல்ல. அப்படி ஒரு பெரிய சம்பவம் நடந்து போய்விட்டது. ஆகவே, உடல் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலேயே அவர்களுக்குரிய நிவாரணம் கிடைக்காமல் இருந்துவிடக் கூடாது என்பதற்காக நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அதிலே, மன்னார்குடி நகரத்தில் இருக்கிற உப்புக்காரத் தெருவைச் சேர்ந்த மோகன் என்பவர், அப்படிக் காணாமல் போய் அதற்கான மனு செய்திருக்கிறார் அவருடைய இளம் மனைவி. பாவம், இரண்டு குழந்தைகளோடு அவர் தவித்துக் கொண்டிருக்கிறார். அவருக்குக்கூட ஒரு வேலை, ஏதாவது சத்துணவுத் திட்டத்திலாவது வேலை வேண்டுமென்று எங்களுடைய மாவட்ட ஆட்சியருக்கும், வட்டாட்சியருக்கும், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும் மனு கொடுத்திருக்கிறார்.

அதேபோல, மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட நொச்சியூர் கிராமத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியருடைய குழந்தைகள் காளிதாஸ், சாவித்திரி, 9 வயது குழந்தை, 7 வயது குழந்தை இரண்டு பேரும். அவர்களை எல்லாம் கிருஸ்துமஸ் விழாவிற்காக அவர் வேளாங்கன்னிக்கு அழைத்துக் கொண்டுபோய் இருக்கிறார். அவர் கண்ணெதிரிலேயே இரண்டு குழந்தைகளையும் கையில் இருந்து பறித்துச் சென்றுவிட்டது

அந்த அலை. அந்த இரண்டு பேருக்கும் நிவாரணம் கிடைக்கவில்லை. ஆகவே இவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கேரளா, எர்ணாகுளத்திலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 7 பேர் வந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பவும் மனு செய்திருக்கிறார்கள். நாகப்பட்டினத்தில், மாவட்ட ஆட்சியருக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த 7 பேரில் ஒருவர் மட்டும்தான் மிச்சப்பட்டிருக்கிறார். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரும் மரணமுற்றார்கள். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அவர்கள் இங்கே வந்து கேட்கிறபோது, கேரள அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அங்கே சென்று கேட்கிறபோது, இன்னும் வரவில்லை; நீங்கள் அங்கே சென்று கேளுங்கள் என்று சொன்னதன் அடிப்படையில், அவர்களை அழைத்துச் சென்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரிடத்திலே இந்த மனு அளிக்கப்பட்டிருக்கிறது; புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த 6 பேருக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். இப்படிப் பல பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கான நிவாரணம் கிடைக்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். நாங்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் பேசியது. மாநில அரசும் அறிவித்தது. கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள், குறிப்பாக எங்களுடைய நாகை, திருவாரூர் மாவட்டப் பகுதிகளில் ஏற்பட்ட அந்த இழப்பிற்கு (குறுக்கீடு) இன்னும் சொல்லவேயில்லை. என்ன சொல்ல வருகிறேன் என்று தெரிவதற்கு முன்பே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்வதையும் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. நான் சொன்னதற்குப் பிறகு பதில் சொன்னால் புரியும். நான் என்ன சொல்லப் போகிறேன் என்று தெரியாமல் பதில் சொன்னால் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை அமைச்சர் சொல்லுங்கள்.



**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்வார் என்று நாங்கள் புரிந்துகொண்டோம். பெரு வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று அவர் கோருவார். ஆனால் முகராசி கொண்ட மகராசியாக வாழ்ந்து வருகிற எங்கள் தாய், நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே ஏறக்குறைய 35,65,36,275 ரூபாயைப் பெரு வெள்ளத்தாலே பாதிக்கப்பட்ட சிறு, குறு மற்றும் பெரு விவசாயிகள் உட்பட அனைவருக்கும் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும், இதிலே குறிப்பாக கடலூர் மாவட்டத்திற்காக 3,89,78,460 ரூபாயும், கரூர் மாவட்டத்திற்கு 2.50 ரூபாயும், நாகை மாவட்டத்திற்கு மட்டும் 21,81,09,700 ரூபாயும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு 1,88,985 ரூபாயும், புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலே 56,970 ரூபாயும், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய 22,53,825 ரூபாயும், திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 9,51,07,485 ரூபாயும், விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 18,40,600 ரூபாயும், ஆக ஒட்டுமொத்தமாக 35,65,36,275 ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் 1,76,864.18 எக்டேர். ஏறக்குறைய 16,137.38 எக்டேர் மானாவாரி பாதிக்கப்பட்டது. இறைவையைப் பொறுத்தமட்டில் 1,60,726.80 எக்டேர் பாதிக்கப்பட்டது. மானாவாரியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூபாய் ஆயிரம் வீதமாகவும், இறைவைப் பாசனப் பயிரிலே பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூபாய் 2,500 வீதமாகவும், மானாவாரி மற்றும் இறைவைப் பயிரிலே பாதிக்கப்பட்ட பெரிய விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூபாய் ஆயிரமாக, ஏறக்குறைய 35,65,36,275 ரூபாயைத் தாய் உள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிவாரணம் கொடுக்கவே இல்லை என்று சொல்லவே இல்லை. அதுதான் நான் கொஞ்சம் சொல்லிவிட்டால் வசதியாக இருக்கும் என்று நினைத்தேன். இருந்தாலும் பரவாயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட பட்டியலைச் சொல்லியிருக்கிறார்கள்.

நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. நான் மறுக்கவில்லை, வரவேற்கிறேன். ஆனால், நிவாரணம் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய்தான். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 400 ரூபாய். இது எந்தவகையிலும் பொருத்தமில்லை. ஒரு ஏக்கருக்கு 8,000 ரூபாய் நிவாரணம் கொடுத்தால்தான் விவசாயி மீள முடியும். இது யதார்த்தமாக இருக்கிற நிலை. வெறும் ஆயிரம் ரூபாயும், 400 ரூபாயும் கொடுத்து பட்டியலாகப் படித்தால், அந்த விவசாயி என்ன செய்ய முடியும்? உழவிற்கான செலவுக்குக்கூட கட்டுப்படியாகாது. சுனாமி வந்து எங்கள் மாவட்ட விவசாயிகளை எல்லாம் பினாமி ஆக்கியதுதான் இப்போது கண்ட பலன். வெள்ளத்தைப் பற்றியே மறந்துபோய்விட்டது.

இவ்வளவு பெரிய சம்பவம் வந்துவிட்டதனாலே, இதைப்பற்றியே மறந்துபோய், இதற்கான நிவாரணம் எங்களுக்குக் கிடைக்காமல், இதற்குரிய வழிமுறைகளை நாங்கள் காண முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டுவிட்டோம் என்பதுதான் இதிலே இருக்கிற உண்மையான நிலை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்த நிதி என்பது போதாது. இந்த நிவாரணம் என்பது போதாது. திரும்பவும் அதிகமான அளவிலே நிவாரணம் வழங்கவேண்டும். இப்போது வழங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆயிரம் ரூபாய், 400 ரூபாய் என்ற அளவிலே வழங்கினால், அது எந்த வகையிலும் விவசாயிகளுக்குப் போதுமானதாக இருக்காது. இந்த நாட்டிற்கு உணவு படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள்தான் அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். 90 சதவீத அளவை நம்முடைய உணவு தானியத்திலே எட்டுகிறோம் என்று சொல்கிறீர்கள். 16 சதவீதத்தை எட்டுவதற்கான முயற்சி நடைபெற்றது பாராட்டுக்குரியது என்று சொல்லப்பட்டது. எல்லா வகையிலும் உணவு தானிய கையிருப்பிலேயிருந்து, உற்பத்திலேயிருந்து சிறப்புக்குரிய மாநிலம் என்ற பெயர் போடுவதற்கு யார் காரணம்? விவசாயி காரணம் இல்லையா? **ஆகவே, அவன் எல்லா வகையிலேயும் பாதித்துக்கொண்டே இருக்கிறான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது விவசாயிகளையே இந்த அரசு மறந்துவிட்டது என்றார். அதன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பின்னர், ** என்று சொல்கிறார். ஆகவே, இதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், பொதுக்கூட்ட ஞாபகத்திலே பேசிவிட்டார் என்று நினைக்கிறேன். அந்த வார்த்தை நீக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, நானே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளை இந்த அரசு மறக்கவே இல்லை என்பதை நிரூபணம் செய்வதற்கு, ஒரேயொரு தகவலை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசின் ஆணைகள் பெறப்படுவதற்குக்கூட நாங்கள் காத்து இருக்காமல், 17-1-2005 அன்றே வருவாய்த் துறை அரசாணை Ms. No.30 மூலம், இந்தச் சுனாமியால் பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடாக ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் உடனடியாக வழங்கி, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடாக, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இப்போது தெரிவித்ததுபோல், 25-1-2005 அன்று 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய நிலங்களில் கடல் நீர் புகுந்ததால், சாகுபடி செய்ய முடியாமல் நாசமாகிப்போன நிலங்ளைச் சீர்படுத்துவதற்கு ஒரு Survey செய்து, அதை எவ்வாறு சீரமைப்பது என்பதற்கு ஒரு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். இதற்கான மத்திய அரசின் ஆணைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நன்றி. இப்போது அந்த மாவட்டத்திலே அறுவடை நடந்து முடியும் தருவாயிலே இருக்கிறது; பல இடங்களிலே நடைபெற்றுக் கொண்டும் இருக்கிறது. நெல் கொள்முதலிலே தொடர்ந்து பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக, நெல் கொள்முதல் நிலையங்கள் ஏராளமாகத் திறக்கப்பட்டிருக்கின்றன; வரவேற்கிறேன். ஆனால், அந்த நிலையங்கள் மூலமாக நெல் கொள்முதல் செய்வதிலே தொடர்ந்து பிரச்சினை இருக்கிறது. அது தூற்றிக் கொடுக்க வேண்டுமென்ற காரணம் காட்டிச் சொல்லப்படுகிறது. சம்பா அறுவடையிலே அப்படிச் செய்வது என்பது பொருத்தமானதாக இருக்காது. அதாவது நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு உரிய் கோணிப் பை இருக்கிறதே, அது வழங்குவதிலேகூட, முதலிலே 100 கிலோ பிடிப்பதற்கான பையாக அரசால் வழங்கப்பட்டது. இப்பொழுது 50 கிலோ (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன் சார். இப்போது 50 கிலோவாக மாற்றப்பட்டிருக்கிறது. இதிலே, குறிப்பாக, பணத் தட்டுப்பாடு மற்றக் காரணங்களைச் சொல்லி நெல் கொள்முதலை முழுமையாகச் செய்வதை .....

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டுறவு அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, இந்த ஆண்டு நெல் கொள்முதலிலே எவ்வகையான இடையூறும் இல்லை. எந்த ஆண்டும் இல்லாத வகையிலே, இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நெல் கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரையிலே, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே 908 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, சிறப்பாக நெல் கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா நெல் கொள்முதல் நிலையங்களிலும் தேவையான அளவிற்கு சாக்குகள் பரிமாறப்பட்டுள்ளன. அதோடு மட்டுமல்லாமல், கூடுதலாகவும் அங்கே இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. நெல் கொள்முதல் நிலையங்களிலே நெல் கொள்முதலுக்காக முந்தைய காலங்களிலே 1 இலட்சம், 1-1/2 இலட்சம் ரூபாய் என்று அனுப்பப்பட்டிருந்த நிலைமை மாறி, ஒவ்வொரு கொள்முதல் நிலையங்களுக்கும் தேவையான அளவிற்கு சுமார் 3 இலட்சம் ரூபாய் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற வாரம் நானும்கூட நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும், திருவாரூர் மாவட்டத்திற்கும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கும் மாண்புமிகு



முதலமைச்சர் அம்மாவினுடைய ஆணைப்படி சென்றேன். எவ்வகையான இடையூறும் இல்லாமல் விவசாயிகள் மகிழ்ச்சியடையத்தக்க வகையிலே, நெல் கொள்முதல் பணியானது சிறப்பான முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்கின்ற கருத்தினைச் சொல்லி அமைகின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற விளக்கத்திலே எனக்கு மாற்றுக் கருத்தில்லை. அமைச்சர் அவர்கள் வந்தது இப்போதுதான் எங்களுக்குத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருவது குறித்து மக்கள் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்திருந்தால் நாங்களும் உங்களைச் சந்தித்து சில கோரிக்கைகளை வைத்து என்ன நிலைமைகள் என்பதை எங்களால் விளக்கியிருக்க முடியும். ஆனால் தெரிவிக்கப்படுவதில்லை. தொடர்ந்து அமைச்சர் அவர்கள் வருவது எங்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. பரவாயில்லை. ஆனால், இப்போது இந்த நெல் கொள்முதலிலே விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கினால் உதவிகரமாக இருக்கும். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவசியம் பரிசீலிக்க வேண்டும். மூட்டைக்கு 100 ரூபாய், குவிண்டாலுக்கு 100 ரூபாய் என்ற அடிப்படையிலே ஊக்கத் தொகை வழங்கினால், இந்த ஆண்டு இவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற அந்த விவசாயிகள் பலன் பெறுவதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்த முடியும். தயவுசெய்து, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலீக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கூட்டுறவுக் கடன் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்திவைப்பது, நீண்ட காலக் கடனாக மாற்றுவது என்பது விவசாயிகளுக்கு எந்த வகையிலுமே பலன் அளிக்காது. ஆகவே, 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சி, வெள்ளம், புயல் என்று (குறுக்கீடு) பேச்சைமுடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3 மணித் துளிகளுக்குள் பேச்சைமுடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிற விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இங்கே உள்ளாட்சி ...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள் வழங்கப்படுவது மாநில அரசின் மூலமாக அல்ல. மாநிலத்தினுடைய கூட்டுறவு வங்கிகள் மூலமாக, கூட்டுறவுத் துறை மூலமாக கடன்கள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படுகிற கடன்களை இரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால், நபார்டு வங்கியானது அதற்குரிய மானியத்தை வழங்கி இரத்து செய்யலாம் என்ற ஆணையிடுமேயானால், மாநில அரசு அதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்ற மத்திய ஆட்சியாளர்களை வற்புறுத்தி, மத்திய நிதியமைச்சர் மூலமாக நபார்டு வங்கிக்கு அறிவுறுத்தி நபார்டு வங்கியானது மூன்றாயிரம் கோடி ரூபாயைத் தமிழக அரசுக்கு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு அளிக்குமேயானால் கூட்டுறவு நிறுவனங்கள் கடனை இரத்து செய்வதற்குத் தயாராக இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய கருத்திலே கொஞ்சம் திருத்தம். நாங்கள் மத்திய அமைச்சரவையிலே அங்கம் பெறவில்லை. ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுதுகூட பல கருத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது வேறு சில காரியங்களுக்கு எதிர்த்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அங்கம் வகிப்பதும் ஆதரவு அளிப்பதும் இரண்டும் ஒன்றுதான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அங்கேயும் எங்களுடைய கோரிக்கையை வலியுறுத்துவோம்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அங்கே கேட்டால் மட்டும் போதாது. 10 ஆண்டுக் காலமாக விவசாயிகள் வறட்சியிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகள்மீது கருணை கொண்டு, கேட்டுக் கொண்டேயிராமல், மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொடுத்து, விவசாயிகளுடைய கடனை இரத்து செய்வதற்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய மாநில அரசு மறு முதலீட்டு நிதியைப்



பெறுவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் இழப்பு ஏற்படுவதற்கான மறு முதலீட்டு நிதி பெறுவதற்கான வாய்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. உலக வங்கி வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குரிய சோம்பால் Committee அறிக்கை இருக்கிறது. ஆனால், அது வாங்கப்பட்டதா என்று சென்ற தடவைகூட கேட்டேன். இதிலே நம்முடைய நிதியமைச்சர்கூட ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். ஆனால் முழுமைப்படுத்த முடியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். உலக வங்கிக்கும், கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும்தான் ஒத்து வராதே, ஏன் அவர்களிடம் வாங்கச் சொல்கிறீர்கள்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒத்துவராது என்ற காரணத்தால்தான் சொல்கிறேன். அவர்களால் பாதித்துக் கொண்டே இருக்கிறது உலகம். இந்தியா ரொம்ப பாதித்துவிடும். ஆகவே, பெற முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்தது, குறிப்பாக இப்போது பள்ளிக்கூட மாணவர்களுக்கு, கல்லூரி மாணவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சலுகைகளை அறிவித்தார்கள். அதுபோல நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள், நேற்றைய தினம் அறிவித்தார்கள். அதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

பிற்பகல் 12-30

குறிப்பாக, பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மாணவர்களுக்கு, தேர்வு தள்ளி வைத்திருப்பது, எல்லா கல்லூரி வரையிலும் கல்விக் கட்டணம் செலுத்துவதில் சலுகை என்பது ரொம்பவும் வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அந்தப் பகுதியிலே இருக்கிற அந்த மாணவர்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

அதேநேரத்திலே, மாநிலம் முழுமையிலும் இருக்கிற நம்முடைய கல்வி நிறுவனங்களுக்குப் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. கும்பகோணத்திலே நடைபெற்ற அந்தத் தீ விபத்து சம்பவத்தாலே பிரிக்கப்பட்ட கீற்றுக் கொட்டகைகள் இப்போதும் அப்படியே இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே அதை மாற்றி செயல்படுத்துவதற்கு உரிய முயற்சிகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன.

அவசரமாக நாம் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டோம். ஆனால், அவசரமாக செய்த அந்தக் காரியத்தில் அந்தக் கீற்றுக் கொட்டகைகளுக்குப் பதிலாக புதிய ஏற்பாடு என்ன செய்வது? இரண்டு கிலோ மீட்டர் தூரம், மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்வளவு தூரம் மாணவர்கள் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இப்போது உள்ளது. என்னுடைய தொகுதியிலே பல இடங்களிலே அப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதை உடனடியாக சரி செய்து கீற்றுக் கொட்டகைகளை மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். கட்டடம் கட்டவேண்டும் என்பதையும் சேர்த்துக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கோரிக்கை மட்டும் சொல்லி விடுகிறேன். உள்ளாட்சிகளுக்கான நிதியைப்பற்றி இங்கே நம்முடைய அரசு ஒரு குழு அமைப்பதாகச் சொல்லியிருக்கிறது. உடனடியாக மத்திய அரசின் மூலமாக வருகிற நிதி, மாநில அரசு வழங்கவேண்டிய நிதி அதை வரவு வைக்கவேண்டும். வைக்கப்படுகிறது; ஆனால், அந்த நிதி உள்ளாட்சிகளுக்கு வரவு வைக்கப்படுகிறதே தவிர. அதை அப்படியே மின் கட்டணத்திற்காக அலுவலகத்திலேயே பரிமாற்றம் செய்யப்பட்டுவிடுகிறது. ஊராட்சிகளுக்கு அது வந்து சேர்ந்து, அவர்கள் மூலமாக எடுக்கப்படுவதேயில்லை. ஆகவே, அந்த உள்ளாட்சிகளுக்குரிய அதிகாரமே அதிலே பறிபோகிறது. அவர்களால் பல்வேறு காரியங்களைச் செய்யமுடியவில்லை. உள்ளாட்சிகளுக்கு உரிய நிதி ஆதாரத்தை வழங்குவதற்கு அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அடுத்து நம்முடைய ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா. (குறுக்கீடு) இன்னும் 5 பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) சொல்லி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** என்னுடைய தொகுதி என்ற முறையிலே மன்னார்குடி மருத்துவமனையைச் சரி செய்வதற்காக, நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. இதை உடனடியாகச் செய்யவேண்டும். அதேபோல, கூத்தாநல்லூர் நகராட்சியிலே செயல்படுகிற அந்த மருத்துவமனை டாக்டர்கள் இல்லாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு மருத்துவமனைகளிலேயும் போதிய டாக்டர்கள் இல்லை. அதேபோல, உள்ளிக்கோட்டை, திருவக்கோட்டை பகுதிகளிலேயும் மருத்துவர்களை



(குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். நியமிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடியின் நீண்டகால கோரிக்கை என்பது, இரயில் இருந்து இப்பொழுது இல்லாமல் போய்விட்டது. இது நம்முடைய அரசுக்குச் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும்கூட இதை இந்த மாநில அரசு ஒரு தீர்மானமாக நிறைவேற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உதவி செய்யவேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் மத்தியிலே சொல்லவேண்டியதை எல்லாம் இங்கே மாநிலத்தில் சட்டப் பேரவையில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இப்போது இரயிலைப் பற்றி குறிப்பிட்டார். அதைச் சொல்லவேண்டிய இடம் டெல்லி. அதைப்போலவே, இதற்கு முன்பு காவிரியைப் பற்றி இங்கே பேசினார், மேதகு ஆளுநர் உரையில் காவிரியைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லையே என்று. ஏதோ அவருக்கும், அவரது கட்சிக்கும் மட்டுமே காவிரிப் பிரச்சினையில் அக்கறை இருப்பதைப்போல் பேசினார். காவிரி நீரைப் பெறுவதற்கு, மாநில அரசு என்ன முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்று கேட்டார். என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைக் கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தப் பேரவையில் சொல்லிக்கொண்டேயிருக்கிறோம். இப்போதுகூட வழக்கு Tribunal முன்பு, நடுவர் நீதிமன்றத்தின் முன்பு உள்ளது. கடந்த காலத்தில் மத்தியில் வேறு கட்சியின் ஆட்சி, கர்நாடகத்தில் வேறு கட்சியின் ஆட்சி இருந்தது. ஆனால், இப்போது நிலைமை மிகவும் சாதகமாக உள்ளது. மத்தியிலேயும் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி. கர்நாடகத்திலேயும் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி. ஆகவே, உங்கள் கட்சி ஆதரவு கொடுத்துக் கொண்டு இருக்கிறதே, அந்த மத்திய அரசை வற்புறுத்தி அவர்கள் கர்நாடக அரசிடம் பேசி, கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டு இந்த வருடம் ஜுன் மாதத்திலாவது தமிழகத்திற்குக் கிடைக்கவேண்டிய காவிரி நீரை அவர்கள் வழங்க வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கட்சித் தலைவர்கள் வற்புறுத்த வேண்டும். அப்படி மத்திய அரசு செய்யவில்லை என்று சொன்னால், கர்நாடகத்தைக் காவிரி நீர் வழங்கும்படி கட்டாயப்படுத்தவில்லை என்று சொன்னால், மத்திய அரசுக்கு நீங்கள் அளித்துவரும் ஆதரவைத் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்தபோதெல்லாம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்த மாநில அரசோடு முழுமையான ஆதரவு தந்திருக்கிறது. ஆகையால், வேறு காரணங்களைக் காட்டி, அதிலே ஒதுங்கிக் கொள்ளவில்லை. அது, தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை; அந்த மாவட்ட மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை; தமிழகத்தினுடைய பிரச்சினை. இப்போது சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இல்லை என்று சொன்னால், சென்னை நகருக்குக் குடி தண்ணீர் கொடுக்க முடியாது. இதையெல்லம் உணர்ந்துதான் நாங்கள் சொல்கிறோம். ஆகையால், நாங்கள் யார் மேலேயும் பழி போட்டுச் சொல்லவில்லை. என்ன நடவடிக்கை எடுத்தாலும், மாநில அரசோடு சேர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காவிரி நதிநீருக்கு ஒத்துழைக்கும்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் யார் மீதும் பழிபோட்டுப் பேசவில்லை. என்னைப் பொறுத்தவரை, நான் என்ன சொல்கிறேன் என்றால், மாநில அரசின் சக்திக்கு உட்பட்டு, என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ, அத்தனையும் மேற்கொண்டுவிட்டோம். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றோம்; நடுவர் மன்றத்திற்குச் சென்றோம்; ஆனால், நடுவர் மன்றம் கொடுத்த இடைக்கால ஆணையைக்கூட கர்நாடக அரசு இதுவரை செயல்படுத்தவில்லை. ஆகவே, இன்றையதினம் மத்தியிலே காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சி இருப்பதால், அந்தக் கூட்டணி ஆட்சிக்கு உங்கள் கட்சி ஆதரவு கொடுப்பதால், நீங்கள் மத்திய அரசை வற்புறுத்தி தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேச்சை முடியுங்கள்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், பேச்சு முடிந்தது. (குறுக்கீடு) உங்கள் பேச்சு முடிந்தது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) உங்கள் பேச்சு முடிந்தது. திரு. எச். ராஜா. (குறுக்கீடு) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, கும்பகோணம் சம்பவத்திற்குப் பிறகு, மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு கூரை வேய்ந்த பள்ளிகள் மாற்றியமைக்கப்படவில்லை என்கிற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கின்றார். தமிழகத்தில் மொத்தம் இருக்கின்ற 2,629 பள்ளிகளிலும் அந்தக் கூரைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அதிலே, இதுவரை 2,536 பள்ளிகளின் கூரைகள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது 96.41 சதவீதம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. மீதியிருக்கின்ற பள்ளிகள் 93 பள்ளிகள்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருவாரூர் மாவட்டத்திலே கிட்டத்தட்ட 349 பள்ளிகளிலே கூரைகள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அதிலே, 324 பள்ளிகளிலே கூரைகள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கூற விரும்புகின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோது, விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 2,500 ரூபாய், ஒரு ஏக்கருக்கு 1,000 ரூபாய் என்று கொடுத்தால், அது எப்படிப் போதும் என்று கேட்டார். இது மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மத்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகள்படி, ஒரு ஹெக்டேருக்கு அடுத்த பயிர் சாகுபடி செய்வதற்காக input subsidy -ஆக 2,500 ரூபாய் கொடுக்கலாம் என்று அவர்கள் அதை வகுத்திருக்கிறார்கள். அப்படியானால், ஒரு ஹெக்டேருக்கு 2,500 ரூபாய் என்றால் ஒரு ஏக்கருக்கு ஏறக்குறைய 1,000 ரூபாய். ஆகவே இந்தத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமானால், இந்த விதிமுறைகளை மத்திய அரசுதான் மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு ஷரத் பவார் அவர்களுடன் நான் கலந்தாலோசித்தபோது, 15-1-2005 அன்று இங்கே தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது, விவசாயிகளுக்கு நெல் சாகுபடிக்கான ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதைக் கனிவுடன் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரைக்கு நன்றி அறிவிப்பு தீர்மானத்திலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என் கருத்துகளை எடுத்து வைக்க அனுமதித்தமைக்குப் பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுனாமி பேரழிவு வந்த பிறகுதான், சுனாமி என்கின்ற வார்த்தையே பலருக்குத் தெரிய வந்தது. அந்த அளவிற்கு மனித சமுதாயத்திற்கு மிகப் பெரிய அளவிலே இழப்பினை ஏற்படுத்திய ஒரு சம்பவமாக அது அமைந்தது. ஆனால், அதிலே வரவேற்கத்தக்க ஒரு அம்சமும் வெளிப்பட்டது. மனித சமுதாயம் அனைத்தும் சாதி, மத, மொழி, மாநில, தேச எல்லைகளையெல்லாம் கடந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றுவதற்காக, சேவை செய்வதற்காக முன்வந்த ஒரு சம்பவத்தையும் நம்மால் பார்க்க முடிந்தது.

பல்வேறு ஆன்மீக அமைப்புகள், அதிலும் குறிப்பாக, மாதா அமிர்தானந்தமயி மடத்தைச் சேர்ந்தவர்கள் 100 கோடி ரூபாய்க்கு வீடு கட்டித் தருவதற்காக முன்வந்திருப்பது, உண்மையிலேயே அனைவரையும் ஒரு இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்திய ஒரு நிகழ்வாக நான் அதை உணர்கிறேன்.

அதுபோல, இராமகிருஷ்ணா மடம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடம் போன்றவர்கள் உடனடியாக; மறுநாள் காலையிலேயே நான் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. அத்வானிஜி அவர்களோடு சென்றபோது அங்கே அவர்கள் லாரி லாரியாக வைத்து, உணவுப் பொட்டலங்களை வழங்கிக் கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது.

அதேபோல இப்போது கடலூர், நாகப்பட்டினம், குளச்சல் ஆகிய பகுதிகளிலே ஆர்.எஸ்.எஸ்.ஸும் சேவா பாரதியும் 1,100 தற்காலிக வீடுகளைக் கட்டி முடித்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான உடல்களை,



சடலங்களை எடுத்து, அவற்றை அடக்கம் செய்வதற்கும், அவற்றிற்கு ஈமக் கிரியைகள் செய்வதற்கும் ஆர்.எஸ்.எஸ். செயல்பட்டிருப்பது, அனைவருமே -- நம்முடைய தோழர் நல்லகண்ணு அவர்கள் உட்பட, அனைவருமே -- பாராட்டக்கூடிய விதத்திலே அமைந்தது.

*பிற்பகல் 12-40*

அன்றையதினம் இங்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, நிவாரணத்தைப் பற்றிய கருத்து என்ன என்று கேட்டதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன் - there is no finger pointing in such a national calamity of this magnitude - இவ்வளவு பெரிய பேரிழப்பு நடந்திருக்கிற சமயத்திலே, நான் யாரையும் குற்றஞ்சாட்டத் தயாராக இல்லை என்பதை இங்கு திரு. அத்வானி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்போது மீனவ சமுதாய மக்களைப் பார்த்தபோது அவர்களுடைய மனோதைரியம் மிகவும் பாராட்டத்தக்கதாக இருந்தது. சம்பவம் நடந்த மறுநாளே, அவர்களிடம் உங்களுக்கு என்ன உதவி வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, எங்களுக்கு மற்ற உதவிகளைப் பற்றியெல்லாம்கூட கவலையில்லை. கட்டுமரமும், வலையும் நாளை காலையிலே கொடுத்தால், மாலையிலே, நாங்கள் எங்கள் கால்களிலே நிற்கமுடியும் என்று சொன்னார்கள். ஆகவே, உடனடியாக மத்திய அரசு இதற்கு 100 சதவிகிதம் மானியம் தரவேண்டுமென்று நான் பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக வலியுறுத்துகிறேன். ஏனென்றால், மீன் வாங்கிக் கொடுப்பதைவிட, மீன் பிடிக்கக் கற்றுக்கொடுப்பது நல்லது. எனவே, உடனடியாக அவர்களுக்கு மானியத்திலே கட்டுமரமும், மீன் பிடிக்கும் வலையும் வழங்க வேண்டும். ஆனால், இதிலே மத்திய அரசு எப்படி அரசியல் ஆதாயம் தேடி குற்றச்சாட்டுகள் சொல்வது தவறோ, அதுபோல, இதிலே அரசியல் ஆதாயம் தேட நினைப்பதும்கூட தவறு என்பதிலே பாரதிய ஜனதா கட்சி உறுதியாக இருக்கிறது.

மத்திய அரசுக்கு, யார் யார் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை அறிவதற்கான agency கிடையாது. ஆனால், அந்த agency — அதற்கான அமைப்பு -- மாநில அரசுக்கு இருக்கிறது. எனவே, மாநில அரசை ஒதுக்கிவிட்டு இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது என்பதை பாரதிய ஜனதா கட்சி எதிர்த்தது. அந்தக் கருத்திலே பாரதிய ஜனதா கட்சி உறுதியாக இருக்கிறது. ஆனால், இதுவரை எத்தனையோ national calamity நடந்திருக்கிறது. குஜராத்திலே பூகம்பம், ஒரிசாவிலே புயல்

வெள்ளச் சேதங்கள். எப்போதுமே அந்தமாதிரி அரசாங்கத்தினுடைய திட்டங்களுக்குத் தலைவர்கள் பெயர் வைப்பது பழக்கம் உண்டு. அதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் ஒரு தேசிய பேரிழப்பு, இயற்கைச் சீற்றம் நடந்திருக்கிறது. அதிலே போய் தலைவர்கள் பெயரை வைத்து நாங்கள் திட்டங்கள் கொண்டு வருகிறோம் என்பது கண்டிக்கத்தக்கது. It is just like baking the political cake on the funeral pyre of the victims. இது ஒரு அருவெறுக்கத்தக்கச் செயல். ஆகவே, இதற்குப்போய் இராஜீவ் காந்தி சுனாமி நிவாரண நிதித் திட்டம் என்ற பெயர் வைத்ததை பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கிறது.

அதேமாதிரியாக, இங்கே விளம்பரத்தைப் பற்றிப் பேசினார்கள். நிச்சயமாக C. & A.G. இதைக் கண்டிக்கும். ஏனென்றால், ஒரு அரசாங்க விழாவிலே ஒரு அரசியல் கட்சித் தலைவர் படம் போட்டு விளம்பரம் செய்யலாம்; தவறில்லை. நேற்றையதினம், பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள்கூட, ஒரு தலைவர் பெயர் சொன்னார். இல்லை; அதில் இரண்டு அரசியல் கட்சித் தலைவர்களின் பெயர்கள் போட்டிருக்கின்றன. அவை இரண்டுமேகூட தவறுதான். ஆகவே, இந்தத் தேசியப் பேரிடர் ஏற்பட்டிருக்கிறது. அதிலே, பிரதம மந்திரி முதன்முதலாகச் சொல்லும்போது, அன்னிய நாட்டினுடைய உதவியைப் பெற மறுத்து அறிக்கை கொடுத்தார். ஆனால் இப்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்பதற்காக — யாருக்கும் உள்நோக்கம் கற்பிப்பதற்காக அல்ல — அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்; இதனுடைய பின்விளைவுகள் மோசமாக இருக்கும் என்கின்ற காரணத்தினாலே, இதை நான் அரசாங்கத்தின் முன்பாகக் கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களிலே, நாடு முழுவதும், 'Outlook' போன்ற பத்திரிகையிலே ஒவ்வொரு மாநிலத்திலும் நடந்ததைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். தமிழகத்திலே, குறிப்பாக ** இதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ** (குறுக்கீடு) No (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அப்படியில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. எச். ராஜா:** I am not yielding (குறுக்கீடு) நான் நடக்காத விஷயத்தைப் பற்றி பேசவில்லை. நான் நடந்த விஷயங்களைப் பற்றித்தான் பேசியிருக்கிறேன். ** (குறுக்கீடு)

**மாண்புகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா அவர்கள்.

**திரு. எச். ராஜா:** ** (குறுக்கீடு) இல்லை, I don't yield...

*பிற்பகல் 12-45*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ராஜா அவர்கள் (குறுக்கீடுகள்) ராஜா அவர்கள், ஒரு குற்றச்சாட்டு என்று சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்கு உரிய ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். அந்த ஆதாரம் இல்லாமல் அப்படிப் பேசக்கூடாது. அப்படிப் பேசுவது சரியல்ல.

**திரு. சோ. இராசேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு ...

**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களும் அதை-

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**திரு. எச். ராஜா:** இல்லை. (குறுக்கீடுகள்) நான் ஒன்றும் இல்லாததைச் சொல்லவில்லை. ஆதாரங்களோடு பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. நான் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். நான் ஆதாரம் இல்லாமல் பேசவில்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. எச். ராஜா:** இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது நான் குறுக்கிடவில்லையே! நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, ஒன்றும் தேவையில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா அவர்கள், ஆதாரம் இல்லாமல் ஒரு குற்றச்சாட்டைச் சொன்ன காரணத்தால், அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எச். ராஜா:** ஆதாரங்கள் பல பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. நான் இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். எப்போது அரசாங்கம் இதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேனோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இப்படி ஒரு குற்றச்சாட்டைத் தெரிவிப்பதாக இருந்தால், பேரவைத் தலைவரிடத்திலே காட்டி அனுமதி வாங்கி, அதற்குப் பிறகு சொல்வதுதான் முறை. ஆகவே, தங்களுடைய பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எச். ராஜா:** இல்லை. இதனுடைய ஆதாரங்களைப் பேரவைத் தலைவருக்குக் கொடுத்துவிட்டும்கூட, நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ** என்பதை மட்டும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஆகவே, நான் இங்கு அரசின் முன்பாக சில தகவல்களை வைத்திருக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) அந்தக் குற்றச்சாட்டு நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) இல்லை, அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** அப்படியானால் இவர்கள் இதுபற்றிப் பேசியதும்கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் அடுத்த தலைப்புக்குப் போங்கள். (குறுக்கீடு) ராஜா, நீங்கள் அடுத்த தலைப்புக்குப் போங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்பட்டுவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், அது நீக்கப்பட்டுவிட்டது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** அதாவது, **

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது நீக்கப்படுகிறது. ** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எச். ராஜா:** அதாவது, அன்னிய நாட்டிலிருந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக எவ்வளவு நிதி வந்திருக்கிறது? அவை எப்படியெப்படிப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது பற்றி அரசாங்கம் சற்று விசாரணை செய்து, இதுபற்றிய உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். ஏனென்றால், இம்மாதிரியான குற்றச்சாட்டுகள், பல்வேறு பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. ஆகவே, நீங்கள், நான் சொன்ன குற்றச்சாட்டை நீக்கிவிட்டாலும்கூட, பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள் மூலமாக வந்திருக்கின்ற நிதி எவ்வளவு? அவை எப்படியெப்படி எல்லாம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பயன்படுத்தப்பட்டிருக்கின்றன ? ஏனென்றால், பாரதப் பிரதமர் முதலிலே அன்னிய நாடுகளுடைய உதவி எங்களுக்குத் தேவையில்லை என்று ஏன் சொன்னார்? அதை எங்களுடைய பாரதிய ஜனதா கட்சி வரவேற்றது. ஆகவே, அதற்குப் பிறகு இம்மாதிரி நடந்திருப்பதை அரசு விசாரணை செய்து விவரங்களை மக்களுக்கு வெளியிடவேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

அதற்கு அடுத்ததாக, புதிய வீராணம் திட்டம் பற்றி கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய வீராணம் திட்டத்தினுடைய விரிவாக்கத் திட்டத்தினை, சமீபத்திலே தமிழக அரசு அறிவித்திருக்கிறது. அதாவது, கொள்ளிடம் பகுதியிலே 6 ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாக 300 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டமானது விஸ்தரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது விவசாயிகள் மத்தியிலே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே, பெரம்பலூர் போன்ற மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக இருக்கின்ற காரணத்தினாலே, அங்கிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாக தண்ணீர் எடுக்கப்படுமானால், நிலத்தடி நீர் உவர் நீராக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். நேற்றே இதுபற்றி முழுமையாக உரிய விளக்கத்தை அமைச்சர் பெருமக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இதற்குரிய விரிவான விளக்கம் தரப்பட்டது. எங்கெல்லாம் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுகின்றதோ, அங்கெல்லாம் நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு, அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் அங்கு கண்டறியப்பட்டு, அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும்போது, எந்தவகையிலும் பக்கத்திலே இருக்கின்ற விவசாய நிலங்களுக்குரிய கிணறுகள் பாதிக்கப்படாது என்று ஆய்வறிக்கை பெற்ற பின்புதான், அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய வீராணம் விஸ்தரிப்புத் திட்டத்திலே—பெரம்பலூர், திருச்சி,



தஞ்சாவூர் பகுதிகள், — ஏற்கெனவே இந்தக் கொள்ளிடம் பகுதியிலிருந்து 29 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம், வேதாரண்யம் வரை குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே, அது வீராணம் திட்டத்தோடு இங்கு இணைக்கப்பட்டு தண்ணீர் வருமானால், மேலும் பாதிப்பு வரும். ஏனென்றால், போன வருடம் பெய்ததுமாதிரி மழை எல்லா வருடமும் பெய்யும் என்று நாம் சொல்லமுடியாது. அதிலேயேகூட, இந்தத் திட்டத்திற்கு முன்பாக வீராணம் திட்டமானது ...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள், நேற்றையதினம் இதே அவையிலே, இந்தத் திட்டத்தைப் பற்றிக் கேட்டார். அப்போது விரிவான விளக்கம் தரப்பட்டது. மேலும், இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள் கேட்கின்றார். கோடைக்காலங்களில் சென்னைக்குத் தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும்வகையில், வீராணம் விரிவாக்கத் திட்டம் உருவாக்கப்பட்டது. பொதுப் பணித் துறையின்கீழுள்ள நிலத்தடி நீர் குழுமம், நீர் ஆராய்ச்சி நிலைய பொறியியல் வல்லுநர்கள், தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் சென்னைக் குடிநீர் வாரியம் ஆகியவற்றின் பொறியியல் வல்லுநர்கள் அடங்கிய குழு, கொள்ளிடம் ஆற்றில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது. கடந்த 50 ஆண்டுகளில் கொள்ளிடம் ஆற்றில் நீர்வரத்து, நீர்மட்டம் மற்றும் பயன்பாடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு தண்ணீரை எடுப்பதன்மூலம், நிலத்தடி நீரானது எவ்வகையிலும் குறையாது என்பதை உறுதி செய்தபிறகே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முன்வந்தார்கள். அதனடிப்படையிலே, அந்தப் பகுதியிலே கொள்ளிடம் ஆற்றிலே, கல்லணைக்கும் கீழணைக்கும் இடைப்பட்ட தூரத்திலே, ஒரு நாளைக்கு 2360 மில்லியன் லிட்டர் தண்ணீரானது கிடைக்கின்றது என்று தொழில்நுட்ப வல்லுநர்களால் கணக்கிடப்பட்டது. அவற்றில் திரு. ராஜா அவர்கள் கூறியதுபோல, அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, ஒரு நாளைக்கு 200 மில்லியன் லிட்டர் தண்ணீர் மட்டும் எடுக்கப்படுகிறது. மேலும், புதிய வீராணம் திட்டத்தினுடைய விரிவாக்கத் திட்டத்திற்காக, ஒரு நாளைக்கு எடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ள நீரின் அளவு 150 மில்லியன் லிட்டராகும். ஆக, அங்கே 2360 மில்லியன் லிட்டர் தண்ணீரானது கிடைக்கின்ற வகையிலே, தினம் எடுப்பது 350 மில்லியன் லிட்டர்போக, மீதியிருக்கின்ற

தண்ணீர் அங்கே இருக்கின்ற மக்களுக்குத் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது என்பதை நன்கு கண்டறிந்த பிறகுதான், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், சென்னையிலே இருக்கின்ற மக்களைப்பற்றி அதிக அக்கறைகொண்டு, அங்கே புதிய வீராணம் திட்டத்தின் விரிவாக்கத் திட்டத்தை இப்போது செயல்படுத்துவதற்கான ஆணை பிறப்பித்தார்கள் என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள், ஏற்கெனவே பம்ப்செட்டுகளில் நீர் எடுக்கமுடியாமல், 10 அடிக்குக்கீழே கொண்டு போயிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, அமைச்சர் அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார். அதற்குப் பிறகும் மறுபடியும் அதைப்பற்றியே பேசுகிறீர்களே? ராஜா, எப்பொழுதும் மந்திரி சொல்வதைக் கேட்கவேண்டும்! (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள், பம்ப்செட்டுகளை 10 அடிக்குக்கீழே கொண்டுபோய்விட்டதாகக் கூறுகின்றார். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தப் புதிய வீராணம் விரிவாக்கத் திட்டத்தை 14-12-2004 அன்று, பெரம்பலூர் மாவட்ட அரசு விழாவிலே, அன்றையதினம் தொடங்கி வைத்தார்கள். அதற்குப் பின்பாக, அதே டிசம்பர் மாதம் 24, 25 ஆகிய இரண்டு நாட்களிலே, மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையின் அடிப்படையிலே, அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள், துணை சபாநாயகர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலே அந்தப் பகுதியிலே கொள்ளிடம் ஆற்றில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படுகின்ற, அந்தப் பகுதியிலே உள்ள 31 கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் இந்தத் திட்டத்தால் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது என்பதைப் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணையை ஏற்று, அங்கே சென்று, மூன்று குழுக்களாகப் பிரிந்து, அந்தப் பகுதி மக்களை நாங்கள் சந்தித்தோம். அப்படிச் சந்தித்த நேரத்திலே, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு இந்தப் பகுதியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் எடுத்துச் சென்றால்,



நிலத்தடி நீர் குறைந்துவிடும் என்ற அச்சம் இருந்தது. அந்த அச்சத்தைப் போக்க, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அறிவுரையின்படி, அந்த மக்களிடம் சென்று நாங்கள் பேசியபோது, இந்த கல்லணைக்கும் கீழணைக்கும் இடைப்பட்ட தூரத்திலே இருக்கின்ற மணலை எடுக்கவேண்டாம்; அந்த மணலை எடுக்காமல் மூன்று தடுப்பணைகளைக் கட்டவேண்டும்; மேலும், அந்த விவசாய மக்களுக்குக் காவிரி டெல்டா பகுதியில் இருப்பதைப்போல, மின்சாரத்தை வழங்கவேண்டும் என்று அங்கே இருக்கின்ற மக்கள் கோரிக்கை வைத்தார்கள். அதன் அடிப்படையிலே, அந்த நேரத்தில் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல், அந்த 31 கிராமத்தில் இருக்கின்ற மக்களைச் சந்தித்து, அவர்களிடம் நல்லமுறையிலே பேச்சுவார்த்தை நடத்தி நாங்கள் வந்தபிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தோம். அதன் அடிப்படையிலே அந்த மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள், 75 கோடி ரூபாயிலே மூன்று தடுப்பணைகளைக் கட்டுவதற்கு அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

மேலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பயன்படுகின்ற வகையிலே, கிட்டத்தட்ட 4,886 விண்ணப்பங்களுக்கு—31-12-2004 வரை வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கு—அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மின்சாரம் வழங்குவதாகவும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தி இருக்கின்றார்கள். மேலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற மணலை எடுப்பதைத் தடுப்பதற்காகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். இப்படி அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுடைய குறைபாடுகளைக் கண்டறிந்து நிவர்த்தி செய்வதற்கு ஆணை பிறப்பித்து விட்டார்கள். அதற்குப் பிறகும், அந்த இரண்டு நாட்களில் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்த நேரத்திலே, இப்போது சட்டமன்றத்திலேயும் எதிர்ப்பு வருகிறது; அந்தப் பகுதியிலுள்ள மக்களிடமிருந்தும் எதிர்ப்பு வருகிறது. எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள், இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். அந்தப் பெரிய மனப்பான்மை வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுடைய தூண்டுதலால்தான், அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் அங்கே திட்டத்தை எதிர்க்கின்றார்களே தவிர, வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பொறுத்தவரை, இரண்டு நாட்கள்,

31 கிராமங்களுக்கும் சென்ற நேரத்திலே எந்த எதிர்ப்புமே இல்லாத நேரத்தில் . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை அறிவித்த பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் ஒரு குழுவை அனுப்பியதாகச் சொன்னார்கள். 31 கிராமங்களுக்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் சென்று இந்தத் திட்டத்தினால் எந்தப் பாதிப்பும் இல்லை என்பதை அந்தக் கிராமத்து மக்களுக்கு விளக்கிச் சொன்னதாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், அந்தக் குழுவை அனுப்பவேண்டிய அவசியம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கவில்லை. அதாவது, இந்தத் திட்டத்தை அறிவித்தவுடன், நான் அந்த அரசு விழாவிலேயே இந்தத் திட்டத்தை துவக்கி வைத்தபோதே, இதனால் சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்பதை விளக்கமாக எடுத்துரைத்தேன். ஆனால், அதன் பின்னர் வேண்டுமென்றே சில அரசியல் கட்சிகள் அந்தக் கிராமத்து மக்களிடையே, இதனால் உங்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று சொல்லி, ஒரு போராட்டத்தை அவர்களாகவே தூண்டிவிட்டார்கள். இந்தப் போராட்டம் அந்த 31 கிராமங்களுக்கும் பரவியது. அதனால்தான் மீண்டும் இந்தத் திட்டத்தினால் எந்தப் பாதிப்பும் இல்லை என்பதை விளக்கிச் சொல்வதற்காக அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவினை நான் அங்கே அனுப்பி வைத்தேன். அதன் பின்னர், அந்தக் கிராமத்து மக்கள் உண்மை நிலைமையை உணர்ந்து, இதனால் தங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பதைப் புரிந்துகொண்டு, நாங்கள் மனப்பூர்வமாக சம்மதிக்கிறோம்; ஆனால் எங்களுக்கு இந்தத் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று இப்போது அமைச்சர் சொன்னாரே, மூன்று தடுப்பு அணைகளைக் கட்டிக் கொடுங்கள், குறிப்பிட்ட பகுதியில் மணல் குவாரி செய்வதை நிறுத்துங்கள்; மின்சார இணைப்புகளை விரைந்து அளியுங்கள் என்று கேட்டார்களே, அதற்கெல்லாம் ஒத்துக்கொண்டால் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையென்று சொன்னார்கள். அதற்காகத்தான் இப்போது உடனடியாக அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, 7.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மீண்டும் சொல்கிறேன், இந்த வீராணம் திட்ட விரிவாக்கத் திட்டத்தினால், சம்பந்தப்பட்ட பகுதி மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை, விவசாயிகளுக்கும் பாதிப்பு



இருக்காது, குடிநீருக்கும் பாதிப்பு இருக்காது, நிலத்தடி நீருக்கும் எந்தப் பாதிப்பும் இருக்காது என்பதை அறுதியிட்டு உறுதியாக கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா பேசுங்கள். திரு. ஞானசேகரன் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ராஜா பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் ஞானசேகரன்.

**திரு. எச். ராஜா:** அவருடைய chance-லே அவர் பேசிக்கொள்ளலாம். உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா பேசி முடியுங்கள்.

**திரு. எச். ராஜா:** நான் அதிகாரம் இல்லாதவன்; பேர் மாத்திரம் ராஜா என்று வைத்துவிட்டார்கள் என்பதால்தான், மந்திரி சொல்வதைக் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. மேலும், இங்கே.. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், என்னுடைய அனுமதியில்லாமல் நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ராஜா பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி பிரச்சினை தீர்ந்தால்தான் வீராணம் பிரச்சினையும் சேர்ந்து தீரும். அதற்காகத்தான், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நதிநீர் இணைப்புக்காக ஒரு ஆணையத்தைக் கொண்டுவந்து, திரு. சுரேஷ் பிரபு தலைமையிலே அமைத்திருந்தது. ஆனால், இப்போது இருக்கிற மத்திய அரசு, அந்த ஆணையத்தையே காலி பண்ணிவிட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இவர்களால், அந்த தேசிய நதிநீர் இணைப்பு நடக்குமா என்று தெரியவில்லை. ஏனென்றால், இங்கு கவர்னர் உரையில் அதுபற்றி முதல்வர் அவர்கள் மத்திய அரசோடு பேசி இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு நிறைவேற்றுமா என்கின்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஏனென்றால், அந்த ஆணையத்தையே அவர்கள் கலைத்திருக்கிறார்கள். மேலும், இங்கு கவர்னர் அவர்கள் உரையிலே, "as always this Government has ensured the perfect maintenance of law and order" என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் காவல் துறையிலே நடந்திருக்கின்ற பல சம்பவங்கள்...

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** இல்லை, எனக்கு 5 நிமிடங்கள் கொடுக்க வேண்டும். ஏனென்றால், இடையிலே தடை இருந்த காரணத்தால், விளக்கங்கள் தந்ததால்.

காவல் துறையிலே சிவகாசி ஜெயலட்சுமி விஷயத்தை எடுத்துக் கொண்டால், 83 காவல் துறையினர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, இங்கு தருமபுரியிலே, பஸ் எரிப்பு வழக்கிலே இன்னமும் அரசு வழக்கறிஞரையே நியமிக்கப்படாத ஒரு சூழ்நிலையும் பார்க்க முடிகிறது. சட்டமன்ற உறுப்பினர், வீட்டிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் சங்கரராமன் மனைவிக்கு அரசு, ஐந்து இலட்சம் ரூபாய் நிதி கொடுத்த மாதிரி, சட்டமன்ற உறுப்பினருக்கும் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தால் சட்டத்திற்கு முன்பாக அனைவரும் சமமாக நடத்தப்படுவதாக நான்கூட எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் அது நடக்கவில்லை. ஒரு இலட்சம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. உத்தராதி மடத்திலே சீனுவாச்சாரி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடுகள்) ராஜா, நேரம் முடிந்துவிட்டது, உங்கள் நேரம் முடிந்து விட்டது. முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே போதுமான நேரம் உங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ....



**திரு. எச். ராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. தமிழரசன் ஆரம்பியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே உவந்தளித்திருக்கின்ற பேருரையின்மீது ...

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு உங்கள் கட்சித் தலைவர் பேசுகிறார், அவர் பேசட்டும். இன்றைக்கு உங்கள் தலைவர் பேச இருக்கிறார். அப்போது அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்) முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் மாமன்றத்திலே உவந்தளித்திருக்கின்ற பேருரையின்மீது, எங்கள் இயக்கத்தின் சார்பில் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன் உங்களுக்குப் பேச வாய்ப்பு இருக்கிறது. அப்போது நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** எனது கருத்துகளை இங்கே எடுத்து வைப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பை வழங்கியிருக்கிற உங்களுக்கு, எனது மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நேரத்தின் அருமை கருதி எனது கருத்துகளை மிகச் சுருக்கமாக இங்கே எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன்.

**திரு. எச். ராஜா:** அரசாங்கத்திற்கு எதிராக கருத்துகள் சொல்லக் கூடாதா? (குறுக்கீடு) அரசாங்கத்திற்கு எதிராக கருத்துகள் சொல்லக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. கே.என். இலட்சுமணன் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது திரு. கே.என். இலட்சுமணன் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. தமிழரசன் நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவையிலே . . .

**திரு. எச். ராஜா:** சர்வாதிகாரப் போக்கை, அரசாங்கத்திற்கு எதிராக கருத்துகள் சொல்லக் கூடாது என்ற போக்கைக் கண்டித்து அவையிலிருந்து நான் வெளிநடப்பு செய்கிறேன்.

*(பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன் நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழக மக்களின் பெரும்பான்மை ஆதரவோடு ஆட்சிப்பொறுப்பேற்று கடந்த நான்கு ஆண்டுகளாக மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிற இந்த அரசு, நான்காவது ஆண்டை நிறைவு செய்கிற இந்த வேளையில், இந்தச் சட்டப் பேரவையில், நான்காவது ஆளுநராக நம்முடைய ஆளுநர் அவர்கள் இங்கே உரை நிகழ்த்தியிருக்கிறார். இந்த நான்காண்டு காலத்தில் நான்கு ஆளுநர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களே, அவர்கள் ஏன் மாற்றப்பட்டார்கள், எதற்கு மாற்றப்பட்டார்கள், என்ன காரணம், எது காரணம் அதற்கெல்லாம் நான் உள்ளே போக விரும்பவில்லை. ஆனால், நான்காவது ஆளுநராக இந்தச் சட்டப்பேரவையிலே மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கிறார். அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்திலே, எனது கருத்துகளை எங்கள் இயக்கத்தின் சார்பிலே, பதிவு செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

ஆளுநர் உரை என்பது, ஒரு நல்ல ஆட்சியின் முன்னுரையாக நடப்பு நிதியாண்டின் ஒரு முன்னுரையாக அமையக்கூடிய தன்மை படைத்தது. அந்தவகையிலே, முன்னுரையாக விளங்கக்கூடிய மேதகு ஆளுநர் உரையிலே, நான் என்னுடைய கருத்துகளை அதிலே பதிய வைப்பதற்கு முன்னாலே, நாகப்பட்டினம் மாவட்டத்தினுடைய, அந்த மாவட்டத்திலே இருக்கிற ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற வகையிலே, சுனாமியைப் பற்றிய எனது கருத்துகளை இங்கே சொல்வது எனது கடமை என்று கருதுகிறேன். சுனாமி என்கின்ற அந்த ஆழிப் பேரலை, கடந்த டிசம்பர் 26 அன்று தமிழகக் கடலோர மாவட்டங்களை மிகப் பெரிய தாக்குதலுக்குள்ளாக்கி ஆயிரக்கணக்கான மீனவ மக்களை, கடலோர வாழ் மக்களைப் பலிக்குள்ளாக்கியது. உலகம்



எவ்வளவோ பெரிய விஞ்ஞான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. தகவல் தொடர்புத் துறை அவ்வளவு வளர்ந்திருக்கிறது. அது என்ன; இந்தியாவிலே மட்டும் இந்தத் தகவல் தொடர்புத் துறை வளரவில்லையா என்று தெரியவில்லை. மத்திய தகவல் தொடர்புத் துறைக்கு இப்படி ஒரு தகவலே வந்து சேரவில்லையா? உலகிலே மற்ற நாடுகளில் ஐ.நா. மன்றத்திலே அதற்காக ஒரு குழுவையே வைத்து, அது ஆராய்ச்சி செய்து இப்படி கடலோரம் பாதிக்கப்படுகின்ற அந்த சந்தர்ப்பங்களிலே எல்லாம் அந்தக் கடலோர மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற வண்ணம், விஞ்ஞானம் வளர்ந்து இருக்கிறபோது, இந்தியா ஏன் இதிலே பின்னடைந்துவிட்டது என்று புரியவில்லை. ஒன்றரை மணி நேரம் இந்திய தகவல் தொடர்புத் துறை என்ன செய்து கொண்டிருந்தது என்பது எனக்கு விளங்கவில்லை. பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்ற முடிந்த அந்த வாய்ப்பு காப்பாற்ற முடியாமல் போய், இப்போது உலகமே கண்ணீர்விடுகின்ற அளவுக்கு ஆயிரக்கணக்கான கடலோரப் பகுதி மக்களை நாம் இழந்து இந்த நிவாரணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றியெல்லாம் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். விஞ்ஞானம் இவ்வளவு வளர்கிறபோது, அங்கே தகவல் தெரிந்துவிட்டதாக இந்தோனேஷியாவிலே சொல்கிறார்கள். இங்கே சொல்கிறார்கள், அது எப்படி இந்தியாவிலே தெரியாமல் போனது என்ற அந்தப் புதிர் இன்னும்கூட எனக்குப் புரியவில்லை. இந்தப் புதிருக்கு வருங்காலத்திலேயாவது நாம் விடை காண வேண்டும். இந்தியத் தகவல் தொடர்புத் துறை கொஞ்சம் விழிப்பாக இருக்க வேண்டும்.

அந்த சுனாமியைப் பற்றிச் சொல்கிறபோது, ஆழிப் பேரலைகளின் ஆரவாரங்கள் அடங்குவதற்கு முன்னாலேயே நம்முடைய முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடலோரப் பகுதிக்கு, வந்து நின்று, இதோ நான் இருக்கிறேன் துயர் துடைப்பதற்கு என்று, துயர் துடைக்கின்ற பணிகளைத் தொடங்கி வைத்தாரே, அந்தத் துணிவை நிச்சயம் நாம் பாராட்டியாக வேண்டும்.

*பிற்பகல் 1-05*

அமெரிக்கா எவ்வளவு பெரிய வல்லரசு? இன்றைக்கு உலகப் பெரிய ஏகாதிபத்திய நாடாக இருக்கிற அந்த அமெரிக்க வல்லரசிலே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னாலே, நியூயார்க்கிலே உலக வர்த்தக மையம் என்கின்ற அந்தக் கட்டடம் தீவிரவாதிகளால் விமானம் மூலம்

நொறுக்கி உடைக்கப்பட்டது. அந்த நிவாரணப் பணிகள் முடிவதற்கு மூன்று மாத காலம் தேவைப்பட்டது. அங்கே இருக்கிற பிணங்களை எடுப்பதற்குக்கூட ஒரு மாத காலம் தேவைப்பட்டது. அமெரிக்காவைப் போன்ற வளர்ந்த நாட்டிலே, அவ்வளவு விஞ்ஞான சக்திகள் பயன்படுத்துகின்ற நாட்டிலே, பிணங்களை—அங்கேயிருந்த சில நூறு பிணங்கள்—எடுப்பதற்கு ஒரு மாத காலம் தேவைப்பட்டது. ஆனால், இங்கே எண்ணூரிலேயிருந்து கன்னியாகுமரி வரை ஏறக்குறைய 800 கிலோமீட்டர் தூரத்திலே, எங்கெங்கு என்று உடனடியாகக் கணக்கு எடுக்க முடியாத நிலைமையிலே, ஆயிரக்கணக்கான உயிர்கள் பேரலைகளால் கொல்லப்பட்டபோது—இந்த 800 கிலோமீட்டர் தூரத்திலும், 8,000 உயிர்கள், அங்கே ஆழிப்பேரலைகளால் கொல்லப்பட்டபோது—ஒரு வார காலத்திலே துரித நடவடிக்கை எடுக்கப்பட்டதை நாகப்பட்டினத்தினுடைய மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நான் அறிவேன். வேளாங்கன்னி திருத்தலமே பிண நாற்றம் பிடித்துக் கிடந்தது. ஒரு வார காலத்திலே, இனி பிணம் இல்லை என்கிற அளவிற்கு அந்த நிவாரணப் பணிகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அமெரிக்காவைவிட 800 கிலோமீட்டர் தூரத்திற்கு தமிழகத்திலே அந்த நிவாரணப் பணிகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அதை உண்மையாகவே, நியாயக் கண்ணோடு பார்க்கிறவர்கள் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. எனவேதான், பிரதமர் பாராட்டுகிறார், வேளாண்மைத் துறை அமைச்சர் பாராட்டுகிறார், மற்ற மத்திய அமைச்சர்களெல்லாம் பாராட்டுகிறார்கள். பாராட்டுவதற்கு நல்ல நோக்கமும், நல்ல எண்ணமும், நல்ல மனமும், பார்வையும் இல்லாதவர்கள்தான் அதைக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலேகூட, இந்த உரையிலேயே நான் ஓர் அதிசயத்தைப் பார்க்கிறேன். ஓர் ஆச்சரியத்தைப் பார்க்கிறேன். ஒரு பெரிய புரட்சியான அந்த ஒரு வரியைப் பார்க்கிறேன். இந்த ஆளுநர் உரையிலேயே ஒரு வரியைப் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற துப்புரவுத் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்தப் பரந்த உணர்வு தமிழகத்திலே புரட்சித் தலைவியைத் தவிர வேறு யாருக்கும் வராது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு வேலையை வெற்றிகரமாக முடிக்கிறபோது, அதிலே ஈடுபட்ட கடைசித் தொண்டன் வரை, அந்தப் பாராட்டு போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதற்கு, இந்த ஆளுநர் உரையிலே, அந்த ஒரு வரி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இருக்கிற துப்புரவுத் தொழிலாளர்கள்



ஒருங்கிணைக்கப்பட்டு, அங்கே பணியிலே ஈடுபடுத்தப்பட்டு, அவர்கள் மகத்தான சேவை புரிந்து, அவர்கள் பாராட்டத்தக்க பணிபுரிந்து, இந்த நிவாரணப் பணியிலே பிணங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று துப்புரவுத் தொழிலாளர்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால், ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் பரந்த உணர்வை நான் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே, அந்த அடித்தளத்து மக்களின் சார்பிலே இந்த அவையில் நன்றியோடு குறிப்பிட்டுப் பதிவுசெய்து, பாராட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆயிரக்கணக்கான மீனவர்கள் அந்த ஆழிப் பேரலையால் கொல்லப்பட்டார்கள். மீனவ சமுதாயமே இங்கே அழிந்து போகுமோ என்று அஞ்சுகிற அளவுக்கு அந்தச் சமூகம் அவ்வளவு பெரிய இடரை, அவ்வளவு பெரிய அழிவைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே தலித்துக்களும், இஸ்லாமியர்களும் அடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நேரடியான உயிர்ச்சேதாரம் அதிகம் இல்லை என்று சொன்னாலும், தலித்துகளும், இஸ்லாமியர்களும்கூட அதிலே இருக்கிறார்கள். மூன்றாவது கட்ட நிவாரணப் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறபோது, அவர்களெல்லாம் அன்புகூர்ந்து கணக்கெடுத்துக் கொள்ளப்படவேண்டும். அவர்களில் பல பேர், கூட்டுறவுச் சங்கத்திலே இல்லாமல் இருக்கலாம். கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் இல்லாமல் போயிருக்கக்கூட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அவர்களையெல்லாம் கணக்கிலே கொள்ளவேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

தனியார் நிறுவனங்கள்கூட, இதிலே பல நிலைகளில் ஈடுபட்டன. இங்கே நம்முடைய பாரதிய ஜனதா கட்சித் தலைவர் ராஜா அவர்கள் சொல்கிறபோது, மத மாற்றங்களெல்லாம் நிகழ்ந்தன என்று சொன்னார். நான் அந்தத் தொகுதியினுடைய பக்கத்து சட்டமன்ற உறுப்பினர். நாகூரிலே, நாகூர் தர்காவிலே, அங்கே அந்த ஆழிப்பேரலையிலே உயிரிழந்த பல இந்துக்களின் பிணங்களெல்லாம் புதைக்கப்பட்டிருப்பதை அங்கேயிருக்கிற அமைச்சர்களெல்லாம் அறிவார்கள். நாகூர் தர்காவிலே, அங்கே அன்றைக்கு அந்தச் சுடுகாடு திறக்கப்பட்டு, இந்துக்கள் பிணங்களெல்லாம் புதைக்கப்பட்டன. ஆகவே, அதையெல்லாம் நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. இருபதுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள், 25 நாட்களாக அதே பணியிலே, அந்தப் பகுதியிலேயே தங்கி, முழுமையாக அந்த மக்களோடு மக்களாக இருந்து நிவாரணப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 25-க்கும் மேற்பட்ட

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அந்தப் பணியிலே, போர்க்கால நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஒரு சாதாரணப் பணி என்று யாரேனும் கொச்சைப்படுத்துவார்களேயானால், அது நல்லதல்ல. இதையெல்லாம் அரசியல்படுத்துவார்களேயானால், அப்படி ஏதாவது அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறபோதுகூட, அதற்கு ஒரு தலைவர் பெயரை வைப்பது என்றால், தலைவரையே கொச்சைப்படுத்துவதாகும். அவருடைய சேவையை, மதிப்பைக் கொச்சைப்படுத்துவதாகும். பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பாரி வீட்டிலே அழுகிறவர், அங்கே இருக்கும் தோட்டத்தில் இருக்கும் அவரைக்காயைப் பார்த்து அழுததாகக்கூட நம்முடைய இலக்கியப் பாடல்களில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். அப்படி ஒப்பாரியிலே அழுகிறபோதுகூட அவரைக்காயை நினைத்து அழுகிற வகையிலே இங்கே பெயர் வைக்கிறார்கள் என்று சொன்னால், என்ன சொல்ல முடியும்?

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பந்தலிலே பாகற்காய் என்றுதான் அழுவார்கள். *(சிரிப்பு)*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அந்தப் பாகற்காயை, பாகற்காய் கசக்கும், ஆகவே நான் கசப்பைச் சொல்ல விரும்பவில்லை. பாகற்காய் கசக்கும் என்பதாலே அவரைக்காயைச் சொன்னேன். அதுவும் தோட்டத்திலே விளைகிறது என்பதனாலே அதை நான் சொன்னேன். ஆகவே, அப்படிப்பட்ட அந்த ஒப்பாரி வீட்டிலேகூட அதை நினைத்து அழுகிற அந்தப் பாங்கு, அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாது.

கன்னியாகுமரியிலே, குளச்சலிலே ஜேம்ஸ் மருத்துவமனையிலே மட்டும் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே வைத்தியம் பார்த்து இருக்கிறார்கள். அவர்கள் என்ன, பாராட்டையா எதிர்பார்த்தார்கள்? நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன், இப்படிப்பட்ட தனியார் நிறுவனங்கள் பொது நலப் பணியிலே ஈடுபட்டிருப்பார்களேயானால், இந்த சுனாமி நிவாரணப் பணிகளிலே ஈடுபட்டிருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர் களுக்கெல்லாம்கூட, இந்த அரசு, ஒரு பாராட்டுப் பத்திரம் தந்தால்கூட தவறில்லை.



இந்த ஆளுநர் உரையிலே சில விஷயங்களை, நான் பாராட்டுகிற விஷயங்களைப் பதிவு செய்ய வேண்டும். ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஏற்கெனவே கடனாக வழங்கப்பட்டிருந்த அந்தத் தொகையை, அந்தக் கல்விக் கடனை, இன்றைக்கு முழு மானியமாக அறிவித்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவர்கள் சமூகம், நலிந்த சமூகம். ஒடுக்கப்பட்ட சமூகம். ஒன்றரை கோடிக்கும் மேற்பட்டு, தமிழக மக்கள் தொகையிலே, அவ்வளவு பெரிய மக்கள் தொகையை உள்ளடக்கிய சமூகம். அந்தச் சமூகம், கல்வி அறிவைப் பெறுவதன் மூலம்தான், சமூகப் புரட்சியிலே அவர்கள் பங்கேற்க முடியும்; ஒரு சமத்துவ வாழ்வை அடைய முடியும் என்பதிலே, டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஒடுக்கப்பட்ட மக்கள், கல்வி அறிவைப் பெற வேண்டும்; அவர்கள் கல்வியைத் தடையின்றிப் பெறவேண்டுமென்பதற்காக, இன்றைக்குக் கடனாக வழங்கப்பட்ட தொகையை மானியமாக அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை ஆதிதிராவிட மக்கள் சார்பிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கல்விக் கடனுக்கு இவ்வளவு பெரிய மானியமாக தந்திருக்கிறார்கள். அதிலே ஒரே ஒரு சின்ன மாற்றம் செய்ய வேண்டுமென்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 50 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் என்று வைத்திருக்கிறார்கள். 50 ஆயிரம் ரூபாய் என்பது, சாதாரணமாக இன்றைக்கு இருக்கிற ஒரு இரவு நேரக் காவலாளி, ஒரு குற்றேவலர், ஒரு பியூனுக்குக்கூட இன்றைக்கு அவ்வளவு சம்பளம் வந்துவிடுகிறது. கணவன்-மனைவி இரண்டு பேர் ஒன்றாக வேலை செய்தால்கூட வந்து விடுகிறது. ஒரு துப்புரவுத் தொழிலாளிக்குக்கூட, ஏதாவது ஒரு பெரிய, மத்திய அரசாங்க வருமானத்திலோ, அல்லது உயர் வருமானத்திலோ இருந்தால், அதற்கு ஒரு ceiling இருக்கிறது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக ஆக்க வேண்டும். வருமானத்திற்கே, நாம் ஒரு இலட்சம் ரூபாய் வரையிலே வருமானம் இருக்கலாம் என்று நாம் வருமான வரி வைத்திருக்கிறோம். ஆகவே, அதை ஒரு இலட்சமாக, அந்த ஆண்டு வருமானத்தை ஆக்குங்கள். அதற்குப் பிறகு அதிலே இன்னொரு சின்ன திருத்தத்தைச் செய்யுங்கள். ஒரு முறை தவறினால் பரவாயில்லை. Fail ஆகி விட்டால் அவர்களுக்குக் கிடையாது. ஒரு arrears இருந்தால் அவர்களுக்குக் கிடையாது என்று இருக்கிறது. ஆகவே, சில பேர் உடல்நிலை சரியில்லாமல் இருந்திருக்கலாம். அதிலும் அடித்தளத்திலேயிருந்து

வருகிறவர்களுக்கு, சென்னை போன்ற நகரங்களிலே படிக்கிறபோது இந்தப் படிப்பு, இந்த உயர் கல்வி, இந்த ஆங்கில வழி போதனை இவை எல்லாம் பிடிபடாமல் போவதற்கு கொஞ்சம் தாமதம்கூட ஏற்படலாம். ஆகவே, ஒரு முறை தவறினால் அவர்களுக்குத் தகுதியிருக்கிறது, ஆக ஒரு முறையோ இரண்டு முறையோ, அப்படி ஒருமுறை, இரண்டுமுறை தவறினால் தகுதியிருக்கிறது, தொடர்ந்து தவறியவர்களுக்கு மட்டும் தகுதியில்லை என்கின்ற வகையிலே, அதிலே ஒரு சின்ன திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நான் சிலவற்றை எல்லாம் சொல்லாமலேயே, அவர்கள் செய்கிறார்கள். சொல்லாமலேயே, இன்றைக்குகூட, உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய தமிழக அரசு ஒரு அப்பீல் செய்திருக்கிறது. எதற்காக என்று சொன்னால், இங்கேயிருக்கிற தொழிற்கல்வி நிலையங்களிலே, தனியார் தொழிற்கல்வி நிறுவனங்களிலே நிர்வாக ஒதுக்கீட்டிலேகூட, இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றியாக வேண்டும் என்பதிலே எவ்வளவு உறுதியாக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு, உயர் நீதிமன்றம் அதற்குத் தடை விதித்தபோது, உச்ச நீதிமன்றத்திலே நம்முடைய தமிழக அரசு வழக்குத் தொடர்ந்து இருக்கிறது. ஆகவே, சொல்லாமலேயே செய்யக்கூடிய அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மண்ணின் மைந்தர்கள் மீண்டும் இந்த மண்ணைப் பெற வேண்டும். இந்த மண்ணின் மைந்தர்களான, தொன்மைக்குடி மக்களான பழங்குடி மக்களான ஆதிதிராவிட மக்கள், நலிந்த மக்கள், அடித்தளத்து மக்கள் மீண்டும் மண்ணைப் பெற வேண்டுமென்பதற்காக 7 ஆயிரம் பேருக்கு அவர்களுக்கு வேளாண்மை நிலம் வாங்குவதற்கும், அவர்களுக்கு வேளாண்மைக்குரிய இடுபொருட்கள் வாங்குவதற்கும் இந்த ஆளுநர் உரையிலே ஒரு நல்ல அற்புதமான அறிவிப்பு, சமூக மறுமலர்ச்சிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த ஆளுநர் உரையிலே இருக்கிற பலவற்றைச் சொல்கிறபோது, பாராட்டுகிறபோது, சொல்ல வேண்டியவர்களுக்குச் சிலவற்றை சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மன நிலையிலே இருக்கிறவர்களுக்கு அதைச் சொன்னால், அடித்தளத்து மக்களுக்குப் பலன்களும் நலன்களும் பெருகும். கேளாச் செவிடர்களிடம் போய்ச் சொல்வதிலே அர்த்தம் இருக்காது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், கடந்த 1991-1996-ஆனாலும் இப்போதானாலும், அடித்தளத்து மக்கள்



கோரிக்கைகளை வைக்கிறபோது, அவற்றைத் தாய் உள்ளத்தோடு நிறைவேற்றிக் கொடுக்கக்கூடியவர் என்பதனாலேயேதான் நான் சிலவற்றை எல்லாம் இங்கே பாராட்டுகிறபோதே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீரப்பனைச் சுட்டுக் கொன்ற செய்தி இருக்கிறதே, அதை உலக ஏடுகள் எல்லாம் முதல் பக்கத்திலே எழுதின. சட்டம் ஒழுங்குக்கும், தமிழ்நாட்டு மக்களுடைய காவல் துறையினுடைய சிறப்புக்கும் சவாலாக இருந்த வீரப்பனை, நம்முடைய தமிழக முதல்வருடைய புரட்சித் தலைவியினுடைய தலைமையிலான, வலிமையான இந்த அரசு, சுட்டுக்கொன்று ஒரு மிகப் பெரிய சரித்திரத்தைப் படைத்திருக்கிறது. இப்படி அவனை உயிரோடு பிடித்தாலோ அல்லது பிணமாகப் பிடித்தாலோ என்று ஏற்கெனவே காவல் துறை அறிவித்திருந்தது. அதற்குப்பிறகு அதிலே எதற்கு ஆராய்ச்சி? சிலர் இன்னமும் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். காவல் துறை பகிரங்கமாக அவனைச் சுட்டுக் கொண்டுவந்தாலோ, உயிரோடு கொண்டுவந்தாலோ, பிணமாகக் கொண்டுவந்தாலோ, எப்படிக் கொண்டுவந்தாலோ அது பாராட்டுக்குரியது என்று அறிவித்திருந்தது. அந்தச் சர்ச்சைக்குப் போகவேண்டாம்.

பிற்பகல் 1-15

அதேபோல, சென்னை மாநகரத்து மக்களுடைய குடிதண்ணீர் சவாலை, இந்த அரசு மிகத் திறமையாகச் சமாளித்து, இப்போது வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோல, திரைப்படத் துறைக்குச் சவாலாக இருந்த வி.சி.டி.-ஐ இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, திருட்டு வி.சி.டி.-யை ஒழித்து, அந்தச் சவாலை முறியடித்திருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட சவால்களை முறியடித்திருக்கிற நேரத்திலேதான் நான் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

அடித்தளத்து மக்களுக்கு, ஒரு மிகப் பெரிய சவாலாக இருந்துகொண்டிருக்கிற, ஜனநாயகத்திற்கு ஒரு சவாலாக இருந்துகொண்டிருக்கிற, தேர்தல் முறைக்கு ஒரு சவாலாக இருந்துகொண்டிருக்கிற 4 பஞ்சாயத்துத் தேர்தல்கள் இன்னமும் நடத்த முடியாமல் இருக்கின்றன. பாப்பாப்பட்டியிலே, கீரிப்பட்டியிலே, நாட்டார்மங்கலத்திலே, கொட்டக்கச்சியேந்தலிலே, இது இந்த ஆட்சியில்தான், அல்லது இந்த ஆட்சியில்தான் என்று இதை நான் அரசியல் ஆக்குவதோ, அப்படிப்பட்ட தன்மைக்கோ வரவில்லை. கடந்த ஆட்சியிலும் இது நடந்தது. கடந்த திராவிட முன்னேற்றக்

கழக ஆட்சியிலும் இந்தத் தேர்தலை நடத்த முடியவில்லை. அதற்கு
முன்னாலும் இந்த நிலைமை இருந்தது. சில பஞ்சாயத்துகளிலே 9
ஆண்டுகளாக இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, நம்முடைய புரட்சித்
தலைவியைப் பொறுத்தவரையிலே, இந்த உள்ளாட்சித் தேர்தல்களிலே
அவர்கள் இப்படிப் பார்த்தவர் இல்லை என்பதை நான்
எடுத்துக்காட்டோடு சொல்ல முடியும். ஒரு பொது பாராளுமன்றத்
தேர்தலிலேயும், இடைத் தேர்தலிலேயும் ஒரு தலித் வேட்பாளரை—
இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான், திருச்சியிலே, ஒரு தலித்
வேட்பாளரை—பொதுத் தொகுதியிலே நிறுத்தி வெற்றிபெறச்
செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமை வேறு
எந்தத் தலைவருக்கும் தமிழ்நாட்டிலே கிடையாது. ஒரு பொதுத்
தேர்தலிலே நிறுத்தினார்கள். நகர மன்றங்களிலேகூட, இப்போது இரண்டு
பொது நகர மன்றங்களிலே, பல்லாவரத்திலே ஒருவர் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராகவும், பல்லாவரம் பொது
நகர சபையிலே, ஒருவர் தலைவராகவும் இருக்கிறார்கள். ஆம்பூரிலே,
பொது நகர சபையிலே ஒருவர் தலைவராக இருக்கிறார். பொதுத்
தொகுதியிலே, தனித் தொகுதி வேட்பாளர்கள் போட்டியிட்டு வெற்றி
பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சவாலையும் நம்முடைய தமிழக
முதல்வர் அவர்கள்தான், (மணியடிக்கப்பெற்றது) ஏற்றுச் செய்திட
வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய ஆளுநர் உரையிலே VAT என்று
சொல்லப்படுகிற Value Added Tax-ஐ வருகிற ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து
கொண்டுவரப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நம்முடைய
மாநில அரசு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இழப்புக்கு உள்ளாகும்
என்று தெரிகிறது. அந்த இழப்பை நீங்கள் எப்படிச் சமாளிக்கப்
போகிறீர்கள்; இந்த நிதி நிலைமையை நீங்கள் எப்படிச் சீரமைக்கப்
போகிறீர்கள் என்பதையெல்லாம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். ஒரு
நிமிடத்திலே முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்துவிடுகிறேன். அதேபோல,
இந்தப் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்புக் குழு, இப்போது
அமைக்கப்பட்டிருக்கிறது, உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப்
பாராளுமன்றத் தொகுதி சீரமைப்புக் குழுவிலே, பல அரசியல் கட்சி



உறுப்பினர்களெல்லாம் இருக்கிறார்கள். அதனுடைய முடிவு விரைவிலே
வரப்போகிறது. தமிழகத்திலேகூட, தொகுதிகள் எல்லாம் மாற்றி
அமைக்கப்படப் போகின்றன. 234 தொகுதிகள் 236 ஆக, இன்னமும்
2 ஆதிதிராவிட மக்களுக்கான தனித் தொகுதிகளும் பெற இருக்கிற
செய்திகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே மக்கள்
தொகைக்கேற்ப 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைய வேண்டும்.
இப்போது 39 பேர்தான் இருக்கிறோம். 40-வது பாராளுமன்றத்
தொகுதியும், தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட வேண்டும். அப்படி
40-வது தொகுதி உருவாக்கப்படுமேயானால், அது எட்டாவது தனித்
தொகுதியாக அமைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆக, நீண்டகாலமாக
இந்த 40-வது நாடாளுமன்றத் தொகுதி அறிவிக்கப்படாமலே இருக்கிறது.
ஆகவே, பாராளுமன்றத் தொகுதி சீரமைப்புக் குழுவிலே நம்முடைய
மாநில அரசு வலியுறுத்தி, தமிழகத்திலே 40-வது பாராளுமன்றத்
தொகுதியை, 8-வது தனிப் பாராளுமன்றத் தொகுதியாக உருவாக்குவதற்கு
உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று
நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்,
முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அதேபோல, பாபா சாகேப்
அம்பேத்கருக்கு மணி மண்டபம் கட்டியதும், அம்பேத்கர் பெயரிலே
போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியதும், சென்னையிலே அண்ணல்
அம்பேத்கருக்கு ஒரு திருவுருவச் சிலை வைத்ததும், ஒடுக்கப்பட்ட
மக்களின் மிகப் பெரிய தலைவராக விளங்கிய தந்தை சிவராஜ்
அவர்களுக்குச் சிலை வைத்ததும், அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசுதான். ஒடுக்கப்பட்ட மக்களின் மிகப் பெரிய தலைவரும்,
100 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே, தமிழகத்திலே திராவிட
இயக்கத்திற்கு வேரூன்றியவரும், பாபா சாகேப் அம்பேத்கரோடு வட்ட
மேசை மாநாட்டுக்குப் போனவருமான தாத்தா இரட்டைமலை
சீனிவாசன் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் இல்லாமல் இருக்கிறது.
அந்த நினைவுச் சின்னத்தைச் சென்னையிலோ, திருச்சியிலோ ஏற்படுத்த
வேண்டும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.
முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) ஒரு மணித் துளி பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** சென்னையைப் போன்று வளர்ந்துவரும் மாநகரங்களிலே, இப்போது 60 இலட்சத்திற்கும் மேலே, 60, 70 இலட்சம் வரையிலே மிகப் பெரிய அளவுக்கு மக்கள் தொகை வந்திருக்கிறது. புறநகரங்களை எல்லாம் சேர்த்தால் 80 இலட்சம் வரையிலே, இப்போது சென்னை மாநகர மக்கள் தொகை இருக்கிறது. ஆகவே, போக்குவரத்து அல்லது இட வசதி, நெருக்கடி என்று இங்குப் பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் இங்கிருக்கிற குப்பங்களும், குடிசைகளும் அகற்றப்பட்டு, வெளியே போய்க் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றுவதற்கு ஒரு Greater Chennai-யை உருவாக்க வேண்டும், இரண்டாவது சென்னையை உருவாக்கலாம். கல்கத்தாவிலே இப்படி நிலைமை உருவாகியிருக்கிறது, மும்பையிலே இப்படி நிலைமை உருவாகியிருக்கிறது. வேறு பல நகரங்களில், ஐதராபாத்திலே இப்படி நிலைமை உருவாகியிருக்கிறது. சென்னையிலே இப்படி இருக்குமேயானால், இங்கே இருக்கிற 30 இலட்சம் அடித்தளத்து மக்கள், பிளாட்பாரங்களிலே இருக்கிற நிலைமை தவிர்க்கப்படும். வெறும் அடிப்படை வசதி இல்லாத குப்பங்களிலே, குடிசைகளிலே அவர்கள் வாழ்கிற நிலைமை தவிர்க்கப்படும். ஆகவே, ஒரு Greater Chennai என்று சொல்லப்படுகிற, அல்லது துணை சென்னையையோ, இரண்டாவது சென்னையையோ, ஒரு புதிய மகத்தான சென்னையையோ உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, என்னுடைய இந்த வாய்ப்புக்கான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற உரையின்மீது நன்றி தெரிவிக்கிற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு, என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.



'பசி வந்தால் பத்தும் பறந்துபோகும்' என்று சொல்வார்கள். அதுபோல, பசி வந்த இந்த வேளையிலே எனக்கு வாய்ப்பைத் தந்திருக்கிறீர்கள். இருந்தாலும், இங்கிருக்கிற மாமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*"செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப் படும்"*

என்று வள்ளுவர் அவர்கள் குறிப்பிடுவார்கள். எனவே, என்னால் முடிந்த அளவுக்குச் சில கருத்துகளை, இந்த அவையிலே வைக்கின்ற நேரத்திலே நீங்கள் தயவுகூர்ந்து அவற்றைக் கேட்கவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையிலே, இந்த மாநிலத்தினுடைய சட்டம்-ஒழுங்கு எவ்வாறு பராமரிக்கப்பட்டிருக்கிறது; அதன்மூலமாக தமிழக மக்கள், தங்களுடைய துயர்களிலிருந்து விடுபட்டு எப்படி நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதையும், அதேபோல தமிழகத்தை இந்தியாவினுடைய முதல் மாநிலமாக எடுத்துச் செல்வதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எப்படியெல்லாம் ஆக்கபூர்வமாக திட்டங்களை வகுத்திருக்கிறார்கள் என்பதையும், இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வருகிற காலங்களிலும் எப்படியெல்லாம் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்கின்ற நிலையும், இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்"*

என்ற அந்த வாசகத்திற்குத் தகுந்தாற்போல்தான், இந்த நாட்டை ஆளுகிற முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியும், அவர்களுடைய இடையறாத உழைப்பும், வீரமும், விவேகமும் இருக்கின்றன. இந்த நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுதான் வீரப்பனை வதம் செய்தது என்பதை இந்த ஆளுநர் உரை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அந்த வீரப்பன் இந்தச் சமுதாயத்திற்கு ஒரு சவாலாக இருந்ததோடு, பல்வேறு மக்களை அச்சுறுத்துகின்ற நிலையில், பல்வேறு அரசு அதிகாரிகளைக் கொலை செய்கின்ற நிலையில் இருந்த வீரப்பனை, சட்டம்-ஒழுங்கை

நிலைநாட்டுகின்றவகையில், முதலமைச்சர் அவர்கள் அதை உறுதியாக மனத் திண்மையோடு எடுத்துக்கொண்டு, அந்த வீரப்பனைக் காவல் துறையினர் சுட்டுக்கொன்ற அந்த நிலையை, யார் பாராட்டுகிறார்களோ, இல்லையோ இன்றைக்கு உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் பாராட்டி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவர் பொதுநல வழக்காக வீரப்பன் கொலையிலே சில சந்தேகங்கள் இருக்கின்றன என்று நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்த நேரத்திலே, அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, அந்த நபருக்கு 25,000 ரூபாய் அபராதம் விதித்ததோடு, அரசு எடுத்த இந்த நடவடிக்கை மிகச் சிறப்பான நடவடிக்கை, அந்த அரசினுடைய நடவடிக்கையை நாங்கள் பாராட்டுகிறோம் என்று சொல்லி அரசைப் பாராட்டியிருக்கிறார்கள், நீதிமன்றத்திலே. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு, நீதிபதிகள் பாராட்டுகின்ற அளவிற்கு, இந்த அரசினுடைய நடவடிக்கைகள் இருந்திருக்கின்றன என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-25*

அதுபோல, நாம் அனைவரும் எதிர்பார்க்காத அளவுக்கு கடந்த 26-12-2004-லே நடந்த அந்த சுனாமி பேரலையை உற்றுநோக்குகின்றபோது, பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுவது நினைவிற்கு வருகிறது.

**'என்னைப்பெற்ற தாய்க்கும், தமிழ் மக்கள் இனமீன்ற**
**தமிழ்நாடு தனக்குமென்னால் தினையளவு**
**நலமேனுமிருக்குமென்றால் செத்தொழியும்**
**நாளெனக்குத் திருநாளாகும்'**

என்று குறிப்பிடுகிறார். அப்படிக் குறிப்பிட்ட அந்த பாரதிதாசனுடைய விழிப்புணர்வோடுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தச் சுனாமி அலை தாக்கிய மறு நிமிடமே சென்னைக் கடற்கரையிலே வந்து (மேசையைத் தட்டும் ஒலி) 'என்னுடைய மக்களைச் சந்திப்பேன்; என்னுடைய மக்கள் உயிர்தான் எனக்குப் பெரிது; என்னுடைய உயிர் பெரிதல்ல; என்னுடைய மக்களை நான் எந்த நேரத்திலும் காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டவர்' என்கின்ற முறையிலே, அன்றைக்குக் கடற்கரையிலே வந்து நின்றார்கள். நான் அன்றைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேகூட சொன்னேன். அவர்கள் வந்துநின்று, சென்ற பத்து நிமிடங்களிலே மீண்டும் அந்த இடத்திற்கு அந்தச்



சுனாமி அலை வந்தது. அந்த அலை வருகின்ற நேரத்தில், முதலமைச்சர் அவர்கள் இருந்திருப்பார்களேயானால், இந்த நாடு மிகப் பெரிய இழப்பைச் சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால், ஆண்டவனுடைய அருளால் அவர்கள் காக்கப்பட்டார்கள் என்று சொன்னேன். அந்த அளவிற்கு அந்த மனத் திண்மையோடு அன்றைக்கே அந்த இடத்திற்குச் சென்று, அதுபோல பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களுக்கும் சென்று, பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு, அவர்கள் அவையிலே அறிவித்த அந்த உதவிகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, ஒரு மாதத்திற்கு அல்ல; அவர்களுடைய உண்மையான நிலை திரும்புகின்ற வரை, மூன்று மாதங்களுக்கு தாயுள்ளத்தோடு 30 கிலோ அரிசி, அவர்கள் சமைப்பதற்கு வேண்டிய பொருட்கள், அதோடு 1000 ரூபாய் ரொக்கப் பணமும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் தாயுள்ளத்தை தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் மறக்கமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இதிலிருந்து நாம் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்குச் சுற்றம் இல்லை, உற்றார் உறவுகள் இல்லை. இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள்தாம் அவருடைய சுற்றம், உறவு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபித்துக்காட்டுகின்ற அளவிற்குத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செயல்பாடுகள் இருக்கின்றன என்பதைத் தமிழக மக்கள் இன்றைக்கு மிகத் தெளிவாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கென்று இருக்கின்ற உறவு என்பது, தமிழக மக்கள்தான். அதை இன்றைக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்தச் சுனாமி அலை தாக்குதலின் மூலமாக அதை இந்த நாட்டு மக்களுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இந்த நாடே போற்றுகின்ற நிலையில், கூட்டாட்சித் தத்துவத்திற்கு இடையூறு விளைவிக்கின்ற நிலையை, மத்திய அரசினுடைய நிதி அமைச்சர் அவர்கள், மாநில அரசுக்குத் தெரியாத அளவிலே இந்த உதவிகள் எல்லாம் வங்கிகள் மூலமாகத்தான் வழங்கப்படும் என்கின்ற நிலையை எடுக்கும்போது, ஆங்கில நாளேடு, 'இந்து' பத்திரிகை, மிகத் தெளிவாக எழுதியது. 'இது கூட்டாட்சித் தத்துவ முறைக்கு உகந்ததல்ல. மாநில அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தச் சுனாமி பேரழிவு வந்தவுடனே, மாநில நிர்வாகம் அனைத்து மாவட்டங்களிலேயும் இருக்கின்ற உயரதிகாரிகள் எல்லாம் அங்கு முகாமிட்டு, முதலமைச்சரிலிருந்து அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அங்கு தங்கியிருந்து, சிறப்பாக நிவாரணப் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில், மாநில அரசுக்குச் சம்பந்தம் இல்லாமல் இந்த நிதியைக் கொடுப்பது என்பது நல்லதல்ல. அது கூட்டாட்சித் தத்துவத்திற்கு உகந்ததல்ல' என்று 'இந்து' நாளேடு எழுதுகிறது.

அதுமட்டுமல்ல, பாரதத்தின் முன்னாள் பிரதமராக இருந்தவர், இன்றைக்கு கர்நாடகத்திலே காங்கிரஸோடு கூட்டணி ஆட்சி அமைத்துக் கொண்டிருப்பவர், மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்துகொண்டிருப்பவர், முன்னாள் பாரதப் பிரதமர் தேவகவுடா அவர்கள் குறிப்பிடுகின்றபோது, 'இது முறையல்ல. மாநில அரசின் ஒத்துழைப்போடு, அதனுடைய பங்களிப்போடுதான் மத்திய அரசினுடைய நடவடிக்கைகள் இருக்கவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் இப்போது மத்திய அரசிலே பங்கு வகித்துக் கொண்டிருக்கின்றன. கர்நாடகாவைச் சேர்ந்த முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள், இது தவறு என்று குறிப்பிடுகின்றபோது, இங்குச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்ற இந்த நிவாரணப் பணிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள், 'நாங்கள் பாராட்டுகிறோம்' என்று மத்திய அமைச்சரிடத்திலே, இவர்களே சொல்லியிருக்க வேண்டும். இப்படி மற்றவர்கள் எல்லாம்.....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுடைய உரை முடிகிற வரை, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. லா. சந்தானம்:** பாராட்டிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், இங்கிருக்கின்ற நமது தோழர்கள், நமது நண்பர்கள், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று முழங்குகின்றவர்கள், மத்திய அமைச்சருடைய அந்தச் செயலை ஏன் கண்டிக்கவில்லை என்பதெல்லாம் உண்மையிலேயே எங்களைப் போன்றவர்களுக்கு வருத்தம் அளிக்கிறது. உண்மையிலேயே தமிழகத்திலே இருப்பவர்கள்,



அரசியலுக்கு அப்பாற்பட்டு, இந்தச் சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் உதவியை ஏற்று நடத்த வேண்டும் என்று சொன்னால், -- இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள், அந்த மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் -- அவர்களுக்கு 100 விழுக்காடு மத்திய நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படவேண்டும், ஆனால் இன்றைக்கு அவர்கள் வழங்கியிருப்பது 33 சதவிகிதம்தான் என்று குறிப்பிட்டார்கள். எனவே, தயவுசெய்து, இங்கே மத்திய அரசிலே பங்குபெறுகின்ற அரசியல் கட்சி நண்பர்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்வேன்; தமிழக மக்கள்மீது அக்கறை உள்ளவர்கள் என்கின்ற நிலையை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், அதை உறுதிப்படுத்த வேண்டுமென்று சொன்னால், நீங்கள் -- மத்திய அரசோடு வாதாடி -- அந்த முழுமையான தொகையை, நிவாரணத்தை 100 விழுக்காடு அவர்களுக்கு மானியமாகப் பெற்றுத் தருவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் தமிழக மக்கள் உங்களைப் பாராட்டுவார்கள், ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இப்போது விவசாயத்தைப் பொறுத்த அளவிலே, கடந்த மூன்று ஆண்டுகளாக இயற்கையின் சீற்றத்தால் வறட்சியின் காரணமாக, விவசாயிகள் மிகுந்த பாதிக்கப்பட்ட நிலையிலே இருக்கிறார்கள். இந்த ஆண்டுதான் சற்று மழை பெய்திருக்கிறது. அந்த மழையைப் பயன்படுத்திக்கொண்டு விவசாயம் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அறுவடை ஆகின்ற சூழல். எங்களுடைய பெரியாறு பாசனப் பகுதியைப் பொறுத்த அளவிலே, அது ஆறு மாவட்டங்களுக்குப் பயன்படுகின்ற ஒரு பாசனப் பகுதி. தேனியில் ஆரம்பித்து, தேனி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் போன்ற ஆறு மாவட்டங்களுக்குப் பயன்படுகின்ற ஒரு பாசனப் பகுதி. அந்தப் பகுதியிலே கடைசியாக ஒருமுறை தண்ணீர் இருந்தால்தான் பயிர்களெல்லாம் விளைகின்ற ஒரு சூழ்நிலை என்கின்ற நிலையை, அரசுக்கு எடுத்துக் கூறியதன் காரணமாக, இன்றைக்கு அரசு அதற்குரிய ஆணையைப் பிறப்பித்து, கடைசியாக ஒருமுறை தண்ணீர் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, நான் பல நேரங்களிலே வலியுறுத்தி வந்திருக்கின்றேன். காவிரி டெல்டா பகுதியிலே நிலத்தடி நீரைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக, சிறப்பு மின் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளாக மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல பெரியாறு பாசனப் பகுதியிலும் இப்படிக் கடைசி நேரத்திலே, தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணத்தால், விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டும் அப்படி ஒரு நிலைமை இருந்தது. இந்த ஆண்டும் அப்படி ஒரு நிலைமை. கடைசியாக அரசு ஓர் உத்தரவின்பேரிலே கொடுக்கின்ற தண்ணீர்தான். அந்தப் பயிர்களைக் காப்பாற்றவிருக்கிறது. இப்படி வருகின்ற சூழ்நிலையில், அந்தப் பகுதி மக்களுக்கு அரசு பிரத்தியேகமாக ஒரு மின் இணைப்பை வழங்கினால், அந்தக் கடைசி நேரத்திலே இருக்கின்ற அந்தத் தட்டுப்பாட்டிலேயிருந்து பயிர்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு, விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

அதோடு, இந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருக்கின்ற நேரத்தில், விலைகளெல்லாம் வெளி மார்க்கெட்டிலே மிகச் சரிந்திருக்கின்ற நேரத்தில், அவர்கள் பயிரிட்ட அந்த நெல்லைக் கொள்முதல் செய்கின்ற கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சைப் பகுதியிலே, எப்படி நெல்லைக் கொள்முதல் செய்கின்றீர்களோ, அப்படி எங்களது பெரியாறு பாசனப் பகுதியிலேயும் அறுவடை ஆகின்ற நேரத்தில், அரசு மூலமாக நெல் கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி, அந்த விவசாயிகளுடைய நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன தேடுகிறீர்கள்? ஏதாவது ஒரு முடிவைச் சொல்லுங்கள். யோசித்து வையுங்களேன்! இன்னொரு நாளில் பேசிக்கொள்ளலாம்! (சிரிப்பு)

பிற்பகல் *1-35*

**திரு. லா. சந்தானம்:** எனவே, அந்தப் பகுதியிலும் நெல் கொள்முதல் நிலையங்களை அரசுத் தரப்பிலே அமைத்துத் தர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, அதோடு அந்தப் பகுதியிலே சிறப்பு மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் இந்த அரசை வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *4-2-2005* ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி *32*-ஐ, *4-2-2005* அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை *(4-2-2005)* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(4-2-2005)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-36* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2005 பிப்ரவரி 3

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*10.* 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்து ஐந்தாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

*11.* 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து எட்டாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*7.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2003-2005)

*8.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*9.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*10.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*11.* உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226627
சென்னை-600 008